உ

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

# திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# அடங்கன்முறைத்

# தேவாரப்பதிகங்கள்

இவை,

உரையாசிரியர் வித்வான்-காஞ்சீபுரம்

சபாபதிமுதலியாரவர்கள்

ஆராய்ச்சிசெய்து பதிப்பித்த பிரதிக்கிணங்க,

புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கர்

திருமயிலை - வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

இவை,

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாரவர்கள்

சகோதரர்

கா-குமாரசாமிமுதலியாரவர்களது

சென்னை:

ஆறுமுகவிலாசஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

விஜய௵ ஆனிமீ

சிவமயம்.

# முதற்றிருமுறையின்

## பதிக அட்டவணை.


| பதிகப்பெயர். | பக்கம். |
| --- | --- |
| **பண்-கொல்லி** | |
| திருஅதிகைவீரட்டானம் | க |
| **பண்-காந்தாரம்.** | |
| திருக்கெடிலவடவீரட்டானம் | உ |
| திருவையாறு | ச |
| திருவாரூர் | ரு |
| திருவாரூர்ப்பழமொழி | எ |
| திருக்கழிப்பாலை | அ |
| திருஏகம்பம் | கூ |
| **பண்-பியந்தைக்காந்தாரம்.** | |
| சிவனெனுமோசை | கo |
| **பண்-சாதாரி.** | |
| திருஅங்கமாலை | கஉ |
| **பண்-காந்தாரம்** | |
| திருக்கெடிலவாணர் | கஉ |
| நமச்சிவாயப்பதிகம் | கச |
| **பண்-பழந்தக்கராகம்.** | |
| திருப்பழனம் | கரு |
| திருவையாறு | கசு |
| **பண்-பழம்பஞ்சுரம்** | |
| தசபுராணம் | கஅ |
| பாவநாசத்திருப்பதிகம் | ககூ |
| **பண்-இந்தளம்.** | |
| திருப்புகலூர் | உo |
| திருவாரூர்அரநெறி | உஉ |
| விடந்தீர்த்ததிருப்பதிகம் | உங |
| **பண்-சீகாமரம்.** | |
| திருவாரூர் | உரு |
| திருவாரூர் | உசு |
| **பண்-குறிஞ்சி.** | |
| திருவாரூர்த்திருவாதிரைத் திருப்பதிகம் | உஎ |
| **பண்-கொல்லி.** | |
| கோயிற்றிருநேரிசை | உஅ |
| கோயிற்றிருநேரிசை | ஙo |
| **கொப்புளித்ததிருநேரிசை.** | |
| திருவதிகைத்திருவீரட்டானம் | ஙக |
| **திருநேரிசை.** | |
| திருவதிகைத்திருவீரட்டானம் | ஙஉ |
| திருவதிகைத்திருவீரட்டானம் | ஙங |
| திருவதிகைத்திருவீரட்டானம் | ஙரு |
| திருவதிகைத்திருவீரட்டானம் | ஙசு |
| திருச்செம்பொன்பள்ளி | ஙஎ |
| திருக்கழிப்பாலை | ஙஅ |
| திருக்கடவூர் | ஙகூ |
| திருப்பயற்றூர் | சo |
| திருமறைக்காடு | சஉ |
| திருமறைக்காடு | சங |
| திருவிடைமருது | சச |
| திருப்பழனம் | சரு |
| திருநெய்த்தானம் | சஎ |
| திருஐயாறு | சஅ |
| திருஐயாறு | சகூ |
| திருஐயாறு | ருo |
| திருச்சோற்றுத்துறை | ருஉ |
| திருத்துருத்தி | ருங |
| திருக்காஞ்சித்திருமேற்றளி | ருச |
| திருஏகம்பம் | ருரு |
| திருவொற்றியூர் | ருஎ |
| திருவொற்றியூர் | ருஅ |
| ஸ்ரீகைலாயம் | ருஅ |
| திருஆப்பாடி | ருகூ |
| திருக்குறுக்கை | சுக |
| திருக்குறுக்கை | சுஉ |
| திருக்கோடிகா | சுஉ |
| திருஆரூர் | சுங |
| திருஆரூர் | சுரு |
| திருப்புகலூர் | சுசு |
| திருவலம்புரம் | சுஎ |
| திருஆவடுதுறை | சுகூ |
| திருஆவடுதுறை | எo |
| திருப்பருப்பதம் | எக |
| திருஅவளிவணல்லூர் | எஉ |
| திருப்பெருவேளூர் | எங |

| பதிகப்பெயர். | பக்கம். |
|---|---|
| திருவிராமேச்சரம் | ௭௫ |
| திருவாலவாய் | ௭௬ |
| திருவண்ணாமலை | ௭௭ |
| திருவீழிமிழலை | ௭௯ |
| திருச்சாய்க்காடு | ௮௦ |
| திருநாகேச்சரம் | ௮௧ |
| திருக்கொண்டீச்சரம் | ௮௨ |
| திருவாலங்காடு | ௮௩ |
| திருக்கோவல்வீரட்டானம் | ௮௫ |
| திருநனிபள்ளி | ௮௬ |
| திருக்கடனாகைக்காரோணம் | ௮௭ |
| திருவின்னம்பர் | ௮௮ |
| திருச்சேறை | ௮௯ |
| நினைந்ததிருநேரிசை | ௯௧ |
| தனித்திருநேரிசை | ௯௨ |
| தனித்திருநேரிசை | ௯௩ |
| தனித்திருநேரிசை | ௯௪ |
| குறைந்ததிருநேரிசை | ௯௫ |
| குறைந்ததிருநேரிசை | ௯௬ |
| **பண் - கொல்லி** | |
| கோயிற்றிருவிருத்தம் | ௯௭ |
| கோயில்திருவிருத்தம் | ௯௮ |
| **திருவிருத்தம்.** | |
| திருக்கழுமலம் | ௯௯ |
| திருக்கழுமலம் | ௧௦௧ |
| ஆருயிர்த்திருவிருத்தம் | ௧௦௧ |
| திருச்சோற்றுத்துறை | ௧௦௨ |
| திருவொற்றியூர் | ௧௦௩ |
| திருப்பழனம் | ௧௦௪ |
| திருப்பூந்துருத்தி | ௧௦௬ |
| திருநெய்த்தானம் | ௧௦௭ |
| திருவேதிகுடி | ௧௦௮ |
| திருவையாறு | ௧௦௯ |
| திருவையாறு | ௧௧௦ |
| திருவையாறு | ௧௧௨ |
| திருக்கண்டியூர் | ௧௧௩ |
| திருப்பாதிரிப்புலியூர் | ௧௧௪ |
| திருவீழிமிழலை | ௧௧௫ |
| திருச்சத்திமுற்றம் | ௧௧௬ |
| திருநல்லூர் | ௧௧௭ |
| திருவையாறு | ௧௧௯ |
| திருவேகம்பம் | ௧௧௯ |
| திருவின்னம்பர் | ௧௨௦ |
| திருவாரூர் | ௧௨௧ |
| திருவாரூர் | ௧௨௩ |
| திருக்காரோணம் | ௧௨௩ |
| திருவதிகை | ௧௨௪ |
| திருப்புகலூர் | ௧௨௫ |
| திருக்கழிப்பாலை | ௧௨௬ |
| திருக்கடவூர் | ௧௨௬ |
| திருமாற்பேறு | ௧௨௭ |
| திருத்தூங்கானைமாடம் | ௧௨௮ |
| பசுபதி | ௧௨௮ |
| சரக்கறை | ௧௨௯ |
| தனித்திருவிருத்தம் | ௧௩௦ |
| தனித்திருவிருத்தம் | ௧௩௧ |



அப்பர்.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL PANDIT

உ

## திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## முதற்றிருமுறை.

### திருஅதிகைவீரட்டானம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (க)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிடா
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (உ)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிக்கொண்டுமெய்பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீசுற்றும்வெண்ட
லைகொண், டணிந்தீரடிகேளதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.()

முன்னம்மடியேனறியாமையினான்முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோதலையாயவர்தங்கடனாவதுதா
னன்னநடையாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (ச)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்கரைநின்றவர்கண்டுகொளென்று
சொலி, நீத்தாய்கயம்புகநூக்கியிடநிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறி
யேன், வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்வயிற்றோடுதொடக்கிமுடக்
கியிட, வார்த்தார்புனலாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.(ரு)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியே
னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (சு)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலா மையினால், வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர், பயந்தேயென்வயிற்றினகம்படியேபறித்துப்புரட்டியறுத்தீர்த்திட நா, னயர்ந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (எ)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்வஞ்சம்மனமொன்றுமிலா மையினாற்,சலித்தாலொருவர்துணையாருமில்லைச்சங்கவெண்குழைக்காதுடை யெம்பெருமான், கலித்தேயென்வயிற்றினகம்படியேகலக்கிமலக்கிட்டுக்கவர் ந்துதின்ன, அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகரந்துவிடு
மென்போலிகளுமமையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகி
லன்பேயமையுமதிகைக்கெடிலவீரட்டானத்துறையமமானே. (௯)

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தாராக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் - நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர், தேவியா - திருவதிகைநாயகி.

இந்தப்பதிகம் - சூலைநோய்தீர ஓதியருளியது.

---

திருக்கெடிலவடவீரட்டானம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந
திண்ணன்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧)

பூண்டதோர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலவெண்ணூலுங்
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியு
மீண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௨)

ஒத்தவடத்திளநாகமுருத்திரபட்டமிரண்டு
முத்துவடக்கண்டிகையுமுளைத்தெழுமூவிலைவேலுஞ்

* சித்தவடமுமதிகைச்சேணுயர்வீரட்டஞ்சூழ்ந்து
தத்துகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௩)

மடமான்மறிபொற்கலையுமழுப்பாம்பொருகையில்வீணை
குடமால்வரையதிண்டோளுங்குனிசிலைக்கூத்தின்பயில்வு
மிடமால்தழுவியபாகமிருநிலனேற்றசுவடுந்
தடமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமிலலையஞ்சவருவதுமில்லை. (௪)

பலபலகாமத்தராகிப்பதைத்தெழுவார்மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங்கணவதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டுசுடருமவான்கயிலாயமலையும
நலமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௫)

கரந்தனகொள்ளிவிளக்குங்கறங்குதுடியின்முழக்கும்
பரந்தபதினெண்கணமும்பயின்றறியாதனபாட்டும்
அரங்கிடைநூலறிவாளரறியப்படாததோர்கூத்தும்
நிரந்தகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௬)

கொலைவரிவேங்கையதளுங்குலவோடிலங்குபொற்றோடும்
விலைபெறுசங்கக்குழையுமவிலையில்கபாலக்கலனும்
மலைமகள்கைக்கொண்டமார்புமணியார்ந்திலங்குமிடறு
முலவுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௭)

ஆடல்புரிந்தநிலையுமரையிலசைத்தவரவும்
பாடல்பயின்றபல்பூதமபல்லாயிரங்கொள்கருவி
நாடற்கரியதோர்கூத்துநன்குயர்வீரட்டஞ்சூழ்ந்து
ஓடுங்கெடிலபபுனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௮)

சூழுமரவத்துகிலுந்துகில்கிழிகோவணக்கீளும்
யாழின்மொழியவளஞ்சவஞ்சாதருவரைபோன்ற
வேழமுரித்தநிலையும்விரிபொழில்வீரட்டஞ்சூழ்ந்து
தாழுங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமிலலையஞ்சவருவதுமில்லை. (௯)

நரம்பெழுகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங்கொண்டெடுத்தானென்பதுமொன்றுமலற

---

* சித்தவடம் - என்பது, இந்தத்தலத்துக்குச் சமீபத்திலிருப்பது.

வரங்கள்கொடுத்தருள்செய்வான்வளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
திரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தப்பதிகம் சமணர்களேவியயானை அஞ்சும்படியோதி அருளியது.

---

## திருவையாறு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௨

எரிப்பிறைக்கண்ணியினானையேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவேன்
அரித்தொழுகுவெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௩

பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௪

ஏடுமதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவே
னாடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (

தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனாகியுணராவுருகாவருவே

னன்னலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௬)

கடிமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்க்குங்கழலானையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௭)

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்துமையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௮)

முற்பிறைக்கண்ணியினானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன்பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௯)

திங்கள்மதிக்கண்ணியானைத்தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தையெனக்கினியென்னுவருவேன்
அங்கிளமங்கையராடுமையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப்பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௦)

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே, கயிலாயமாகச் சுவாமிதரிசனங் கட்டளையிட்டபோதுவோதி அருளிய பதிகம்.

---

திருவாரூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானு
மாடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧)

நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சாத்திநின்றானுமாரூரமர்ந்தவம்மானே. (௨)

நீறுமெய்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துளானு
மேறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானு
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௩)

கொம்புநல்வேனிலவனைக்குழையமுறுவல்செய்தானுஞ்
செம்புனல்கொண்டெயின்மூன்றுந்தீயெழக்கண்சிவந்தானும்
வம்புநற்கொன்றையினானும்வாட்கண்ணிவாட்டமதெய்த
அம்பரவீருரியானுமாரூரமர்ந்தவம்மானே. (௪)

ஊழியளக்கவல்லானுமுகப்பவருச்சியுள்ளானுந்
தாழிளஞ்செஞ்சடையானுந்தண்ணமர்திண்கொடியானுந்
தோழியர்தூதிடையாடத்தொழுதடியார்கள்வணங்க
ஆழிவளைக்கையினானுமாரூரமர்ந்தவம்மானே. (௫)

ஊர்திரைவேலையுள்ளானுமுலகிறந்தொண்பொருளானுஞ்
சீர்தருபாடலுள்ளானுஞ்செங்கண்விடைக்கொடியானும்
வார்தருபூங்குழலாளைமருவியுடன்வைத்தவனு
மாதிரைநாளுகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௬)

தொழற்கங்கைதுன்னிநின்றார்க்குத்தோன்றியருளவல்லானுங்
கழற்கங்கைபன்மலர்கொண்டுகாதல்கனற்றநின்றானுங்
குழற்கங்கையாளையுள்வைத்துக்கோலச்சடைக்கரந்தானு
மழற்கங்கையேந்தவல்லானுமாரூரமர்ந்தவம்மானே. (௭)

ஆயிரந்தாமரைபோலுமாயிரஞ்சேவடியானு
மாயிரம்பொன்வரைபோலுமாயிரந்தோளுடையானு
மாயிரஞாயிறுபோலுமாயிரநீண்முடியானு
மாயிரம்பேருகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௮)

வீடரங்காநிறுப்பானுமவிசும்பினைவேதிதொடர
வோடரங்காகவைத்தானுமோங்கியோரூழியுள்ளானுங்
காடரங்காமகிழ்ந்தானுங்காரிகையார்கண்மனத்துள்
ஆடரங்கத்திடையானுமாரூரமர்ந்தவம்மானே. (௯)

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

### திருவாரூர்ப்பழமொழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே
யுய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தென்னுள்ளம்விட்டுக்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே. (க)

என்பிருத்திநரம்புதோல்புகப்பெய்திட்டெனையோருருவமாக்கி
யின்பிருத்திமுன்பிருந்தவினைதீர்த்திட்டென்னுள்ளங்கோயிலாக்கி
யன்பிருத்தியடியேனைக்கூழாட்கொண்டருள்செய்தவாரூரர்தம
முன்பிருக்கும்விதியின்றிமுயல்விட்டுக்காக்கைப்பின்போனவாறே. (உ)

பெருகுவித்தென்பாவத்தைப்பண்டெலாங்குண்டர்கள்தஞ்சொல்லேகேட்
உருகுவித்தென்னுள்ளத்தினுள்ளிருந்தகள்ளத்தைத்தள்ளிப்போக்கி [டு
யருகுவித்துப்பிணிகாட்டியாட்கொண்டுபிணிதீர்த்தவாரூரர்தம்
அருகிருக்கும்விதியின்றியறமிருக்கமறம்விலைக்குக்கொண்டவாறே. (ங)

குண்டனாய்த்தலைபறித்துக்குவிமுலையார்நகைகாணா * துழிதர்வேனைப்
பண்டமாபபடுத்தென்னைப்பால்தலையிற்றெளித்துத்தன்பாதங்காட்டித்
தொண்டெலாமிசைபாடத்தூமுறுவலருள்செய்யுமாரூரரைப
பண்டெலாமறியாதேபனிநீராற்பாவைசெய்யப்பாவித்தேனே. (ச)

துன்னாகத்தேனாகித்துர்ச்சனவர்சொற்கேட்டுத்துவர்வாய்க்கொண்டு
என்னாகத்திரிதந்தீங்கிருகையேற்றிடவுண்டேழையேனான்
பொன்னாகத்தடியேனைப்புகப்பெய்துபொருட்படுத்தவாரூரரை
யென்னாகத்திருத்தாதேயேதன்போர்க்காதனாயகப்பட்டேனே. (ரு)

பப்போகிப்பவணனாய்ப்பறித்ததொருதலையோடேதிரிதர்வேனை
யொப்போடவோதுவித்தென்னுள்ளத்தினுள்ளிருந்தங்குறுதிகாட்டி
யப்போதைக்கப்போதுமடியவர்கட்காரமுதாமாரூரரை
யெப்போதுநினையாதேயிருட்டறையின்மலடுகறந்தெய்த்தவாறே. (சு)

கதியொன்றுமறியாதேகண்ணழலத்தலைபறித்துக்கையிலுண்டு
பதியொன்றுநெடுவீதிப்பலர்காணநகைகாணாதுழிதர்வேற்கு
மதிதந்தவாரூரில்வார்தேனைவாய்மடுத்துப்பருகியுய்யும்
விதியின்றிமதியிலியேன்விளக்கிருக்கமின்மினித்தீக்காய்ந்தவாறே. (எ)

பூவையாய்த்தலைபறித்துப்பொறியற்றசமணர்சொல்லேகேட்டுக்
காவிசேர்கண்மடவார்கண்டோடிக்கதவடைக்குங்கள்வனேன்றன்
னாவியைப்போகாமைதவிர்த்தென்னையாட்கொண்டவாரூரரைப்
பாவியேனறியாதேபாழூரிற் ○ பயிக்கம்புக்கெய்த்தவாறே. (அ)

---

* உழிதருவேனையென்பது - உழிதர்வேனையென நின்றது. ○ பயிக்கம் - பிச்சை.

V. B. SUBRAMANIYA SARMA TAMIL PANDIT

ஒட்டாதவாளவுணர்புரமூன்றுமோரம்பின்வாயின்வீழக்
கட்டானைக்காமனையுங்காலனையுங்கண்ணினொடுகாலின்வீழ
அட்டானையாரூரிலம்மானையார்வச்செற்றக்குரோதந்
தட்டானைச்சாராதேதவமிருக்கவவஞ்செய்துதருக்கினேனே. (௯)

மறுத்தானோர்வல்லரக்கனீரைந்துமுடியினொடுதோளுந்தாளு
மிறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்றலையிலொன்றை
யறுத்தானையாரூரிலம்மானையாலாலமுண்டுகண்டங்
கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடித்தெய்த்தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆடு பதிகம் - ௫.

---

திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்துவானவர்க்குந்தானவனேயென்கின்றாளாற்
சினபவளத்திண்டோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்றனென்கின்றாளா
லனபவளமேகலையோடப்பாலைக்கப்பாலானென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௧)

வண்டுலவுகொன்றைவளர்புன்சடையானேயென்கின்றாளால்
விண்டலர்ந்துநாறுவதோர்வெள்ளெருக்கநாண்மலருண்டென்கின்றாளா
லுண்டயலேதோன்றுவதோருத்தரியப்பட்டுடையனென்கின்றாளாற்
கண்டயலேதோன்றுங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௨)

பிறந்திளையதிங்களெம்பெம்மான்முடிமேலதென்கின்றாளால்
நிறங்கிளருங்குங்குமத்தின்மேனியவனிறமேயென்கின்றாளான்
மறங்கிளர்வேற்கண்ணாள்மணிசேர்மிடற்றவனேயென்கின்றாளாற்
கறங்கோதமல்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௩)

இரும்பார்ந்தசூலத்தனேந்தியோர்வெண்மழுவனென்கின்றாளாற்
சுரும்பார்மலர்க்கொன்றைச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றாளாற்
பெரும்பாலனாகியோர்பிஞ்ஞகவேடத்தனென்கின்றாளாற்
கரும்பானல்பூக்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௪)

பழியிலன்புகழுடையன்பானீற்றனானேற்றனென்கின்றாளால்
விழியுலாம்பெருந்தடங்கண்ணிரண்டல்லமூன்றுளவேயென்கின்றாளாற்
சுழியுலாம்வருகங்கைதோய்ந்தசடையவனேயென்கின்றாளாற்
கழியுலாஞ்சூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௫)

பண்ணார்ந்தவீணைபயின்றவிரலவனேயென்கின்றாளா
லெண்ணார்புரமெரித்தவெந்தைபெருமானேயென்கின்றாளாற்
மண்ணார்முழவதிரப்பாடலோடாடலனேயென்கின்றாளாற்
கண்ணார்பூஞ்சோலைக்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (௬)

முதிருஞ்சடைமுடிமேன்மூழ்குமிளநாகமென்கின்றாளா
லதுகண்டதனருகேதோன்றுமிளமதியமென்கின்றாாற்
சதிர்வெண்பளிக்குழைகாதின்மின்னிடுமேயென்கின்றாளாற்
கதிர்முத்தஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (எ)

ஓரோதமோதியுலகம்பலிதிரிவானென்கின்றாளால்
நீரோதமேறிமிர்புன்சடையானேயென்கின்றாளாற்
பாரோதமேனிப்பவளமவனிறமேயென்கின்றாளாற்
காரோதமல்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (அ)

வானுலாந்திங்கள்வளர்புன்சடையானேயென்கின்றாளால்
ஊனுலாம்வெண்டலைகொண்டூர்பலிதிரிவானென்கின்றாளாற்
றேனுலாங்கோதைதிளைக்குந்திருமார்பனென்கின்றாளாற்
கானுலாஞ்சூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (கூ)

அடர்ப்பரியவிராவணனையருவரைக்கீழடர்த்தவனேயென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றாளான்
மடற்பெரியவாலின்கீழறநால்வர்க்கன்றுரைத்தானென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பால்வண்ணநாதர், தேவியார் - வேதநாயகியம்மை.

---

திருஏகம்பம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழவங்கையிலனலேந்தி
யிரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (க)

தேனைக்குங்கிளிமழலையுமைகேள்வன்செழும்பவளத்
தானைக்குந்திருமேனிதழலுருவாஞ்சங்கரனை
வானைக்கும்வளர்மதிசேர்சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (உ)

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
யப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. (ங)

அண்டமாயாதியாயருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர்மெய்ப்பொருளாமபின்னுருவினைத்

தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே. (௪)

ஆறேறுசடையானையாயிரம்பேரம்மானைப்
பாறேறுபடுதலையிற்பலிகொள்ளும்பரம்பரனை
நீறேறுதிருமேனிநின்மலனைநெடுந்தூவி
யேறேறும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (௫)

தேசனைத்தேசங்கள்தொழநின்றதிருமாலாற்
பூசனைப்பூசனைகளுகப்பானைப்பூவின்கண்
வாசனைமலைநிலநீர்தீவளியாகாசமாம்
ஈசனையெம்மானையென்மனத்தேவைத்தேனே. (௬)

கல்லானைகல்லானநான்மறையோடாறங்கம்
வல்லானைவல்லார்கள்மனத்துறையுமைந்தனைச்
சொல்லானைச்சொல்லார்ந்தபொருளானைத்துகளேது
மில்லானையெம்மானையென்மனத்தேவைத்தேனே. (௭)

விரித்தானைநால்வர்க்குவெவ்வேறுவேதங்கள்
புரித்தானைப்பதஞ்சந்திப்பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக்கங்கைநீர்தாழ்சடைமேல்மதின்மூன்று
மெரித்தானையெம்மானையெம்மனத்தேவைத்தேனே. (௮)

ஆகம்பத்தரவணையானயனறிதற்கரியானைப்
பாகம்பெண்ணாண்பாகமாய்நின்றபசுபதியை
மாகம்பமறையோதுமிறையானைமதிட்கச்சி
யேகம்பமேயானையென்மனத்தேவைத்தேனே. (௯)

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சுனைமல்குகயிலாய
மெடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர், தேவியார் - காமாக்ஷியம்மை.

---

சிவனெனுமோசை - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிவனெனுமோசையல்லதறையோவுலகிற்றிருநின்றசெம்மையுளதே
யவனுமோராயமுண்ணியதனாடையாவதன்மேலோராடலரவங்
கவணளவுள்ளவுங்கரிகாடுகோயில்கலனாவதோடுகருதி
லவனதுபெற்றிகண்டுமவனீர்மைகண்டுமகனேர்வர்தேவரவரே. (௧)

---

* இண்டை - சுருக்குமாலை.

விரிகதிர்ஞாயிறல்லர்மதியல்லர்வேதவிதியல்லர்விண்ணுநிலனுந்
திரிதருவாயுவல்லர்செறுதீயுமல்லர்தெளிநீருமல்லர்தெரியி
லரிதருகண்ணியாளையொருபாகமாகவருள்காரணத்தில்வருவா
ரெரியரவாரமார்வரிமையாருமல்லரிமைப்பாருமல்லரிவரே. (௨)

தேய்பொடிவெள்ளைபூசியதன்மேலோர்திங்கடிலதம்பதித்தநுதலர்
காய்கதிர்வேலைநீலவொளிமாமிடற்றர்கரிகாடர்காலோர்கழலர்
வேயுடனாடுதோளியவள்விம்மவெய்யமழுவீசிவேழவுரிபோர்த்
தேயிவராடுமாறுமிவள்காணுமாறுமிதுதானிவர்க்கோரியல்பே. (௩)

வளர்பொறியாமைபுல்கிவளர்கோதைவைகிவடிதோலுநூலும்வளரக்
கிளர்பொறிநாகமொன்றுமிளிர்கின்றமார்பர்கிளர்காடுநாடுகிழவர் [கிக்
களிர்பொறிமஞ்ஞையன்னதளிர்போன்றசாயலவள்தோன்றுவாய்மைபெரு
குளிர்பொறிவண்டுபாடுகுழலாளொருத்தியுளள்போல்குலாவியுடனே. (௪)

உறைவதுகாடுபோலுமுரிதோலுடுப்பர்விடையூர்வதோடுகலனு
மிறையிவர்வாழும்வண்ணமிதுவேலுமீசனொருபாலிசைந்ததொருபால்
பிறைநுதல்பேதைமாதருமையென்னுநங்கைபிறழ்பாடநின்றுபிணைவா
ணறைகழல்வண்டுபாடுமடிநீழலாணைகடவாதமரருலகே. (௫)

கணிவளர்வேங்கையோடுகடிதிங்கள்கண்ணிகழல்கால்சிலம்பவழகா
ரணிகிளராரவெள்ளைதவழ்சுண்ணவண்ணமியலாரொருவரிருவர்
மணிகிளர்மஞ்ஞையாலமழையாடுசோலைமலையான்மகட்குமிறைவ
ரணிகிளரன்னவண்ணமவள்வண்ணவண்ணமவர்வண்ணவண்ணமழலே (௬)

நகைவளர்கொன்றைதுன்றுநகுவெண்டலையர்நளிர்கங்கைதங்குமுடியர்
மிகைவளர்வேதகீதமுறையோடும்வல்லகறைகொள்மணிசெய்மிடறர்
முகைவளர்கோதைமாதர்முனிபாடுமாறுமெரியாடுமாறுமிவர்கைப்
பகைவளர்நாகம்வீசிமதியங்குமாறுமிதுபோலுமீசரியல்பே. (௭)

ஒளிவளர்கங்கைதங்குமொளிமாலயன்றனுடல்வெந்துவீயசுடர்நீறணி
கிளராரவெள்ளைதவழ்சுண்ணவண்ணர்தமியாரொருவரிருவர்
களிகிளர்வேடமுண்டோர்கடமாவுரித்தவுடைதோல்தொடுத்தகலனாணி
கிளரன்னதொல்லையவள்பாகமாகவெழில்வேதமோதுமவரே. (௮)

மலைமடமங்கையோடும்வடகங்கைநங்கைமணவாளராகிமகிழ்வர்
தலைகலனாகவுண்டுதனியேதிரிந்துதவவாணராகிமுயல்வர்
விலையிலிசாந்தமென்றுவெறிநீறுபூசிவிளையாடும்வேதவிகிர்த
ரலைகடல்வெள்ளமுற்றுமலறக்கடைந்தவழல்நஞ்சமுண்டவவரே. (௯)

புதுவிரிபொன்செயோலையொருகாதொர்காதுசுரிசங்கநின்றுபுரள
விதிவிதிவேதகீதமொருபாடுமோதமொருபாடுமெல்லநகுமால்
மதுவிரிகொன்றைதுன்றுசடைபாகமாதர்குழல்பாகமாகவருவர் [பே.
இதுவிவர்வண்ணவண்ணமிவள்வண்ணவண்ணமெழில்வண்ணவண்ணமியல்

திருச்சிற்றம்பலம்.

திருஅங்கமாலை - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய், தலை - மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய். (௧)

கண்காள்காண்மின்களோ, கடல் - நஞ்சுண்டகண்டன்றன்னை
யெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ.(௨)

செவிகாள்கேண்மின்களோ, சிவ - னெம்மிறைசெம்பவள
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ்,செவிகாள்கேண்மின்களோ(௩)

மூக்கேநீமுரலாய், முது - காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய். (௪)

வாயேவாழ்த்துகண்டாய், மத - யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துகண்டாய். (௫)

நெஞ்சேநீநினையாய், நிமிர் - புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய். (௬)

கைகாள்கூப்பித்தொழீர், கடி - மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக், கைகாள்கூப்பித்தொழீர். (௭)

ஆக்கையாற்பயனென், அரன் - கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ், வாக்கையாற்பயனென். (௮)

கால்களாற்பயனென், கறைக் - கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென். (௯)

உற்றாராருளரோ, வுயிர் - கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக், குற்றாராருளரோ. (௧௦)

இறுமாந்திருப்பன்கொலோ, வீசன் - பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ. ()

தேடிக்கண்டுகொண்டேன், திரு - மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே, தேடிக்கண்டுகொண்டேன்(௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கெடிலவாணர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

முளைக்கதிரிளம்பிறைமூழ்கவெள்ளநீர்
வளைத்தெழுசடையினர்மழலைவீணையர்
திளைத்ததோர்மான்மழுக்கையர்செய்யபொன்
கிளைத்துழித்தோன்றிடுங்கெடிலவாணரே. (௧)

ஏறினாரேறினையேழைதன்னொரு
கூறினார்கூறினார்வேதமங்கமும்

ஆறினாரறிசெடையர்பக்கமுங்
ஈறினவுடையினர்கெடிலவாணரே. (௨)

விடந்தழகெழுதருமிடற்றர்வெள்ளைநீ
றுடம்பழகெழுதுவர்முழுதும்வெண்ணிலாப்
படந்தழகெழுதருசடையிற்பாய்புனல்
கிடந்தழகெழுதியகெடிலவாணரே. (௩)

விழுமணியயிலெயிற்றம்புவெய்யதோர்
கொழுமணிநெடுவரைகொளுவிக்கோட்டினார்
செழுமணிமிடற்றினர்செய்யர்வெய்யதோர்
கெழுமணியரவினர்கெடிலவாணரே. (௪)

குழுவினர்தொழுதெழுமடியர்மேல்வினை
தழுவினகழுவுவர்பவளமேனியர்
மழுவினர்மான்மறிக்கையர்மங்கையைக்
கெழுவினயோகினர்கெடிலவாணரே. (௫)

அங்கையிலனலெரியேந்தியாறனு
மங்கையைச்சடையிடைமணப்பர்மால்வரை
கங்கையைப்பாகமுயப்பாதென்றிசைக்
கெங்கையதெனப்படுங்கெடிலவாணரே. (௬)

கழிந்தவர்தலைகலனேந்திக்காடுறைக்
இழிந்தவரொருவரென்றெள்கவாழ்பவர்
வழிந்திழிமதுகரமிழற்றமந்திகள்
கிழிந்ததேனுகர்தருகெடிலவாணரே. (௭)

கிடந்தபாம்பருகுகண்டரிவைபேதுறக்
கிடந்தபாம்பவளையோர்மயிலென்றையுறக்
கிடந்தநீர்ச்சடைமிசைப்பிறையுமேங்கவே
கிடந்துதானகுதலைக்கெடிலவாணரே. (௮)

வெறியுறுவிரிசடைபுரளவீசியோர்
பொறியுறுபுலியுரியரையதாகவும்
நெறியுறுகுழலுமைபாகமாகவுங்
கிறிபடவுழிதர்வர்கெடிலவாணரே. (௯)

பூண்டதோரரக்கனைப்பொருவின்மால்வரைத்
தூண்டுதோளவைபடவடர்த்ததாளினு
நீண்டுநீர்க்கமலவாய்மேதிபாய்தரக்
கீண்டுதேன்சொரிதருங்கெடிலவாணரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## நமச்சிவாயப்பதிகம் - பண் - காந்தாரம்.

### திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (௧)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம்அரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (௨)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (௩)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கலால்
நலமிலனாடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. (௬)

வீடினாருலகினில்விழுமியதொண்டர்கள்
கூடினார்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. (௭)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
தன்னெறியேசரணாதல்திண்ணமே

யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (௯)

மாப்பிணைதழுவியமாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக் கடலிலே வீழ்த்தினபோது ஓதி அருளியது.

௮ பதிகம் - ௧௧.

---

திருப்பழனம் - - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கள்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானோ. (௧)

கண்டகங்காள்முண்டகங்காள்கைதைகாள்நெய்தல்காள்
பண்டரங்கவேடத்தன்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணங்
கொண்டநாள்தானறிவான்குறிக்கொள்ளாதொழிவானோ. (௨)

* மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வாளே. (௩)

புதியையாயினியையாம்பூந்தென்றால்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிக்கங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானோ. (௪)

மண்பொருந்திவாழ்பவர்க்குமாதீர்த்தவேதியர்க்கும
விண்பொருந்துதேவர்க்கும்வீடுபேறாய்நின்றானைப்
பண்பொருந்தவிசைபாடும்பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போழ்தத்துங்கைவிடநான்கடவேனோ. (௫)

பொங்கோதமால்கடலிற்புறம்புறம்போயிரைதேருஞ்
செங்கால்வெண்மடநாராய்செயற்படுவதறிவேனோ

* மனைக்காஞ்சியென்பது - வீட்டுக்குச் சமீபத்திலிருக்குங் காஞ்சிமரம்.

னங்கோலவளைகவர்ந்தானணிபொழில்சூழ்பழனத்தான்
தங்கோலநறுங்கொன்றைத்தாரருளாதொழிவானே. (௬)

துணையாருமுயங்கிப்போய்த்துறைசேருமடநாராய்
பணையாரவாரத்தான்பாட்டோவாப்பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற்கடியரணம்பொடிசெய்த
இணையாரமார்பனென்னெழினலமுண்டிகழ்வானே. (௭)

* கூவைவாய்மணிவரன்றிக்கொழித்தோடுங் § காவிரிப்பூம்
பாவைவாய்முத்திலங்கப்பாய்ந்தாடும்பழனத்தான்
கோவைவாய்மலைமகள்கோன்கொல்லேற்றின்கொடியாடைப்
பூவைகாண்மழலைகாள்போகாதபொழுதுளதே. (௮)

புள்ளிமான்பொறியரவப்புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்தவிருக்கின்றபழனத்தா
னுள்குவார்வினைதீர்க்குமென்றுரைப்பருலகெல்லாங்
கள்ளியேனானிவற்கென்கனவளையுங்கடவேனோ. (௯)

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபத்சகாயர், தேவியார் - பெரியநாயகியம்மை.

---

திருவையாறு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்று
மிடைகிலேனமணர்கள்தமறவுரைகேட்டலமந்தேன்
றொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பா
னடைகின்றேனையாறற்காளாய்நானுய்ந்தேனே. (௧)

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்கிற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
அம்பவளவையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௨)

---

* கூவைவாய்மணி என்பதற்குப் பூமியினிடத்தில் பொருந்திய முத்துகள். அவை யாவன - யானைக்கொம்பு-பன்றிக்கொம்பு-நாகம்-பசுவின்பல்-மூங்கிற்கணு - கொக்கின் கழுத்து - கற்புளமாதர்கண்டம் என்னு மிவ்விடங்களிலுண்டாயிருக்கு முத்துகளாம்.

§ காவிரிப்பூம்பாவைவாய் முத்து என்பது நீர்முத்து எனக்கொள்க. அவை சங்கு-இப்பி-மீன்-தாமரைமலர் என்னு மிவைகளிலுண்டாகு முத்துகள். இதனை "சிறைகொள் நீர்த்தரளத் திரள்கொணித்திலத்த" எனத் திருமாளிகைத்தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா ௨-வது பதிகம் - ௫-வது திருப்பாடலானுமுணர்க.

கணியானேசேயானேகம்பானேசெம்பொன்னின்
றுணியானேதோலானேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானேயையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௩)

ஊழித்தீயாய்நின்றாயுள்குவாருள்ளத்தாய்
வாழித்தீயாய்நின்றாய்வாழ்த்துவார்வாயானே
பாழித்தீயாய்நின்றாய்படர்சடைமேற்பனிமதிய
மாழித்தீயையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௪)

சடையானேசடையிடையேதவழுந்தண்மதியானே
விடையானேவிடையேறிப்புரமெரித்தவித்தகனே
யுடையானேயுடைதலைகொண்டேரான்பலிக்குழலு
மடையானவையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௫)

நீரானே தீயானேநெதியானேகதியானே
யூரானேயுலகானேயுடலானேயுயிரானே
பேரானேபிறைசூடிபிணிதீர்க்கும்பெருமானென்
றாராதவையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௬)

கண்ணானாய்மணியானாய்கருத்தானாய் * அருத்தானா
யெண்ணானாயெழுத்தானாயெழுத்தினுக்கோரியல்பானாய்
விண்ணானாய்விண்ணிடையேபுரமெரித்தவேதியனே
யண்ணானவையாறற் காளாய்காணுய்ந்தேனே. (௭)

மின்னானாயுருமானாய்வேதத்தின்பொருளானாய்
பொன்னானாய்மணியானாய்பொருகடல்வாய்முத்தானாய்
நின்னானிருவர்க்குங்காண்பரியவழிர்சோதீ
யன்னானேயையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௮)

முத்திசையும்புனற்பொன்னிமொய்பவளங்கொழித்துந்தப்
பத்தர்பலர்நீர்மூழ்கிப்பலகாலும்பணிந்தேத்த
வெத்திசையும்வானவர்களெம்பெருமானெனவிறைஞ்சும்
அத்திசையாமையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௯)

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதகரணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்தும்
அருவரைசூழையாறற்காளாய்காணுய்ந்தேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

* அருத்தானையென்பதற்கு - உன்னைப்பயில் வல்லார்க்கினியனெனப் பொருள்படுகின்றது.

### தசபுராணம்--பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பருவரையொன்றுசுற்றியரவங்கைவிட்டவிமையோரிரந்துபயமாய்த்
திருநெடுமால்நிறத்தையடுவான்விசும்புசுடுவானெழுந்தவிசைபோய்
பெருகிடமற்றிதற்கோர்பிதிகாரமொன்றையருளாய்பிரானேயெனலு
மருள்கொடுமாவிடத்தையெரியாமலுண்டவவனண்டரண்டரரசே. (௧)

நிரவொலிவெள்ளமண்டிநெடுவண்டமூடநிலநின்றுதம்பமதுவப்
பரமொருதெய்வமெய்தவிதுவொப்பதில்லையிருபாலுநின்றுபணியப்
பிரமனுமாலுமேலைமுடியோடுபாதமறியாமைநின்றபெரியோன்
பரமுதலாயதேவர்சிவனாயமூர்த்தியவனமக்கோர்சரணே. (௨)

காலமுநாள்களூழிபடையாமுனேகவுருவாகிமூவருருவிற்
சாலவுமாகிமிக்கசமயங்களாறினுருவாகிநின்றதழலோன்
ஞாலமுமேலைவிண்ணொடுலகேழுமுண்டுகுறளாயோராலினிலைமேற்
பாலனுமாயவற்கோர்பரமாயமூர்த்தியவனமக்கோர்சரணே. (௩)

நீடுயர்மண்ணும்விண்ணுநெடுவேலைகுன்றொடுலகேழுமெங்குநலியச்
சூடியகையராகியிமையோர்கணங்கள்துதியோதிநின்றுதொழலு
மோடியதாருகன்றனுடலம்பிளந்துமொழியாதகோபமொழிய
ஆடியமாநடத்தெமனலாடிபாதமவையாநமக்கோர்சரணே. (௪)

நிலைவலியின்றியெங்குநிலனோடுவிண்ணுநிதனஞ்செய்தோடுபுரமூன்
றலைகலிவஞ்சியோடியரியோடுதேவரரணம்புகத்தனருளாற்
கொலைகலவாளிமூளவரவங்கைநாணுமனல்பாயநீறுபுரமா
மலைசிலைகையிலொல்கவளைவித்தவள்ளலவனமக்கோர்சரணே. (௫)

நீலநன்மேனிசெங்கண்வளைவெள்ளெயிற்றனெரிகேசனேடிவருநாட்
காலனன்மாலைகொண்டுவழிபாடுசெய்யுமளவின்கண்வந்துகுறுகிப்
பாலனையோடவோடப்பயமெய்துவித்தவுயிர்வவ்வுபாசம்விடுமக்
காலனைவீடுசெய்தகழல்போலுமண்டர்தொழுதோதுசூடுகழலே. (௬)

உயர்தவமிக்கதக்கனுயர்வேள்விதன்னிலவியுண்ணவந்தவிமையோர்
பயமுறுமெச்சனங்கிமதியோனுமுற்றபடிகண்டுநின்றுபயமா
யயனொடுமாலுமெங்களறியாமையாதிதமியென்றிறைஞ்சியகலச்
சயமுறுதன்மைகண்டதழல்வண்ணனெந்தைகழல்கண்டுகொள்கைசரணே.

நலமலிமங்கைநங்கைவிளையாடியோடிநயனத்தலங்கள்கரமா
லுலகினையேழுமுற்றுமிருண்மூடமூடவிருளோடநெற்றியொருகண்
ணலர்தரவஞ்சிமற்றைநயனங்கைவிட்டுமடவாளிறைஞ்சமதிபோ
லலர்தருசோதிபோலவலர்வித்தமுக்கணவனமக்கோர்சரணே. (௮)

கழைப்படுகாடுதென்றல்குயில்கூவவஞ்சுகணையோனணைந்துபுகலு
மழைவடிவண்ணனெண்ணிமகவோனைவிட்டமலரானதொட்டமதனை

னெழில்பொடிவெந்துவிழவிமையோர்கணங்களெரியென்றிறைஞ்சியகலத்
தழல்படுநெற்றியொற்றைநயனஞ்சிவந்தவழல்வண்ணனெந்தைசரணே. ()

தடமலராயிரங்கள்குறைவொன்றதாகநிறைவென்றுதன்கணதனு
வுடன்வழிபாடுசெய்ததிருமாலையெந்தைபெருமானுகந்துமிகவுஞ்
சுடராடியான்முயன்றுசுழல்வித்தரக்கனிதயம்பிளந்தகொடுமை
யடல்வலியாழியாழியவனுக்களித்தவவனமக்கோர்சரணே. (௧௦)

கடுகியதேர்செலாதுகயிலாயமீதுகருதேலுன்வீரமொழிநீ
முடுகுவதன்றுதன்மமெனநின்றுபாகன்மொழிவானைநன்றுமுனியா
விடுவிடுவென்றுசென்றுவிரைவுற்றரக்கன்வரையுற்றெடுக்கமுடிதோள்
நெடுநெடுவிற்றுவீழவிரலுற்றபாதநினைவுற்றதென்றன்மனனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

பாவநாசத்திருப்பதிகம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரியதிருவுருவை
* வெற்றியூரில்விரிசுடரைவிமலர்கோனைத்திரைசூழ்ந்த
வொற்றியூரெமுத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே. (௧)

ஆனைக்காவிலணங்கினையாரூர்நிலாயவம்மானைக்
கானப்பேரூர்க்கட்டியைக்கானூர்முளைத்தகரும்பினை
வானப்பேரார்வந்தேத்துவாய்மூர்வாழும்வலம்புரியை
மானக்கயிலைமழகளிற்றைமதியைச்சுடரைமறவேனே. (௨)

மதியங்கண்ணிஞாயிற்றைமயக்கந்தீர்க்குமருந்தினை
யதிகைமூதூரரசினையையாறமர்ந்தவையனை
விதியைப்புகழைவானோர்கள்வேண்டித்தேடும்விளக்கினை
நெதியைஞானக்கொழுந்தினைநினைந்தேற்குள்ளநிறைந்ததே. (௩)

புறம்பயத்தெம்முத்தினைப்புகலூரிலங்குபொன்னினை
† உறந்தையோங்குசிராப்பள்ளியுலகம்விளக்குஞாயிற்றைக்
கறங்குமருவிக்கழுக்குன்றிற்காண்பார்காணுங்கண்ணுனை
யறஞ்சூழதிகைவீரட்டத்தரிமானேற்றையடைந்தேனே. (௪)

கோலக்காவிற்குருமணியைக்‡குடமூக்குறையும்விடமுணியை
ஆலங்காட்டிலந்தேனையமரர்சென்னியாய்மலரைப்
பாலிற்றிகழும்பைங்கனியைப்பராய்த்துறையெம்பசும்பொன்னைச்
சூலத்தானைத்துணையிலியைத்தோணைக்குளிரத்தொழுதேனே. (௫)

---

* வெற்றியூரென்பது - வைப்புத்தலத்திலொன்று.

† உறந்தையென்பது - உறையூர். இதுவே திருமூக்கீச்சரமென்னுந் தலம்.

‡ குடமூக்கென்பது - கும்பகோணம்.

மருகலுறையுமாணிக்கத்தைவலஞ்சுழியினம்மாலையைக்
கருகாவூரிற்கற்பகத்தைக்காண்டற்கரியகதிரொளியைப்
பெருவேளூரெம்பிறப்பிலியைப்பேணுவார்கள்பிரிவரிய
திருவாஞ்சியத்தெஞ்செல்வனைச்சிந்தையுள்ளேவைத்தேனே. (௬)

எழிலாரிராசசிங்கத்தையிராமேச்சுரத்தெமெழிலேற்றைக்
குழலார்கோதைவரைமார்பிற்குற்றாலத்தெங்கூத்தனை
நிழலார்சோலைநெடுங்களத்துநிலாயநித்தன்மணாளனை
யழலார்வண்ணத்தம்மானையன்பிலணைத்துவைத்தேனே. (௭)

மாலைதோன்றும்வளர்மதியைமறைக்காட்டுறையுமணாளனை
யாலைக்கரும்பினின்சாற்றையண்ணாமலையெம்மண்ணலைச்
சோலைத்துருத்திநகர்மேயசுடரிற்றிகழுந்துளக்கிலியை
மேலைவானோர்பெருமானைவிருப்பால்விழுங்கியிட்டேனே. (௮)

சோற்றுத்துறையெஞ்சோதியைத்துருத்திமேயதூமணியை
யாற்றிற்பழனத்தம்மானையாலவாயெம்மருமணியை
நீற்றிற்பொலிந்தநிமிர்திண்டோள்நெய்த்தானத்தெந்நிலாச்சுடரைத்
தோற்றக்கடலையடலேற்றைத்தோளைக்குளிரத்தொழுதேனே. (௯)

புத்தூருறையும்புநிதனைப்பூவணத்தெம்போரேற்றை
வித்தாய்மிழலைமுளைத்தானைவேள்விக்குடியெமவேதியனைப்
பொய்த்தார்புரமூன்றெரித்தானைப் * பொதியின்மேயபுராணனை
வைத்தேனென்றன்மனத்துள்ளே ¶ மாத்தூர்மேயமருந்தையே. (௧௦)

முந்தித்தானேமுளைத்தானைமூரிவெள்ளேறூர்ந்தானை
யந்திச்செவ்வான்படியானையரக்கனாற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச்செஞ்சொன்மாலையடிசேர்த்தி
யெந்தைபெம்மானென்னெம்மானென்பார்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருப்புகலூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யர்வெண்ணூலர்கருமான்மறிதுள்ளுங்
கையர்கனைகழல்கட்டியகாலினர்

---

* பொதியில் என்பது பொதிகைமலை. இது வைப்புத்தலத்திற் சேர்ந்தது. இங்கணூர் பிடவூர் கோவந்தபுத்தூர் குருக்கேத்திரம் பொதிகைமலையென்னுஞ் செய்யுளானு முணர்க, தனியே பதிகமில்லாமல் இவ்வாறு சிலபதிகங்களில் வைத்துச்சொல்லியிருப்பதினால் வைப்புத்தலமென்று முன்னோர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள், தேவர்களுக்கு முனிவர்களுக்கும் பொதுஸ்தானமாயிருப்பதினால் பொதுவில் எனப்பெயர்பெற்ற மலையானது பொதியில் பொதியம் பொதிகை எனமருவிநின்றது. இந்தத்தலமுதல் அநேகத்தலங்களுக் கிருந்தபதிகங்கள் லயமாய்விட்டன. அவைகளில் நூற்றெண்பதுதலம் வைப்புத்தலமென்று சொல்லப்படுகின்றது.

¶ மாத்தூரென்பது - திருவாமாத்தூர்.

மெய்யர்மெய்ந்நின்றவர்க்கல்லாதவர்க்கென்றும்
பொய்யர்புகலூர்ப்புரிசடையாரே. (க)

மேகநூர்தியர்மின்போன்மிளிர்சடைப்
பாகமதிநுதலாளையோர்பாகத்தர்
நாகவளையினர்நாகவுடையினர்
போகர்புகலூர்ப்புரிசடையாரே. (உ)

பெருந்தாழ்சடைமுடிமேற்பிறைசூடிக்
கருந்தாழ்குழலியுந்தாமுங்கலந்து
திருந்தாமனமுடையார்திறத்தென்றும்
பொருந்தார்புகலூரப்புரிசடையாரே. (ங)

அக்காரணிவடமாகத்தர்நாகத்தர்
நக்காரிளமதிக்கண்ணியர்நாடொறும
உக்கார்தலைபிடித்துண்பலிக்கூர்தொறும்
புக்கார்புகலூர்ப்புரிசடையாரே. (ச)

ஆர்த்தாருயிரடுமந்தகன்றன்னுடல்
பேர்த்தார்பிறைநுதற்பெண்ணினல்லாளுட்கக்
கூர்த்தார்மருப்பிற்கொலைக்களிற்றீருரி
போர்த்தார்புகலூர்ப்புரிசடையாரே. (ரு)

உதைத்தார்மறலியுருளவோர்காலாற்
சிதைத்தார்திகழ்தக்கன்செய்தநல்வேள்வி
பதைத்தார்சிரங்கரங்கொண்டுவெய்யோன்கண்
புதைத்தார்புகலூர்ப்புரிசடையாரே. (சு)

தூமன்சுறவந்துதைந்தகொடியுடைக்
காமன்கணைவலங்காய்ந்தமுக்கண்ணினர்
சேமநெறியினர்சீரையுடையவர்
பூமன்புகலூர்ப்புரிசடையாரே. (எ)

கருந்தார்தலையர்கடிமதின்மூன்றுந்
தெரிந்தார்கணைகள்செழுந்தழலுண்ண
விரிந்தார்சடைமேல்விரிபுனற்கங்கை
புரிந்தார்ப்புகலூர்ப்புரிசடையாரே. (அ)

ஈண்டாரழலினிருவருங்கைதொழ
நீண்டார்நெடுந்தடுமாற்றநிலையஞ்ச
மாண்டார்தமென்புமலர்க்கொன்றைமாலையும்
பூண்டார்புகலூர்ப்புரிசடையாரே. (கூ)

கறுத்தார்மணிகண்டங்கால்விரலூன்றி
இறுத்தாரிலங்கையர்கோன்முடிபத்து
மறுத்தார்புலனைந்துமாயிழைபாகம்
பொறுத்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௧0

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - அக்கினீசுவரர், தேவியார் - கருந்தார்குழலியம்மை.

---

திருவாரூர் - அரநெறி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எத்திசைபுகினுமெமக்கொருதீதிலை
தெத்தேயெனமுரன்றெம்முள் * உழிதர்வர்
முத்தீயனையதோர்மூவிலைவேல்பிடித்
ததீகிறத்தாரநெறியாரே. (௧)

வீரமும்பூண்பர்விசயனொடாயதோர்
தாரமும்பூண்பர்தமக்கன்புபட்டவர்
பாரமும்பூண்பர்கற்பைங்கண்மிளிர்அர
வாரமும்பூண்பாரநெறியாரே. (௨)

தஞ்சவண்ணத்தர்சடையினர்தாமுமோர்
வஞ்சவண்ணத்தர்வண்டார்குழலாளொடுந்
துஞ்சவண்ணத்தர்துஞ்சாதகண்ணர்தொழும்
அஞ்சவண்ணத்தாரநெறியாரே. (௩)

விழித்தனர்காமனைவீழ்தரவிண்ணின்
றிழித்தனர்கங்கையையேத்தினர்பாவங்
கழித்தனர்கல்சூழ்கடியரண்மூன்று
மழித்தனராரூரநெறியாரே. (௪

துற்றவர்வெண்டலையிற்சுருள்கோவணந்
தற்றவர்தமவினையானவெல்லாமற
வற்றவராரூரநெறிகைதொழ
வுற்றவர்தாமொளிபெற்றவர்தாமே. (௫

கூடரவத்தர்குரற்கிண்கிணியடி
நீடரவத்தர்முன்மாலையிடையிருள்
பாடரவத்தர்பணமஞ்சுபைவிரித்
தாடரவத்தாரநெறியாரே. (௬

கூடவல்லார்குறிப்பில்லுமையாளொடு
பாடவல்லார்பயின்றந்தியுஞ்சந்தியும்

---

* உழிதர்வர் - சஞ்சரிப்பர், உழிதருவர் என்பார்லது - உழிதர்வர் என விகாரமாயிற்று

ஆடவல்லார்திருவாரூரரநெறி
யாடவல்லார்வினைவீடவல்லாரே. (எ)

பாலைக்குபனிவெண்மதிபைங்கொன்றை
மாலையுங்கண்ணியுமாவனசேவடி
காலையுமாலையுங்கைதொழுவார்மனம்
ஆலயமாரூரரநெறியார்க்கே. (அ)

முடிவண்ணம்வானமின்வண்ணந்தம்மார்பிற்
பொடிவண்ணந்தம்புகழூர்தியின்வண்ணம்
படிவண்ணம்பாற்கடல்வண்ணஞ்செங் * ஞாயி
றடிவண்ணமாரூரரநெறியார்க்கே. (௯)

பொன்னவில்புன்சடையானடியின்னிழ
லின்னருள்சூடியெள்காதுமிராப்பகன்
மன்னவர்கின்னரர்வானவர்தாந்தொழும்
அன்னவராரூரரநெறியாரே. (க௦)

○ பொருள்மன்னனைப்பற்றிப்புட்பகங்கொண்ட
மருள்மன்னனையெற்றிவாளுடனீந்து
கருள்மன்னுகண்டங்கறுக்கஞ்சுண்ட
வருள்மன்னராரூரரநெறியாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வன்மீகநாதர், தேவியார் - அல்லியங்கோதையம்மை.

---

விடந்தீர்த்ததிருப்பதிகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுயரும்மதிசூடுவ
ரொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்வதுதானே. (க)

இரண்டுகொலாமிமையோர்தொழுபாத
மிரண்டுகொலாமிலங்குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுருவஞ்சிறுமான்மழு
விரண்டுகொலாமவரெய்தினதாமே. (உ)

மூன்றுகொலாமவர்கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர்சூலத்தின்மொய்யிலை

---

* ஞாயிறு அடிவண்ணம் என்பது - உதயகால சூரியனது நிறம் எனப் பொருள்கொள்க.
○ பொருள்மன்னன்என்பது - குபேரன்.

* மூன்றுகொலாங்கணைகையதுவின்னாண்
மூன்றுகொலாம்புரமெய்தனர்தாமே. (௩)

நாலுகொலாமவர்தம்முகமாவன
நாலுகொலாஞ்சனனம்முதற்றோற்றமு
நாலுகொலாமவரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறைபாடினதாமே. (௪)

அஞ்சுகொலாமவராடரவின்படம்
அஞ்சுகொலாமவர்வெல்புலனாவன
வஞ்சுகொலாமவர்காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவராடினதாமே. (௫)

ஆறுகொலாமவரங்கம்படைத்தன
வாறுகொலாமவர்தம்மகனார்முக
மாறுகொலாமவர்தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவையாக்கினதாமே. (௬)

ஏழுகொலாமவரூழிபடைத்தன
ஏழுகொலாமவர்கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசையாக்கினதாமே. (௭)

எட்டுக்கொலாமவரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர்சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர்தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசையாக்கினதாமே. (௮)

ஒன்பதுபோலவர்வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர்மார்பினினூலிழை
யொன்பதுபோலவர்கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர்பாரிடந்தானே. (௯)

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுநெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது அப்பூதிநாயனார் புத்திரனைத் தீண்டியவிஷம் நீங்கும்படி அருளிச்செய்தது.

---

* வாயுதேவன் பாணத்தின் ஈர்க்கும் விஷ்ணு அதில் பூட்டிய அலகும் அக்கினிதேவன் அந்த அலகின் முனையில் கூர்மையுமாயிருந்ததைப்பற்றி மூன்று கொலாங்கணையென்றருளிச்செய்தது.

திருவாரூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

சூலப்படையானைச்சூழாகவீழருவிக்
கோலத்தோட்குங்குமஞ்சேர்குன்றெட்டுடையானைப்
பாலொத்தமென்மொழியாள்பங்கனைப்பாங்காய
ஆலத்தின்கீழானைநான்கண்டதாரூரே. (௧)

பக்கமேபாரிடங்கள்சூழப்படுதலையிற்
புக்கவூர்ப்பிச்சையேற்றுண்டுபொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின்றூவல்கொடியெடுத்தகோவணத்தோ
டகலணிந்தவம்மானைநான்கண்டதாரூரே. (௨)

சேயவுலகமுஞ்செல்சார்வுமானானை
மாயப்போர்வல்லானைமாலைதாழ்மார்பனை
வேயொத்ததோளியர்தமென்முலைமேற்றண்சாந்தின்
ஆயத்திடையானைநான்கண்டதாரூரே. (௩)

ஏறேற்றமாவேறியெண்கணமும்பின்படர
மாறேற்றார்வல்லரணஞ்சீறியமயானத்தி
னீறேற்றமேனியனாயநீள்சடைமேனீர்ததும்ப
ஆறேற்றவந்தணனைநான்கண்டதாரூரே. (௪)

தாங்கோலவெள்ளெலும்புபூண்டுதம்மேறேறிப்
பாங்கானவூர்க்கெல்லாஞ்செல்லும்பரமனார்
தேங்காவினூறுந்திருவாரூர்த்தொன்னகரிற்
பூங்கோயிலுண்மகிழ்ந்துபோகாதிருந்தாரே. (௫)

எம்பட்டம்பட்டமுடையானையேர்மதியி
னுமபட்டஞ்சேர்நுதலானையந்திவாய்ச்
செம்பட்டுடுத்துச்சிறுமானுரியாடை
யம்பட்டசைத்தானைநான்கண்டதாரூரே. (௬)

போழொத்தவெண்மதியஞ்சூடிப்பொலிந்திலங்கு
வேழத்துரிபோர்த்தான்வெள்வளையாடான்வெருவ
வூழித்தீயன்னானையோங்கொலிமாப்பூண்டதோர்
* ஆழித்தேர்வித்தகனைநான்கண்டதாரூரே. (௭)

வஞ்சனையாரார்பாடுஞ்சாராதமைந்தனைத்
துஞ்சிருளாடலுகந்தானைத்தன்றொண்டர்
நெஞ்சிருள்கூரும்பொழுதுநிலாப்பாரித்
தஞ்சுடராய்நின்றானைநான்கண்டதாரூரே. (௮)

---

* ஆழித்தேர் - சக்கராகாரமாயிருக்குந் தேரென அறிக.

கார்முதுகொன்றைகடிகாதுதன்னை
னீர்முதுகோதையோடாடியநீண்மார்பன்
பேரமுதமுண்டார்களுய்யப்பெருங்கடனஞ்
சாரமுதாவுண்டானைநான்கண்டதாரூரே. (௯)

தாடவுடக்கையன்றாமரைப்பூஞ்சேவடியன்
கோடலாவேடத்தன்கொண்டதோர்வீணையினு
னூடரவக்கிண்கிணிக்காலன்ஞானோசேடனை
யாடுந்தீக்கூத்தனைநான்கண்டதாரூரே. (௧0)

மஞ்சாடுகுன்றடரவூன்றிமணிவிரலாற்
றுஞ்சாப்போர்வாளரக்கன்றோணெரியக்கண்குருதிச்
செஞ்சாந்தணிவித்துத்தன்மார்பிற்பால்வெண்ணீற்
றஞ்சாந்தணிந்தானைநான்கண்டதாரூரே. (௧௧

திருச்சிற்றம்பலம்

---

திருவாரூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாய்நினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறமபோயினலைறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளமதி
தீண்டிவநதுலவுநதிருவாரூரமமானே. (௧

கடம்படகடமாடினய்களைகண்ணெனக்கொருகாதல்செய்
தடியொடுங்கிவநதடைந்தேனொழிப்பாய்பிழைப்பவெல்லா
முடங்கிறான்முதுநீமலங்கிளவாளைசெங்கயல்சேல்வரால்களி
றடைந்ததண்கழனியணியாரூரம்மானே. (உ

அருமணித்தடம்பூண்முலையரம்பையோடருளுப்பாடி
யுரிமையிற்றொழுவாருருத்திரபல்கணத்தார
விரிசடைவிரதிகளநதணர்சைவர் ٥ பாசுபதர்கபாலிகள்
தெருவினிற்பொலியுநதிருவாரூரம்மானே. (௩

பூங்கழல்தொழுதுமபரவியும்புண்ணியர்புனிதாவுன்பொற்கழ
லீங்கிருக்கப்பெற்றேனென்னகுறையுடையே
னோங்குதெங்கிலையார்கமுகிளவாழைமாவொடுமாதுளம்பல
தீங்கனிசிதறுந்திருவாரூரம்மானே. (௪

நீறுசேர்செழுமார்பினய்நிரம்பாமதியொடுநீள்சடையிடை
யாறுபாயவைத்தாயடியேயடைந்தொழிந்தே

---

* கொன்றைமலர் - காரகாலத்தில் மலரு மியல்பைப்பற்றிக் கார்முதுகொன்றை யென்றருளிச்செய்தது.

٥ பாசுபதர்-கபாலிகள் இவ்விருவகையோரும் அகவகை உட்சமயத்தாரிற்சேர்ந்தவர்

ணெறிவண்டொடுதும்பியஞ்சிறகூன்றவிண்டமலரிதழ்வழி
தேறல்பாய்ந்தொழுகுந்திருவாரூரம்மானே. (௬)

அளித்துவந்தடிகைதொழுமவர்மேல்வினைகெடுமென்றிவையகங்
களித்துவந்துடனேகலந்தாடக்காதலராய்க்
குளித்துமூழ்கியுந்தூவியுங்குடைந்தாடுகோதையர்குஞ்சியுள்புகத்
தெளிக்குந்தீர்த்தமருந்திருவாரூரம்மானே. (௬)

திரியுமூவெயில்தீயெழச்சிலைவாங்கிநின்றவனேயென்சிந்தையுட்
பிரியுமாறெங்ஙனேபிழைத்தேயும்போகவொட்டேன்
பெரியசெந்நெற்பிரமபுரிசேர்ந்தசாலிதிப்பியமென்றிவையகத்
தரியுந்தண்கழனியணியாரூரம்மானே. (௭)

பிறத்தலும்பிறந்தாற்பிணிப்படவாய்ந்தசைந்துடலம்புகுந்துநின்
றிறக்குமாறுளதேயிழித்தேன்பிறப்பினைநா
னறத்தையேபுரிந்தமனத்தனையார்வச்செற்றக்குரோதநீக்கியுன்
திறத்தனையொழிந்தேன்றிருவாரூரம்மானே. (௮)

முளைத்தவெண்பிறைமொய்சடையுடையாயெப்போதுமென்னெஞ்சிடங்
வளைத்துக்கொண்டிருந்தேன்வலிசெய்துபோகவொட்டேன் [கொள்ள
வுளைபபிரிந்தவலவன்போய்ப்புகுந்தகாலமுங்கண்டுதன்பெடை
திளைக்குந்தண்கழனித்திருவாரூரம்மானே. (௯)

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாகங்கீண்டவ
னாடிக்காணமாட்டாத்தழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைக்கூறுபத்தர்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்றிருவாரூரம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருவாரூர்த்திருவாதிரைத்திருப்பதிகம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௧)

நணியார்சேயார்நல்லார்தீயார்நாடோறும்
பிணிதான்றீருமென்றுபிறங்கிக்கிடப்பாரு
மணியேபொன்னேமைந்தாமணாளாவென்பார்கட்
கணியானாரூராதிரைநாளாலதுவண்ணம். (௨)

வீதிகடோறும்வெண்கொடியோடுவிதானங்கள்
சோதிகள்விட்டுச்சுடர்மாமணிகளொளிதோன்றச்

சாதிகளாயபவளமுமுத்துத்தாமங்க
ளாதியாரூராதிரைநாளாலதுவண்ணம். (௩)

குணங்கள்பேசிக்கூடிப்பாடித்தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற்பித்தரைப்போலப்பிதற்றுவார்
வணங்கிநின்றுவானவர்வந்துவைகலு
மணங்கனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௪)

நிலவெண்சங்கும்பறையுமார்ப்பவிற்கில்லாப்
பலருமிட்டகல்லவடங்கள்பரந்தெங்கும்
கலவமஞ்ஞைகாரென்றெண்ணிக்களித்துவந
தலமராரூராதிரைநாளாலதுவணணம. (௫)

வீம்மாவெருவாவிழியாத்தெழியாவெருட்டுவார்
தம்மாண்பிலராய்த்தரியார்தலையான்முட்டுவா
ரெம்மானீசனெந்தையென்னப்பனென்பார்கட்
கம்மானாரூராதிரைநாளாலதுவண்ணம். (௬)

செந்துவர்வாயார்செல்வன்சேவடிசிந்திப்பார்
மைந்தர்களோடுமங்கையர்கூடிமயங்குவா
ரிந்திரனாதிவானவர்சித்தரெடுத்தேத்து
மந்திரனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௭)

முடிகள்வணங்கிமூவாதார்கண்முன்செல்ல
வடிகொள்வேய்த்தோள்வானரமங்கையர்பின்செல்லப்
பொடிகள்பூசிப்பாடுந்தொண்டர்புடைசூழ
வடிகளாரூராதிரைநாளாலதுவண்ணம. (௮)

துன்பநும்மைத்தொழாதநாள்களென்பாரு
மின்பநும்மையேத்துநாள்களென்பாரு
நும்பினெம்மைநுழையப்பணியேயென்பாரு
மன்பனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௯)

பாரூர்பவ்வத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெமமாப்பார்க்
தோரூரொழியாதுலகமெங்குமெடுத்தேத்து
மாரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## கோயிற்றிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக்காணலாநறவநாறு

மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத்துளங்கெரியாடுமாறே. (௧)

ஏறனாரேறுதம்பாலிளநிலாவெறிக்குஞ்சென்னி
யாறனாராறுசூடியாயிழையாளோர்பாகர்
நாறுபூஞ்சோலைத்தில்லைநவின்றசிற்றம்பலத்தே
நீறுமெய்பூசிநின்றுநீண்டெரியாடுமாறே. (௨)

சடையனார்சாந்தநீற்றர்தனிநிலாவெறிக்குஞ்சென்னி
யுடையனாருடைதலையிலுண்பதும்பிச்சையேற்றுக்
கடிகொள்பூந்தில்லைதன்னுட்கருதுஞ்சிற்றம்பலத்தே
யடிகழலார்க்கநின்றுமனலெரியாடுமாறே. (௩)

பையரவசைத்தவல்குற்பணிநிலாவெறிக்குஞ்சென்னி
மையரிக்கண்ணியாளுமாலுமோர்பாகமாகிச்
செய்யெரிதில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
கையெரிவீசிநின்றுகனலெரியாடுமாறே. (௪)

ஓதினார்வேதம்வாயாலொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பூதனார்பூதஞ்சூழப்புலியுரியதளனார்தா
நாதனார்தில்லைதன்னுணவின்றசிற்றம்பலத்தே
காதில்வெண்குழைகடாழக்கனலெரியாடுமாறே. (௫)

ஓருடம்பிருவராகியொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பாரிடம்பாணிசெய்யப்பயின்றவெம்பரமமூர்த்தி
காரிடந்தில்லைதன்னுட்கருதுசிற்றம்பலத்தே
பேரிடம்பெருகநின்றுபிறங்கெரியாடுமாறே. (௬)

முதற்றனிச்சடையைமூழ்கமுகிழ்நிலாவெறிக்குஞ்சென்னி
மதகளிற்றுரிவைபோர்த்தமைந்தனைக்காணலாகு
மதத்துவண்டறையுஞ்சோலைமல்குசிற்றம்பலத்தே
கதத்ததோரரவமாடக்கனலெரியாடுமாறே. (௭)

மறையனார்மழுவொன்றேந்திமணிநிலாவெறிக்குஞ்சென்னி
யிறைவனாரெம்பிரானாரோத்துவாரிடர்கடீர்ப்பார்
சிறைகொணீர்த்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
யறைகழலார்க்கநின்றுவனலெரியாடுமாறே. (௮)

விருத்தனாய்ப்பாலனாகிவிரிநிலாவெறிக்குஞ்சென்னி
நிருத்தனார்நிருத்தஞ்செய்யநீண்டபுன்சடைகடாழக்
கருத்தனார்தில்லைதன்னுட்கருதுசிற்றம்பலத்தே
யருத்தமாமேனிதன்னோடனலெரியாடுமாறே. (௯)

பாலனாய்விருத்தனாகிப்பனிநிலாவெறிக்குஞ்சென்னி
காலனைக்காலாற்காய்ந்தகடவுளார்விடையொன்றேறி

ஞாலமாந்தில்லைதன்னுணின்றசிற்றம்பலத்தே
நீலஞ்சேர்கண்டனார்தாம்நீண்டெரியாடுமாறே. (௧0)

மதியிலாவரக்கனோடி மாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோழனரிவலூன்றிநீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுள்மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்போலநின்றுவனலெரியாடுமாறே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மூலத்தானநாயகர் - சபாநாதர், தேவியார் - சிவகாமியம்மை.

---

### கோயிற்றிருநேரிசை - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. (௧)

கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத்திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றமபலத்தே
நிருத்தநான்காணவேண்டிநேர்படவந்தவாறே. (௨)

கேட்டிலேன்கிளைபிரியேன்கேட்குமாகேட்டியாகில்
காட்டினேனின்றன்பாதம்நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டில்நீர்வாளைபாயுமல்குசிற்றமபலத்தே
கூட்டமாங்குவிமுலையாள்கூடநீயாடுமாறே. (௩)

சிந்தையைத்திகைப்பியாதேசெறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்யாயாதுநான்செய்வதென்னே
செந்தீயார்வேள்வியோவாத்தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாடவடியிணையலசுங்கொல்லோ. (௪)

கண்டவாதிரிந்துநாளுங்கருத்தினால்நின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக்கூடுவேன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலைமல்குசிற்றமபலத்தே
யெண்டிசையோருமேத்தநிறைவனீயாடுமாறே. (௫)

பார்த்திருந்தடியனேனும்பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னைமூவரின்முதல்வனென்பன்
ஏத்துவரிடர்களைப்பாய்தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடநான்வந்தவாறே. (௬)

பொய்யினைத்தவிரவிட்டுப்புறமலாவடிமைசெய்ய
ஐயநீயருளிச்செய்யாயாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்கமல்குசிற்றம்பலத்தே
பையநுன்னுடல்காண்பான்பரமநான்வந்தவாறே. (௭)

மனத்தினால்திகைத்துநாளுமாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனோகறையணிகண்டத்தானே
நினைத்தனைவேதங்குன்றாத்தில்லைச்சிற்றமபலத்தே
யனைத்துநின்னிலயங்காணபானடியனேன்வந்தவாறே. (௮)

நெஞ்சினைத்தூய்மைசெய்துநினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோவானவர்தலைவனேநீ
மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
யஞ்சொலாள்காணநின்றுவழகநீயாடுமாறே. (௯)

மண்ணுண்டமாலவனுமலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவமவிருமபினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்கதில்லைச்சிற்றமபலததே
பண்ணுண்டபாடலோடுமபரமநீயாடுமாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருவதிகைத்திருவீரட்டானம் - கோப்புளித்ததிருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

இரும்புகொப்புளித்தயானையீருரிபோர்த்தவீசன்
கரும்புகொப்புளித்தவின்சொற்காரிகைபாகமாகச்
சுருமபுகொப்புளிததகங்கைத்துவலைநீர்சடையிலேற்ற
அருமபுகொப்புளித்தசென்னியதிகைவீரட்டனாரே. (௧)

கொம்புகொப்புளித்ததிங்கட்கோணல்வெண்பிறையுஞ்சூடி
வமபுகொப்புளித்தகொன்றைவளர்சடைமேலும்வைததுச்
செமபுகொபபுளித்தமூன்றுமதிலுடன்சுருங்கவாங்கி
யமபுகொப்புளிக்கவெய்தாரதிகைவீரட்டனாரே. (௨)

விடையுங்கொப்புளித்தபாதம்விண்ணவர்பரவியேத்தச்
சடையுங்கொப்புளித்ததிங்கட்சாந்தம்வெண்ணீறுபூசி
யுடையுங்கொபபுளித்தநாகமுள்குவாருள்ளத்தென்றும
அடையுங்கொப்புளித்தசீராரதிகைவீரட்டனாரே. (௩)

கறையுங்கொப்புளித்தகண்டர்காமவேளுருவமங்க
இறையுங்கொப்புளித்தகண்ணாரேத்துவாரிடர்கடிப்பார்
மறையுங்கொப்புளித்தநாவர்வண்டுண்டுபாடுங்கொன்றை
யறையுங்கொப்புளித்தசென்னியதிகைவீரட்டனாரே. (௪)

நீறுகொப்புளித்தமார்பர்நிழறிகழ்மழுவொன்றேந்திக்
கூறுகொப்புளித்தகோதைக்கோல்வளைமாதோர்பாகம்
ஏறுகொப்புளித்தபாதமிமையவர்பரவியேத்த
ஆறுகொப்புளித்தசென்னியதிகைவீரட்டனாரே. (௫)

வணங்குகொப்புளித்தபாதம்வானவர்பரவியேத்த
பிணங்குகொப்புளித்தசென்னிச்சடையுடைப்பெருமையண்ணல்
சுணங்குகொப்புளித்தகொங்கைச்சுரிகுழல்பாகமாக
அணங்குகொப்புளித்தமேனியதிகைவீரட்டனாரே. (௬)

சூலங்கொப்புளித்தகையர்சுடர்விடுமழுவாள்வீசி
நூலுங்கொப்புளித்தமார்பில்நுண்பொறியரவஞ்சேர்த்தி
மாலுங்கொபபுளித்தபாகர்வண்டுடன்பாடுங்கொன்றை
யாலுங்கொபபுளித்தகண்டத்ததிகைவீரட்டனாரே. (௭)

நாகங்கொப்புளித்தகையர்நான்மறையறையப்பாடி
மேகங்கொப்புளித்ததிங்கள்விரிசடைமேலும்வைத்துப
பாகங்கொப்புளித்தமாதர்பண்ணுடன்பாடியாட
ஆகங்கொப்புளித்ததோளாரதிகைவீரட்டனாரே. (௮)

பரவுகொப்புளித்தபாடல்பண்ணுடன்பத்தரேத்த
விரவுகொப்புளித்தகங்கைவிரிசடைமேவவைத்து
இரவுகொப்புளித்தகண்டரோத்துவாரிடர்கடீர்ப்பார்
அரவுகொப்புளித்தகையரதிகைவீரட்டனாரே. (௯)

தொண்டைகொப்புளித்தசெவ்வாய்த்துடியிடைப்பரவையல்குற்
கொண்டைகொப்புளித்தகோதைக்கோல்வளைபாகமாக
வண்டுகொப்புளித்ததீந்தேன்வரிக்கயல்பருகிமாந்தக்
கெண்டைகொப்புளித்ததெண்ணீர்க்கெடிலவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெண்ணிலாமதியந்தன்னைவிரிசடைமேவவைத்து
வுண்ணிலாப்புகுந்துநின்றங்குணர்வினுக்குணரக்கூறி
விண்ணிலாமீயச்சூரார்வேண்டுவார்வேண்டுவார்க்கே
யண்ணியார்பெரிதுஞ்செய்வாரதிகைவீரட்டனாரே. (௧)

பாடினார்மறைகணான்கும்பாயிருள்புகுந்தென்னுள்ளங்
கூடினார்கூடலாலவாயிலார்நல்லகொன்றை
சூடினார்சூடல்மேவிச்சூழ்சுடர்ச்சுடலைவெண்ணீ
றாடினாராடல்மேவியதிகைவீரட்டனாரே. (௨)

ஊனையேகழிக்கவேண்டிலுணர்மின்களுள்ளத்துள்ளே
தேனையமலர்கள்கொண்டுசிந்தையுட்சிந்திக்கின்ற
ஏனையபலவுமாகியிமையவரேத்தநின்று
ஆனையினுரிவைபோர்த்தாரதிகைவீரட்டனாரே (௩)

துருத்தியாங்குரம்பைதன்னிற்றொண்ணூற்றங்கறுவர்நின்று
விருத்திதானருகவென்றுவேதனைபலவுஞ்செய்ய
வருத்திபால்வல்லவாறுவந்துவந்தடையநின்ற
அருத்தியார்க்கன்பர்போலுமதிகைவீரட்டனாரே. (௪)

பத்தியாலேத்திநின்றுபணிபவர்நெஞ்சத்துள்ளார்
துத்தியைந்தலையநாகஞ்சூழ்சடைமுடிமேல்வைத்து
ததாமலையாள்பாவையுமையவணடுங்கவன்று
அத்தியினுரிவைபோர்த்தாரதிகைவீரட்டனாரே (௫)

வரிமுடிபாடியென்றுமவல்லவாறடைந்துநெஞ்சே
கரிபுரிமூடவல்லகடவுளைக்காலத்தாலே
சுரிபுரிவிரிகுழலாள்துடியிடைப்பரவையல்கு
லரிவைபொற்பாகர்போலுமதிகைவீரட்டனாரே. (௬)

நீதியால்நினைசெய்நெஞ்சேநிமலனைநித்தமாகப்
பாதியாமுமைதன்னோடும்பாகமாய்நின்றவெந்தை
சோதியாச்சுடர்விளக்காச்சுண்ணவெண்ணீறதாடி
யாதியுமீறுமானாரதிகைவீரட்டனாரே (௭)

எல்லியும்பகலுமெல்லாந்துஞ்சுவேற்கொருவர்வந்து
புல்லியமனத்துக்கோயிலுள்புகுந்தார்காமனென்னும்
வில்லியைங்கணையினானைவெந்துகநோக்கிட்டார்
அல்லியம்பழனவேலியதிகைவீரட்டனாரே. (௮)

ஒன்றவேயுணர்திராகிலோங்காரத்தொருவனாகும்
வென்றவைம்புலன்கடம்மைவிலக்குதற்குரியீரெல்லாம்
நன்றவநாரணனுநான்முகனடிக்காணாக்குற்
றன்றயவாகரியார்போலுமதிகைவீரட்டனாரே. (௯)

தடக்கையாலெடுத்துவைத்துத்தடவரைகுலுங்கவார்த்துக்
கிடக்கையாலிடர்களோங்கக்கிளர்மணிமுடிகள்சாய
முடக்கினார்திருவிரலதான்முருகமர்கோதைபாகத்
தடக்கினாரென்னையாளுமதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேயெங்கள்கோவேநாதனேயாதிமூர்த்தி
பங்கனேபரமயோகியென்றென்றேபரவிநாளும

செம்பொனேபவளக்குன்றேதிகழ்மலர்ப்பாதங்காணப்பா
னன்பனேயலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௧)

பொய்யினான்மிடைந்தபோர்வைபுரைபுரையழுகிவீழ
மெய்யனாய்வாழமாட்டேன்வேண்டிற்றொன்றறைவார்வேண்டார்
செய்யதாமரைகளன்னசேவடியிரண்டுங்காணப்பான
ஐயநானலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௨)

நீதியால்வாழமாட்டேனித்தலுந்தூயனல்லேன்
ஓதியுமுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயுன்றன்றூமலர்ப்பாதங்காணப்பான
ஆதியேயலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (௩)

தெருளுமாதெருளமாட்டேன்றீவினைச்சுற்றமென்னும்
பொருளுளேயழுந்திநாளும்போவதோர்நெறியுங்காணேன்
இருளுமாமணிகண்டாநின்னிணையடியிரண்டுங்காணப்பான
அருளுமாறருளவேண்டுமதிகைவீரட்டனாரே. (௪)

அஞ்சினால்இயற்றப்பட்டவாக்கைபெற்றதனுள்வாழும்
அஞ்சினாலடர்க்கப்பட்டிங்குழிதருமாதனேனை
யஞ்சினாலுய்க்குமவண்ணங்காட்டினாய்க்கஞ்சநீதந்நேனை
அஞ்சினாற்பொலிந்தசென்னியதிகைவீரட்டனாரே. (௫)

உறுகயிறூசல்போலவொன்றுவிட்டொன்றுபற்றி
மறுகயிறூசல்போலவந்துவந்துலவுநெஞ்சம்
பெறுகயிறூசல்போலப்பிறைபுல்குசடையாய்ப்பாதத்
தறுகயிறூசலானேனதிகைவீரட்டனாரே. (௬)

கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூன்கணோக்கியுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேனவெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்டேன்
அழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனாரே. (௭)

மன்றத்துப்புன்னைபோலமரம்படுதுயரமெய்தி
யொன்றினாலுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
கன்றியகாலன்வந்துகருக்குழிவிழுப்பதற்கே
யன்றினாலஞ்சிட்டேனதிகைவீரட்டனாரே. (௮)

பிணிவிடாவாக்கைபெற்றேன்பெற்றமொன்றேறுவானே
பணிவிடாவிடும்பையென்னும்பாசனத்தழுந்துகின்றேன்
றுணிவிலேன்றூயனல்லேன்றூமலர்ப்பாதங்காணப்பான்
அணியனாயறியமாட்டேனதிகைவீரட்டனாரே. (௯)

திருவினாள்கொழுநனாருந்திசைமுகமுடையகோவும்
இருவருமெழுந்தும்வீழ்ந்துமிணையடிகாணமாட்டா

ஒருவனேயெம்பிரானேயுன்றிருப்பாதங்காண்பான்
அருவனேயருளவேண்டுமதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மடக்கினார்புலியின்றோலைமாமணிநாகங்கச்சா
முடக்கினார்முகிழ்வெண்டிங்கள்மொய்சடைக்கற்றைதன்மேற்
றொடக்கினார்தொண்டைச்செவ்வாய்த்துடியிடைப்பரவையல்கு
லடக்கினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே. (௧)

சூடினார்கங்கையாளைச்சூடியதுழனிகேட்டங்
கூடினார்நங்கையாளூடலையொழிக்கவேண்டிப்
பாடினார்சாமவேதம்பாடியபாணியாலே
யாடினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே (௨)

கொம்பினார்குழைக்கவென்றகோமகன்கோலநீர்மை
நம்பினார்காணலாகாவகையதோர்நடலைசெய்தார்
வெம்பினார்மதில்களூடாமவ்வில்லிடையெரித்துவீழ்ந்த
வம்பினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே (௩)

மறிபடக்கிடந்தகையாவளரிளமங்கைபாகஞ்
செறிபடக்கிடந்தசெக்கர்ச்செழுமதிக்கொழுந்துசூடிப்
பொறிபடக்கிடந்தநாகம்புகையுமிழ்ந்தழலவீக்கிக்
கிறிபடநடப்பார்போலுங்கெடிலவீரட்டனாரே. (௪)

நரிவரால்கவ்வச்சென்றுநற்றசையிழந்ததோற்றந்
தெரிவராலமானைதீர்ப்பதோர்சிந்தைசெய்வார்
வரிவராலுகளுந்தெண்ணீர்க்கழனிசூழ்பழனவேலி
யரிவரால்வயல்கள்சூழ்ந்தவதிகைவீரட்டனாரே. (௫)

புள்ளலைத்துண்டவோட்டிலுண்டுபோய்ப்பலாசங்கொம்பின்
சுள்ளலைச்சுடலைவெண்ணீறணிந்தவர்மணிவெள்ளேற்றுத்
துள்ளலைப்பாகனறன்னைத்தொடர்ந்திங்கேகிடக்கின்றேனை
யள்ளலைக்கடப்பித்தாளுமதிகைவீரட்டனாரே. (௬)

நீறிட்டநுதலர்வேலைநீலஞ்சேர்கண்டர்மாதர்
கூறிட்டமெய்யராகிக்கூறினாராறுநான்குங்
கீறிட்டதிங்கள்சூடிக்கிளர்தருசடையினுள்ளால
வாறிட்டமுடிப்பாபோலுமதிகைவீரட்டனாரே. (௭)

காணிலார்கருத்தில்வாரார்திருத்திலார்பொருத்தலாகார்
ஏணிலாரிறப்புமில்லார்பிறப்பிலார்துறக்கலாகார்

நாணிலாரைவரோடுமிட்டெனைவிரவிவைத்தார்
ஆணலார்பெண்ணுமல்லாரதிகைவீரட்டனாரே (௮-௯)

தீர்த்தமாமலையைநோக்கிச்செருவலியரக்கன்சென்று
போத்தலும்பேதையஞ்சப்பெருவிரலதனையூன்றிச்
சீர்த்தமாமுடிகள்பத்துஞ்சிதறுவித்தவனையன்று
ஆர்த்தவாயலறவைத்தாரதிகைவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகைத்திருவீரட்டானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முன்பெலாமிளையகாலமூர்த்தியைநினையாதோடிக்
கண்கணவிருமினாளுங்கருத்தழிந்தருத்தமின்றிப்
பின்பகலுணங்கலட்டும்பேதைமார்போன்றேனுள்ளம்
அன்பனாய்வாழமாட்டேனதிகைவீரட்டனாரே (௧)

கறைப்பெருங்கண்டத்தானேகாய்கதிர்நமனையஞ்சி
நிறைப்பெருங்கடலைக்கண்டேனீள்வரையுச்சிகண்டேன்
பிறைப்பெருஞ்சென்னியானேபிஞ்ஞகாவிவையனைத்தும்
அறுப்பதோருபாயங்காணேனதிகைவீரட்டனாரே. (௨)

நாதனாரென்னநாளுநடுங்கினாராயிறங்கள்
யேதங்களறியமாட்டாரிணையடிதொழுதோமென்பர்
ஆதனேனவனென்றெள்கியதிகைவீரட்டனேநின்
பாதனன்பரவாதுய்க்கும்பழவினைப்பரிசிலேனே (௩)

சுடலைசேர்சுண்ணமெய்யர்சுரும்புண்விரிந்தகொன்றைப்
படலைசேரலங்கன்மார்பர்பழனஞ்சேர்கழனித்தெங்கின்
மடலைநீர்கிழியவோடியதனிடைமணிகள்சிந்துங்
கெடிலவீரட்டமேயகிளர்சடைமுடியனாரே (௪)

மந்திரமுள்ளதாகமறிகடலெழுநெய்யாக
இந்திரன்வேள்வித்தீயிலெழுந்ததோர்கொழுந்தின்வண்ணஞ்
சிந்திரமாகநோக்கித்தெருட்டுவார்தெருட்டவந்து
கந்திரமுரலுஞ்சோலைக்கானலங்கெடிலத்தாரே (௫-௬-௭-௮-௯)

மைஞ்ஞலமனையகண்ணாள்பங்கனைமாமலையையோடி-
மெய்ஞ்ஞரம்புதிரம்பில்கவிசைத்தணிந்தரக்கன்வீழ்ந்து
கைஞ்ஞரம்பெழுவிக்கொண்டுகாதலாலினிதுசொன்ன
கின்னரங்கேட்டுகந்தார்கெடிலவீரட்டனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - ௨௮.

## திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஊனினுள்ளுயிரைவாட்டியுணர்வினார்க்கெளியராகி
வானினுள்வானவர்க்குமறியலாகாதவஞ்சர்
நானெனிற்றானேயென்னுஞானத்தார்பத்தர்நெஞ்சுட்
டேனுமின்னமுதுமானார்திருச்செம்பொன்பள்ளியாரே (௧)

நொய்யவர்விழுமியாருநூலினுணெறியைக்காட்டு
மெய்யவர்பொய்யுமில்லாருடலெனுமிடிஞ்சில்தன்னில்
நெய்யமர்திரியுமாகிநெஞ்சத்துள்விளக்குமாகிச்
செய்யவர்கரியகண்டர்திருச்செம்பொன்பள்ளியாரே (௨)

வெள்ளியர்கரியர்செய்யர்விண்ணவரவர்கணெஞ்சுள்
ஒள்ளியரூழியூழியுலகமதேத்தநின்ற
பள்ளியர்நெஞ்சத்துள்ளார்பஞ்சமம்பாடியாடுந்
தெள்ளியார்கள்ளந்தீர்ப்பார்திருச்செம்பொன்பள்ளியாரே (௩)

தந்தையுந்தாயுமாகித்தானவன்ஞானமூர்த்தி
முந்தியதேவர்கூடிமுறைமுறையிருக்குச்சொல்லி
யெந்தைநீசரணமென்றங்கிமையவர்பரவியேத்தச்
சிந்தையுட்சிவமதானார்திருச்செம்பொன்பள்ளியாரே. (௪)

ஆறுடைச்சடையர்போலுமன்பருக்கன்பர்போலுங்
கூறுடைமெய்யர்போலுங்கோளரவரையர்போலு
நீறுடையழகர்போலுநெய்தலேகமழுநீர்மைச்
சேறுடைக்கமலவேலித்திருச்செம்பொன்பள்ளியாரே (௫)

ஞாலமுமறியவேண்டினன்றெனவாழலுற்றீர்
காலமுங்கழியலானகள்ளத்தையொழியகில்லீர்
கோலமும்வேண்டாவார்வச்செற்றங்கள்குரோதநீக்கிச்
சீலமுநோன்புமாவார்திருச்செம்பொன்பள்ளியாரே (௬)

புரிகாலேநேசஞ்செய்யவிருந்தபுண்டரீகத்தாரும்
எரிகாலேமூன்றுமாகியிமையவர்தொழநின்றாருந்
தெரிகாலேமூன்றுசந்திதியானித்துவணங்கநின்று
திரிகாலங்கண்டவெந்தைதிருச்செம்பொன்பள்ளியாரே. (௭)

காருடைக்கொன்றைமாலைக்கதிர்மதியரவினோடு
நீருடைச்சடையுள்வைத்தநீதியார்நீதியுள்ளார்
பாரொடுவிண்ணுமண்ணும்பதினெட்டுக்கணங்களேத்தச்
சீரொடுபாடலானார்திருச்செம்பொன்பள்ளியாரே (௮)

ஓவாதமறைவலானுமோதநீர்வண்ணன்காணா
மூவாதபிறப்பிலாருமுனிகளானார்களேத்தும

பூவானமூன்றுமுன்னூற்றறுபதுமாகுமெந்தை
தேவாதிதேவரென்றுந்திருச்செம்பொன்பள்ளியாரே (௯)

அங்கங்களாறுநான்குமந்தணர்க்கருளிச்செய்து
சங்கங்கள்பாடவாடுஞ்சங்கரன்மலையெடுத்தான்
அங்கங்களுதிரந்துசோரவலறிடவடர்த்துநின்றுஞ்
செங்கண்வெள்ளேறதேறுந்திருச்செம்பொன்பள்ளியாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சொர்ணபுரீசர், தேவியார்-சுகந்தவனநாயகி.

## திருக்கழிப்பாலை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நங்கையைப்பாகம்வைத்தார்கானத்தைநாவில்வைத்தார்
அங்கையிலனலும்வைத்தாரானையினுரிவைவைத்தார்
தங்கையில்வாளும்வைத்தார்தாமரைமலரும்வைத்தார்
கங்கையைச்சடையுள்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௧)

விண்ணினைவிரும்பவைத்தார்வேள்வியைவேட்கவைத்தார்
பண்ணினைப்பாடவைத்தார்பத்தர்கள்பயிலவைத்தார்
மண்ணினைத்தாவநீண்டமாலினுக்கருளும்வைத்தார்
கண்ணினைநெற்றிவைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௨)

வாமனைவணங்கவைத்தார்வாயினைவாழ்த்தவைத்தார்
சோமனைச்சடைமேல்வைத்தார்சோதியுட்சோதிவைத்தார்
ஆமனையாடவைத்தாரனலுமோர்பாசம்வைத்தார்
காமனைக்காய்ந்தகண்ணார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௩)

அரியனவங்கம்வேதமந்தணர்க்கருளும்வைத்தார்
பெரியனபுரங்கள்மூன்றும்பேரழலுண்ணவைத்தார்
பரியதீவண்ணராகிப்பவளம்போல்நிறத்தைவைத்தார்
கரியதோர்கண்டம்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௪)

கூரிருள்கிழியநின்றகொடுமழுக்கையில்வைத்தார்
பேரிருள்கழியமல்குபிறைபுனற்சடையுள்வைத்தார்
ஆரிருளண்டம்வைத்தாரறுவகைச்சமயம்வைத்தார்
காரிருள்கண்டம்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௫)

உட்டங்குசிந்தைவைத்தாருள்குவார்க்குள்ளம்வைத்தார்
விட்டங்குவேள்விவைத்தார்வெந்துயர்தீரவைத்தார்
நட்டங்குநடமும்வைத்தார்ஞாலமுந்நாவில்வைத்தார்
கட்டங்கந்தோள்மேல்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௬)

ஊனப்பேரொழியவைத்தாரோதியேயுணரவைத்தார்
ஞானப்பேரவிலவைத்தார ஞானமுமடுவும்வைத்தார
வானப்பேராறுமவைத்தாரவைகுந்தற்காழிவைதகார
கானப்போகாதலவைததாரகழிபபாலைச்சோபபனாரே. (௭)

கொங்கிலுமரும்புவைத்தாரகுற்றங்கள்கெடுக்கவைத்தார
சங்கினுள்முததமவைததாரசாமபலுமபூசவைத்தார
அங்கமும்வேதமவைததாராலமுமுணடுவைத்தார
கங்குலுமபகலுமவைத்தாரகழிபபாலைசசேரபபனாரே (௮)

சதுர்முகன்றானுமாலுந்தம்மிலேபிகலங்கணடு
எதிர்முகமினறிநினறவெரியுருவநனனைவைத்தார
பிறிர்முகன்காலனறன்னைநகாலதனிற்பிதிரவைத்தார
கதிர்முகஞசடையிலவைத்தாரகழிபபாலைசசேரபபனாரே (௯)

மாவினுணங்கையஞ்சமதிலிலங்கைக்குமன்னன
வேலினன்வெகுணடெடுககக்காணடலுமவேதநாவ
னூலினனேக்கிநக்குநொடிபபதோரளவிலவீழக
காலினலூனறியிட்டாரகழிபபாலைச்சோபபனாரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் பால்வண்ணநாதர், தேவியார்-பொற்பதவேதநாயகி.

---

திருக்கடவூர் - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்.

பொள்ளத்தகாயமாயபொருளினைபபோகமாகா
வெள்ளத்தைக்கழிககவேணடிலவிரும்புமினவிளக்குத்தூப
முள்ளத்ததிரியோனறேறறியுணருமாறுணரவலலார
கள்ளத்தைக்கழிபபாபோலுங்கடவூர்வீரட்டனாரே. (௧)

மண்ணிடைக்குரம்பைதன்னைமதித்துநீமையலெய்தில
விண்ணிடைத்தருமராசன்வேணடினலவிலக்குவாரார
பணணிடைச்சுவைகள்பாடியாடுமெபத்தாககெனறுங்
கண்ணிடைமணியாபோலுங்கடவூர்வீரட்டனாரே. (௨)

பொருந்தியகுரமபைதன்னுட்பொய்நடைசெலுத்துகின்றீ
ரொருத்தனையுணரமாட்டீருள்ளத்திற்கொடுமைநீக்கீர்
வருத்தினகளிறுதன்னைவருத்துமாவருத்தவலலா
கருத்தினிலிருப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (௩)

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தற்குப்பத்தராகி
யருமபொடுமலர்கள்கொண்டாங்காரவத்தையுள்ளேவைத்து

விருமபிநலவிளக்குத்தூபமவிதியினாலிடவலலாக்குக்
கருமபினிற்கட்டிபோலவாாகடவூாவீரடடனாரே. (௪)

தலக்கமேசெய்துவாழ்ந்துதக்கவாறொன்றுமின்றி
விலக்குவாரிலாமையாலேவிளககதிறகோழிபபோன்றேன்
மலக்குவாரமனததினுள்ளேகாலனாதமாகள்வநது
கலக்கனாகலஙகுகினறேனகடவூாவீரடடனாரே. (௫)

பழியுடையாக்கைதனனிறபாழுககேநீரிறைத்து
வழியிடைவாழமாடடேனமாயமுநதெளியகிலலேன
அழிவுடைததாயவாழ்ககையைவராலலைககபபடடுக்
கழியிடைத்தோணிபோனறேனகடவூாவீரடடனாரே. (௬)

மாயத்தையறியமாடடேனமையலகொணமனத்தனாகிப்
பேயொததுககூகையானேனபிஞ்ஞகாபிறபபொனறிலலீ
நேயத்தாலநினையமாட்டேனீதனேநீசனேனான
காயத்தைக்கழிககமாடடேனகடவூாவீரடடனாரே. (௭)

பறறிலாவாழ்க்கைவாழ்நதுபாழுக்கேநீரிறைததேன
உற்றலாலகயவாதேறாரெனனுஙகட்டுரையோடொத்தேன்
எற்றுளேனெனசெயகேனானிம்மையாலஞானமேதுங
கற்றிலேனகளைகணகாணேனகடவூாவீரடடனாரே. (௮)

சேலினேரனையகணணாதிறமவிடடுசசிவனுககனபாய்ப
பாலுநறறயிரநெயயோடுபலபலவாடடியெனறு
மாலினைததவிரநினறமாாககணடாககாகவனறு
காலனையுதைபபாபோலுஙகடவூாவீரடடனாரே. (௯)

மூநதுருவிருவரோடுமூவருமாயினாரும்
இநதிரனோடுதேவரிருடிகளினபஞ்செய்ய
வநதிருபதுகடோளாலெடுததவனவலியைவாடடிக்
கநதிருவங்கள்கேடடாாகடவூாவீரட்டனாரே. (௧0)

திருச்சிற்றமபலம்.

இது சோழநாடடிலுளளது.

சுவாமிபெயா-அமிாதகடேசுவரர், தேவியாா-அபிராமியம்மை.

---

### திருப்பயற்றூர் - திருநேரிசை.

திருச்சிற்றமபலம.

உரித்திட்டாரானையின்றோலுதிரவாறொழுகியோட
விரித்திட்டாருமையாளஞ்சிவிரல்விதிாத்தலக்கணாக்கித்
தரித்திட்டாாசிறிதுபோதுதரிக்கிலராகித்தாமுஞ்
சிரித்திட்டாரெயிறுதோன்றத்திருப்பயற்றூரனாரே. (௧)

உவந்திட்டங்குமையோர்பாகம்வைத்தவரூழியூழி
பவந்திட்டபரமனார்தாமலைச்சிலைநாகமேற்றிக்
கவர்ந்திட்டபுரங்கள்மூன்றுங்கனலெரியாகச்சீறிச்
சிவந்திட்டகண்ணர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௨)

நங்களுக்கருளதென்றுநான்மறையோதுவார்கள்
தங்களுக்கருளுமெங்கள்தத்துவன்றழலன்றன்னை
யெங்களுக்கருள்செயென்னநின்றவனாகமஞ்சுந்
திங்களுக்கருளிச்செய்தார்திருப்பயற்றூரனாரே. (௩)

பார்த்தனுக்கருளும்வைத்தார்பாம்பரையாடவைத்தார்
சாத்தனைமகனாவைத்தார்சாமுண்டிசாமவேதங்
கூத்தொடும்பாடவைத்தார்கோளராமதியநல்ல
தீர்த்தமுஞ்சடைமேல்வைத்தார்திருப்பயற்றூரனாரே. (௪)

மூவகைமூவர்போலுமுற்றுமாநெற்றிக்கண்ணர்
நாவகைநாவர்போலுநான்மறைஞானமெல்லாம்
ஆவகையாவர்போலுமாதிரைநாளர்போலுந்
தேவர்கள்தேவர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௫)

ஞாயிறாய்நமனுமாகிவருணனாய்ச்சோமனாகித்
தீயறாநிருதிவாயுத்திப்பியசாந்தனாகிப்
பேயறாக்காட்டிலாடும்பிஞ்ஞகனெந்தைபெம்மான்
தீயறுக்கையர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௬)

ஆவியாயவியுமாகியருக்கமாய்ப்பெருக்கமாகிப்
பாவியர்பாவந்தீர்க்கும்பரமனாய்ப்பிரமனாகிக்
காவியங்கண்ணளாகிக்கடல்வண்ணனாகிநின்ற
தேவியைப்பாகம்வைத்தார்திருப்பயற்றூரனாரே. (௭)

தந்தையாய்த்தாயுமாகித்தரணியாய்த்தரணியுள்ளார்க்
கெந்தையுமென்னநின்றவேழுலகுடனுமாகி
யெந்தையெம்பிரானேயென்றென்றுள்குவாருள்ளத்தென்றுஞ்
சிந்தையுஞ்சிவமுமாவார்திருப்பயற்றூரனாரே. (௮)

புலன்களைப்போகநீக்கிப்புந்தியையொருங்கவைத்து
இனங்களைப்போகநின்றீரிரண்டையுநீக்கியொன்றாய்
மலங்களைமாற்றவல்லாமனத்தினுட்போகமாகிச்
சினங்களைக்களைவர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௯)

மூர்த்திதன்மலையின்மீதுபோகாதாமுனிந்துநோக்கிப்
பார்த்துத்தான்பூமிமேலாற்பாய்ந்துதான்மலையைப்பற்றி

யார்த்திட்டான்முடிகள்பத்துமடர்த்துநல்லரிவையஞ்சத்
தேத்தெத்தாவென்னக்கேட்டார் திருப்பயற்றூரனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருப்பயற்றீசுவரர், தேவியார்-காவியங்கண்ணியம்மை.

---

திருமறைக்காடு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

இநதிரனோடுதேவரிருடிகளேததுகினற
சுநதரமானார்போலுநதுதிககலாஞசோதிபோலுஞ்
சநதிரனோடுங்கஙகையாவையுஞசடையுள வைதது
மநதிரமானார்போலுமாமறைககாடனாரே. (௧)

தேயனாடராகிததேவாகள்தேவாபோலும
பாயனாடறுக்குமபததாகள்பணியவமமினா
காயனாடுகணடங்கதனுளாாகாளகணடா
மாயனாடாபோலுமாமறைக்காடனாரே. (௨)

அறுமையிவ்வுலகுதன்னையாமெனககருதினறு
வெறுமையின்மனைகள்வாழ்நதுவினைகளாலநலிவுணாதே
சிறுமதியரவஙகொனறைதிகழதருசடையுளவைதது
மறுமையுமிமமையாவாாமாமறைககாடனாரே. (௩)

காலகொடுத்திருகையேற்றிககழிநிரைததிறைசசிமேய்நது
தோலபடுததுதிரநீராறசுவரெடுததிரணடுவாசல
ஏலவுடைததாவமைததஙகேமுசாலேகமபணணி
மாலகொடுததாவிவைத்தாாமாமறைக்காடனாரே. (௪)

விணணினாவிணணினமிக்காாவேதஙகள்விருமபியோதப
பணணினாககினனரங்கள்பத்தாகளபாடியாடக
கணணினாகணணினுளளேசோதியாய்நினறவெநதை
மணணினாவலங்கொணடேததுமாமறைக்காடனாரே. (௫)

அங்கையுளனலுமவைத்தாரறுவகைசசமயமவைத்தா
தங்கையிலவீணைவைததாாதமமடிபபாரவைததா
திஙகளைக்கங்கையோடுதிகழ்தருசடையுள்வைத்தா
மங்கையைப்பாகமவைததாாமாமறைககாடனாரே. (௬)

கீதராய்க்கீதங்கேட்டுக்கின்னரநதன்னைவைத்தா
வேதராய்வேதமோதிவிளங்கியசோதிவைத்தா
ஏதராய்நட்டமாடியிட்டமாய்க்கங்கையோடு
மாதையோர்பாகம்வைத்தாாமாமறைக்காடனாரே. (௭)

கனத்தினார்வலியுடையகடிமதிலரணமூன்றுஞ்
சினத்தினுட்சினமாய்நின்றுதீயெழச்செற்றார்போலுங்

தனத்தினைத் தவிர்ந்துநின்று தம்மடி பரவுவார்க்கு
மனத்தினுள் மாசு தீர்ப்பார் மாமறைக்காடனாரே. (௮)

தேசனைத் தேசன் றன்னைத் தேவர்கள் போற்றிசைப்பார்
வாசனை செய்துநின்று வைகலும் வணங்குமின்கள்
காசினைக் கனலையென்று மகருத்தினில் வைத்தவர்க்கு
மாசினைத் தீர்ப்பர் போலு மாமறைக்காடனாரே. (௯)

பிணியுடை யாக்கை தன்னைப் பிறப்பறுத் துய்யவேண்டிற்
பணியுடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றினாலே
துணிவுடை யரக்க னோடி யெடுத்தலுந் தோகை யஞ்ச
மணிமுடி பத்திறுத்தார் மாமறைக்காடனாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வேதாரணியேசுவரர், தேவியார் - யாழைப்பழித்தமொழியம்மை.

---

திருமறைக்காடு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தேரையு மேல்கடாவித் திண்ணமாத் தெளிந்துநோக்கி
யாரையு மேலுணரா ஆணவமையான் மிக்கான் றன்னைப்
பாரையும் விண்ணு மஞ்சப் பரந்த தோள் முடியடர்த்துக்
காரிகை யஞ்ச லென்பார் கலிமறைக்காடனாரே. (௧)

முக்கிமுன் வெகுண்டெடுத்த முடியுடை யரக்கர்கோனை
நக்கிருந் தூன்றிச் சென்னி நாண்மதி வைத்தவெந்தை
யக்கரவாமை பூண்ட வழகனார் கருத்தினாலே
தெக்குநீர்த் திரைகண் மோதுந் திருமறைக்காடனாரே. (௨)

மிகப்பெருத் துலாவமிக்கான் ககொருதேர் கடாவி
யகப்படத் தென்று தானுமாணமையால் மிக்க ரக்கன்
உகைத்தெடுத்தான் மலையை யூன்றலு மவனை யாங்கே
நகைப்படுத் தருளினா னான் மறைக்காடுதானே. (௩)

அந்தரந் தேர்கடாவி யாரிவ னென்றுசொல்லி
யுந்தினான் மாமலையை யூன்றலு மொள்ளரக்கன்
பந்தமாந் தலைகள் பத்து மவாய்கள் விட்டலறி வீழச்
சிந்தனை செய்துவிட்டார் திருமறைக்காடனாரே. (௪)

தடுக்கவுந் தாங்கவொண்ணாத் தனிவலியுடைய னாகிக்
கடுக்கவோர் தேர்கடாவிக் கையிருபதுகளாலும்
மெடுப்பனா னென்னப் பண்டமென் றெடுத்தானை யேங்க
அடுக்கவே வல்லனூரா மணிமறைக்காடுதானே. (௫)

நாண்முடிக்கின்ற சீரா னடுங்கியோ மீதுபோகான்
கோள்பிடித் தார்த்தகையான் கொடியன் மாவலிய னென்று

நீண்முடிச்சடையர்சேருநீள்வரையெடுக்கலுற்றான்
றேண்முடிநெரியவைத்தார்தொன்மறைக்காடனாரே. (௬)

பத்துவாயிரட்டிக்கைகளுடையன்மாவலியனென்று
பொத்திவாய்தீமைசெய்தபொருவலியரக்கர்கோனைக்
கத்திவாய்கதறவன்றுகாலவிரலூன்றியிட்டார
முத்துவாய்த்திரைகள்மோதுமுதுமறைக்காடனாரே. (௭)

பக்கமேவிட்டகையான்பாங்கிலாமதியனாகிப
புக்கனன்மாமலைக்கீழ்ப்போதுமாறறியமாட்டான்
மிக்கமாமதிகள்கெட்டுவீரமுமிழந்தவாறே
நக்கனபூதமெலலாநானமறைக்காடனாரே. (௮)

நாணஞ்சுகையனாகிநன்முடிபத்தினோடு
பாணஞ்சுமுன்னிழந்துபாங்கிலாமதியனாகி
நீணஞ்சுதானுணராநின்றெடுத்தானையனறு
ஏணஞ்சுகைகள்செய்தாரெழினமறைக்காடனாரே. (௯)

கங்கைநீர்சடையுள்வைக்கக்காணடலுமங்கையூடத்
தென்கையான்றோகடாவிச்செனறெடுத்தானமலையை
முன்கையானரம்புவெட்டிமுன்னிருககிசைகள்பாட
அங்கைவாளருளினானாரணிமறைக்காடுதானே (௧௦)

திருச்சிற்றமபலம்.

ஆ பதிகம் - ௩௪.

---

திருவிடைமருது - திருநேரிசை.

திருசசிறறம்பலம.

காடுடைச்சுடலைநீற்றாகையிலவெணடலையாதையல
பாடுடைப்பூதஞ்சூழபபரமனாமருதவைபபிற்
றேடுடைக்கைதையோடுஞ்சூழகிடங்கதனைச்சூழ்ந்த
ஏடுடைக்கமலவேலியிடைமருதிடங்கொணடாரே. (௧)

மூநதையாமூநதியுள்ளாமூவாக்குமுதலவரானா
சந்தியாசநதியுள்ளார்தவநெறிதரித்துநின்றா
சிந்தையாசிநதையுள்ளாசிவனெறியனைத்துமானா
எந்தையாரெமபிரானாரிடைமருதிடங்கொணடாரே. (௨)

காருடைக்கொன்றைமாலைக்கதிர்மணியரவினோடு
நீருடைச்சடையுள்வைத்தநீதியார்நீதியாய
போருடைவிடையொன்றேறவல்லவர்பொன்னித்தென்பால்
ஏருடைக்கமலமோங்குமிடைமருதிடங்கொண்டாரே. (௩)

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்களன்குமங்கம
பண்ணினார்பண்ணின்மிக்கபாடலார்பாவந்தீர்க்கும்

கண்ணினார்கண்ணின்மிக்க நுதலினார்காமற்காய்ந்த
வெண்ணினாரெண்ணின்மிக்காரிடைமருதிடங்கொண்டாரே. (௪)

வேதங்களோன்றுங்கொண்டுவிண்ணவர்பரவியேத்தப
பூதங்கள்பாடியாடலுடையவன்புனிதனெந்தை
பாதங்கள்பரவிநின்றபத்தர்காடங்கண்மேலை
யேதங்கடீரநின்றாரிடைமருதிடங்கொண்டாரே. (௫)

பொறியரவரையிலார்த்துபபூதங்கள்பலவுஞ்சூழ
முறிதருவனனிகொன்றைமுதிர்சடைமூழ்கவைத்து
மறிதருங்கங்கைதங்கவைத்தவரெத்திசையும
எறிதருபுனலகொள்வேலியிடைமருதிடங்கொண்டாரே. (௬)

படரொளிசடையினுள்ளாபாய்புனலரவினோடு
கடரொளிமதியமவைததுத்தூவொளிதோனறுமெந்தை
யடரொளிவிடையொனறேறவலலவரனபாதங்கள்
இடரவைகெடவுநினறாரிடைமருதிடங்கொண்டாரே. (௭)

கமழ்தருசடையினுளளாாகடுமபுனலரவினோடுந
தவழ்தருமதியமவைததுத்தனனடிபலருமேதத
மழுவதுவலஙகையேநதிமாதொருபாகமாகி
யெழிலதருபொழிலகளசூழ்நதவிடைமருதிடங்கொண்டாரே. (௮)

பொன்றிகழ்கொனறைமாலைபுதுபடுபுனலவனனிமத்த
மினறிகழ்சடையிலவைததுமேதககதோனறுகினற
வனறவரளக்கலாகாவணலெரியாகிநீணடாா
இனறுடனுலகமேத்தவிடைமருதிடஙகொணடாரே. (௯)

மலையுடனவிரவிநின்றுமதியிலாவரககனூக்கத
தலையுடனடாத்துமீணடேதலைவனுயருள்கணலகிச
சிலையுடைமலையைவாஙகித்திரிபுரமூன்றுமெய்தாா
இலையுடைக்கமலவேலியிடைமருதிடங்கொணடாரே. (௧௦)

திருச்சிற்றமபலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-மருதீசா, தேவியாா-நலமுலைநாயகி.

---

## திருப்பழனம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாரொருவர்போலுமலாகமழ்குழலினாளைக்
கூடினாரொருவர்போலுங்குளிர்புனலவளைநததிங்கள்
சூடினாரொருவாபோலுநதூயநனமறைகளோன்கும
பாடினாரொருவாபோலுமபழனததெமபரமனாரே. (௧)

போவதோாநெறியுமானாாபுரிசடைப்புனிதனாாநான
வேவதோர்வினையிற்பட்டுவெம்மைதான்விடவுங்கிலலேன்

கூவறானவாகள்கோளாகுணமிலாவைவர்செய்யும
பாவமேதீரநின்றார்பழனத்தெமபரமனாரே. (௨)

கண்டராய்முணடராகிக்கையிலோாகபாலமேந்தித்
தொணடாகள்பாடியாடித்தொழுகழற்பரமனார்தாம
விணடவாபுரங்களெய்தவேதியாவேதநாவா
பணடையென்வினைகடீாப்பாாபழனதெமபரமனாரே. (௩)

நீரவன்றீயினோடுநிழலவனெழிலதாய
பாரவனவிணணினமிக்கபரமவனபரமயோகி
யாரவனணடமிக்கதிசையினோடொளிகளாகிப
பாரகத்தமுதமானாபழனதெமபரமனாரே. (௪)

ஊழியாரூழிதோறுமுலகினுக்கொருவராகிப
பாழியாாபாவந்தீாககுமபராபரம்தாய
ஆழியானனனத்தானுமன்றவரளபபரிய
பாழியாாபரவியேததுமபழனதெமபரமனாரே. (௫)

ஆலினகீழறங்களெலலாமன்றவாக்கருளிசசெய்து
நூலின்கீழவாகட்கெலலாநுணபொருளாகினறு
காலினகீழ்க்காலனறனைக்கடுக்கததானபாய்நதுபினனும
பாலின்கீழ்நெய்யுமானாபழனத்தெமபரமனாரே. (௬)

ஆதிததனங்கிசோமனயனொடுமாலபுதனும்
போதித்துநின்றுலகிறபோறறிசைத்தாரிவாகள்
சோதித்தாரேழுலகுஞசோதியுட்சோதியாகிப
பாதிபபெணணுருவமானாபழனதெமபரமனாரே. (௭)

காறறனற்காலறகாய்நதுகாரிருளபோாத்தஞ்சா
தோற்றனாகடலுணஞைசததோடுடைககாதாசோதி
எறறினாரிளவெணடிஙகளிருமபொழிலசூழ்நதகாயம
பாற்றினாவினைகளெலலாமபழனதெமபரமனாரே. (௮)

கணணனுமபிரமனோடுகாண்கிலராகிவநதே
எணணியுநதுதித்துமேததவெரியுருவாகிநின்று
வணணநன்மலர்கடூவிவாழ்த்துவாாவாழ்த்தியேத்தப
பணணுலாமபாடலகேட்டாாபழனத்தெமபரமனாரே. (௯)

குடையுடையரக்கன்சென்றுகுளிாகயிலாயவெற்பி
னிடைமடவரலையஞசவெடுத்தலுமிறைவனோக்கி
விடையுடைவிகிாதன்றானுமவிரலினாலூன்றிமீணடும்
படைகொடையடிகள்போலுமபழனதெம்பரமனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஆபதசகாயா-தேவியார், பெரியநாயகிஅமமை.

## திருநேய்த்தானம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

காலனைவீழச்செற்றகழலடியிரண்டும்வந்தென்
மேலவாயிருக்கப்பெற்றேன்மேதகத்தோன்றுகின்ற
கோலநெய்த்தானமென்னுங்குளிர்பொழிற்கோயினமேய
நீலமவைத்தனையகண்டநினைக்குமாநினைகின்றேனே (க)

காமனையன்றுகண்ணாற்கனலெரியாகநோக்கித
தூபமுநதீபங்காட்டிததொழுமவாக்கருள்கள்செய்து
சேமநெய்த்தானமென்னுஞ்செறிபொழிறகோயினமேய
வாமனைநினைந்தநெஞ்சமவாழ்வுறநினைநதவாறே (உ)

பிறைதருசடையினமேலேபெய்புனற்கங்கைதனனை
யுறைதரவைத்தவெங்களுததமனூழியாய
நிறைதருபொழிலகள்சூழநினறநெய்த்தானமெனறு
குறைதருமடியவாக்குககுழகனைக்கூடலாமே (ங)

வடிதருமழுவொனறேநதிவாசசடைமதியமவைத்துப்
பொடிதருமேனிமேலேபுரிதருநூலாபோலு
நெடிதருபொழில்கள்சூழநினறநெய்த்தானமேவி
யடிதருகழலகளார்பபவாடுமெமமணனலாரே. (ச)

காடிடமாகநின்றுகனலெரிகையிலேநதிப்
பாடியபூதஞ்சூழபபணணுடன்பலவுஞ்சொல்லி
யாடியகழலாசீராரநதணெய்ததானமென்றுங
கூடியகுழகனைக்கூடுமாறறிகிலேனே (ரு)

வானவர்வணங்கியேத்திவைகலுமலர்கடுவத்
தானவாக்கருள்கள்செய்யுஞ்சங்கரன்செங்கணேற்றன்
றேனமாபொழிலகள்சூழத்திகழுநெய்த்தானமேய
கூனிளமதியினானைக்கூடுமாறறிகிலேனே. (சு)

காலதிற்கழலகளாாபபக்கனலெரிகையில்வீசி
ஞாலமுங்குழியநின்றுநட்டமதாடுகின்ற
மேலவாமுகடுதோயவிரிசடைதிசைகள்பாய
மாலொருபாகமாகமகிழ்நதநெய்த்தானனாரே. (எ)

பநதித்தசடையின்மேலேபாய்புனலதனைவைத்து
அநதிபபோதனலுமாடியடிகளையாறுபுக்கார்
வநதிப்பார்வணங்கிநின்றுவாழ்த்துவார்வாயினுள்ளார்
சிநதிப்பாசிநதையுள்ளார்திருநதுநெய்த்தானனாரே. (அ)

சோதியாய்ச்சுடருமானார்சுண்ணவெண்சாந்துபூசி
தேவாயுலகமேத்தவுகந்துதாமருள்கள்செய்வார்

ஆதியாயநதமாஞாயாவருமிறைஞ்சியேத்த
நீதியாய்நியமமாகிநின்றநெய்த்தானனாரே. (கூ)

இலையுடைப்படைகையேநதுமிலங்கையர் மன்னன்றன்னைத்
தலையுடனடர்த்துமீணடேதானவாக்கருள்கள்செய்து
சிலையுடன்கணையைசசோததுத்திரிபுரமெரியச்செற்ற
நிலையுடையடிகள்போலுநினறநெய்ததானனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-நெயயாடியபபா, தேவியாா-பாலாமபிகை.

## திருஐயாறு - திருநேரிசை.

திருசசிறறமபலம.

கஙகையைசசடையுளவைத்தாாகதிாபபொறியரவுமவைததாா
திஙகளைததிகழவைததாா திசைதிசைதொழவுமவைததாா
மங்கையைபபாகமவைத்தாாமானமறிமழுவுமவைததாா
அங்கையுளனலுமவைததாரையனையாறனாரே. (க)

பொடிதனைபபூசவைத்தாாபொங்குமவெணணூலுமவைத்தாா
கடியதோாநாகமவைத்தாாகாலனைக்காலிலவைததாா
வடிவுடைமஙகைதனனை மாாபிலோாபாகமவைததாா
அடியிணைதொழவுமவைததாரையனையாறனாரே. (உ)

உடைதருகீளுமவைததாருலகஙகளனைததுமவைத்தார்
படைதருமழுவுமவைத்தாாபாய்புலிததோலுமவைததார்
விடைதருகொடியுமவைததாாவெணபுரிநூலும்வைததாா
அடைதரவருளுமவைததாரையனையாறனாரே. (ங)

தொணடாகள்தொழவுமவைத்தார் தூமதிசடையிலவைத்தார்
இணடையைததிகழவைத்தாரெமக்கெனறுமின்பமவைத்தாா
வணடுசோகுழலினாளைமருவியோாபாகமவைத்தாா
அணடவானவாகளேத்துமையனையாறனாரே. (ச)

வானவாவணஙகவைத்தாாவலவினைமாயவைத்தாா
கானிடைநடமும்வைத்தாாகாமனைக்கனலாவைத்தார்
ஆனிடையைந்துமவைத்தாராட்டுவாாக்கருளுமவைத்தாா
ஆனையினுரிவைவைத்தாரையனையாறனாரே. (ரு)

சங்கணிகுழையும்வைத்தார்சாம்பல்மெய்ப்பூசவைத்தார்
வெங்கதிரெரியவைத்தார்விரிபொழிலனைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார்கடுவினைகளையவைத்தார்
அங்கமதோதவைத்தாரையனையாறனாரே. (சு)

பத்தாகட்கருளும்வைத்தார்பாய்விடையேறவைத்தா
சித்தத்தையொன்றவைத்தார்சிவமதேநினையவைத்தா
முத்தியைமுற்றவைத்தாமுறைமுறைநெறிகள்வைத்தா
அத்தியினுரிவைவைத்தாரையனையாறனாரே. (௭)

ஏறுகந்தேறவைத்தாரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தாநாகமுமரையிலவைத்தார்
கூறுமையாகமவைத்தாகொல்புலித்தோலுமவைத்தா
ஆறுமோர்சடையிலவைத்தாரையனையாறனாரே. (௮)

பூதங்கள்பலவும்வைத்தாபொங்குவெண்ணீறும்வைத்தா
கீதங்கள்பாடவைத்தாகின்னரநதன்னைவைத்தா
பாதங்கள்பரவவைத்தாபத்தர்கள்பணியவைத்தா
ஆதியுமநதமவைத்தாரையனையாறனாரே. (௯)

இரபபவாக்கியவைத்தாரீபவாக்கருளுமவைத்தார்
கரபபவாதஙகட்கெலலாஙகடுநரகஙகள்வைததா
பரபபுநீரகங்கைதன்னைபபடாசடைபபாகமவைத்தா
அரககனுக்கருளுமவைத்தாரையனையாறனாரே. (௧௦)

திருச்சிறறம்பலம்.

---

## திருஐயாறு - திருநேரிசை.

திருசசிறறம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடேகூடினனகொண்டமாலைத்
துணடனேசுடாகொள்சோதிதூநெறியாகிநின்ற
வணடனேயமரரேறேதிருவையாறமாநததேனே
தொண்டனேனறெழுதுனபாதனுசொலலினனறிகின்றேனே. (௧)

பீலிகையிடுக்கிநாளுமபெரியதோாதவமென்றெணணி
வாலியதறிகள்போலமதியிலாாபட்டதென்னே
வாலியாாவணஙகியேதநுதிருவையாறமாநததேனே
டாலியாவெழுநதநெஞ்சமழகிதாவெழுநதவாறே. (௨)

தட்டிடுஞ்சமணரோடேதருக்கினான்றவமென்றெண்ணி
யொட்டிடுமனத்தினீரேயுமமையான்செய்வதென்னே
மொட்டிடுகமலப்பொய்கைத்திருவையாறமாநததேனே
டொட்டிடுமுள்ளத்தீரேயுமமைநானுகந்திட்டேனே. (௩)

பாசிப்பலமாசுமெய்யர்பலமிலாச்சமணரோடு
நேசத்தாலிருநதநெஞ்சைநீக்குமாறறியமாட்டேன்
தேசத்தார்பரவியேத்துந்திருவையாறமாநததேனை
வாசத்தால்வணஙகவலலார்வல்வினைமாயுமன்றே. (௪)

கடுப்பொடியட்டிமெய்யிற்கருதியோர்தவமென்றெண்ணி
வடுக்களோடிசைந்தநெஞ்சேமதியிலிபட்டதென்னே
மடுக்களில்வாளைபாயுந்திருவையாறமர்ந்ததேனை
யடுத்துநின்றுநன்னெஞ்சேயருந்தவஞ்செய்தவாறே. (௫)

துறவியென்றவமதோரேன்சொல்லியசெல்வுசெய்து
உறவினாலமணரோடுமுணர்விலேனுணர்வொன்றின்றி
நறவமார்பொழில்கள்சூழ்ந்ததிருவையாறமர்ந்ததேனை
மறவிலாநெஞ்சமேநன்மதியுனக்கடைந்தவாறே. (௬)

பல்லுரைச்சமணரோடேபலபலகாலமெல்லாஞ்
சொல்லியசெல்வுசெய்தேன்சோர்வனானினைந்தபோது
மல்லிகைமலருஞ்சோலைத்திருவையாறமர்ந்ததேனை
யெல்லியும்பகலுமெல்லாநினைந்தபோதினியவாறே (௭)

மண்ணுளார்விண்ணுளாருமவணங்குவார்பாவம்போக
எண்ணிலாச்சமணரோடேயிசைந்தனையேழைநெஞ்சே
தெண்ணிலாவெறிக்குஞ்சென்னித்திருவையாறமர்ந்ததேனைக்
கண்ணினாற்காணப்பெற்றுக்கருதிற்றேமுடிந்தவாறே (௮)

குருந்தமதொசித்தமாலுங்குலமலர்மேவினானுந்
திருந்துநற்றிருவடியுந்திருமுடிகாணமாட்டார்
அருந்தவமுனிவரேத்துந்திருவையாறமர்ந்ததேனைப்
பொருந்திநின்றுன்னுநெஞ்சேபொய்வினைமாயுமன்றே. (௯)

அறிவிலாவரக்கனோடியருவரையெடுக்கலுற்று
முறுகினான்முறுகக்கண்டுமூதறிவாளனோக்கி
நிறுவினான்சிறுவிரலானெரிந்துபோய்நிலத்தில்வீழ
அறிவினாலருள்கள்செய்தானதிருவையாறமர்ந்ததேனே (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

### திருஐயாறு - பண் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைசகமிலாதடிமையில்லைக்
கானலாதாடலில்லைக்கருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடும
ஆனலாதூர்வதில்லையையனையாறனார்க்கே. (௧)

ஆலலாலிருக்கையில்லையருந்தவமுனிவர்க்கன்று
நூலலானொடிவதில்லைநுண்பொருளாய்ந்துகொண்டு
மாலுநான்முகனுங்கூடிமலரடிவணங்கவேலை
ஆலாலமுதமில்லையையனையாறனார்க்கே. (௨)

நரிபுரிசுடலைதன்னினடமலானவிற்றவில்லைச்
சுரிபுரிகுழலியோடுந்துணையலாலிருக்கையில்லைத

தெரிபுரிசிந்தையார்க்குத்தெளிவலாலருளுமில்லை
யரிபுரிமலர்கொண்டேத்துமையனையாறனார்க்கே. (௩)

தொண்டலாற்றுணையுமில்லைத்தோலலாதுடையுமில்லைக்
கண்டலாதருளுமில்லைகலந்தபின்பிரிவதில்லைப்
பண்டைநான்மறைகள்காணாப்பரிசினனென்றென்றெண்ணி
யண்டவானவர்களேத்துமையனையாறனார்க்கே (௪)

எரியலாலுருவமில்லையேறலாலேறவில்லைக்
கரியலாற்போர்வையில்லைக்காண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே. (௫)

என்பலாற்கலனுமில்லையெருதலாலூர்வதில்லைப்
புண்புலாலநாறுகாட்டிற்பொடியலாற்சாந்துமில்லைத்
துன்பிலாத்தொண்டர்கூடித்தொழுதழுதாடிப்பாடும்
அன்பலாற்பொருளுமில்லையையனையாறனார்க்கே. (௬)

கீளலாலுடையுமில்லைகிளர்பொறியரவமபைம்பூண
டோளலாற்றுணையுமில்லைத்தொத்தலர்கின்றவேனில்
வேளலாற்காயப்பட்டவீருமில்லைமீளா
ஆளலாற்கைம்மாறில்லையையனையாறனார்க்கே. (௭)

சகமலாதடிமையில்லைதானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்டர்
அகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே. (௮)

உமையலாதுருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராவார்நன்மையேதீமையில்லைக்
கமையெலாமுடையராகிக்கழலடிபரவுந்தொண்டர்க்
கமைவிலாவருள்கொடுப்பாரையனையாறனார்க்கே. (௯)

மலையலாலிருக்கையில்லைமதித்திடாவரக்கன்றன்னைத்
தலையலானெரித்ததில்லைத்தடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவநெருப்பலாலவிர்த்ததில்லை
யலையினார்பொன்னிமன்னுமையனையாறனார்க்கே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - ௪௦.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்பொற்சோதீசுவரர், தேவியார்-அறம்வளர்த்தநாயகி.

## திருச்சோற்றுத்துறை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொய்விராமேனிதன்னைப்பொருளெனக்காலமபோக்கி
மெய்விராமனத்தனலலேனவேதியாவேதாராவா
வைவராலலைக்கபபட்டவாககைகொணடயாத்துபபோனேன
செய்வராலுகளுஞ்செமமைததிருசசோற்றுத்துறையனாரே (௧)

கட்டராய்நின்றுநீங்கள்காலததைக்கழிக்கவேணடாம
எட்டவாங்கைகள்வீசியெல்லிநின்றாடுவானை
யட்டமாமலாகள்கொணடேயானஞ்சுபாட்டவாடிச
சிட்டராயருள்கள்செய்வாாதிருசசோறறுத்துறையனாரே (௨)

கலவிநாற்புரமூனறெய்தகடவுளைக்காதலாலே
யெலலியுமபகலுமுள்ளேயேகாநதமாகவேத்தும்
பல்லில்வெண்டலைகையேநதிபபலலிலாநதிரியுஞ்செலவர்
சொல்லுநன்பொருளுமாவாாதிருச்சோற்றுததுறையனாரே. (௩)

கறையராய்க்கணடநெற்றிக்கணணராய்பபெணணோபாக
மிறையராயினியராகித்தனியராய்பபனிவெணடிங்கட்
பிறையராய்ச்செய்ததெல்லாமபீடராய்க்கேடிலசோற்றுத்
துறையராய்ப்புகுநதெனுள்ளச்சோாவுகணடருளினாரே. (௪)

பொந்தையைபபொருளாவெணணிபபொருக்கெனக்காலமபோனே
னெநதையேயேகமூாத்தியென்றுநினறேநதமாட்டேன
பநதமாய்வீடுமாகிபபரமபரமாகிநின்று
சிநதையுட்டேறலபோலுநதிருச்சோற்றுத்துறையனாரே. (௫)

பேர்த்தினிப்பிறவாவணணம்பிதற்றுமின்பேதைபங்கன்
பாாததனுககருள்கள்செய்தபாசுபதன்றிறமே
யாாததுவநதிழிவதொத்தவலைபுனற்கஙகையேற்றுத்
தீாததமாபபோதவிட்டாாதிருசசோற்றுத்துறையனாரே. (௬)

கொநதாாபூஙகுழலினாரைக்கூறியேகாலம்போன
வெநதையெமபிரானாய்நின்றவிறைவனையேத்தாதந்தோ
மூநதராவலகுலாவையுடனவைததவாதிமூாத்தி
செநதாதுபுடைகள்சூழ்நததிருச்சோற்றுத்துறையனாரே. (௭)

அங்கதிரோனவனையணணலாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைநதுகொணமின்
அங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூாத்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே. (௮)

ஓதியேகழிக்கின்றீர்களுலகத்தீரொருவன்றன்னை
நீதியாலினையமாட்டீர்நின்மலனென்றுசொல்லீர

சாதியானான்முகனுஞ்சக்கரத்தானுங்காணுச்
சோதியாய்ச்சுடரதாஞர்திருச்சோற்றுத்துறையனுரே. (௯)

மற்றுநீர்மனமவையாதேமறுமையைக்கழிக்கவேணடிற்
பெறறதோருபாயந்தன்ஞற்பிரானையேபிதற்றுமின்கள்
கற்றுவநதரக்கனோடிக்கயிலாயமலையெடுக்கச்
செறறுகந்தருளிச்செய்தார்திருச்சோற்றுததுறையனுரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தொலையாச்செல்வர், தேவியார்-ஒப்பிலாம்பிகை.

---

## திருத்துருத்தி - திருநேரிசை.

திருச்சிறறமபலம.

பொருத்தியகுரமபைதன்னைபபொருளெனககருதவேணடாம்
இருததியெபபோதுநெஞசுளிறைவனையேத்துமின்களா
ஒருததியைபபாகமவைததஙகொருததியைச்சடையுள்வைத்த
துருததியஞ்சுடரினனைத்தொணடனேன்கணடவாறே (௧)

சவைதனைச்செய்துவாழ்வானசலததுளேயழுநதுகின்ற
விவையொருபொருளுமலலவிறைவனையேததுமின்னோ
அவைபுரமூன்றுமெய்துமடியவாக்கருளிச்செய்த
சுவையினைத்துருததியானைத்தொணடனேன்கண்டவாறே. (௨)

உன்னியெப்போதுநெஞ்சுளொருவனையேத்துமினனோ
கன்னியையொருபாலவைத்துக்கங்கையைச்சடையுள்வைத்துப
பொன்னியினடுவுதன்னுட்பூமபுனலபொலிநதுதோன்றுந
துனனியதுருத்தியானைத்தொணடனேன்கணடவாறே. (௩)

ஊன்றலைவலியனுகியுலகத்துளுயிர்கட்கெலலாந
தான்றலைபபட்டுநின்றுசார்கனலகத்துவீழ
வான்றலைததேவர்கூடிவானவர்க்கிறைவரவென்னுந்
தோன்றலைத்துருத்தியானைத்தொணடனேன்கண்டவாறே. (௪)

உடறனைக்கழிக்கலுற்றவுலகத்துளுயிர்கட்கெல்லாம்
இடர்தனைக்கழிக்கவேண்டிலிறைவனையேத்துமின்னோ
கடறனினஞ்சமுண்டுகாண்பரிதாகிநின்ற
சுடர்தனைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௫)

அள்ளலைக்கடக்கவேணடிலரனையேநினைமினீர்கள்
பொள்ளலிக்காயந்தன்னுட்புண்டரீகத்திருந்த
வள்ளலைவானவர்க்குக்காண்பரிதாகிநின்ற
துள்ளலைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௬)

பாதியிலுமையாள்தன்னைப்பாகமாவைத்தபண்பன்
வேதியனென்றுசொல்லிவிண்ணவர்விரும்பியேத்தச்
சாதியாஞ்சதுர்முகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (எ)

சாமனைவாழ்க்கையானசலத்தினுளழுந்தவேண்டா
தூமலரலகிலுங்காட்டித்தொழுதடிவணங்குமின்னோ
சோமனைச்சடையுள்வைத்துத்தொன்னெறிபலவுங்காட்டுந்
தூமனற்றுருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (அ)

குண்டரேசமணர்புத்தர்குறியறியாதுநின்று
கண்டதேகருதுவார்கள்கருத்தெண்ணுதொழிமினீர்கள்
விண்டவர்புரங்களெய்துவிண்ணவர்க்கருள்கள்செய்த
தொண்டர்கடுணையினானைத்துருத்திநான்கண்டவாறே. (கூ)

பிண்டத்தைக்கழிக்கவேண்டிற்பிரானையேபிதற்றுமின்கள்
அண்டத்தைக்கழியநீண்டவடலரக்கன்றனாண்மை
கண்டொத்துக்காலவிரலாலூன்றிமீண்டருளிச்செய்த
துண்டத்துத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதேசுவரர், தேவியார்-முகிழாம்பிகையம்மை.

## திருக்காஞ்சித்திருமேற்றளி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக்கென்றகந்திரிந்துவாழ்வார்
பிறையதுசடைமுடிமேற்பெய்வளையாளனோடுங்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
லிறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனாரே. (க)

மாலியமாயன்றன்னைமகிழ்ந்தனர்விருத்தராகும்
பாலனார்பசுபதியார்பால்வெள்ளைநீறுபூசிக்
காலனைக்காலாற்செற்றார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
லேலநற்கடம்பன்றாதையிலங்குமேற்றளியனாரே. (உ)

விண்ணிடைவிண்ணவர்கள்விரும்பிவந்திறைஞ்சிவாழ்த்தப்
பண்ணிடைச்சுவையின்மிக்ககின்னரம்பாடல்கேட்டார்
கண்ணிடைமணியினொப்பார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
லெண்ணிடையெழுத்துமானாரிலங்குமேற்றளியனாரே. (ந)

சோமனையரவினோடுசூழ்தரக்கங்கைசூடும்
வாமனைவானவர்கள்வலங்கொடுவந்துபோற்றக்

காமனைக்காய்ந்தகண்ணார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏமநின்றாடுமெந்தையிலங்குமேற்றளியனாரே. (௪)

ஊனவனுயிரினோடுமுலகங்களூழியாகித்
தானவர்தனமுமாகித்தனஞ்சயனோடெதிர்ந்த
கானவராளர்கண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏனமக்கோடுபூண்டாரிலங்குமேற்றளியனாரே (௫)

மாயனும்மாலனாகிமலரவனாகிமண்ணாய்த்
தேயமாய்த்திசையெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதாகின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏயமென்றோளிபாகரிலங்குமேற்றளியனாரே. (௬)

மண்ணினையுண்டமாயன்றன்னையோர்பாகங்கொண்டார்
பண்ணினைப்பாடியாடும்பத்தர்கள்சித்தங்கொண்டார்
கண்ணினைமூன்றுங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணினையெண்ணவைத்தாரிலங்குமேற்றளியனாரே. (௭)

சொலவியைப்பாகங்கொண்டார்சேந்தனைமகனாக்கொண்டார்
மலவினைக்கணணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கலவியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எலவியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே. (௮)

வேறினையின்றியென்றும்விளங்கொளிமருங்கினாளைக்
கூறியலாகவைத்தார்கோளராமதியும்வைத்தார்
ஆறினைச்சடையுள்வைத்தாரணிபொழிற்கச்சிதன்னுள்
ஏறினையேறுமெந்தையிலங்குமேற்றளியனாரே (௯)

தென்னவன்மலையெடுக்கச்சேயிழைநடுங்கக்கண்டு
மன்னவன்விரலாலூன்றமணிமுடிநெரியவாயாற்
கன்னலின்கீதம்பாடக்கேட்டவர்காஞ்சிதன்னுள்
இன்னவற்கருளிச்செய்தாரிலங்குமேற்றளியனாரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேற்றளிநாதர், தேவியார்-திருமேற்றளிநாயகி.

---

## திருவேகம்பம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநகரமூன்றுமெரியுணவெருவநோக்கும்
அம்பனையமுதையாற்றையணிபொழிற்கச்சியுள்ளே
கம்பனைக்கதிர்வெண்டிங்கட்செஞ்சடைக்கடவுடன்னைச்
செம்பொனைப்பவளத்தூணைச்சிந்தியாவெழுகின்றேனே (௧)

ஒருமுழமுள்ளகுட்டமொன்பதுதுளையுடைத்தா
யரைமுழமதனகலமதனில்வாழ்முதலையைந்து
பெருமுழைவாய்தலைபற்றிக்கிடந்துநான்பிதற்றுகின்றேன்
கருமுகிறவழுமாடக்கச்சியேகம்பனீரே. (௨)

மலையினார்மகளோர்பாகமைந்தனார்மழுவொன்றேந்திச்
சிலையினான்மதில்கள்மூன்றுந்தீயெழச்செற்றசெல்வர்
இலையினார்சூலமேந்தியேகம்பமேவினாரைத்
தலையினால்வணங்கவல்லார்தலைவர்க்குந்தலைவர்தாமே. (௩)

பூத்தபொற்கொன்றைமாலைபுரிசடைக்கணிந்தசெல்வர்
தீர்த்தமாங்கங்கையாளைத்திருமுடிதிகழவைத்து
ஏத்துவாரேத்தநின்றவேகம்பமேவினாரை
வாழ்த்துமாறறியமாட்டேன்மாலொடுமயங்கினேனே. (௪)

மையினார்மலர்நெடுங்கண்மங்கையோர்பாகமாகிக்
கையிலோர்கபாலமேந்திக்கடைதொறும்பலிகொள்வார்தாம்
எய்வதோரேனமோட்டியேகம்பமேவினாரைக்
கையினாற்றொழவல்லார்க்குக்கடுவினைகளையலாமே. (௫)

கருவினைமருவுங்கங்கைதங்கியசடையனெங்கள்
அருவினையகலநல்குமண்ணலையமரர்போற்றுந்
திருவினைத்திருவேகம்பஞ்செப்பிடவுறையவல்ல
உருவினையுருகியாங்கேயுள்ளத்தாலுகக்கின்றேனே. (௬)

கொண்டதோர்கோலமாகிக்கோலக்காவுடையகூத்தன்
உண்டதோர்நஞ்சமாகியுலகெலாமுய்யவுண்டான்
எண்டிசையோருமேத்தநின்றவேகம்பன்றனைக்
கண்டுநானடிமைசெய்வான்கருதியேதிரிகின்றேனே. (௭)

படமுடையரவினோடுபனிமதியதனைச்சூடிக்
கடமுடையுரிவைமூடிக்கண்டவரஞ்சவம்ம
இடமுடைக்கச்சிதன்னுளேகம்பமேவினான்றன்
நடமுடையாடல்காணஞாலந்தானுய்ந்தவாறே. (௮)

பொன்றிகழ்கொன்றைமாலைபொருந்தியநெடுந்தண்மார்பர்
நன்றியிற்புகுந்தெனுள்ளமெள்ளவேநவிலநின்று
குன்றியிலடுத்தமேனிக்குவளையங்கண்டரெம்மை
இன்றுயில்போதுகண்டாரினியரேகம்பனாரே. (௯)

துருத்தியார்பழனத்துள்ளார்தொண்டர்கள்பலருமேத்த
அருத்தியாலன்புசெய்வாரவரவர்க்கருள்கள்செய்தே
எருத்தினையிசையவேறியேகம்பமேவினார்க்கு
வருத்திநின்றடிமைசெய்வார்வல்வினைமாயுமன்றே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

## திருஒற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையுள்வைத்தவேதகீதன்றன்பாத
மெள்ளத்தானடையவேண்டினமெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றாக்காயத்துக்கலந்துநின்று
உள்ளதுளொளியுமாகுமொற்றியூருடையகோவே. (க)

வசிப்பெனும்வாழ்க்கைவேண்டாவானவரிறைவனின்று
புசிப்பதோர்பொள்ளலாக்கையதனொடும்புணர்வுவேண்டி
சிறப்பெனுமருந்தவத்தாலரனமாவிடமதாகி
யுசிறப்பெனுமுணர்வுமுள்ளாரொற்றியூருடையகோவே. (உ)

தானத்தைச்செய்துவாழ்வானசலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டிலவமின்கள்வல்லீராகின்
ஞானத்தைவிளக்கையேற்றிநாடியுள்விரவவல்லார்க்
கூனத்தையொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே. (ங)

காமத்துளழுந்திநின்றுகண்டராலொருப்புண்ணுதே
சாமத்துவேதமாகிநின்றதோர்சயம்புதன்னை
யேமத்துமிடையிராவுமேகாந்தமியம்புவார்க்கு
ஓமத்துளொளியதாகுமொற்றியூருடையகோவே. (ச)

சமையமேலாறுமாகித்தானொருசயம்புவாகி
யிமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்
கமையினையுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்போலுமொற்றியூருடையகோவே. (ரு)

ஒருத்திதன்றலைச்சென்றாளைக்கரந்திட்டானுலகமேத்த
ஒருத்திக்குநல்லனாகிமறுப்படுத்தொளித்துமீண்டே
யொருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினாலையமுண்ணி
யொருத்திக்குநல்லனல்லனொற்றியூருடையகோவே. (சு)

பிணமுடையுடலுக்காகப்பித்தராய்த்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடைநெஞ்சினுள்ளானினைக்குமாநினைக்கின்றார்க்கு
உணர்வினோடிருப்பர்போலுமொற்றியூருடையகோவே. (எ)

பின்னுவார்சடையான்றன்னைப்பிதற்றிலாப்பேதைமார்கள்
துன்னுவார்நரகந்தன்னுடொலவினைதீரவேண்டின்
மன்னுவான்மறைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி
யுன்னுவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (அ)

முள்குவார்போகம்வேண்டிமுயற்றியாலிடர்கள்வந்தால்
எள்குவாரெள்கினின்றங்கிதுவொருமாயமென்பார

பள்குவார்பத்தராகிப்பாடியுமாடிநின்று
உள்குவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (௯)

வெறுத்துகப்புலன்களைந்தும்வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவாவச்செற்றக்குரோதங்களானமாயப்
பொறுத்துகப்புட்பகத்தேருடையானையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தாரொற்றியூருடையகோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாணிக்கத்தியாகர், தேவியார்-வடிவுடையமங்கை.

## திருஒற்றியூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
யோம்பியுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. (௧)

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. (௨)

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீகைலாயம் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கனகமாவயிரமுத்துமாமணிக்கயிலைகண்டு
முனகனாயரக்கனோடியெடுத்தலுமுமையாளஞ்ச
அனகனாய்நின்றவீசனூன்றலுமலறிவீழ்ந்தான
மனகனாவூன்றினானேன்மறித்துநோக்கிலலையன்றே. (௧)

கதித்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
யதிர்த்தவன்னெடுத்திடலுமரிவைதானஞ்சவீச
னெதித்தவனூன்றியிட்டநிலையழிந்தலறிவீழ்ந்தான்
மதித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௨)

கறுத்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையைக்கையால்
மறித்தலுமங்கையஞ்சவானவரிறைவனக்கு
நெறித்தொருவிரலாலூன்றநெடுவரைபோலவீழ்ந்தான்
மறித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௩)

கடுத்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
யெடுத்தலுமங்கையஞ்சவிறையவனிறையேநக்கு
கொடிப்பளவிரலாலூன்றநோவதுமலறியிட்டான
மடித்திறையூன்றினேனமறித்துநோக்கில்லையன்றே. (௪)

கன்டித்தன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
வென்றித்தன்கைத்தலத்தாலெடுத்தலுமவெருவமங்கை
நன்றுத்தானக்குநாதனூன்றலுநகழவீழ்ந்தான்
மன்றித்தானூன்றினேனமறித்துநோக்கில்லையன்றே. (௫)

களித்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
நெளித்தவனெடுத்திடலுநேரிழையஞ்சநோக்கி
வெளித்தவனூன்றியிட்டவெற்பினலலறிவீழ்ந்தான்
மளிததிறையூனறினேனமறித்துநோக்கில்லையன்றே. (௬)

கருத்தனுப்கண்சிவநதுகயிலைநன்மலையைக்கையால்
எருத்தனுயெடுத்தவாறேயேநதிழையஞ்சவீசன்
திருத்தனுய்நின்றதேவன்றிருவிரலூன்றவீழ்ந்தான்
வருத்துவானூனறினேனமறித்துநோக்கில்லையன்றே. (௭)

கடியவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
வடிவுடைமங்கையஞ்சவெடுத்தலுமருவநோக்கிச்
செடிபடத்திருவிரலாலூனறலுஞ்சிதைந்துவீழ்நதான்
வடிவுறவூன்றினேனமறித்துநோக்கில்லையன்றே. (௮)

கரியத்தான்கணசிவநதுகயிலைநன்மலையைப்பற்றி
யிரியத்தானெடுத்திடலுமேநதிழையஞ்சவீச
னெரியத்தானூனருமுன்னநிறகிலாதலறிவீழ்ந்தான்
மரியத்தானூனறினேனமறித்துநோக்கிலலையன்றே. (௯)

கற்றனன்கயிலைதனனைக்காணடலுமரக்கனோடிச்
செறறவனெடுத்தவாறேசேயிழையஞ்சவீசன
உற்றிறையூன்றுமுன்னமுணர்வழிவகையாலவீழ்நதான்
மற்றிறையூன்றினேனமறித்துநோககிலலையன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கைலாயநாதர், தேவியார் - பார்வதியம்மை.

---

## திருஆப்பாடி - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடலகமேழினோடும்புவனமுங்கலந்தவிண்ணும்
உடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கெந்தமாலைதண்மதிபகலுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. (௧)

ஆதியுமறிவுமாகியறிவினுட்செறிவுமாகிச்
சோதியுட்சுடருமாகித்தூநெறிக்கொருவனாகிய
பாதியிற்பெண்ணுமாகிப்பரவுவார்பாங்கனாகி
வேதியர்வாழுஞ்சேஞலூர்விரும்புமாப்பாடியாரே. (௨)

எண்ணுடையிருக்குமாகியிருக்கினுட்பொருளுமாகிய
பண்ணொடுபாடறனைப்பரவுவார்பாங்கனாகிக்
கண்ணொருநெற்றியாகிக்கருதுவார்கருதலாகாப்
பெண்ணொருபாகமாகிப்பேணுமாப்பாடியாரே. (௩)

அண்டமாரமராகோமானாதியெம்மண்ணல்பாதங்
கொண்டவன்குறிப்பினாலேகூப்பினன்றாபரத்தைக்
கண்டவன்றாதைபாய்வானக்காலறவெறியக்கண்டு
தண்டியார்க்கருள்கள்செய்ததலைவராப்பாடியாரே. (௪)

சிந்தையுந்தெளிவுமாகித்தெளிவினுட்சிவமுமாகி
வந்தநன்பயனுமாகிவாணுதல்பாகமாகி
மந்தமாம்பொழில்கள்சூழ்ந்தமண்ணித்தென்கரைமேன்மன்னி
யந்தமோடளவிலாதவடிகளாப்பாடியாரே. (௫)

வன்னிவாளரவுமத்தமதியமுமாறுஞ்சூடி
மின்னியவுருவாஞ்சோதிமெய்ப்பொருட்பயனுமாகிக்
கன்னியோர்பாகமாகிக்கருதுவார்கருத்துமாகி
யின்னிசைதொண்டர்பாடவிருந்தவாப்பாடியாரே. (௬)

உள்ளுமாய்ப்புறமுமாகியுருவுமாயருவுமாகி
வெள்ளமாய்க்கரையுமாகிவிரிகதிர்நாயிறாகிக்
கள்ளமாய்க்கள்ளத்துள்ளார்கருத்துமாயருத்தமாகி
யள்ளுவார்க்கள்ளல்செய்திட்டிருந்தவாப்பாடியாரே. (௭)

மயக்கமாய்த்தெளிவுமாகிமால்வரைவளியுமாகித்
தியக்கமாயொருக்கமாகிச்சிந்தையுள்ளொன்றிநின்று
வியக்கமாயிறுதியாகியெண்டிசைக்கிறைவராகி
யயக்கமாயடக்கமாயவைவராப்பாடியாரே. (௮)

ஆரழலுருவமாகியண்டமேழ்கடந்தவெந்தை
பேரொளியுருவினானைப்பிரமனுமாலுங்காணாச்
சீரவைபரவியேத்திச்சென்றடிவணங்குவார்க்குப்
பேரருளருளிச்செய்வார்பேணுமாப்பாடியாரே (௯)

திண்டிறலரக்கனோடிச்சீகயிலாயந்தன்னை
யெண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறனெரியவூன்றிமிக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே. (௧௦)

இது சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பாலுவந்தநாயகர், தேவியார் - பெரியநாயகியம்மை.

## திருக்குறுக்கை - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியிற்பிரமனார்தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதநாவருணருமாறுணரலுற்றார்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினையிறந்தார்பல்பூக்
கோதிவண்டறையுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனாரே. (௧)

நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றுநீர்பூரித்தாட்டுமந்தணனாரைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (௨)

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௩)

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவண்ணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. (௪)

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணைமிண்டக்
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௫)

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமைநீள்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரிகையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே. (௬)

காப்பதோர்வில்லுமம்புங்கையுடையிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டத்
தீப்பெருங்கண்கள்செய்யக்குருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதுபற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. (௭)

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடல்மண்ணும்விண்ணும்நீண்டவானுலகமெல்லாங்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (௮)

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவர்த

கணம்புலலாக்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (௯)

எடுத்தனனெழிற்கயிலையிலங்கையர்மன்னன்றன்னை
யடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனுமவீழ்ந்து
விடுத்தனகைநரம்பால்வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனாகொற்றவாளுள்குறுக்கைவீரட்டனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

### திருக்குறுக்கை - திருநேரிசை.

திருசசிற்றமபலம்.

நெடியமாலபிரமனோடுநீரெனுமமிலையஙகொள்ள
அடியொடுமுடியுங்காணாருசசுனற்கமபுமவிலலுந
துடியுடைவேடராகிததூயமநதிரங்கள்சொலலிக்
கொடிநெடுநதோகொடுத்தாகுறுக்கைவீரட்டனாரே. (௧)

ஆத்தமாமயனுமாலுமன்றிமற்றொழிநததேவா
சோத்தமெமபெருமானென்றுதொழுதுதோததிரங்கள்சொல்லித்
தீரத்தமாமட்டமீமுனசீருடையேழுநாளுங
கூத்தராய்வீதிபோநதாகுறுக்கைவீரட்டனாரே. (௨)

திருசசிறறம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-வீரட்டேசுவரர், தேவியார்-ஞானமபிகையம்மை.

---

### திருக்கோடிகா - திருநேரிசை.

திருச்சிறறம்பலம்.

நெற்றிமேறகண்ணினானேநீறுமெய்ப்பூசினானே
கறறைபபுனசடையினானேகடலவிடமபருகினானே
செற்றவாபுரங்கள்மூன்றுஞ்செவ்வழலசெலுததினானே
குற்றமில்குணத்தினானேகோடிகாவுடையகோவே. (௧)

கடிகமழ்கொன்றையானேகபாலங்கையேநதினானே
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகத்தானே
யடியிணைபரவநாளுமடியவர்க்கருள்செய்வானே
கொடியணிவிழவதோவாக்கோடிகாவுடையகோவே. (௨)

நீறுமெய்ப்பூசினானேகிழறிகழ்மழுவினானே
யேறுகந்தேறினானேயிருங்கடலமுதொப்பானே
யாறுமோர்நான்குவேதமறமுரைத்தருளினானே
கூறுமோர்பெண்ணினானேகோடிகாவுடையகோவே. (௩)

காலனைககாலாற்செற்றன்றருள்புரிகருணையானே
நீலமாாகணடத்தானேநீணமுடியமராகோவே
ஞாலமாமபெருமையானேநளிரிளநதிங்கள்சூடுங்
கோலமார்சடையினனேகோடிகாவுடையகோவே. (௪)

பூணரவாரத்தானேபுலியுரியரையினானே
காணில்வெண்கோவணமுங்கையிலோரகபாலமேநதி
யூணுகாபபிச்சையானேயுமையொருபாகததானே
கோணலவெணபிறையினனேகோடிகாவுடையகோவே (௫)

கேழலவெணகொம்புபூண்டகிளரொளிமாாபினனே
யேழையேனேழையேனனெனசெய்கேனெநதைபெபமான்
மாழையொணகண்ணினாகள்வலைதனின்மயஙகுகினறேன்
கூழையேருடையசெலவாகோடிகாவுடையகோவே (௬)

அழலுமிழங்கையானேயரிவையோாபாகத்தானே
தழலுமிழரவமாாத்துத்தலைதனிற்பலிகொள்வானே
நிழலுமிழ்சோலைசூழநீள்வரிவணடினஙகள்
குழலுமிழ்கீதமபாடுஙகோடிகாவுடையகோவே (௭)

ஏவடுசிலையினானேபுரமவையெரிசெய்தானே
மாவடுவகிாகொள்கணணாள்மலைமகள்பாகததானே
ஆவடுதுறையுளானேயைவராலாட்டபபட்டேன
கோவடுகுற்றநதீராய்கோடிகாவுடையகோவே. (அ)

ஏற்றநீாக்கங்கையானேயிருநிலநதாவினனு
நாற்றமாமலாமேலேறுநானமுகனிவாகள்கூடி
யாற்றலாலளக்கலுற்றாாக்கழலுருவாயினனே
கூற்றுக்குங்கூற்றனாவாய்கோடிகாவுடையகோவே (௯)

பழகனாடிமைசெய்வேன்பசுபதீபாவநாச
மழகளியானையின்றோலமலைமகள்வெருவபபோாதது
அழகனேயரக்கன்றிணடோள்ருவரைநெரியவூனறிய
குழகனேகோலமாாபாகோடிகாவுடையகோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோடீசுவரர், தேவியார்-வடிவாம்பிகையம்மை.

---

## திருஆரூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

படுகுழிப்பவ்வத்தன்னபண்டியைப்பெய்தவாற்றாற்
கெடுவதிம்மனிதாவாழ்க்கைகாண்டொறுங்கேதுகிலாறேன

முடுகுவரிருந்துளைவர்மூர்க்கரேயிவர்களோடும
அடியனேன்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே. (௧)

புழுப்பெய்தபண்டிதன்னைப்புறமொருதோலான்மூடி
யொழுக்கறுவொன்பதுவாயொற்றுமையொன்றுமில்லைச்
சழக்குடையிதனுள்வாசங்கடம்பலவுஞ்செய்ய
அழிப்பனாய்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே (௨)

பஞ்சின்மெல்லடியினார்கள்பாங்கராயவர்கணின்று
நெஞ்சினையபலவுஞ்செய்துநினைவினுநினையவொட்டார்
நஞ்சணிமிடற்றினானேநாதனேநம்பனேநான்
அஞ்சினேற்கஞ்சலென்னீராரூர்மூலட்டனீரே. (௩)

கெண்டையந்தடங்கண்ணல்லார்தம்மையேகெழுமவேண்டிக்
குண்டராய்த்திரிந்தைவர்குலைத்திடாக்குழியினூக்கக்
கண்டுநானறிக்கிலேனகாத்துக்கொள்கறைசேர்கண்டா
அண்டவானவர்கள்போற்றுமாரூர்மூலட்டனீரே. (௪)

தாழ்குழலின்சொல்லார்தங்களைத்தஞ்சமென்று
ஏழையேனாகினாளுமென்செய்கேனெந்தைபெம்மான்
வாழ்வதேலரிதுபோலுமவைகளுமைவர்வந்து
ஆழ்குழிப்படுத்தவாற்றேனாரூர்மூலட்டனீரே. (௫)

மாற்றமொன்றருளகில்லீர்மதியிலேன்விதியிலாமை
சீற்றமுந்தீர்த்தல்செய்யீர்சிக்கெனவுடையராகிக்
கூற்றம்போலைவர்வந்துகுலைத்திடக்கோகுசெய்ய
ஆற்றவுங்கில்லேனாயேனாரூர்மூலட்டனீரே. (௬)

உயிர்நிலையுடம்பேகாலாயுள்ளமேதாழியாகத்
துயரமேயேற்றமாகத்துன்பக்கோல்தன்னைப்பற்றிப்
பயிர்தன்னைச்சுழியவிட்டுப்பாழ்க்குநீரிறைத்துமிக்க
அயர்வினாலைவர்க்காற்றேனாரூர்மூலட்டனீரே. (௭)

கற்றதேலொன்றுமில்லைக்காரிகையாரோடாடிப்
பெற்றதேற்பெரிதுந்துன்பம்பேதையேன்பிழைப்பினாலே
முற்றினாலைவர்வந்துமுறைமுறைதுயரஞ்செய்ய
அற்றுநானலந்துபோனேனாரூர்மூலட்டனீரே. (௮)

பத்தனாய்வாழமாட்டேன்பாவியேன்பரவிவந்து
சித்தத்துளைவர்தீயசெய்வினைபலவுஞ்செய்ய
மத்துறுதயிரேபோலமறுகுமென்னுள்ளந்தானும்
அத்தனேயமரர்கோவேயாரூர்மூலட்டனீரே. (௯)

தடக்கைநாலைந்துகொண்டுதடவரைதன்னைப்பற்றி
யெடுத்தவன்போக்கவோடியிரிந்தனபூதமெல்லா

முடித்தலையணைத்துந்தோளுமுறிதரவிறையேயூன்றி
யடாதனவருள்செய்ததென்னேயாரூர்மூலட்டனீரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூரெனபதற்குப்பொருள் - இலக்குமிவாசஞ்செய்யுமூர்.

---

## திருஆரூர் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குழல்வலங்கொண்டசொல்லாள்கோலவேற்கண்ணிதன்னைக்
கழல்வலங்கொண்டுநீங்காக்கண்களாற்கண்களார
அழல்வலங்கொண்டகையானருட்கதிரெறிக்குமாரூர்
தொழல்வலங்கொண்டல்செய்வான்றோன்றினார்தோன்றினாரே. (௧)

நாகத்தைநங்கையஞ்சநங்கையைமஞ்ஞையென்று
வேகத்தைத்தவிர்நாகம்வேழத்தினுரிவைபோர்த்துப்
பாகத்தினிமிர்தல்செய்யாத்திங்களைமின்னென்றஞ்சி
யாகத்திற்கிடந்தநாகமடங்குமாரூரனாரே (௨)

தொழுதகங்குழையமேவித்தொட்டிமையுடையதொண்டர்
அழுதகம்புகுந்தினாரவாவாபோலுமாரூர்
எழிலகங்கடுவெண்முற்றமின்றியுமோகொள்வேலிப்
பொழிலகம்விளங்குதிங்கட்புதுமுகிழ்சூடினாரே. (௩)

நஞ்சிருள்மணிகொள்கண்டர்நகையிருள்ளீமக்கங்குல்
வெஞ்சுடர்விளக்கத்தாடிவிளங்கினார்போலுமூவா
வெஞ்சுடர்முகடுதீண்டிவெள்ளிநாராசமென்ன
அஞ்சுடரணிவெண்டிங்களணியுமாரூரனாரே. (௪)

ஏந்தளிர்நீர்மைக்கோலமேனியென்றிமையோரேத்தப்
பைந்தளிர்க்கொம்பரன்னபடர்கொடிபயிலப்பட்டுத்
தஞ்சடைத்தொத்தினாலுந்தம்மதோர்நீர்மையாலும்
அந்தளிராகம்போலும்வடிவராரூரனாரே. (௫)

வானகம்விளங்கமல்கும்வளங்கெழுமதியஞ்சூடித்
தானகமழியவந்துதாமபலிதேர்வர்போலும்
ஊனகங்கழிந்தவோட்டிலுண்பதுமொளிகொணஞ்சம்
ஆனகமஞ்சுமாடுமடிகளாரூரனாரே. (௬)

அஞ்சணைகணையினானையழலுறவன்றுநோக்கி
அஞ்சணைகுழலினாளையமுதமாவணைந்துநக்கு
அஞ்சணையஞ்சுமாடியாடரவாட்டுவார்தாம்
அஞ்சணைவேலியாரூராதரித்திடங்கொண்டாரே. (௭)

வணங்கிமுன்னமரரேத்தவலவினையானதீரப
பிணங்குடைச்சடையிலவைததபிறையுடையபெருமையண்ணல்
மணங்கமழோதிபாகாமதிநிலாவட்டததாடி
யணங்கொடிமாடவீதியாரூரெமமடிகளாரே (அ)

நகலிடம்பிறாகட்காகானமறையோாகடங்கள்
புகலிடமாகிவாழமபுகலியிலிருவாகூடி
யிகலிடமாகநீணடஙகீணடெழிலழலதாகி
யகலிடமபரவியேததவடிகளாரூரனாரே. (௯)

ஆயிரநதிங்கள்மொய்த்தவலைகடலமுதமவாஙகி
யாயிரமசுராவாழமணிமதின்மூனறுமவேவ
வாயிரநதோளுமடடித்தாடியவசைவுதீர
வாயிரமடியுமவைததவடிகளாரூரனாரே (௧௦)

திருசசிறறமபலம.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா-வனமீகததியாகேசுவரா, தேவியார்-அல்லியஙகோதையமமை.

---

## திருப்புகலூர் - திருநேரிசை.

திருசசிறறமபலம.

பகைததிடடாாபுரஙகணமூனறுமபறறிநீறுகிவீழப
புகைததிடடதேவாகோவேபொறியிலேனுடலநதனனுள
அகைததிட்டஙகதனைநாளுமைவாகொணடாடடவாடித
திகைததிடடேனசெய்வதெனனெதிருபபுகலூரனீரே (௧)

மையரிமதாத்தவொணகணம தராாவலையிறபடடுக
கையெரிசூலமேநதுஙகடவுளைநினையமாடடேன
ஐதெரிநதகமிடறறேயடைக்குமபோதாவியாாதான
செயவதொனறறியமாடடேனதிருபபுகலூரனீரே (௨)

முபபதுமுபபத்தாறுமுபபதுமிடுகுரமபை
யபபாபோலைவாவநதுவநதருகிதுவிடடனறு
ஒபபவேநலியலுற்றுலுய்யுமாறறியமாட்டேன
செபபமேதிகழுமேனிததிருபபுகலூரனீரே (௩)

பொறியிலாவழுக்கையோம்பிபபொய்யினைமெய்யென்றெணணி
நெறியலாநெறிகள்சென்றேனீதனேநீதியேதும
அறிவிலேனமராகோவேயமுதினைமண்ணில்வைக்குஞ்
செறிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௪)

அளியினார்குழலினாாகளவாகளுக்கன்பதாகி
களியினார்பாடலோவாக்கடவூாவீரட்டமெனனுந
தளியினார்பாதநாளுநினைவிலாத்தகவிலநெஞ்சந
தெளிவிலேன்செய்வதென்னேதிருபபுகலூரனீரே. (௫)

இலவினாமாதாபாலேயிசைந்துநானிருந்துபின்னும்
நிலவுநாள்பலவென்றெண்ணிநீதனைநினைந்தியுன்னை
யுலவினானுள்கமாட்டேனுனனடிபரவுஞானஞ்
செலவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே (சு)

காத்திலேனிரணடுமூனறுங்கலவியேலிலலையென்பால
வாத்திலேனடிமைதன்னுள்வாய்மையாற்றாயேனலலன்
பாரா ததனுக்கருள்கள்செய்தபரமனேபரவுவாாகள்
தீாததமேதிகழுமபொய்கைததிருபபுகலூரனீரே. (எ)

நீருமாய்ததீயுமாகிநிலனுமாய்விசுமபுமாகி
யேருடைககதிாகளாகியிமையவாிறைஞசனின்று
ஆாவதறகரியராகியஙகஙகேயாடுகினற
தேவாக்குநதேவராவாாதிருபபுக[illegible]னாரே. (அ)

மெயயுளேவிளககையேறறிவேணடளவுயாத்தூண்டி
யுயவதோருபாயமபறறியுககினறேனுகவாவணண
மைவரையகதமதைவைததீரவாகளேவலியாசாலச
செயவதொனறறியமாடடேனதிருபபுகலூரனீரே. (கூ)

அருவரைதாஙகினானுமருமறையாதியானு
மிருவருமறியமாடடாவீசனாிலஙகைவேந்தன
கருவரையெடுததனானறுகணவழிகுருதிசோரத
திருவிரல்சிறிதுவைததாாதிருபபுகலூரனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாடடிலுளளது.

சுவாமிபெயா-அக்கினீசுவரா, தேவியாா-கருநதார்க்குழலியம்மை.

அ௨ பதிகம - ருo.

---

திருவலம்புரம் - திருநேரிசை.

திருசசிற்றம்பலம்.

தெணடிரையோங்கியோதஞ்சென்றடிவீழுங்காலைத்
தொண்டிரைததணடர்கோனைத்தொழுதடிவணங்கியெங்கும்
வணடுகள்மதுக்கள்மாநதுவலமபுரத்தடிகடம்மைக்
கொணடுநற்கீதம்பாடக்குழகாதாமிருநதவாறே. (க)

மடுக்களிலவாளைபாயவண்டினமிரிந்தபொய்கைப
பிடிக்களிறென்னத்தம்மிற்பிணைபயின்றணைவராலகள்
தொடுத்தநன்மாலையேந்தித்தொண்டர்கள்பரவியேத்த
வடித்தடங்கண்ணிபாகர்வலம்புரத்திருந்தவாறே. (உ)

தேனுடைமலர்கள்கொண்டுதிருந்தடிபொருந்தச்சாத்தி
ஆனிடையஞ்சுங்கொண்டன்பினாலமரவாட்டி
வானிடைமதியஞ்சூடும்வலம்புரத்தடிகடம்மை
நானடைந்தேத்தப்பெற்றுநல்வினைப்பயனுற்றேனே. (௩)

முளையெயிறிளநல்லேனம்பூண்டுமொய்ச்சடைகடாழ
வளையெயிற்றிளையநாகம்வலித்தரையிசையவீக்கிப்
புளைகையபோர்வைபோர்த்துப்புனலொடுமதியஞ்சூடி
வளைபயிலிளையரேத்தும்வலம்புரத்தடிகடாமே. (௪)

சுருளுறுவரையின்மேலாத்துளங்கிளம்பளிங்குசிந்த
இருளுறுகதிர்நுழைந்தவிளங்கதிர்ப்பசலைத்திங்கள்
அருளுறுமடியரெல்லாமங்கையின்மலர்களேந்த
மருளுறுகீதங்கேட்டார்வலம்புரத்தடிகளாரே. (௫)

நினைக்கின்றேனெஞ்சுதன்னுணீண்டபுன்சடையினானை
யனைத்துடன்கொண்டுவந்தங்கன்பினாலமையவாட்டிப்
புனைக்கின்றேன்பொய்மைதன்னைமெய்மையைப்புணரமாட்டே
னினக்குநான்செய்வதென்னேயினிவலம்புரவனீரே (௬)

செங்கயல்சேல்கள்பாய்ந்துதேம்பழமினியநாடித்
தங்கயந்துறந்துபோந்துதடம்பொய்கையடைந்துநின்று
கொங்கையார்குடையுங்காலைக்கொழுங்கனியழுங்கினார்
மங்கலமனையின்மிக்கார்வலம்புரத்தடிகளாரே. (௭)

அருகெலாங்குவளைசெந்நெலகவிலையாம்பலெய்தல்
தெருவெலாந்தெங்குமாவும்பழம்விழும்படப்பையெல்லாம்
குருகினங்கூடியாங்கேகும்மலித்திறகுலர்த்தி
மருவலாமிடங்கள்காட்டும்வலம்புரத்தடிகளாரே (௮)

கருவரையனையமேனிக்கடல்வண்ணனவனுங்காணான்
திருவரையனையபூமேற்றிசைமுகனவனுங்காணான்
ஒருவரையுச்சியேறியோங்கினாரோங்கிவந்து
அருமையிலெளிமையானாரவர்வலம்புரவனாரே (௯)

வாளெயிறிலங்கநக்குவளர்கயிலாயந்தன்னை
யாள்வலிகருதிச்சென்றவரக்கனைவரைக்கீழன்று
தோளொடுபத்துவாயுந்தொலைத்துடன்முந்தவூன்றி
யாண்மையும்வலியுந்தீர்ப்பாரவர்வலம்புரவனாரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வலம்புரநாதர், தேவியார்-வடுவகிர்க்கண்ணம்மை.

## திருஆவடுதுறை - திருநேரிசை.

திருச்சிற்றமபலம.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்குமபோலும
பாயிருங்கங்கையாளைபபடாசடைவைபபாபோலுங்
காயிருமபொழிலகள்சூழ்நதகழுமலவூராக்கமபொன
ஆயிரங்கொடுபபாபோலுமாவடுதுறையனாரே. (க)

மடநதைபாகத்தாபோலுமானமறிக்கையாபோலுங
குடநதையிற்குழகாபோலுங்கொலபுலிததோலாபோலுங்
கடைநதநஞசுணபாபோலுஙகாலனைககாய்வாபோலும
அடைநதவாககனபாபோலுமாவடுதுறையனாரே (உ)

உற்றநோய்தீாபபாபோலுமுறுதுணையாவாபோலுஞ
செற்றவாபுரஙகணமூனறுநதீயெழசசெறவாபோலுங
கற்றவாபரவியேறறிககலநதுலநதலநதுபாடும
அறறவாககனபாபோலுமாவடுதுறையனாரே (ங

மழுவமாகையா்போலுமாதவள்பாகாபோலும
எழுதுணைவேலாபோலுமெனபுகொணடணிவாபோலுந
தொழுதெழுநதாடிபபாடிததோத்திரமபலவுஞ்சொலலி
யழுமவாக்கனபாபோலுமாவடுதுறையனாரே (ச)

ஒற்றிகொண்டாயொற்றியூரையுங் கைவிட்டுறுமென்றெண்ணி
விற்றிகண்டாய்மற்றிதுவொப்பதில்லிடம் வேதியனே. (அ)

சுற்றிக்கிடந்தொற்றியூரனென் சிந்தைபிரிவறியான்
ஒற்றித்திரிந்துநீயென்னசெய்தியுலகமெல்லாம்
பற்றித்திரிந்து பலவொடுநாமென்று கண்குழித்துக்
கெற்றித்திருப்பதல்லாலென்னசெய்யுமித் தீவினையே. (கூ)

அங்கட்கடுக்கைக்கு முல்லைப்புறவ முறுவல்செய்யும்
பைங்கட்டலைக்குச் சுடலைக்களரி பருமணிசேர்
கங்கைக்கு வேலை யரவுக்குப் புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றியூரர் திருமுடியே. (க0)

ருக்கினவாளரக்கன் முடிபத்திறப் பாதந்தன்னால்
ருக்கினவாறடியேனைப் பிறப்பறுத்தாளவல்லான்
நெருக்கினவானவர் தானவர் கூடிக்கடைந்தநஞ்சை
ருக்கினவாறென் செய்கேனொற்றியூருறை யண்டனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - அசு.

---

## திருப்பழனம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மேவித்து நின்று விளைந்தன வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன வல்லலவை யறுப்பான்

பாவித்தபாவனை நீயறிவாய்பழனத்தரசே
கூவித்துக்கொள்ளுந்தனையடியேனைக்குறிக்கொள்வதே. (க)

சுற்றிநின்றாபுறங்காவலமராகடைத்தலையின்
மற்றுநின்றாதிருமாலொடுநான்முகன்வந்தடிக்கீழ்ப
பற்றிநின்றாபழனத்தரசேயுன்பணியறிவான்
உற்றுநின்றாடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (உ)

ஆடிநின்றாயண்டமேழுங்கடந்துபோய்மேலவையும்
கூடிநின்றாய்குவிமென்முலையாளையுங்கொண்டுடனே
பாடிநின்றாய்பழனத்தரசேயங்கோபான்மதியம
சூடிநின்றாயடியேனையஞ்சாமைக்குறிக்கொள்வதே. (ங)

எரிததுவிடடாயமபின்றுப்புரமூன்றுமுன்னேபடவும
உரிததுவிடடாயுமையாணடுக்கெய்தவோாகுஞ்சரத்தைப
பரிததுவிட்டாய்பழனத்தரசேகங்கைவாசடைமேல்
தரித்துவிடடாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (ச)

முன்னியுமுன்னிமுளைத்தனாமூவெயிலுமமுடனே
மன்னியுமங்குமிருநதனைமாயமனத்தவாகள்
பன்னியநூலின்பரிசறிவாய்பழனததரசே
உன்னியுமுன்னடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (ரு)

எய்ந்தறுததாயின்பனுயிருநதேபடைத்தான்றலையைக்
காய்நதறுததாய்கண்ணினாலன்றுகாமனைக்காலனையும
பாய்நதறுத்தாய்பழனததரசேயென்பழவினைநோய்
ஆயநதறுததாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (சா)

மற்றுவைத்தாயங்கோாமாதொருபாகமகிழ்நதுடனே
உற்றுவைத்தாயுமையாளொடுங்கூடுமபரிசவனே
பற்றிவைத்தாய்பழனத்தரசேயங்கோபாமபொருகை
சுறறிவைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (எ)

ஊரினின்றாயொன்றிநின்றுவிண்டாரையுமொள்ளழலால
போரினின்றாய்பொறையாயுயிராவிசுமந்துகொண்டு
பாரினின்றாய்பழனத்தரசேபணிசெய்பவர்கட்
காரநின்றாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (அ)

போகமவைத்தாய்புரிபுன்சடைமேலோர்புனலதனை
ஆகம்வைத்தாய்மலையான்மடமங்கைமகிழ்ந்துடனே
பாகமவைத்தாய்பழனத்தரசேயுன்பணியருளால்
ஆகம்வைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (கூ)

அடுத்திருந்தாயரக்கன்முடிவாயொடுதோளணியக்
கெடுத்திருந்தாய்கிளர்ந்தார்வலியைக்கிளையோடுடனே

படுத்திருந்தாய்பழனத்தரசேபுலியின்னுரிதோல
உடுத்திருந்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பூந்துருத்தி-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுறநின்றான்மலைமகடன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப்பண்புணராமதின்மேல
போலனைப்போர்விடையேறியைப்பூந்துருத்திமகிழும
ஆலனையாதிபுராணனைநானடிபோற்றுவதே. (௧)

மறியுடையான்மழுவாளினன்மாமலைமங்கையோர்பால
குறியுடையான்குணமொன்றறிந்தாரிலைக்கூறிலவன்
பொறியுடைவாளரவத்தவன்பூந்துருத்தியுறையும
அறிவுடையாதிபுராணனைநானடிபோற்றுவதே. (௨

மறுத்தவர்மும்மதிலமாயவோர்வெஞ்சிலைகோத்தோரம்பால
அறுத்தனையாலதன்கீழனையாலவிடமுண்டனைப
பொறுத்தனைப்பூதப்படையனைப்பூந்துருத்தியுறையும
நிறத்தனைநீலமிடற்றனையானடிபோற்றுவதே. (௩)

உருவினையூழிமுதல்வனையோதிநிறைந்துநின்ற
திருவினைத்தேசம்படைத்தனைச்சென்றடைந்தேனுடைய
பொருவினையெல்லாந்துரந்தனைப்பூந்துருத்தியுறையும
கருவினைக்கண்மூன்றுடையனையானடிபோற்றுவதே. (௪)

தக்கன்றன்வேள்விதகர்த்தவன்சாரமதுவன்றுகொள
மிக்கனமும்மதில்வீயவோர்வெஞ்சிலைகோத்தோரம்பால
புக்கனன்பொன்றிகழ்ந்தன்னதோர்பூந்துருத்தியுறையும
நக்கனைநங்கள்பிரான்றனைநானடிபோற்றுவதே. (௫)

அருகடைமாலையுந்தானுடையானழகாலமைந்த
உருவுடைமங்கையுந்தன்னொருபாலுலகாயுநின்றான்
பொருபடைவேலினன்வில்லினன்பூந்துருத்தியுறையும
திருவுடைத்தேசமதியனையானடிபோற்றுவதே. (௬)

மன்றியுநின்றமதிலைமாயவகைகெடுக்கக்
கன்றியுநின்றுகடுஞ்சிலைவாங்கிக்கனலம்பினால
பொன்றியும்போகப்புரட்டினன்பூந்துருத்தியுறையும
அன்றியுஞ்செய்தபிரான்றனையானடிபோற்றுவதே. (௭)

மின்னிறமிக்கவிடையுமைநங்கையோர்பான்மகிழ்ந்தான்
எந்நிறமென்றமரர்பெரியாரின்னந்தாமறியார்
பொன்னிறமிக்கசடையவன்பூந்துருத்தியுறையும்
என்னிறவெந்தைபிரான்றனையானடிபோற்றுவதே. (௮)

அந்தியைநல்லமதியினையார்க்குமறிவரிய
செந்தியைவாட்டுஞ்செம்பொன்னினைச்சென்றடைந்தேனுடைய
புந்தியைப்புக்கவறிவினைப்பூந்துருத்தியுறையும்
நந்தியைநங்கள்பிரான்றனைநானடிபோற்றுவதே. (௯)

பைக்கையும்பாந்திவிழிக்கையும்பாம்புசடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையுமங்கைநடுக்குறவே
மொய்க்கையரக்கனையூன்றினன்பூந்துருத்தியுறையும்
மிக்கநல்வேதவிகிர்தனைநானடிபோற்றுவதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநெய்த்தானம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரிடஞ்சாடியபல்லுயிர்வானமரர்க்கருளிக்
காரடைந்தகடல்வாயுமிழ்நஞ்சமுதாகவுண்டான்
ஊரடைந்திவ்வுலகிற்பலிகொள்வதுநாமறியோம்
நீரடைந்தகரைநின்றநெய்த்தானத்திருந்தவனே. (௧)

தேய்ந்திலங்குஞ்சிறுவெண்மதியாய்நின்றிருச்சடைமேல்
பாய்ந்தகங்கைப்புனல்பன்முகமாகிப்பரந்தொலிப்ப
ஆய்ந்திலங்குமழுவேலுடையாயடியேற்குரைநீ
ஏய்ந்திளமங்கையுநீயுநெய்த்தானத்திருந்ததுவே. (௨)

கொன்றடைந்தாடிக்குமைத்திடுங்கூற்றமொன்றார்மதின்மேல்
சென்றடைந்தாடிப்பொருததுந்தேசமெல்லாமறியும்
குன்றடைந்தாடுங்குளிர்பொழிற்காவிரியின்கரைமேல்
சென்றடைந்தார்வினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (௩)

கொட்டுமுழவரவத்தொடுகோலம்பலவணிந்து
நட்டம்பலபயின்றாடுவர்நாகமரைக்கசைத்துச்
சிட்டர்திரிபுரந்தீயெழச்செற்றசிலையுடையான்
இட்டமுமையொடுநின்றநெய்த்தானத்திருந்தவனே (௪)

கைமலர்க்கொன்றைதுழாய்வன்னிமத்தமுங்கூவிளமும்
மெய்ம்மலர்வேய்ந்தவிரிசடைக்கற்றைவிண்ணோர்பெருமான்
மைம்மலர்நீலநிறங்கருங்கண்ணியோர்பான்மகிழ்ந்தான்
நின்மலனுடனிலைநெய்த்தானத்திருந்தவனே. (௫)

பூந்தார்நறுங்கொன்றைமாலையைவாங்கிச்சடைக்கணிந்து
கூர்ந்தார்விடையினையேறிப்பலபூதப்படைநடுவே
போந்தார்புறவிசைபாடவுமாடவுங்கேட்டருளிச்
சேர்ந்தாருமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (௬)

பற்றினபாம்பன்படுத்தபுலியுரித்தோலுடையன்
முற்றினமூன்றுமதில்களைமூட்டியெரித்தறுத்தான்

சுற்றியபூதப்படையினன்சூலமழுவொருமான்
செற்றுநதீவினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (௭)

விரித்தசடையினன்விண்ணவர்கோன்விடமுண்டகண்டன்
உரித்தகரியுரிமூடியொன்னார்மதில்மூன்றுடனே
எரித்தசிலையினனீடழியாதென்னையாண்டுகொண்ட
தரித்தவுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே (௮)

தூங்கான்றுளங்கான்றுழாய்கொன்றைதுன்னியசெஞ்சடைமேல்
வாங்கான்மதியமும்வாளரவுங்கங்கைதான்புனைந்தான்
தேங்கார்திரிபுரந்தீயெழவெய்துதியக்கறுத்து
நீங்கானுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (௯)

ஊட்டிநின்றான்பொருவானிலமுமமதிநீயமபினலை
மாட்டிநின்றானன்றினாவந்துவீழவும்வானவர்க்குக்
காட்டிநின்றான்கதமாக்கங்கைபாயவோர்வார்சடையை
நீட்டிநின்றான்றிருநின்றநெய்த்தானத்திருந்தவனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

## திருவேதிகுடி - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

கையதுகாலெரிநாகங்கனல்விடுசூலமது
வெய்யதுவேலைநஞ்சுண்டவிரிசடைவிண்ணவர்கோன்
செய்யினின்னீலமணங்கமழுந்திருவேதிகுடி
ஐயனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௧)

கைந்தலைமான்மறியேந்தியகையனகனன்மழுவன்
பொய்த்தலையேந்திப்பூதியணிந்துபலிதிரிவான்
செய்த்தலைவாளைகள்பாய்ந்துகளுந்திருவேதிகுடி
அத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௨)

முன்பின்முதலவன்முனிவனெம்மேலைவினைகழித்தான்
அன்பனிலையிலவுணர்புரம்பொடியானசெய்யும்
செம்பொனைநன்மலர்மேலவன்சேர்திருவேதிகுடி
அன்பனைநம்மையுடையனைநாமடைந்தாடுதுமே. (௩)

பத்தர்களுளுமறவார்பிறவியையொன்றறுப்பான்
முத்தர்கண்முன்னம்பணிசெய்துபாரிடமுன்னுயர்த்தான்
கொத்தனகொன்றைமணங்கமழுந்திருவேதிகுடி
அத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௪)

ஆனணைந்தேறுங்குறிகுணமாரறிவாரவர்கை
மானணைந்தாடுமதியும்புனலுஞ்சடைமுடியன்
தேனணைந்தாடியவண்டுபயிறிருவேதிகுடி.
ஆனணைந்தாடுமழுவனைநாமடைந்தாடுதுமே. (௫)

எண்ணுமெழுத்துங்குறியுமறிபவர்தாமொழியப
பண்ணினிசைமொழிபாடியவானவர்தாமபணிவார
திண்ணெனவினைகளைத்தீர்க்கும்பிரான்றிருவேதிகுடி
நண்ணவரியவமுதினைநாமடைந்தாடுதுமே. (௬)

ஊர்ந்தவிடையுகந்தேறியசெல்வனைநாமறியோம
ஆர்ந்தமடமொழிமங்கையோர்பாகமகிழ்ந்துடையான்
சேர்ந்தபுனற்சடைச்செல்வப்பிரான்றிருவேதிகுடி
சார்ந்தவயலணிதண்ணமுதையடைந்தாடுதுமே. (௭)

எரியுமழுவினனெண்ணியுமற்றொருவன்றலையுள்
திரியுமபலியினன்றேயமுநாடுமெல்லாமுடையான்
விரியும்பொழிலணிசேறுதிகழ்திருவேதிகுடி
அரியவமுதினையன்பர்களோடடைந்தாடுதுமே. (௮)

மையணிகண்டன்மறைவிரிநாவன்மதித்துகந்த
மெய்யணிநீறன்விழுமியவெண்மழுவாட்படையான்
செய்யகமலமணங்கமழுந்திருவேதிகுடி
அய்யனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௯)

அருத்தனைவாளரக்கன்முடிதோளொடுபத்திறுத்த
பொருத்தனைப்பொய்யாவருளனைப்பூதப்படையுடைய
திருத்தனைத்தேவர்பிரான்றிருவேதிகுடியுடைய
அருத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - வேதபுரீசுவரர், தேவியார் - மங்கையர்க்கரசியம்மை.

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவாகுற்றநோய்வினைகாட்டிக்குறுவித்தநோய்
உறுவித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுக்குகந்தருளி
அறிவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
செறிவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (௧)

கூர்வித்தவாகுற்றநோய்வினைகாட்டியுங்கூர்வித்தநோய்
ஊர்வித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
ஆர்வித்தவாறடியேனையையாறனடிமைக்களே
சேர்வித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (௨)

தாக்கினவாசலமேவினைகாட்டியுந்தண்டித்தநோய்
நீக்கினவாநெடுநீரினின்றேறநினைந்தருளி
ஆக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
நோக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (௩)

தருக்கினநான்றகவின்றியுமோடச்சலமதனுல
நெருக்கினவாநெடுநீரினின்றேறநினைநதருளி
உருக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
பெருக்கினவாதொண்டனேனைதன்பொன்னடிக்கீழெனையே. (௪)

இழிவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடரபபடுத்துக்
கழிவித்தவாகட்டநோய்வினைதீரபபான்கலந்தருளி
அழிவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
தெழுவித்தவாதொண்டனேனைதன்பொன்னடிக்கீழெனையே. (௫)

இடைவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடரபபடுத்து
உடைவித்தவாறுற்றநோய்வினைதீரபபானுகந்தருளி
அடைவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
தொடாவிததவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (௬)

படக்கினவாபடநின்றுபன்னூளுமபடக்கினநோய்
அடக்கினவாறதுவன்றியுநதீவினைபாவமெலலாம
அடக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
துடக்கினவாதொண்டனேனைதன்பொன்னடிக்கீழெனையே. (எ)

மறப்பித்தவாவலலேநோய்வினைகாட்டிமறபபிததநோய்
துறப்பித்தவாதுக்கநோய்வினைதீரபபானுகந்தருளி
இறபபிததவாறடியேனையையாறனடிமைககளே
சிறப்பித்தவாதொண்டனேனைதனபொனனடிக்கீழெனையே. (அ)

துயக்கினவாதுக்கநோய்வினைகாட்டிததுயக்கியநோய்
இயக்கினவாறிட்டநோய்வினைதீரபபானிசைந்தருளி
அயக்கினவாறடியேனையையாறனடிமைககளே
மயக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிகீழெனையே (௯)

கறுததுமிட்டாரகண்டங்கஙகைசடைமேறகாநதருளி
இறுத்துமிட்டாரிலஙகைக்கிறைதன்னையிருபதுதோள
அறுத்துமிட்டாரடியேனையையாறனடிமைக்களே
பொறுத்துமிட்டாரதொண்டனேனைதன்பொன்னடிக்கீழெனையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றமபலம.

சிந்திபபரியனசிநதிபபவாக்குச்சிறநதுசெநதேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துநின்றபழவினைதீர்பபனபாம்புசுற்றி
அநதிப்பிறையணிநதாடுமையாறனடித்தலமே. (௧)

இழித்தனவேழேழ்பிறப்புமறுத்தனவென்மனத்தே
பொழித்தனபோரெழிற்கூற்றையுதைத்தனபோற்றவர்க்காய்

இழித்தனதக்கன்கிளரொளிவேள்வியைக்கீழ்முன்சென்று
அழித்தனவாறங்கமானவையாறனடித்தலமே. (உ)

மணிநிறமொப்பனபொன்னிறமன்னினமின்னிலவாய்
கணிநிறமன்னகயிலைப்பொருப்பனகாதல்செய்யத்
துணிவனசீலத்தராகித்தொடர்ந்துவிடாததொண்டர்க்
கணியனசேயனதேவர்க்கையாறனடித்தலமே. (ங)

இருட்டருதுன்பப்படலமறைப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருட்டருகண்ணிழந்துண்பொருணாடிப்புகலிழந்த
குருட்டருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருட்டருகைகொடுத்தேற்றுமையாறனடித்தலமே. (ச)

எழுவாயிறுவாயிலாதனவெங்கட்பிணிதவிர்த்து
வழுவாமருந்துவமாவனமாநரகக்குழிவாய்
விழுவாரவர்தம்மைவீழ்ப்பனமீட்பனமிக்கவன்போ
டழுவார்க்கமுதங்கள்காண்கவையாறனடித்தலமே. (ரு)

துன்பக்கடலிடைத்தோணித்தொழில்பூண்டதொண்டர்தம்மை
இன்பக்கரைமுகந்தேற்றுந்திறத்தனமாற்றயலே
பொன்பட்டொழுகப்பொருந்தொளிசெய்யும்பொய்பொருந்தா
அன்பர்க்கணியனகாண்கவையாறனடித்தலமே. (சா)

களித்துக்கலந்ததோர்காதற்கசிவொடுகாவிரிவாய்க்
குளித்துத்தொழுதுமுன்னின்றவிப்பத்தரைக்கோதில்செந்தேன்
தெளித்துச்சுவையமுதூட்டியமரர்கள்சூழிருப்ப
அளித்துப்பெருஞ்செல்வமாக்குமையாறனடித்தலமே. (எ)

திருத்திக்கருத்தினைச்செவ்வேநிறுத்திச்செறுத்துடலை
அருத்திக்கடிமலர்வாளெடுத்தோச்சிமருங்குசென்று
விருத்திக்குழக்கவல்லோர்கட்குவிண்பட்டிகையிடுமால்
அருத்தித்தருந்தவரேத்துமையாறனடித்தலமே. (அ)

பாடும்பறண்டையுமொந்தையுமார்ப்பப்பரந்துபல்பேய்
கூடிமுழவக்குவிகவிழ்கொட்டக்குறுநரிகள்
நீடுங்குழல்செய்யவையகெளிர்நிணப்பிணக்காட்
டாடுந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (கூ)

நின்போலமரர்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
என்போலிகள்பறித்திட்டவிலையுமுகையுமெல்லாம்
அம்போதெனக்கொள்ளுமையனையாறனடித்தலமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - கஉ.

## திருவையாறு. - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மலையான்மடந்தைமனத்தனவானோர்மகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றோர்மதிப்பனநீணிலத்துப
புலையாடுபுன்மைதவிர்ப்பனபொன்னுலகமமளிக்கும
அலையார்புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே. (க)

பொலமபுண்டரீகபபுதுமலரபோலவனபோற்றியென்பார
புலமபுமபொழுதுமபுணர்துணையாவனபொன்னனைய
சிலமபுஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணித்திரளும
அலமபுந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (உ)

உற்றாரிலாதார்க்குறுதுணையாவனவோதிநன்னூல
கற்றார்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
கிற்பார்தமக்குக்கிளரொளிவானகந்தான்கொடுக்கும
அற்றார்க்கருமபொருள்காண்கவையாறனடித்தலமே. (ங)

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பார
ஊனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கையஞ்ச
ஆனையுரித்தனகாண்கவையாறனடித்தலமே. (ச)

மாதாமானிலமாவனவானவர்மாமுகட்டின்
மீதனமென்கழலவெங்கச்சுவீக்கினவெந்நமனார
தூதரையோடத்துரப்பனதுன்பறத்தொண்டுபட்டார்க்
காதரமாவனகாண்கவையாறனடித்தலமே. (ரு)

பேணித்தொழுமவர்பொன்னுலகாளப்பிறங்கருளால
ஏணிப்படிநெறியிட்டுக்கொடுத்திமையோர்முடிமேன்
மாணிக்கமொத்துமரகதம்போன்றுவயிரமன்னி
ஆணிக்கனகமுமொக்குமையாறனடித்தலமே. (சு)

ஓதியஞானமுஞானப்பொருளுமொலிசிறந்த
வேதியவேதமும்வேள்வியுமாவனவிண்ணுமண்ணும
சோதியுஞ்செஞ்சுடர்ஞாயிறுமொப்பனதூமதியோ
டாதியுமந்தமுமானவையாறனடித்தலமே. (எ)

சுணங்குமுகத்துத்துணைமுலைப்பாவைசுரும்பொடுவண்
டணங்குங்குழலியணியார்வளைக்கரங்கூப்பிநின்று
வணங்கும்பொழுதும்வருடும்பொழுதும்வண்காந்தளொண்போ
தணங்குமரவிந்தமொக்குமையாறனடித்தலமே. (அ)

சுழலார்துயர்வெயிற்சுட்டிடும்போதடித்தொண்டர்துன்னும
நிழலாவனவென்றுநீங்காப்பிறவிநிலைகெடுத்துக்
கழலாவினைகள்கழற்றுவகாலவனங்கள்தந்த
அழலாரொளியனகாண்கவையாறனடித்தலமே. (கூ)

வலியான்றலைபத்தும்வாய்விட்டலறவரையடர்த்து
மெலியாவலியுடைக்கூற்றையுதைத்துவிண்ணோர்கண்முன்னே
பலிசேர்படுகடைப்பார்த்துப்பன்னாளும்பலரிகழ
வலியாகிலைசிற்குமையனையாறனடித்தலமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கண்டியூர் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்வைகன்மலர்கொணர்ந்திட்டிறைஞ்சித்
தானவரமால்பிரமன்னறியாததகைமையினான்
ஆனவனாதிபுராணனன்றோடியபன்றியெய்த
கானவனைக்கண்டியூரண்டவாணர்தொழுகின்றதே. (௧)

வானமதியமும்வாளரவும்புனலோடுசடைத்
தானமதுவெனவைத்துழல்வான்றழல்போலுருவன்
கானமறியொன்றுகையுடையான்கண்டியூரிருந்த
ஊனமில்வேதமுடையானைநாமடியுள்குதுமே. (௨)

பண்டங்கறுத்ததோர்கையுடையான்படைத்தான்றலையை
உண்டங்கறுத்ததுமூரொடுநாடவைதானறியும்
கண்டங்கறுத்தமிடறுடையான்கண்டியூரிருந்த
தொண்டர்பிரானைக்கண்டீரண்டவாணர்தொழுகின்றதே. (௩)

முடியின்முற்றாததொன்றில்லையெல்லாமுடன்றானுடையான்
கொடியுமுற்றவிடையேறியோர்கூற்றொருபாலுடையான்
கடியமுற்றவ்வினைநோய்களைவான்கண்டியூரிருந்தான்
அடியுமுற்றார்தொண்டரில்லைகண்டீரண்டவானவரே. (௪)

பற்றியோரானையுரித்தபிரான்பவளத்திரள்போல்
முற்றுமணிந்ததோர்நீறுடையான்முன்னமேகொடுத்த
கற்றங்குடையவன்றானறியான்கண்டியூரிருந்த
குற்றமில்வேதமுடையானையாமண்டர்கூறுவதே. (௫)

போர்ப்பனையானையுரித்தபிரான்பொறிவாயரவம்
சேர்ப்பதுவானத்திரைகடல்சூழுலகமிதனைக்
காப்பதுகாரணமாகக்கொண்டான்கண்டியூரிருந்த
கூர்ப்புடையொள்வாள்மழுவனையாமண்டர்கூறுவதே (௬)

அட்டதுகாலனையாய்ந்ததுவேதமாறங்கமன்று
சுட்டதுகாமனைக்கண்ணதனாலேதொடர்ந்தெரிய
கட்டவைமூன்றுமெரித்தபிரான்கண்டியூரிருந்த
குட்டமுன்வேதப்படையனையாமண்டர்கூறுவதே. (௭)

அட்டுமொலிநீரணிமதியும்மலரானவெல்லாம்
இட்டும்பொதியுஞ்சடைமுடியானிண்டைமாலையங்கைக்
கட்டுமரவதுதானுடையான்கண்டியூரிருந்த
கொட்டும்பறையுடைக்கூத்தனையாமண்டர்கூறுவதே. (௮)

மாய்ந்தனதீவினைமங்கினநோய்கண்மறுகிவிழத்
தேய்ந்தனபாவஞ்செறுக்ககிலலாநம்மைச்செற்றநங்கைக்
காய்நதபிரான்கண்டியூரெமபிரானங்கமாறினையும
ஆய்நதபிரானல்லனோவடியேனையாட்கொண்டவனே. (௯)

மண்டிமலையையெடுத்துமத்தாகியவாசுகியைத்
தண்டியமரர்கடைநதகடலவிடங்கண்டருளி
உண்டபிரானஞ்சொளித்தபிரானஞ்சியோடிநண்ணக்
கண்டபிரானல்லனோகண்டியூரண்டவானவனே. (௧௦)

திருச்சிறறம்பலம்.

இது சோழநாடடிலுள்ளது.

சுவாமிபெயா - வீரட்டேசுவரா, தேவியா - மஙகைநாயகியமமை.

---

## திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம்.

திருசசிறறம்பலம்.

ஈன்றாளுமாயெனக்கெநதையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகமபடைத்துகநதான்மனத்துள்ளிருக்க
என்றானிமையவாக்கன்பன்றிருப்பாதிரிபபுலியூாத
தோன்றாத்துணையாயிருநதனன்றன்னடியோங்களுககே. (௧)

பற்றாய்நினைநதிடபபோதுநெஞ்சேயிநதபபாரைமுற்றும
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புகலநமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருபபாதிரிபபுலியூா
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றனமொய்கழலே. (௨)

விடையான்விருமபியென்னுள்ளததிருநதானினிநமககிங
கடையாவவலமருவினைசாராநமனையஞ்சோம
புடையாாகமலத்தயன்போல்பவாபாதிரிபபுலியூா
உடையானடியாரடியடியோங்கடகரியதுண்டே. (௩)

மாயமெலாமுற்றவிட்டிருணீங்கமலைமகடகே
நேயநிலவவிருநதானவன்றன்றிருவடிக்கே
தேயமெலாநின்றிறைஞ்சுநதிருப்பாதிரிபபுலியூா
மேயநலலான்மலாப்பாதமென்சிநதையுணின்றனவே. (௪)

வைத்தபொருணமக்காமென்றுசொலலிமனததடைததுச
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினலலால
மொய்த்தகதிாமதிபோலவாரவாபாதிரிப்புலியூா
அத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (௫)

கருவாய்க்கிடநதுன்கழலேநினையுங்கருத்துடையேன
உருவாய்த்தெரிநதுன்றனாமமபயின்றேனுனதருளால
திருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிநதேன்.
தருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே. (௬)

எண்ணாதமரரிரக்கப்பரவையுணஞ்சையுண்டாய்
திண்ணாரசுராதிரிபுரந்தீயெழச்செற்றவனே
பண்ணார்ந்தமைந்தபொருள்கள்பயிலபாதிரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய்கழனங்கருத்திலுடையனவே. (எ)

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. (அ)

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. (௯)

திருந்தாவமணர்தந்நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் தோன்றாத்துணையீசுவரர், தேவியார் - தோகையம்பிகையம்மை.

## திருவீழிமிழலை - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வான்சொட்டச்சொட்டநின்றட்டும்வளர்மதியோடயலே
தேன்சொட்டச்சொட்டநின்றட்டுந்திருக்கொன்றைசென்னிவைத்தீர்
மான்பெட்டைநோக்கிமணாளீர்மணிநீர்மிழலையுளீர்
நான்சட்டநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௧)

அந்தமுமாதியுமாகிநின்றீரண்டமெண்டிசைக்கும்
பந்தமும்வீடும்பரப்புகின்றீர்பசுவேற்றுகந்தீர்
வெந்தழலோம்புமிழலையுளீரென்னைத்தென்றிசைக்கே
உய்ந்திடும்போதுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௨)

அலைக்கின்றநீர்நிலங்காற்றனலம்பரமாகிநின்றீர்
கலைக்கன்றுசேருங்கரத்தீர்கலைப்பொருளாகிநின்றீர்
விலக்கின்றிநல்குமிழலையுளீர்மெய்யிற்கையொடுகால்
குலைக்கின்றுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௩)

தீத்தொழிலான்றலைத்தீயிலிட்டுச்செய்தவேள்விசெற்றீர்
பேய்த்தொழிலாட்டியைப்பெற்றுடையீர்பிடித்துத்திரியும்
வேய்த்தொழிலாளர்மிழலையுளீர்விக்கியஞ்செழுத்தும்
ஓத்தொழிந்தும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௪)

தோட்பட்டநாகமுஞ்சூலமுஞ்சுற்றியும்பத்திமையால
மேற்பட்டவந்தணாவீழியுமென்னையுமவேறுடையீர்
நாட்பட்டுவநதுபிறந்தேனிறக்கநமன்றமாதம
கோட்பட்டுநுமமைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே (௫)

கண்டியிற்பட்டகழுத்துடையீர்கரிக்காட்டிலிட்ட
பண்டியிற்பட்டபரிகலத்தீர்பதிவீழிகொண்டீர்
உண்டியிற்பட்டினிநோயிலுறக்கத்திலுமமையைவா
கொண்டியிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௬)

தோற்றங்கண்டான்சிரமொன்றுகொண்டீா தூயவெள்ளெருதொன்
றேற்றங்கொண்டீரெழில்வீழிமிழலையிருக்கைகொண்டீா
சீற்றங்கொண்டென்மேற்சிவநததோாபாசத்தாலவீசியவெங்
கூற்றங்கண்டும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௭)

சுழிபபட்டகங்கையுநதிங்களுஞ்சூடிசசொக்கமபயின்றீா
பழிப்பட்டபாம்பரைப்பற்றுடையீாபடர்தீபபருக
விழிப்படடகாமனைவிடடீாமிழலையுளீாபிறவிச்
சுழிப்பட்டுநுமமைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே (௮)

பிள்ளையிற்படடபிறைமுடியீாமறையோதவலலீா
வெள்ளையிற்படடதோாநீற்றீாவிரிநீாமிழலையுளீா
நள்ளையிற்படடைவர்நக்கரைபபிக்கநமன்றமாதம
கொள்ளையிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே (௯)

கறுக்கொண்டரக்கன்கயிலையைபபற்றியகையுமெய்யும
நெறுக்கென்றிறச்செற்றசேவடியாற்கூற்றைநின்றுசெய்தீா
வெறிக்கொன்றைமாலைமுடியீாவிரிநீர்மிழலையுளீா
இறக்கின்றுநுமமைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௧௦)

திருசசிறறம்பலம்

இது சோழநாட்டிலுளளது.

சுவாமிபெயர் - வீழியழகர், தேவியார் - சுந்தரகுசாம்பிகையமமை.

---

**திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்.**

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குநதழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுநதே. (௧)

காய்ந்தாயனங்கனுடலமபொடிபடக்காலனைமுன்
பாய்ந்தாயுயிர்செகபபாதம்பணிவார்தம்பல்பிறவி
ஆய்நதாய்நதறுப்பாயடியேற்கருளாயுன்னன்பாசிந்தை
சோநதாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௨)

பொத்தார்குரமபைபுகுநதைவர்நாளுமபுகலழிபப
மத்தார்தயிாபோன்மறுகுமென்சிந்தைமறுக்கொழிவி
அத்தாவடியேனடைக்கலங்கண்டாயமராகடம
சித்தாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௩)

நிலலாக்குரமபைநிலையாக்கருதியிந்நீணிலத்தொன்
றலலாக்குழிவீழ்நதயர்வுறுவேனைவந்தாண்டுகொண்ட
விலலோபுருவத்துமையாள்கணவாவிடிற்கெடுவேன்
செலவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௪)

கருவுற்றிருந்துன்கழலேநினைந்தேன்கருப்புவியில
தெருவிற்புகுநதேன்றிகைத்தடியேன்றன்றிகைப்பொழிவி
உருவிற்றிகழுமுமையாள்கணவாவிடிற்கெடுவேன்
திருவிறபொலிசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௫)

வெமமைநமன்றமாமிக்குவிரவிவிழுப்பதன்முன்
இமமையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவையீங்கிகழில
அமமையடியேற்கருளுதியென்பதிங்காரறிவார்
செமமைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுநதே. (௬)

விட்டாாபுரங்களொருநொடிவேவவோாவெங்கணையால
சுட்டாயென்பாசத்தொடாபறுத்தாண்டுகொள்துமபிபமடும
மட்டாாகுழலிமலைமகள்பூசைமகிழ்நதருளும
சிட்டாதிருச்சத்திமுற்றததுறையுஞ்சிவககொழுநதே. (௭)

இகழ்நதவன்வேள்வியழித்திட்டிமையோாபொறையிரபபத்
திகழ்நதிடவன்றேவிசயமுங்கொண்டதுநீலகண்டா
புகழ்நதவடியேன்றன்புன்மைகடீரப்புரிநதுநலகாய்
திகழ்நததிருச்சததிமுற்றத்துறையுஞ்சிவக்கொழுநதே. (௮)

தக்காவுமெய்திச்சமண்டவிாநதுன்றன்சரண்புகுநதேன்
எக்காதலெப்பயனுன்றிறமலலாலெனக்குளதே
மிக்காதிலையுள்விருபபாமிகவடமேருவென்னும
திக்காதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுநதே. (௯)

பொறித்தோரக்கன்பொருப்பெடுபபுற்றவன்பொன்முடிதோள்
இறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சிவக்கொழுந்தீசுவரர், தேவியார் - பெரியநாயகியம்மை.

---

## திருநல்லூர் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அட்டுமினில்பலியென்றென்றகங்கடைதோறுமவந்து
மட்டவிழுங்குழலார்வளைகொள்ளும்வகையென்கொலோ

கொட்டியபாணியெடுத்திட்டபாதமுங்கோளரவும்
நட்டநின்றாடியநாதர்நல்லூரிடங்கொண்டவரே. (௧)

பெண்ணிட்டம்பண்டையதன்றிவைபெய்பலிக்கென்றுழல்வார்
நண்ணிட்டுவந்துமனைபுகுந்தாருநல்லூரகத்தே
பண்ணிட்டபாடலராடலராய்ப்பற்றிநோக்கிநின்று
கண்ணிட்டுப்போயிற்றுக்காரணமுண்டுகறைக்கண்டரே. (௨)

படவேரரவல்குற்பாவைநல்லீர்பகலேயொருவர்
இடுவாரிடைப்பலிகொள்பவர்போலவந்திலபுகுந்து
நடவாரடிகணடம்பயின்றாடியகூத்தர்கொலோ
வடபாற்கயிலையுந்தென்பானல்லூருந்தம்வாழ்பதியே (௩)

செஞ்சுடர்ச்சோதிப்பவளத்திரடிகழ்முத்தனைய
நஞ்சணிகண்டனல்லூருறைநம்பனைநானொருகால்
துஞ்சிடைக்கண்டுகனவின்றலைத்தொழுதேற்கவன்றான்
நெஞ்சிடைநின்றகலான்பலகாலமுநின்றனனே. (௪)

வெண்மதிசூடிவிளங்கநின்றானைவிண்ணோர்கடொழ
நண்ணிலயத்தொடுபாடலறாதநல்லூரகத்தே
திண்ணிலையங்கொடுநின்றான்றிரிபுரமூன்றெரித்தான்
கண்ணுளுநெஞ்சத்தகத்துமுளகழற்சேவடியே. (௫)

தேற்றப்படத்திருநல்லூரகத்தேசிவனிருந்தான்
தோற்றப்படச்சென்றுகண்டுகொள்ளாதொண்டர்துன்மதியால்
ஆற்றிற்கெடுத்துக்குளத்தினிற்றேடியவாதனைப்போல்
காற்றிற்கெடுத்துலகெல்லாந்திரிதர்வர்காண்பதற்கே. (௬)

நாட்கொண்டதாமரைப்பூந்தடஞ்சூழ்ந்தநல்லூரகத்தே
கீட்கொண்டகோவணங்காவென்றுசொல்லிக்கிறிபடத்தான்
வாட்கொண்டநோக்கிமனைவியொடுமங்கோர்வாணிகனை
ஆட்கொண்டவார்த்தையுரைக்குமன்றோவிவ்வகலிடமே (௭)

அறைமல்குபைங்கழலார்ப்பநின்றானணியார்சடைமேல்
நறைமல்குகொன்றையந்தாருடையானுநல்லூரகத்தே
பறைமல்குபாடலனாடலனாகிப்பரிசழித்தான்
பிறைமல்குசெஞ்சடைதாழநின்றாடியபிஞ்ஞகனே. (௮)

மன்னியமாமறையோர்மகிழ்ந்தேத்தமருவியெங்கும்
துன்னியதொண்டர்களின்னிசைபாடித்தொழுதுநல்லூர்க்
கன்னியர்தாமுங்கனவிடையுன்னியகாதலரா
அன்னியராற்றவரங்கணனேயருணல்கென்பரே. (௯)

திருவமர்தாமரைசீர்வளர்செங்கழுநீர்கொண்ணெய்தல்
குருவமர்கோங்கங்குராமகிழ்செண்பகங்கொன்றைவன்னி

மருவமர்நீள்கொடிமாடமலிமறையோர்கணல்லூர
உருவமாபாகத்துமையவள்பாகனையுள்குதுமே. (கo)

செலலோகொடியன்சிவன்பெருங்கோயில்சிவபுரமும்
வலசேலன்புகவுமதிலசூழிலங்கையர்காவலனைக்
கலலாமுடியொடுதோளிறச்செற்றகழலடியான்
நலலூரிருநதபிரானலலனேநம்மையாள்பவனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அ. பதிகம் - கூ௨.

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அநதிவடடததிங்கடகண்ணியனையாறமாநதுவநதென்
புநதிவடடததிடைபபுக்குநின்றானையுமபொய்யென்பனோ
சிநதிவட்டசசடைக்கற்றையலமபச்சிறிதலாந்த
நநதிவட்டதொடுகொன்றைவளாவியநமபனையே. (க)

பாடகக்காலகழற்காலபருதிக்கதிருக்கவந்தி
நாடகக்கானங்கைமுன்செங்கணனத்தின்பின்னடநத
காடகக்காலகணங்கைதொழுங்காலெங்கணுய்நின்றகால
ஆடகக்காலரிமான்றோவலவனையாற்றனவே. (உ)

திருசசிறறமபலம்.

## திருவேகம்பம் - திருவிருத்தம்.

திருச்சிறறம்பலம்.

ஓதுவிததாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதுவித்தாய்கட்டநோய்பிணிதீரத்தாய்கலநதருளிப
போதுவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியமவளரால
மோதுவிபபாயுகபபாய்முனிவாய்கச்சியேகமபனே. (க)

எத்தைக்கொடேதைதயேழையமனொடிசைவிததெனைக்
கொத்தைக்குமுங்காவழிகாடடுவித்தென்னைக்கோகுசெய்தாய
முத்திற்றிரளுமபளிங்கினிற்சோதியுமொய்பவளத
தொத்தினையேய்க்குமபடியாய்பொழிற்கச்சியேகமபனே. (உ)

மெய்யமபுகோத்தவிசயனோடன்றொருவேடனுகிப
பொய்யமபெய்தாவமருளிச்செய்தாய்புரமூன்றெரியக்
கையம்பெய்தாய்நுன்கழலடிபோற்றாக்கயவாநெஞ்சில
குய்யமபெய்தாய்கொடிமாமதில்சூழ்கச்சியேகம்பனே. (௩)

குறிக்கொண்டிருந்துசெநதாமரையாயிரம்வைகல்வைகல
நெறிப்படவிணடைபுனைகின்றமாலிநிறையழிப்பான்
கறைக்கண்டநீயொருபூக்குறைவித்துக்கண்சூல்விப்பதே
பிறைத்துண்டவார்சடையாய்பெருங்காஞ்சியெம்பிஞ்ஞகனே. (௪)

உரைக்குங்கழிந்திங்குணாவரியானுள்குவார்வினையைக்
களைக்குமெனக்கைதொழுவதல்லாற்கதிரோர்களெல்லாம
விளைக்கொண்மலரவன்மாலெண்வசுக்களேகாதசர்கள்
இளைக்குமயிர்தர்க்கறியவொண்ணுனெங்களேகம்பனே. (ரு)

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூராய்திருவாலவாயாய்திருவாரூராய்
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகமபனே. (சா)

அரியயனிந்திரன்சந்திராதித்தரமரரெல்லாம்
உரியநின்கொற்றக்கடைத்தலையாருணங்காக்கிடநதா
புரிதருபுன்சடைப்போகாமுனிவாபுலமபுகின்றா
எரிதருசெஞ்சடையேகமபவென்னேதிருக்குறிபபே. (எ)

பாமபணைச்சேர்த்திப்படருஞ்சடைமுடிபபால்வண்ணனே
கூமபலைச்செய்தகரதலத்தன்பாகள்கூடிபபன்னாள்
சாமபலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்சரணென்
றேமபலிப்பார்கட்கிரங்குகண்டாய்கசசியேகமபனே. (அ)

ஏன்றுகொண்டாயென்னையெமபெருமானினியலலமென்னின்
சான்றுகண்டாயிவ்வுலகமெலலாந்தனியேனென்றென்னை
ஊன்றிநின்றாரைவர்க்கொற்றிவைத்தாய்பின்னையொற்றியெலலாம
சோன்றுகொண்டாய்கச்சியேகமபமேயசுடாவண்ணனே. (கூ)

உந்திநின்றாருன்றனோலக்கச்சூளைகள்வாய்தல்பற்றித்
துன்றிநின்றாதொல்லைவானவரீட்டம்பணியறிவான்
வந்துநின்றாரயனுந்திருமாலுமதிட்கச்சியாய்
இந்தநின்றோமினியெங்ஙனமோவநதிறைஞ்சுவதே. (க௦)

திருச்சிறறமபலம்.

---

### திருவின்னம்பர்-திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னும்மலைமகள்கையால்வருடினமாமறைகள்
சொன்னதுறைதொறுந்தூபபொருளாயினதூக்கமலத
தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கமுதருத்தி
இன்னல்களைவனவின்னம்பரான்றனிணையடியே. (க)

பைதற்பிணக்குழைக்காளிவெங்கோபம்பங்கப்படுப்பான்
செய்தற்கரியதிருநடஞ்செய்தனசீர்மறையோன்
உய்தற்பொருட்டுவெங்கூற்றையுதைத்தனவும்பர்க்கெலலாம
எய்தற்கரியனவின்னம்பரான்றனிணையடியே. (உ)

சுணங்குநின்றார்கொங்கையாளுமைசூடினதூமலரால
வணங்கிநின்றும்பர்கள்வாழ்த்தினமன்னுமறைகட்டம்மில

பிணங்கிநின்றின்னனவென்றறியாதனபேய்க்கணத்தோ
டிணங்கிநின்றாடினவின்னம்பரான்றனிணையடியே. (ங)

ஆறொன்றியசமயங்களினவ்வவர்க்கப்பொருள்கள்
வேறொன்றிலாதனவிண்ணோர்மதிப்பனமிக்குவமன்
மாறொன்றிலாதனமண்ணொடுவிண்ணகமாய்ந்திடினும்
ஈறொன்றிலாதனவின்னம்பரான்றனிணையடியே. (ச)

அரக்கர்தம்முப்புரமம்பொன்றினாலடலங்கியின்வாய்க்
கரக்கமுன்வைதிகத்தேர்மிசைநின்றனகட்டுருவம்
பரக்கவெங்கானிடைவேடுருவாயினபல்பதிதோ
றிரக்கநடந்தனவின்னம்பரான்றனிணையடியே. (ரு)

கீண்டுங்கிளர்ந்தும்பொற்கேழன்முன்றேடினகேடுபடா
ஆண்டும்பலபலவூழியுமாயினவாரணத்தின்
வேண்டும்பொருள்கள்விளங்கநின்றாடினமேவுசிலம்
பீண்டுங்கழலினவின்னம்பரான்றனிணையடியே (சா)

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
ஆற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
ஏற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே. (எ)

பயம்புன்மைசேர்தருபாவந்தவிர்ப்பனபார்ப்பதிதன்
குயம்பொன்மைமாமலராக்கக்குலாவினகூட்டவொண்ணாச்
சயம்புவென்றேதகுதாணுவென்றேசதுர்வேதங்கணின்
றியம்புங்கழலினவின்னம்பரான்றனிணையடியே. (அ)

அயனெடுமாலிந்திரன்சந்திராதித்தரமரரெல்லாம்
சயசயவென்றுமுப்போதும்பணிவனதண்கடல்சூழ்
வியனிலமுற்றுக்கும்விண்ணுக்குநாகர்வியனகர்க்கும்
இயம்பரமாவனவின்னம்பரான்றனிணையடியே. (கூ)

தருக்கியதக்கன்றன்வேள்விதகர்த்தனதாமரைப்போ
தருக்கியசெம்பொனுவமனிலாதனவொண்கயிலை
நெருக்கியவாளரக்கன்றலைபத்துநெரித்தவன்றன்
இருக்கியல்பாயினவின்னம்பரான்றனிணையடியே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொல்லோ
அலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலத்தானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (க)

மற்றிடமின்றிமனை துறந்தலலுணுவலலமணா
சொற்றிடமென்று துரிசுபட்டேனுக்குமுண்டுகொலலோ
விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்ப
புற்றிடங்கொண்டான்றன்றொண்டாக்குத்தொண்டாம்புண்ணியமே. ()

ஒருவடிவின்றிநின்றுண்குண்டாமுன்னமக்குண்டுகொலலோ
செருவடிவெஞ்சிலையாற்புரமுட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலத்தானன்செங்கண்
பொருவிடையானடித்தொண்டாக்குந்தொண்டாமபுண்ணியமே (ரு)

மாசினையேறியமேனியாவன்கண்ணாமொண்ணாவிட
டீசனையேநினைநதேசறுவேனுக்குமுண்டுகொலலோ
தேசனையாரூர்த்திருமூலததானனைசசிநதைசெய்து
பூசனைப்பூசுராதொண்டாக்குத்தொண்டாமபுண்ணியமே. (சா)

அருநதுமபொழுதுரையாடாவமணாதிறமகன்று
வருநதிநினைநதரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொலலோ
திருநதியமாமதிலாரூர்த்திருமூலததானனுக்குப்
பொருநதுநதவமுடைத்தொண்டாக்குததொண்டாமபுண்ணியமே. (ரு)

வீங்கியதோள்களுநதாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடாமுன்னேநமககுண்டுகொலலோ
தேங்கமழ்சோலைத்தென்னாரூர்ததிருமூலததானனசெய்ய
பூங்கழலானடித்தொண்டாக்குததொண்டாமபுண்ணியமே (சு)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட
டெண்ணிலபுகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டுகொலலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலத்தானனெங்கள்
புண்ணியன்றன்னடிததொண்டாக்குததொண்டாமபுண்ணியமே. (எ)

கரப்பர்கண்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்னுங்குண்டா
உரைப்பனகேளாதிங்குய்யப்போநதேனுக்குமுண்டுகொலலோ
திருப்பொலியாரூர்த்திருமூலத்தானன்றிருக்கயிலைப
பொருப்பன்விருப்பமாதொண்டாக்குத்தொண்டாமபுண்ணியமே (அ)

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலணாவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யபபோநதேனுக்குமுண்டுகொலலோ
ஐயனணிவயலாரூர்ததிருமூலத்தானனுக்குப
பொய்யன்பிலாவடிததொண்டாக்குத்தொண்டாமபுண்ணியமே. (கூ)

குற்றமுடையவமணாதிறமதுகையகன்றிட
டுற்றகருமஞ்செய்துய்யப்போநதேனுக்குமுண்டுகொல்லோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாடடுவித்த
பொற்கழலானடித்தொண்டாக்குத்தொண்டாம்புண்ணியமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேமபினைபபேசிவிடக்கினையோம்பிவினைபெருக்கித்
தூமபினைத தூரத தஙகோாசுற்றந துணையென்றிருத்திர்தொண்டீா
ஆம்பலமபூமபொய்கையாரூரமாநதானடிநிழற்கீழ்ச்
சாமபலைபபூசிச்சலமின்றித்தொண்டுபட்டுய்மமின்களே. (க)

ஆராய்நதடித்தொண்டராணிப்பொனனூரகத்தடக்கிப
பாரூாபரிபபததமபங்குனியுததிரமபாற்படுததான்
நாரூாநறுமலாநாதனடிததொண்டனமபிநநதி
நீராற்றிருவிளககிட்டமைநீணாடறியுமன்றே. (உ)

பூமபடிமககலமபொறபடிமக்கலமெனறிவறறுல
ஆமபடிமககலமாகிலுமாரூரினிதமாநதா
தாமபடிமக்கலமவேண்டுவரோற்றமிழ்மாலைகளால
நாமபடிமக்கலஞ்செய்துதொழுதுய்மடநெஞ்சமே. (ந)

துடிக்கின்றபாமபரையாாததுததுளஙகாமதியணிநது
முடித்தொண்டராகிமுனிவாபணிசெய்வதேயுமன்றிப
பொடிக்கொண்டுபூசிபபுகுநதொண்டாபாதமபொறுத்தபொற்பால
அடிததொண்டனநதியென்பானுளனாரூரமுதினுக்கே. (ச)

கருமபுபிடித்தவாகாயபபட்டாரங்கொாகோடலியால
இருமபுபிடித்தவரின்புறபபட்டாரிவாகணிறக
அருமபவிழ்தண்பொழிலசூழணியாரூரமாநதபெம்மான்
விருமபுமனததினையாதொன்றுநானுன்னை வெண்டுவனே. (ரு)

கொடிகொளவிதானஙகவரிபறைசங்கஙகைவிளக்கோ
டிடிவிலபெருஞ்செலவமெய்துவரொய்தியுமூனமிலலா
வடிகளுமாரூரகததினராயினுமநதவளப
பொடிகொண்டணிவாாககிருளொககுநதிபுறபபடிலே. (கூ-எ-அ-கூ)

சங்கொலிபபிததிடுமின்சிறுகாலைததட்டவழலிற்
குங்குலிய்ப்புகைக்கூட்டென்றுங்காட்டடியிருபதுதோள்
அங்குலமவைத்தவன்செங்குருதிபபுனலோடவஞ்ஞான்
றங்குலிவைத்தானடித்தாமரையென்னையாண்டனவே. (கம)

திருச்சிற்றம்பலம்.

## திருக்காரோணம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமாமலைமங்கைபங்காகங்கைவார்சடையாய்
கடிகமழ்சோலைசூலவுகடனாகைக்காரோணனே
பிடிபடவாரணம்பேணுந்துரகநிற்கப்பெரிய
இடிகுரல்வெள்ளெருதேறுமிதென்னைகொலெமமிறையே. (க)

கற்றாப்பயில்கடனாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
விற்றாங்கியகரமவேனெடுங்கண்ணிவியன்கரமே
நற்றாணெடுஞ்சிலைநாண்வலித்தகரநின்கரமே
செற்றார்புரஞ்செற்றசேவகமென்னைகொலசெப்புமினே. (௨)

தூமென்மலர்க்கணைகோத்துத்தீவேள்விதொழிற்படுத்த
காமன்பொடிபடக்காய்ந்தகடனாகைக்காரோணநின்
நாமம்பரவிநமச்சிவாயவென்னுமஞ்செழுத்தும்
சாமன்றுரைக்கத்தருதிகண்டாயெங்கள்சங்கரனே (௩)

பழிவழியோடியபாவிப்பறிதலைக்குண்டர்தங்கள்
மொழிவழியோடிமுடிவேன்முடியாமைக்காத்துகொண்டாய்
கழிவழியோதமுலவுகடனாகைக்காரோணவென்
வழிவழியாளாகுமவண்ணமருளெங்கள்வானவனே. (௪)

செந்துவர்வாய்க்கருங்கண்ணிணைவெண்ணகைத்தேமொழியார்
வந்துவலஞ்செய்துமாநடமாடமலிந்தசெல்வக்
கந்தமலிபொழில்சூழ்கடனாகைக்காரோணமென்று
சிந்தைசெய்வாரைப்பிரியாதிருக்குந்திருமங்கையே. (௫)

பனைபுரைகைமதயானையுரித்தபரஞ்சுடரே
கனைகடல்சூழ்தருநாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
மனைதுறந்தல்லுணாவல்லமண்குண்டர்மயக்கைநீக்கி
எனைநினைந்தாட்கொண்டாய்க்கென்னினியான்செயுமிசைவுகளே (௬)

சீர்மலிசெல்வம்பெரிதுடையசெம்பொன்மாமலையே
கார்மலிசோலைசூலவுகடனாகைக்காரோணனே
வார்மலிமென்முலையார்பலிவந்திடச்சென்றிரந்து
ஊர்மலிபிச்சைகொண்டுண்பதுமாதிமையோவுரையே (௭)

வங்கமலிகடனாகைக்காரோணத்தெம்வானவனே
எங்கள்பெருமானோர்விண்ணப்பமுண்டதுகேட்டருளீர்
கங்கைசடையுட்கரந்தாய்க்களத்தைப்பெள்ளவுமை
நங்கையறியிற்பொல்லாதுகண்டாயெங்கணாயகனே. (௮ ௯)

கருந்தடங்கண்ணியுந்தானுங்கடனாகைக்காரோணத்தான்
இருந்ததிருமலையென்றிறைஞ்சாதன்றெடுக்கலுற்றான்
பெருந்தலைபத்துமிருபதுதோளுமபிதிர்ந்தலற
இருந்தருளிச்செய்ததேமற்றுச்செய்திலனெம்மிறையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகை - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாசிலொள்வாள்போன்மறியுமணிநீர்த்திரைத்தொகுதி
ஊசலையாடியங்கொண்சிறையன்னமுறங்கலுற்றார்

பாசறைநீலமபருகியவண்டுபண்பாடலகண்டு
வீசுங்கெடிலவ்டகரைத்தேயெந்தைவீரட்டமே. (க)

பைங்காற்றவளைபறைகொட்டப்பாசிலைநீரபபடுகா
ஐங்காற்குவளைமேலாவியுயிரபபவருகுலவும
செங்காற்குருகிவைசேருஞ்செறிகெடிலக்கரைத்தே
வெஙகாறகுருசிலைவீரனருள்வைததவீரட்டமே. (உ)

அமமலாக்கண்ணியரஞ்சனஞ்செநதுவா வாயிளையாா
வெமமுலைசசாநதமவிலைபெறுமாலையெடுத்தவாகள்
தமமருங்கிறகிரஙகாா தடநதோண்மெல்லியக்குடைவாா
விமமுபுனறகெடிலககரைததேயெநதைவீரட்டமே (ங)

மீனுடைததண்புனலவீரட்டரோநுமமைவேண்டுகின்ற
தியானுடைசசிலகுறையொன்றுளதானறுநதண்ணெருக்கின
தேனுடைககொன்றைசசடையுடைக்கங்கைத்திரைதவழும
கூனுடைததிஙகட்குழவியெபபோதுங்குறிக்கொண்மினே. (ச)

ஆரட்டதேனுமிரநதுண்டகமகவன்றிரிநது
வேரட்டகிறபிததிடுகின்றதாலவிரிநீரபபரவைச்
சூரட்டவேலவன்றாதையைச்சூழ்வயலாரதிகை
வீரட்டததானைவிருமபாவருமபாவவேதனையே. (ரு)

படாபொறசடையுமபகுவாயரவுமபனிமதியும
சுடலைபபொடியுமெலலாமுளவேயவாதூயதெண்ணீாக்
கெடிலக்கரைத்திருவீரட்டராவாகெட்டேனடைநதாா
நடலைககுநற்றுணையாகுஙகண்டீரவாநாமங்களே. (சா)

காளங்கடநதோா கண்டதராகிக்கண்ணாா கெடில
நாளங்கடிக்கோாககரமுமாகிறகுநன்கிசைநத
தாளங்கள்கொண்டுங்குழலகொண்டுமியாழ்கொண்டுநதாமஙஙனே
வேடஙகள்கொண்டுவிசுமபுசெலவாரவாவீரட்டரே. (எ-அ-கூ-கo)

திருசசிறறமபலம்.

---

## திருப்புகலூர் - திருவிருத்தம்.

திருச்சிறறம்பலம்.

தன்னைச்சரணென்றுதாளடைநதேன்றன்னடியடையப
புன்னைபபொழிலபுகலூரண்ணல்செய்வனகேண்மின்களோ
என்னைபபிறப்பறுத்தென்வினைகட்டறுத்தேழ்நரகத்
தென்னைக்கிடக்கலொட்டான்சிவலோகத்திருத்திடுமே. (க)

பொன்னைவகுத்தன்னமேனியனேபுணர்மென்முலையாள்
தன்னைவகுத்தன்னபாகத்தனேதமியேற்கிரங்காய்
புன்னைமலாத்தலைவண்டுறங்கும்புகலூரரசே
என்னைவகுத்திலையேலிடுமபைக்கிடமயாதுசொல்லே. (உ-ங)

பொன்னளவாசடைக்கொன்றையினாய்புகலூரரசே
மன்னுளதேவர்கடேடுமருந்தேவலஞ்சுழியாய்
என்னளவேயுனக்காட்பட்டிடைக்கலத்தேகிடப்பார்
உன்னளவேயெனக்கொன்றுமிரங்காதவுத்தமனே. (௪-௫-௬-௭-௮-௯)

ஒண்பபிரானுமொளிர்மாமலர்மிசையுத்தமனும்
காணப்பராவியுங்காண்கின்றிலாகரநாலுந்துடைத்
தோணப்பிரானைவலிதொலைத்தோன்றொலைநீர்ப்புகலூர்க்
கோணப்பிரானைக்குறுகக்குறுகாகொடுவினையே (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆ பதிகம் ௧௦௬

---

## திருக்கழிப்பாலை - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

நெய்தற்குருகுதன்பிள்ளையென்றெண்ணிநெருங்கிச்சென்று
கைதைமடலபுல்குதென்கழிப்பாலையதனுறைவாய்
பைதற்பிறையொடுபாம்புடன்வைத்தபரிசறியோம்
எய்தப்பெறின்இரங்காதுகண்டாயெம்மிறையவனே (௧)

பருமாமணியும்பவளமுத்தும்பரந்துந்திவரை
பொருமாலகரைமேற்றிரைகொணர்ந்தெற்றப்பெர்விந்திலங்கும்
கருமாமிடறுடைக்கண்டனெம்மான்கழிப்பாலையெந்தை
பெருமானவனென்னையாளுடையானிப்பெருநிலத்தே. (௨)

நாட்பட்டிருந்தின்பமெய்தலுற்றிங்குநமனுறமரால
கோட்பட்டொழிவதன்முந்துறவேகுளிர்ர்தடத்துத
தாட்பட்டதாமரைப்பொய்கைபந்தண்கழிப்பாலையண்ணற்
காட்பட்டொழிந்தவன்றேவல்லவமாயிவ்வகலிடத்தே (௩)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கடவூர் - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

மருட்டுயர்தீரவன்றர்ச்சித்தமாணிமார்க்கண்டேயற்காய்
இருட்டியமேனிவளைவாளெயிற்றெரிபோலுங்குஞ்சிச்
சுருட்டியநாவில்வெங்கூற்றம்பதைப்பவுதைத்தருங்கனே
உருட்டியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௧)

பதத்தெழுமந்திரமஞ்செழுத்தோதிப்பரிவினொடு
மிதத்தெழுமாணிதனின்னுயிருண்ணவெகுண்டடர்த்த
கதத்தெழுகாலனைக்கண்குருதிப்புனலாறொழுக
உதைத்தெழுசேவடியான்கடவூருறையுத்தமனே. (௨)

காப்புறுசிந்தையர்காண்டற்கரியவன்காமனையும
நெருப்புமிழ்கண்ணினனீள்புனற்கங்கையும்பொங்கரவும

பரப்பியசெஞ்சடைப்பாலவண்ணன்காலனைப்பண்டொருகால்
உரப்பியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௩)

மறித்திகழ்கையினன்வானவர்கோனைமனமகிழ்ந்து
குறித்தெழுமாணிதனுருயிர்கொள்வான்கொதித்தசிந்தை
கறுத்தெழுமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
உறுக்கியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௪)

குழைத்திகழ்காதினன்வானவர்கோனைக்குளிர்ந்தெழுந்த
பழக்கமொடார்ச்சித்தமாணிதனுருயிர்கொள்ளவந்த
அழற்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
உழக்கியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௫)

பாலனுக்காயன்றுபாற்கடலீந்துபணைத்தெழுந்த
ஆனிழற்கீழிருந்தாரணமோதியருமுனிக்காச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே. (௬)

படர்சடைக்கொன்றையும்பன்னகமாலைபணிகயிறு
உடைதலைக்கோத்துழல்மேனியனுண்பலிக்கென்றுழல்வோன்
சுடர்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்துண்டமதா
உடற்றியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௭)

வெண்டலைமாலையுங்கங்கைக்கரோடிவிரிசடைமேல்
பெண்டணிநாயகன்பேயுகந்தாடும்பெருந்தகையான்
கண்டனிநெற்றியன்காலனைக்காய்ந்துகடலில்விடம்
உண்டருள்செய்தபிரான்கடவூருறையுத்தமனே. (௮)

கேழலதாகிக்கிளறியகேசவன்காண்பரிதாய்
வாழிநன்மாமலர்க்கண்ணிடந்திட்டவம்மாலவற்கன்
றாழியுமீந்தவடுதிறற்காலனையன்றடர்த்து
ஊழியுமாயபிரான்கடவூருறையுத்தமனே. (௯)

தேன்றிகழ்கொன்றையுங்கூவிளமாலைதிருமுடிமேல்
ஆன்றிகழைந்துகந்தாடும்பிரான்மலையார்த்தெடுத்த
கூன்றிகழ்வாளரக்கன்முடிபத்துங்குலைந்துவிழ
ஊன்றியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமாற்பேறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்குயிர்பெறக்கூற்றையுதைத்தனமாவலியால்
காணிக்கிரந்தவன்காண்டற்கரியனகண்டதொண்டர்
பேணிக்கிடந்துபரவப்படுவனபேர்த்துமஃதே
மாணிக்கமாவனமாற்பேறுடையான்மலரடிக்கே. (௧)

கருட்த்தனிபபாகன் காண்டற்கரியனகாதல்செய்யின்
குருடாக்குமுன்னேகுடிகொண்டிருபபனகோலமலரும
செருடக்கடிமலாச்செலவிதன்செங்கமலக்கரத்தால
வருடச்சிவப்பனமாற்பேறுடையான்மலரடியே. (உ)

திருச்சிற்றம்பலம்

---

திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணபபமபோற்றிசெய்யும
என்னாவிகாபபதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே (க-உ-ந-ச)

ஆவாசிறுதொண்டனென்னினைந்தாயென்றருமபிணிநோய
காவாதொழியிற்கலக்குமுன்மேற்பழிகாதலசெய்வார
தேவாதிருவடிநீறென்னைப்பூசுசெந்தாமரையின்
பூவார்கடந்தையுட்டூங்கானைமாடத்தெமபுண்ணியனே. (ரு-சு-எ-அ-கூ)

கடவுந்திகிரிகடவாதொழியக்கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன்றுவைத்தாய்பனிமால்வரைபோல
இடபமபொறித்தென்னையேன்றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

பசுபதி - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சாமபலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்பரவி
ஏமபலிபபார்கட்கிரங்குகண்டாயிருங்கங்கையென்னும
காமபலைக்குமபணைத்தோளிகதிர்ப்பூண்வனமுலைமேல்
பாமபலைக்குஞ்சடையாயெமமையாளுமபசுபதியே. (க)

உடமபைத்தொலைவித்துன்பாதந்தலைவைத்தவுத்தமர்கள்
இடமபைப்படாமலிரங்குகண்டாயிருளோடச்செந்தீ
அடுமபொத்தனையவழன்மழுவாவழலேயுமிழும
படமபொத்தரவரையாயெமமையாளும்பசுபதியே. (உ)

தாரித்தனந்தவிராவடியார்தடுமாற்றமென்னும
மூரித்திரைப்பவ்வநீக்குகண்டாய்முன்னைநாளொருகால
வேரித்தண்பூஞ்சுடரைங்கணைவேள்வெந்துவீழச்செந்தீ
பாரித்தகண்ணுடையாயெம்மையாளுமபசுபதியே. (ந)

ஒருவரைத்தஞ்சமென்றெண்ணாதுன்பாதமிறைஞ்சுகின்றார்
அருவினைச்சுற்றமகல்விகண்டாயண்டமேயணவும்

பெருவரைக்குனறமபிளிறபபிளநதுவேய்ததோளியஞச
பருவரைததோலுரித்தாயெமமையாளுமபசுபதியே. (ச)

இடுக்கொன்றுமின்றியெஞ்சாமையுன்பாதமிறைஞசுகின்றா
கடாக்கின்றநோயைவிலக்குகண்டாயண்டமெண்டிசையும
சுடாத்திஙகள்சூடிச்சுழலகஙகையோடுஞசுருமபுதுனறி
படாக்கொண்டசெஞசடையாயெமமையாளுமபசுபதியே (ரு)

அடலைககடலகழிவானின்னடியிணையேயடைநதாா
நடலைபபடாமைவிலக்குகண்டாய்நறுஙகொனறைதிஙகள
சுடலைபபொடிசசுண்ணமாசுணஞ்சூளாமணிகிடநது
படரசசுடாமகுடாவெமமையாளுமபசுபதியே. (சா)

துறவிதொழிலேபுரிநதுன்சுருமபடியேதொழுவாா
பிறவிதொழிலதுமாறறுகணடாய்மதின்மூன்றுடைய
அறவைதொழிலபுரிநதநரததேசெலலுமநதிரததோப
பறவைபபுரமெரிததாயெமமையாளுமபசுபதியே. (எ-அ-கூ)

சிததத்துருகிச்சிவனெமபிரானென்றுசிநதையுள்ளே
பிததுபபெருகபபிதற்றுகின்றாாபிணிதீாத்தருளாய்
மதததரக்கனிருபதுதோளுமுடியுமெலலாம
பததுற்றுறநெரிததாயெமமையாளுமபசுபதியே. (கo)

திருசசிறறம்பலம.

---

### சரக்கறைத் - திருவிருத்தம்.

திருசசிறறமபலம.

விடையுமவிடைபபெருமபாகாவென்விண்ணபபமவெமமழுவான
படையுமபடையாய்நிரைததபலபூதமுமபாய்புலித்தோல
உடையுமுடைதலைமாலையுமாலைபபிறையொதுஙகும
சடையுமிருககுஞசரககறையோவெனறனிநெஞசமே (க)

விஞசதநடவரைவெறபாவென்விண்ணபபமமேலிலஙகு
சஙகக்கலனுஞசரிகோவணமுநதமருகமும
அநதிபபிறையுமனலவாயரவுமவிரவியெலலாம
சநதிததிருக்குஞ்சரக்கறையோவெனறனிநெஞசமே. (உ)

வீநதாாதலைகலனேநதியென்விண்ணபபமேலிலஙகு
சாநதாயவெநததவளவெண்ணீறுநதகுணிசசமும
பூநதாமரைமேனிப்புள்ளியுழைமானதள்புலித்தோல
தாநதாமிருககுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ங)

வெஞசமாவேழத்துரியாயென்விண்ணபபமேலிலங்கு
வஞ்சமாவநதவருபுனற்கஙகையுமவானமதியும
நஞ்சமாநாகநகுசிரமாலைநகுவெண்டலை
தஞ்சமாவாழுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே (ச)

வேலைக்கடனஞ்சமுண்டாயென்விண்ணப்பமேலிலங்கு
காலற்கடந்தானிடங்கயிலாயமுங்காமாகொன்றை
மாலைப்பிறையுமணிவாயரவுமவிரவியெலலாம
சாலக்கிடக்குஞசரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ரு)

வீழிட்டகொன்றையந்தாராயென்விண்ணப்பமேலிலங்கு
சூழிட்டிருக்குநற்சூளாமணியுஞ்சுடலைநீறும்
ஏழிட்டிருக்குநல்லக்குமரவுமென்பாமையொடும்
தாழிட்டிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே (சு)

விண்டார்புரமூன்றுமெய்தாயென்விண்ணப்பமேலிலங்கு
தொண்டாடியதொண்டடிப்பொடிநீறுந்தொழுதுபாதம்
கண்டார்கள்கண்டிருக்குங்கயிலாயமுங்காமர்கொன்றைத்
தண்டாரிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (எ)

விடுபட்டியேறுகந்தேறியெனவிண்ணப்பமேலிலங்கு
கொடுகொட்டிகொக்கரைதக்கைகுழல்தாளம்வீணைமொந்தை
வடுவிட்டகொன்றையும்வன்னியுமத்தமுமவாளரவும்
தடுகுட்டமாடுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (அ)

வெண்டிரைக்கங்கைவிகிர்தாவென்விண்ணப்பமேலிலங்கு
கண்டிகைபூண்டுகடிசூத்திரமேற்கபாலவடம்
குண்டிகைகொக்கரைகொன்றைபிறைகுறட்பூதப்படை
தண்டிவைத்திட்டசரக்கறையோவென்றனிநெஞ்சமே (கூ)

வேதித்தவெம்மழுவாளியெனவிண்ணப்பமேலிலங்கு
சோதித்திருக்குஞ்சூளாமணியுஞ்சுடலைநீறும்
பாதிப்பிறையும்படுதலைத்துண்டமும்பாய்புலித்தோல்
சாதித்திருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (கo)

விவந்தாடியகழலாயென்விண்ணப்பமேலிலங்கு
தவந்தானெடுக்கத்தலைபத்திறுத்தகைதாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடிநீறுஞ்சிரமாலைசூடிநின்று
தவந்தானிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்

வெள்ளிக்குழைத்துணிபோலுங்கபாலத்தன்வீழ்ந்திலங்கு
வெள்ளிப்புரியன்னவெண்புரிநூலன்விரிசடைமேல்
வெள்ளித்தகட்டன்னவெண்பிறைசூடிவெள்ளென்பணிந்து
வெள்ளிப்பொடிப்பவளப்புறம்பூசியவேதியனே. (க)

உடலைத்துறந்துலகேழுங்கடந்துலவாததுன்பக்
கடலைக்கடந்துய்யப்போயிடலாகுங்கனகவண்ணப்
படலைச்சடைப்பரவைத்திரைக்கங்கைப்பனிப்பிறைவெண்
சுடலைப்பொடிக்கடவுட்கடிமைக்கட்டுணிநெஞ்சமே. (உ)

முன்னையுரைத்தாலுவமனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னையுமத்தனுமாவாயழலவண்ணநீயலையோ
உன்னைநினைந்தேகழியுமென்னாவிகழிந்ததற்பின்
என்னைமறக்கப்பெறாயெம்பிரானுன்னைவேண்டியதே. (ங)

நின்னையெப்போதுநினையலொட்டாய்நீநினையப்புகின்
பின்னையப்போதேமறப்பித்துப்போத்தொன்றுநாடுவித்தி

உன்னையெப்போதுமறந்திட்டுனக்கினிதாவிருக்கும்
என்னையொப்பாருளரோசொல்லுவாழியிறையவனே. (ச)

முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன்றத்
தெழிற்பெருஞ்சோதியையெங்கள்பிரானையிகழ்ந்திகண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத்தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தன்றொண்டரையே. (ரு)

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. (சு)

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போய்
இருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமும்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே. (எ)

வானந்துளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையும்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்றண்கடலும்
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலைநஞ்சுண்
டூனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே. (அ)

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மான்
அவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தால்
இவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே. (கூ)

என்னையொப்பாருன்னையெங்ஙனங்காண்பரியவியுன்னை
நின்னையொப்பாநின்னைக்காணும்படித்தன்றுநின்பெருமை
பொன்னையொப்பாரித்தழலைவளாவிச்செம்மானஞ்செற்று
மின்னையொப்பாரிமிளிருஞ்சடைக்கறைவேதியனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

தனித் - திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

பவளத்தடவரைபோலுந்திண்டோள்களத்தோள்மிசையே
பவளக்குழைதழைத்தாலொக்கும்பல்சடையச்சடைமேல்
பவளக்கொழுந்தன்னபைம்முகநாகமந்நாகத்தொடும்
பவளக்கண்வாலமதியெந்தைசூடும்பனிமலரே. (க)

முருகார்நறுமலரிண்டைதழுவிவண்டேமுரலும்
பெருகாரடைசடைக்கற்றையினுய்பிணிமேய்ந்திருந்த
இருகாற்குரம்பையிதுநானுடையதிதுபிரிந்தால்
தருவாயெனக்குன்றிருவடிக்கீழோர்தலைமறைவே. (உ)

மூவாவுருவத்துமுக்கண்முதல்வமீக்கூரிடும்பை
காவாயெனக்குடைதாங்குமணியைக்கையாலமரா
நாவாயசைத்தவொலியொலிமாறியதில்லையப்பால
தீயாயெரிந்துபொடியாக்கழிந்ததிரிபுரமே. (ங)

பநதித தபாவங்களமமையிறசெய்தனவிமமைவநது
சநதித்தபின்னை சசமழ்ப்பதென்னேவநதமராமுன்னுள
முநதிசசெழுமலரிட்டுமுடிதாழ்த்தடிவணங்கும
நநதிக்குமுநதுறவாடசெய்கிலாவிடடநன்னெஞசமே. (ச)

அநதிவடடத்திளஙகண்ணியனுறமாசெஞசடையான்
புநதிவடடததிடைபபுககுநின்றனையுமபொய்யென்பனே
சநதிவடடச்சடைக்கறறைபலமபசசிறிதலாநத
நநதிவடடததொடுகொன்றைவளாவியநமபனையே (ரு)

உன்மததகமலாசூடியுலகநதொழசசுடலைப
பன்மததகஙகொண்டுபலகடைதோறுமபலிதிரிவான்
என்மததகததேயிரவுமபகலுமபிறிவரியான்
தன்மததகததோரிளமபிறைசூடியசங்கரனே. (சு)

அளைபபாலுடுபபனகோவணச்சின்னங்களையமுணல
வளைபபாவையைக்கொண்டதெக்குடி வாழ்க்கைக்குவானிளைக்கும
இளைபபாபடுதலையேநதுகையாமறைதேடுமெநதாய்
உளைபபாருளைபபனவேசெய்தியாலெங்களுததமனே (எ)

துறக்கபபடாதவுடலைத்துறநதுவெநதூதுவரோ
டிறபபனிறநதாலிருவிசுமபேறுவனேறிவநது
பிறபபன்பிறநதாறபிறையணிவாாசடைபபினுகன்போ
மறபப்ன்கொலோவென்றென்னுளளஙகிடநதுமறுகிடுமே (அ)

வேரிவளாயவிளைமலாக்கொன்றைபுனைநதனகண்
சேரிவளாயவெனசிநதைபுகுநதானறிருமுடிமேல
வாரிவளாயவருபுனறகங்கைசசடைமறிவாய்
ஏரிவளாவிக்கிடநததுபோலுமிளமபிறையே (கூ)

கன்னெடுஙகாலமவெதுமபிககருஙகடனீாசருஙகிப
பன்னெடுஙகாலமமழைதான்மறக்கினுமபஞசமுண்டென
றென்னெடுஞ்சூளறுமஞசனெஞ்சேயிமையாதமுக்கட
பொன்னெடுங்குன்றமொன்றுண்டுகண்டீரிபபுகலிடததே (க0)

மேலுமறிநதிலனான்முகன்மேறசென்றுகீழிடநதும
மாலுமறிநதிலன்மாலுற்றதேவழிபாடுசெய்யும
பாலன்மிசைச்சென்றுபாசமவிசிறிமறிநதசிநதைக்
காலனறிநதானறிதறகரியான்கழலடியே. (கக)

திருசசிறறமபலம்.

ஆ பதிகம் - கக௪.

---

# திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த

## முதற்றிருமுறை - முற்றிற்று.

---

சிவமயம்.

# இரண்டாந்திருமுறையின்

## பதிக அட்டவணை.

| பதிகப்பெயர். | பதிகம். |
|---|---|
| **திருக்குறுந்தொகை** | |
| கோயில் | க |
| கோயில் | உ |
| திருஅரத்துறை | ௩ |
| திருஅண்ணாமலை | ச |
| திருஅண்ணாமலை | சு |
| திருஆரூர் | எ |
| திருஆரூர் | அ |
| திருஅன்னியூர் | கூ |
| திருமறைக்காடு | க0 |
| திருமறைக்காடு | கஉ |
| திருமீயச்சூர் | க௩ |
| திருவீழிமிழலை | கச |
| திருவீழிமிழலை | கரு |
| திருவிடைமருது | கசு |
| திருவிடைமருது | கஅ |
| திருப்பேரெயில் | கஅ |
| திருவெண்ணி | உ0 |
| திருக்கடம்பந்துறை | உக |
| திருக்கடம்பூர் | உஉ |
| திருக்கடம்பூர்க்கரக்கோயில் | உ௩ |
| திருஇன்னம்பர் | உச |
| திருக்குடமூக்கு | உசு |
| திருகின்றியூர் | உஎ |
| திருவொற்றியூர் | உஅ |
| திருப்பாசூர் | உகூ |
| திருவன்னியூர் | ௩0 |
| திருஐயாறு | ௩க |
| திருஐயாறு | ௩௩ |
| திருவாவடுதுறை | ௩ச |
| திருப்பராய்த்துறை | ௩ரு |
| திருவானைக்கா | ௩சு |
| திருப்பூந்துருத்தி | ௩எ |
| திருச்சோற்றுத்துறை | ௩கூ |
| திருநெய்த்தானம் | ச0 |
| திருப்பழனம் | சக |
| திருச்செம்பொன்பள்ளி | சஉ |
| திருக்கடவூர் | ச௩ |
| திருக்கடவூர்மயானம் | சரு |
| திருமயிலாடுதுறை | சசு |
| திருக்கழிப்பாலை | சஎ |
| திருப்பைஞ்ஞீலி | சஅ |
| திருவேட்களம் | சகூ |
| திருநல்லம் | ருக |
| திருஆமாத்தூர் | ருஉ |
| திருத்தோணிபுரம் | ரு௩ |
| திருப்புகலூர் | ருச |
| திருவேகம்பம் | ருரு |
| திருவேகம்பம் | ருஎ |
| திருவெண்காடு | ருஅ |
| திருவாய்மூர் | ருகூ |
| திருப்பாலைத்துறை | சு0 |
| திருநாகேச்சரம் | சுஉ |
| திருஅதிகைவீரட்டம் | சு௩ |
| திருஅதிகைவீரட்டம் | சுச |
| திருநாரையூர் | சுரு |
| திருக்கோளிலி | சுஎ |
| திருக்கோளிலி | சுஅ |
| திருஆறைவடதளி | சுகூ |
| திருமாற்பேறு | எ0 |
| திருமாற்பேறு | எக |
| திருஅரிசிற்கரைப்புத்தூர் | எஉ |
| கடுவாய்க்கரைத்திருப்புத்தூர் | எச |
| திருக்குரங்காடுதுறை | எரு |
| திருக்கோழம்பம் | எசு |
| திருப்பூவணூர் | எஎ |
| திருவலஞ்சுழி | எகூ |
| திருவாஞ்சியம் | அ0 |
| திருநள்ளாறு | அக |
| திருக்கருவிலி | அஉ |
| திருக்கொண்டீச்சுவரம் | அ௩ |
| திருவிசையமங்கை | அச |
| திருநீலக்குடி | அசு |
| திருமங்கலக்குடி | அஎ |

| பதிகப்பெயர். | பதிகம். | பதிகப்பெயர். | பதிகம். |
|---|---|---|---|
| திருஎறும்பியூர் | ௮௮ | திருமருகல் | ௧0௩ |
| திருக்குரக்குக்கா | ௮௯ | தனித்திருக்குறுந்தொகை | ௧0௪ |
| திருக்கானூர் | ௯0 | தனித்திருக்குறுந்தொகை | ௧0௫ |
| திருச்சேறை | ௯௧ | தனித்திருக்குறுந்தொகை | ௧0௭ |
| திருக்கோடிகா | ௯௩ | காலபாராயணம் | ௧0௮ |
| திருப்புள்ளிருக்குவேளூர் | ௯௩ | மறக்கிற்பனேயென்னும் | ௧0௯ |
| திருஅன்பிலாலந்துறை | ௯௫ | தொழப்பாலதேயென்னும் | ௧௧0 |
| திருப்பாண்டிக்கொடுமுடி | ௯௬ | இலிங்கபுராணம் | ௧௧௧ |
| திருவான்மியூர் | ௯௬ | மனத்தொகை | ௧௧௩ |
| திருக்காரோணம் | ௯௮ | சித்தத்தொகை | ௧௧௪ |
| திருக்காட்டுப்பள்ளி | ௯௯ | ஊர் | ௧௧௭ |
| திருச்சிராப்பள்ளி | ௧00 | பாவநாசம் | ௧௧௮ |
| திருவாட்போக்கி | ௧0௧ | ஆதிபுராணம் | ௧௧௯ |
| திருமணஞ்சேரி | ௧0௨ | | |

உ

சிவமயம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## இரண்டாந்திருமுறை.

B. SUBRAHMANIYA SASTRI, TAMIL PANDIT.

### கோயில் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னமபாலிக்குந்திலலைச்சிறறமபலம
பொன்னமபாலிக்குமேலுமிப்பூமிசை
என்னனபாலிக்குமாறுகண்டின்புற
இன்னமபாலிக்குமோவிப்பிறவியே. (க)

அருமபறறபபடடவாயமலாகொண்டுநீா
சுருமபறறபபடடதூவிததொழுமினே
கருமபறறச்சிலைக்காமனைக்காய்ந்தவன
பெருமபற்றப்புலியூரெமபிரானையே. (உ)

அருச்சுறறவினையாலடாப்புண்டுநீா
எரிச்சுறறக்கிடந்தாரொனறயலவா
சிரிச்சுறறப்பலபேசப்படாமுனனம
திருச்சிறறமபலஞ்சென்றடைந்துய்ம்மினே. (ங)

அலலலென்செயுமருவினையென்செயும
தொலலைவலவினைதொண்டாதொனனசெயும
திலலைமாநகர்ச்சிறறமபலவனுக்
கெலலையிலலதோரடிமைபூண்டேனுக்கே. (ச)

ஊனிலாவியுயிர்க்குமபொழுதெலாம
நானிலாவியிருப்பனென்னாதனைத்
தேனிலாவியசிற்றமபலவனா
வானிலாவியிருக்கவும்வைப்பரோ. (ரு)

சிட்டாவானவர்சென்றுவரங்கொளுஞ்
சிட்டாவாழ்திலலைச்சிற்றமபலத்துறை
சிட்டன்சேவடிகைதொழச்செலலுமச்
சிட்டாபாலணுகான்செறுகாலனே. (சா)

ஒருத்தனாருலகங்கட்கொருசுடர்
திருத்தனார்தில்லைச்சிற்றம்பலவனார்
விருத்தனாரிளையார்விடமுண்டவெம்
அருத்தனாரடியாரையறிவரோ. (எ)

விண்ணிறைந்ததோர்வெவ்வழலினுரு
எண்ணிறைந்தவிருவர்க்கறிவொணாக்
கண்ணிறைந்தகடிபொழிலம்பலத்
துண்ணிறைந்துநின்றாடுமொருவனே. (அ)

வில்லைவட்டப்படவாங்கியவுணர்தம்
வல்லைவட்டமதின்மூன்றுடன்மாய்த்தவன்
தில்லைவட்டத்திசைகைதொழுவார்வினை
ஒல்லைவட்டங்கடந்தோடுதலுண்மையே. (கூ)

நாடிநாரணனான்முகனென்றிவர்
தேடியுந்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே (க0)

மதுரவாய்மொழிமங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமலை
அதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றடைந்துய்ம்மினே (கக)

திருச்சிற்றம்பலம்

---

## கோயில்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவன்
நினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவன்
அனைத்துவேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ. (க)

தீர்த்தனைச்சிவனைச்சிவலோகனை
மூர்த்தியைமுதலாயவொருவனை
பார்த்தனுக்கருள்செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன்மறந்துய்வனோ. (உ)

கட்டும்பாம்புங்கபாலங்கைமான்மறி
இட்டமாயிடுகாட்டெரியாடுவான்
சிட்டர்வாழ்தில்லையம்பலக்கூத்தனை
எட்டனைப்பொழுதும்மறந்துய்வனோ. (ங)

மாணிபால்கறந்தாட்டிவழிபட
நீணுலகெலாமாளக்கொடுத்தவன்

ஆணியைச்செம்பொன்னம்பலத்துண்ணின்ற
தாணுவைத்தமியேன்மறந்துய்வனோ. (௪)

பித்தனைப்பெருங்காடரங்காவுடை
முத்தனைமுளைவெண்மதிசூடியைச்
சித்தனைச்செம்பொன்னம்பலத்துண்ணின்ற
அத்தனையடியேன்மறந்துய்வனோ (௫)

நீதியைநிறைவைமறைநான்குடன்
ஓதியையொருவர்க்குமறிவொண்ணாச்
சோதியைச்சுடர்ச்செம்பொனினம்பலத்
தாதியையடியேன்மறந்துய்வனோ. (௬)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணினன்
பைகொள்பாம்பரையார்த்தபரமனார்
செய்யமாதுறைசிற்றம்பலத்தெங்கள்
ஐயனையடியேன்மறந்துய்வனோ (௭)

முழுதும்வானுலகத்துளதேவர்கள்
தொழுதுபோற்றியுந்தூயசெம்பொன்னினால்
எழுதிமேய்ந்தசிற்றம்பலக்கூத்தனை
இழுதையேன்மறந்தெங்ஙனமுய்வனோ (௮)

காருலாமலர்க்கொன்றையந்தாரனை
வாருலாமுலைமங்கைமணாளனைத்
தேருலாவியதில்லையுட்கூத்தனை
ஆரிலாவமுதைமறந்துய்வனோ. (௯)

ஓங்குமாலவரையெடுத்துற்றான்சிரம்
வீங்கிவிம்முறவூன்றியதாளினன்
தேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனோ (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

### திரு அரத்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுநஞ்சுண்ட
உடலுளானையொப்பாரியலாதவெம்
அடலுளானையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧)

கரும்பொப்பானைக்கரும்பினிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா
அரும்பொப்பானையரத்துறைமேவிய
சுரும்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௨)

ஏறொப்பானையெல்லாவுயிர்க்குமிறை
வேறொப்பானைவிண்ணோருமறிகிலா
ஆறொப்பானையரத்துறைமேவிய
ஊறொப்பானைக்கண்டுநாந்தொழுவதே. (௩)

பாரப்பொப்பானைப்பகலிருள்நன்னிலா
இரப்பொப்பானையிளமதிசூடிய
வூரப்பொப்பானையரத்துறைமேவிய
சுரப்பொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௪)

நெய்யொப்பானைநெய்யிற்சுடர்போலவேதா
மெய்யொப்பானைவிண்ணோருமறிகிலா
ஐயொப்பானையரத்துறைமேவிய
கையொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௫)

நிதியொப்பானைநிதியிற்கிழவனை
விதியொப்பானைவிண்ணோருமறிகிலா
அதியொப்பானையரத்துறைமேவிய
கதியொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௬)

புனலொப்பானைப்பொருந்தலார்தம்மையே
மினலொப்பானைவிண்ணோருமறிகிலா
அனலொப்பானையரத்துறைமேவிய
கனலொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௭)

பொன்னொப்பானைப்பொன்னிற்சுடர்போலவேதா
மின்னொப்பானைவிண்ணோருமறிகிலா
அன்னொப்பானையரத்துறைமேவிய
தன்னொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௮)

காழியானைக்கனவிடையூருமெய்
வாழியானைவல்லோருமென்றின்னவா
ஆழியான்பிரமற்குமரத்துறை
ஊழியானைக்கண்டுநாந்தொழுவதே. (௯)

கலையொப்பானைக்கற்றார்க்கோரமுதினை
மலையொப்பானைமணிமுடியூன்றிய
உலையொப்பானையரத்துறைமேவிய
நிலையொப்பானைக்கண்டுநாந்தொழுவதே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஅண்ணாமலை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வட்டனைமதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை

இட்டனையிகழ்ந் தாரபுரமூன்றையும்
அட்டனையடியேன் மறந்துய்வனோ. (க)

வானனைமதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
ஏனனையிகழ்ந்தாரபுரமூன்றெய்த
ஆனனையடியேன்மறந்துய்வனோ (உ)

மத்தனைமதயானையுரித்தவெஞ்
சித்தனைத்திருவண்ணாமலையனை
முத்தனைமுனிந்தாரபுரமூன்றெய்த
அத்தனையடியேன்மறந்துய்வனோ (ங)

காற்றனைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றனைத்திருவண்ணாமலையனைக்
கூற்றனைக்கொடியாரபுரமூன்றெய்த
ஆற்றனையடியேன்மறந்துய்வனோ. (ச)

மின்னனைவினைதீர்த்தென்னையாட்கொண்ட
தென்னனைத்திருவண்ணாமலையனை
என்னனையிகழ்ந்தாரபுரமூன்றெய்த
அன்னனையடியேன்மறந்துய்வனோ (ரு)

மன்றனைமதியாதவன்வேள்விமேல்
சென்றனைத்திருவண்ணாமலையனை
வென்றனைவெகுண்டாரபுரமூன்றையும்
கொன்றனைக்கொடியேன்மறந்துய்வனோ (சு)

வீரனைவிடமுண்டனைவிண்ணவர்
தீரனைத்திருவண்ணாமலையனை
ஊரனையுணராரபுரமூன்றெய்த
ஆரனையடியேன்மறந்துய்வனோ (எ)

கருவினைக்கடல்வாயவிடமுண்டவெந்
திருவினைத்திருவண்ணாமலையனை
உருவினையுணராரபுரமூன்றெய்த
அருவினையடியேன்மறந்துய்வனோ (அ)

அருத்தனையரவைந்தலைநாகத்தைத்
திருத்தனைத்திருவண்ணாமலையனைக்
கருத்தனைக்கடியாரபுரமூன்றெய்த
அருத்தனையடியேன்மறந்துய்வனோ (கூ)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
இரக்கமாயென்னுடலுறுநோய்களைத்
துரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனோ. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஅண்ணாமலை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந் தேறிப்பலவிலம்
இட்டமாகவிரந் துண்டுழிதரும்
அட்டமூர்த்தியண் ணாமலைகைதொழக்
கெட்டுப்போம்வினை கேடில்லைகாண்மினே. (௧)

பெற்றமேறுவர் பெய்பலிக் கென்றுவர்
சுற்றமாகிய தொல்குழலாளொடும்
அற்றந்தீர்க்குமண் ணாமலைகைதொழ
நற்றவந்தொடு ஞானத்திருப்பரே (௨)

பல்லிலோடுகை யேந்திப் பலவிலம்
ஒல்லைசென்றுணங் கல்கவர்வாரவர்
அல்லல்தீர்க்குமண் ணாமலைகைதொழ
நல்லவாயின நம்மையடையுமே (௩)

பாடிச்சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப்போயினார் செய்வதொன் றென்கொலோ
ஆடிப்பாடியண் ணாமலைகைதொழ
ஓடிப்போகுநம் மேலைவினைகளே (௪)

தேடிச்சென்று திருந்தடி யேத்துமின்
நாடிவந்தவர் நம்மையுமாட்கொள்வர்
ஆடிப்பாடியண் ணாமலைகைதொழ
ஓடிப்போம்நமதுள்ள வினைகளே. (௫)

கட்டியொக்குங் கரும்பினிடைத் துணி
வெட்டிவீணைகள் பாடுமவிகிர்தனார்
அட்டமூர்த்தியண் ணாமலைமேவிய
நட்டமாடியை நண்ணநன் காகுமே (௬)

கோணிக்கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணிநட்டங்கள் ஆடும்பரமனார்
ஆணிப்பொன்னினண் ணாமலைகைதொழப்
பேணிநின்ற பெருவினை போகுமே. (௭)

கண்டந்தான் கறுத்தான் காலனாருயிர்
பண்டுகாலகொடுபாய்ந்த பரமனார்
அண்டத்தோங்குமண் ணாமலைகைதொழ
விண்டுபோகுநம் மேலைவினைகளே. (௮)

முந்திச்சென்று முப்போதும் வணங்குமின்
அந்திவாயொளி யான்றனண் ணாமலை
சிந்தியாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்தமாமலர் சூடுங்கருத்தனே. (௯)

மறையினுனொடுமாலவனகாண்கிலா
நிறையுநீாமையுள்நின்றருள்செய்தவன்
உறையுமாண்பினண்ணுமலைகைதொழப
பறையுநாஞ்செய்தபாவங்களானவே (கo)

திருச்சிற்றம்பலம

ஆ_ பதிகம் - ரு

## திருஆநர் - திருக்குறுந்தொகை.

திருசசிற்றம்பலம.

எபபோதுமமிறையுமமறவாதுநீா
முபபோதுமபிரமன்றொழநின்றவன்
செபபோதுமபொனின்மேனிசசிவனவன்
அபபோதைக்கஞ்சலென்னுமாரூரனே. (க)

ச டையின்மேலுமோா தையலைதைவா
அடைகிலாவரவையரையாாத்தவா
படையினோதடஙகண்ணுமைபாகமா
அடைவாபோலிடுகாடராரூரரே (உ)

விண்டவெண்டலையேகலனுகவே
கொண்டகமபலிதேருங்குழகனாா
துண்டவெண்பிறைவைததவிறையவா
அண்டவாணாககருளுமாரூரரே (ங)

விடையுமேறுவாவெண்டலையிறபலி
கடைகடோறுநதிரியுமெங்கண்ணுதல
உடையுஞ்சீரையுறைவதுகாடடிடை
அடைவாபோலரஙகாகவாரூரரே. (ச)

துளைக்கைவேழததுரியுடலபோாத்தவா
வளைககையாளையோாபாகமகிழ்வெய்தித
திளைக்குநதிங்கடசடையுடடிசைமுழு
தளக்குஞ்சிநதையாபோலுமாரூரரே. (ரு)

பண்ணினின்மொழியாளையோாபாகமா
விண்ணினாவிளங்குமமதிகூடியைச
சுண்ணநீறுமெய்பூசிச்சுடலையில
நண்ணியாடுவாபோலுமாரூரரே. (சு)

மடடுவாாகுழலாளொடுமாலவிடை
இடடமாவுகநதேறுமிறைவனாா
கட்டுவாங்கங்கனமழுமான்றனே
டட்டமாமபுயமாகுமாரூரரே. (எ)

தோய்நததிங்கள்கமழ்சடையான்கனல
ஏந்தியெலலியுளாடுமிறைவனாா

காய்ந்துகாமனை நோக்கினகண்ணினா
ஆய்ந்தநான்மறையோதுமாரூரரே (அ)

உண்டுநஞ்சுகண்டத்துளடக்கியங்
கிண்டைசெஞ்சடைவைத்தவியலபினனை
கொண்டகோவணவாடையன்கூறெரி
அண்டவாணரடையுமாரூரரே (௯)

மாலுநான்முகனுமமறிகிறகிலா
காலனையவவனைக்கடந்திட்டுச
சூலமானமழுவேந்தியகையினா
ஆலமுண்டழகாயவாரூரரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருஆரூர் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

கொக்கரைகுழலவீணைகொடுகொட்டி
பக்கமேபகுவாயனபூதங்கள
ஒக்கவாடலுகந்துடனகூத்தராய
அக்கிணேடரவாரப்பராரூரரே. (௧)

எந்தமாதவனுசெய்தனைநெஞ்சமே
பந்தமவீடவையாயபராபரன
அந்தமிலபுகழாரூரனெறி
சிந்தையுள்ளுஞ்சிரத்துளுந்தங்கவே. (௨)

வண்டுலாமலர்கொண்டுவெளா சடைக
கிண்டைமாலைபுனைந்துமிராப்பகல
தொண்டராகித்தொடாந்துவிடாதவாக்
கண்டமாளவுமவைப்பராரூரரே. (௩)

துன்பெலாமறநீங்கிசசூவத்தராய்
என்பெலாநெக்கிராப்பகலேத்திநின்
றினபராய்நினைந்தென்றுமிடையறு
அன்பராமவாக்கன்பராரூரரே. (௪)

முருட்டுமெத்தையிலமுன்கிடத்தாமுனம
அரட்டரைவரையாசறுத்திட்டுநீா
முரட்டடித்தவத்தக்கன்றன்வேள்வியை
அரட்டடக்கிதனாரூரடைமினே. (௫)

எமமையாரிலலையானுமுளேனலேன்
எமமையாருமிதுசெயவல்லரே
அம்மையாரெனக்கென்றென்றரற்றினேற்
கமமையாரைத்தந்தாராரூரையரே. (௬)

தண்டவாளியைத்தக்கன்றன்வேள்வியைச
செண்டதாடியதேவராகண்டனைக்
கண்டுகண்டிவள்காதலித்தன்பதாய்க
கொண்டியாயினவாறென்றன்கோதையே (எ)

இவணமைபபலபேசதொடங்கினள்
அவணமென்றென்னிலாரூரனெனும
பவணிவீதிவிடங்கனைக்கண்டிவள்
தவணியாயினவாறென்றன்றையலே (அ)

நீரைசசெஞ்சடைவைததநிமலனா
காரொததமிடறறா கனலவாயரா
ஆரததருறையுமமணியாரூரைத
தூரதவேதொழுவாாவினைதூளியே (கூ)

உளளமேயொன்றுறுதியுடைபபனை
வெளளநதாஙகுவிரிசடைவேதியன
அள்ளலநீரவயலாரூரமாநதவெம
வள்ளலசேவடிவாழததிவணஙகிடே (க0)

விண்டமாலாமேலுறைவானொடும
கொண்டலவண்ணனுஙகூடியறிகிலா
அண்டவாணன்றனூராடிதொழப
பண்டைவலவினைநிலலாபறையுமே (கக)

மையுலாவியகண்டததனண்டத்தன்
கையுலாவியசூலததனகண்ணுதல
ஐயனூரடிதொழுவாாக்கெலாம
உய்யலாமலலலொன்றிலலைகாண்மினே. (கஉ)

திருச்சிறறம்பலம்.

---

## திரு அன்னியூர் - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம்.

மாறலைத்தபடுவெண்டலையினன்
நீறலைத்தசெமமேனியனேரிழை
கூறலைததமெய்கோளரவாடடிய
ஆறலைத்தசடையன்னியூரரே. (க)

பண்டொத்தமொழியாளையோாபாகமாய்
இண்டைச்செஞ்சடையன்னிருள்சேர்ந்ததோர்
கண்டத்தன்கரியின்னுரிபோாத்தவன்
அண்டத்தப்புறத்தானன்னியூரரே. (உ)

பரவிநாளுமபணிந்தவாதமவினை
துரவையாகத்துடைப்பவாதமமிடம

குரவனாறுங்குழலுமைகூறராய்
அரவமாட்டுவாரபோலன்னியூரரோ. (௩)

வேதகீதாவிண்ணோாக்குமுயாாதவா
சோதிவெண்பிறைதுன்றுசடைக்கணி
நாதாநீதியினாலடியாாதமக்
காதியாகிநின்றாரன்னியூரரே (௪)

எமபிரானிமையோாகளதமக்கெலாம
இன்பராகியிருநதவெமமீசனாா
துன்பவலவினைபோகததொழுமவாக்
கன்பராகிநின்றாரன்னியூரரோ (௫)

வெநதநீறுமெய்பூசுநன்மேனியா
கநதமாமலாசூடுங்கருததினா
சிநதையாாசிவனாசெய்யதீவண்ணா
அநதணாளாகண்டீரன்னியூரரோ. (௬)

ஊனையாாதலையிற்பலிகொண்டுழல
வானைவானவாதாங்கள்வணஙகவே
தேனையாாகுழலாளையோாபாகமா
ஆனையீருரியாரன்னியூரரோ. (௭)

காலைபோய்பபலிதோவாகண்ணாநெற்றி
மேலைவானவாவநதுவிருமபிய
சோலைசூழ்புறங்காடரங்காகவே
ஆலின்கீழறத்தாரன்னியூரரோ. (௮)

எரிகொள்மேனியரென்பணிநதின்பராய்
திரியுமூவெயிலதீயெழசசெற்றவா
கரியமாலொடுநான்முகன்காண்பதற
கரியராகிநின்றாரன்னியூரரே. (௯)

வஞ்சரக்கன்கரமுஞ்சிரத்தொடும
அஞ்சுமஞசுமோராறுநான்குமிறப
பஞ்சிமெலவிரலாலடாத்தாயிழை
அஞ்சலஞ்சலென்றாரன்னியூரரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

**திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.**

திருச்சிற்றம்பலம்.

ஓதமாலகடலபாவியுலகெலாம
மாதரார்வலங்கொண்மறைக்காடரைக்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தபபறையுநமபாவமே. (௧)

பூக்குந்தாழைபுறணியருகெலாம
ஆக்குந்தானுடைமாமறைக்காடரோ
ஆக்குங்காண்பரியாரடியார்தமை
நோக்கிக்காண்பதுநுமபணிசெய்யிலே. (உ)

புன்னைநாழலபுறணியருகெலாம
மன்னினாவலங்கொண்மறைக்காடரோ
அன்னமென்னடையாளையோபாகமாச
சின்னவேடமுகபபதுசெலவமே. (ங)

அட்டமாமலாசூடியடமபொடு
வடடபபுனசடைமாமறைககாடரோ
நடடமாடியுநானமறைபாடியும
இடடமாகவிருக்குமிடமதே (ச)

நெயதலாமபலநிறைவயலசூழ்தரும
மெயயினாவலங்கொண்மறைக்காடரோ
தையலபாகங்கொண்டாகவாபுனசடைப
பைதலவெண்பிறைபாமபுடன்வைபபதே. (ரு)

துஞசுமபோதுந்துயிலின்றியேததுவா
வஞ்சினறிவலங்கொண்மறைக்காடரோ
பஞ்சின்மெலலடிபபாவைபலிகொணாந
தஞ்சிநிற்பதுமைந்தலைநாகமே (சா)

விண்ணுளாரவிருமபியெதிாகொள்ளவே
மண்ணுளாரவணங்குமமறைக்காடரோ
கண்ணினாலுமைககாணக்கதவினைத
திண்ணமாகததிறநதருள்செயமமினே. (எ)

திருவினாசெலவமலகுவிழாவணி
மருவினாவலங்கொண்மறைக்காடரோ
உருவினாளுமையாளையோபாகமாய்
மருவினாய்கஙகையைசசென்னிதன்னிலே. (அ)

சங்குவந்தலைக்குந்தடங்கானலவாய்
வங்கமாரவலங்கொண்மறைக்காடரோ
கங்கைசெஞ்சடைவைப்பதுமன்றியே
அங்கையிலலனலேநதலழகிதே. (கூ)

குறைக்காட்டான்விடடகோகுத்தமாமலை
இறைக்காட்டியெடுத்தான்றலையீரைந்தும
மறைக்காட்டானிறையூன்றலும்வாய்விட்டான்
இறைக்காட்டாயெம்பிரானுனையேத்தவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே (௧)

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்டநீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே (௨)

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே (௩)

அரியநான்மறையோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ
பெரியவான்கதவம்பிரிவிக்கவே (௪)

மலையில்நீடிருக்கும்மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையிலாமணிவண்ணவுருவரோ
தொலைவிலாக்கதவந்துணைநீக்குமே. (௫)

பூக்குந்தாழைபுறணியருகெலாம்
ஆக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆக்குங்காண்பரியீரடிகேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. (௬)

வெந்தவெண்பொடிபூசும்விகிர்தரோ
அந்தமில்லியணிமறைக்காடரோ
எந்தைநீயடியாரவந்திறைஞ்சிட
இந்தமாக்கதவம்பிணிநீக்குமே. (௭)

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாதுமைக்கீந்தகுழகரோ
ஏறுதேறியவெம்பெருமானிந்த
மாறிலாக்கதவம்வலிநீக்குமே. (௮)

சுண்ணவெண்பொடிபூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந்தேறும்பரமரோ
அண்ணலாதியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. (௯)

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. (கo)

திருச்சிற்றம்பலம்.

அ பதிகம் - க().

## திருமீயச்சூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றுங்கோயிலுந்தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில்பலவுளமீயச்சூர்க்
கூற்றம்பாய்ந்தகுளிர்புன்சடையரற்
கேற்றங்கோயில்கண்டீரிளங்கோயிலே. (க)

வந்தனையடிக்கும்மடித்தொண்டர்கள்
பந்தனைசெய்துபாவிக்கநின்றவன்
சிந்தனைதிருத்துந்திருமீயச்சூர்
எந்தமைப்புடையாரிளங்கோயிலே. (உ)

பஞ்சமந்திரமோதும்பரமனார்
அஞ்சவானையுரித்தனலாடுவார்
நெஞ்சம்வாழிநினைந்திருமீயச்சூர்
எந்தமைப்புடையாரிளங்கோயிலே (ங)

நாறுமலலிகைகூவிளஞ்செண்பகம்
வேறுவேறுவிரித்தசடையிடை
ஆறுகொண்டுகந்தான்றிருமீயச்சூர்
ஏறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (ச)

வெவ்வவண்ணத்துநாகம்வெருவவே
கவ்வவண்ணகனலவிரித்தாடுவார்
செவ்வவண்ணந்திகழ்திருமீயச்சூர்
எவ்வவண்ணபிரானிளங்கோயிலே. (ரு)

பொன்னங்கொன்றையும்பூவணிமாலையும்
பின்னுஞ்செஞ்சடைமேற்பிறைசூடிற்று
மின்னுமேகலையாளொடுமீயச்சூர்
இன்னநாளகலாரிளங்கோயிலே. (சா)

படைகொள்பூதத்தன்பைங்கொன்றைத்தாரினன்
சடைகொள்வெள்ளத்தன்சாந்தவெண்ணீற்றினன்
விடைகொளூர்தியினன்றிருமீயச்சூர்
இடைகொண்டேத்தநின்றாரிளங்கோயிலே. (எ)

ஆறுகொண்டசடையினர்தாமுமோர்
வேறுகொண்டதோர்வேடத்தராகிலும்

கூறுகொண்டுகந்தாளொடுமீயச்சூர்
ஏறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (௮)

வேதத்தானென்பர்வேள்வியுளானென்பர்
பூதத்தானென்பர்புண்ணியன்றன்னையே
கீதத்தான்கிளருந்திருமீயச்சூர்
ஏதந்தீர்க்கநின்றாரிளங்கோயிலே. (௯)

கடுக்கனேகயிலாயமலைதனை
எடுக்கலுற்றவிராவணனீடற
இடுக்கணின்றிவெகுண்டவன்மீயச்சூர்
இடுக்கண்டீர்க்கநின்றாரிளங்கோயிலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் ௧௧

---

## திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கரைந்துகைதொழுவாரையுங்காதலன்
வரைந்துவைதெழுவாரையும்வாடலன்
நிரந்தபாரிடத்தோடவர்தங்கலும்
விரைந்துபோவதுவீழிமிழலைக்கே (௧)

ஏற்றுவெல்கொடியீசன்றனுதிரை
நாற்றஞ்சூடுவானன்னறுந்திங்களார்
நீற்றுச்சந்தனவெள்ளைவிரவலார்
வேற்றுக்கோலங்கொள்வீழிமிழலையே (௨)

புனைபொற்கூலத்தன்போர்விடையூர்தியான்
வினைவெறுகத்தன்வெண்மழுவாளினான்
நினையநின்றவனீசனையேயெனு
வினையிலார்தொழும்வீழிமிழலையே. (௩)

மாடத்தாடுமனத்துடன்வைத்தவர்
கோடத்தார்குருக்கேத்திரத்தார்பலர்
பாடத்தார்பழிப்பார்பழிப்பல்லதோர்
வேடத்தார்தொழும்வீழிமிழலையே. (௪)

எடுத்தவெல்கொடியேறுடையான்றமர்
உடுப்பர்கோவணமுண்பதுபிச்சையே
கெடுப்பதாவதுகேணின்றவல்வினை
விடுத்துப்போவதுவீழிமிழலையே. (௫)

குழலையாழ்மொழியாரிசைவேட்கையால்
உழலையாக்கையையூனுமுணர்விலீர்
தழலைநீர்மடிக்கொள்ளன்மின்சாற்றினேம்
மிழலையானடிசாரவிண்ணாள்வரே. (௬)

திரன்றீத்திரளன்சடைத்தங்கிய
நீரனுடியநீற்றன்வண்டார்கொன்றைத்
தாரன்மாலையன்றண்ணறுங்கண்ணியன்
வீரன்வீழிமிழலைவிகிர்தனே. (எ)

எரியினாரிறையாரிடுகாட்டிடை
நரியினார்பரியாமகிழ்கின்றதோர்
எரியினார்தமபிறபபொடுசாதலை
விரியினார்தொழுவீழிமிழலையே. (அ)

நீண்டசூழ்சடைமேலோர்நிலாமதி
காண்டுசேவடிமேலோர்கனைகழல
வேண்டுவாரவர்வீதிபுகுநிலா
மீணடுமபோவதுவீழிமிழலைக்கே (கூ)

பாலையாழொடுசெவவழிபண்கொள
மாலைவானவரவருதுவழிபடும
மாலையாரழலநதணராகுதி
வேலையார்தொழுமவீழிமிழலையே (க0)

மழலையேறுமணாளன்றிருமலை
சுழலவார்த்தெடுத்தான்முடிதோளிறக்
கழலகொள்காலிற்றிருவிரலூன்றலும
மிழலையானடிவாழ்கெனவிட்டதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

என்பொனேயிமையோர்தொழுபைங்கழல
நன்பொனேநலநதீங்கறிவொன்றிலேன்
செமபொனேதிருவீழிமிழலையுள்
அன்பனேயடியேனைக்குறிக்கொளே. (க)

கண்ணினாற்களிகூர்க்கையாற்றொழு
தெண்ணுமாறறியாதிளைபபேன்றனை
விண்ணுளார்தொழுமவீழிமிழலையுள்
அண்ணலேயடியேனைக்குறிக்கொளே. (உ)

ஞாலமேவிசுமபேநலந்தீமையே
காலமேகருத்தேகருத்தாற்றொழும
சீலமேதிருவீழிமிழலையுள்
கோலமேயடியேனைக்குறிக்கொளே. (ங)

முத்தனேமுதல்வாமுகிழும்முளை
ஒத்தனேயொருவாவுருவாகிய

சித்தனேதிருவீழிமிழலையுள்
அத்தனேயடியேனைக்குறிக்கொளே. (ச)

கருவனேகருவாய்த்தெளிவார்க்கெலாம்
ஒருவனேயுயிராபபாயுணாவாய்நின்ற
திருவனேதிருவீழிமிழலையுள்
குருவனேயடியேனைக்குறிக்கொளே. (ரு)

காத்தனேபொழிலேழையுங்காதலால
ஆத்தனேயமராக்கயன்றன்றலை
சேர்த்தனேதிருவீழிமிழலையுள்
கூத்தனேயடியேனைக்குறிக்கொளே. (சா)

நீதிவானவாநித்தலநியமஞ்செய்
தோதிவானவருமமுணராததோர்
வேதியாவிகிர்தாதிருவீழியுள்
ஆதியேயடியேனைக்குறிக்கொளே. (எ)

பழகநின்னடிசூடியபாலனைக்
கழகின்மேலவைத்தகாலனைச்சாடிய
அழகனேயணிவீழிமிழலையுள்
குழகனேயடியேனைக்குறிக்கொளே. (அ)

அண்டவானவாகூடிக்கடைந்தநஞ்
சுண்டவானவனேயுணாவொன்றிலேன்
விண்டவான்பொழிலவீழிமிழலையுள்
கொண்டனேயடியேனைக்குறிக்கொளே (கூ)

ஒருத்தனேங்கலைத்தாங்கலுறஞானரம
வருததினும்மஞ்சனேன்மனமன்னிய
திருத்தனேதிருவீழிமிழலையுள்
அருத்தனேயடியேனைக்குறிக்கொளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிடைமருது-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றமபலம்.

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
வாசநாண்மலர்கொண்டடிவைகலும
ஈசனெமபெருமானிடைமருதினில
பூசநாம்புகுதுமபுனலாடவே. (க)

மறையினுண்மலாகொண்டடிவானவர்
முறையினுன்முனிகள்வழிபாடுசெய்
இறைவனெம்பெருமானிடைமருதினில
உறையுமீசனையுள்குமென்னுள்ளமே. (உ)

கொனறைமாலையுஙகூவிளமத்தமும
சென்றுசேரத்திகழ்சடைவைத்தவன்
என்றுமெநதைபிரானிடைமருதினை
நன்றுகைதொழுவாரவினைநாசமே. (௩)

இமமைவானவாசெலவமவிளைத்திடும
அமமையேறபிறவித்துயாநீததிடும
எமமையாளுமிடைமருதனகழல
செமமையேதொழுவாரவினைசிநதுமே. (௪)

வணடணைநதனவன்னியுஙகொன்றையும
கொணடணிநதசடைமுடிக்கூத்தனா
எண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலவினைகளே. (௫)

ஏறதேறுமிடைமருதீசனா
கூறுவாாவினைதீாககுஙகுழகனா
ஆறுசெஞ்சடைவைததவழகனாக்
கூறியூறியுருகுமென்னுளளமே. (௬)

விண்ணுளாருமவிருமபபபடுபவா
மண்ணுளாருமதிககபபடுபவா
எண்ணிறாபொழிலசூழிடைமருதினை
நண்ணினாைநண்ணுவினைநாசமே. (௭)

வெநதவெண்பொடிபூசுமவிகிாதனா
கநதமாலைகள்சூடுஙகருததனா
எநதையெனனிடைமருதினிலீசனைச
சிநதையாலநினைவாாவினைதேயுமே. (௮)

வேதமோதுமவிரிசடையண்ணலாா
பூதமபாடநின்றாடுமபுனிதனா
ஏதந்தீாக்குமிடைமருதாவென்று
பாதமேத்தபபறையுநமபாவமே. (௯)

கனியிலுங்கடடிபடடகருமபிலும
பனிமலாக்குழறபாவைநலலாாிலும
தனிமுடிகவித்தாளுமரசிலும
இனியன்றன்னடைநதார்க்கிடைமருதனே. (௧௦)

முற்றிலாமதிசூடுமுதலவனா
ஒற்றினாமலையாலரக்கன்முடி
எற்றினாகொடியாரிடைமருதினைட்
பற்றினாைப்பற்றாவினைப்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவிடைமருது - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பறையினோசையும்பாடலினோசையும
மறையினோசையுமவைகுமவயலெலாம
இறைவனெங்கள்பிரானிடைமருதினில
உறையுமீசனையுள்குமென்னுள்ளமே. (க)

மனத்துண்மாயனை மாசறுசோதியைப
புனிற்றுப்பிள்ளைவெள்ளை மமதிசூடியை
எனக்குத்தாயையெமமானிடைமருதினை
நினைத்திட்டூறிநிறைந்ததென்னுளளமே (உ)

வண்டணைந்தனவன்னியுமத்தமும
கொண்டணிந்தசடைமுடிக்கூத்தனை
எண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலைவினைகளே (ங)

துணையிலாமையிற்றூங்கிருட்பேயகளோ
டணையலாவதெமக்கரிதேயென
இணையிலாவிடைமாமருதிலலெழு
பணையிலாகமஞ்சொலலுந்தன்பாங்கிகே. (ச)

மண்ணையுண்டமாலகாணான்மலரடி
விண்ணைவிண்டயனகாணான்வியனமுடி
மொண்ணைமாமருதாவென்றெனமொய்குழல
பண்ணையாயமுநதானுமபயிலுமே (ரு)

மங்கைகாணக்கொடாாமணமாலையைக
கங்கைகாணக்கொடாாமுடிக்கண்ணியை
நங்கைமீரிடைமருதரிநநஙகைக்கே
எங்குவாங்கிக்கொடுத்தாரிதழியே (சு-எ-அ-கூ-கo-கக.)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம

மறையுமோதுவாமான்மறிக்கையினா
கறைகொள்கண்டமுடையகபாலியாா
துறையும்போகுவாதூயவெண்ணீற்றினா
பிறையுஞ்சூடுவர்பேரெயிலாளரே. (க)

கணக்கிலாரையுங்கற்றுவலலாரையும
வணக்கிலாநெறிகண்டுகொண்டாரையும
தணக்குவாதணிப்பாரெப்பொருளையும்
பிணக்குவாரவர்பேரெயிலாளரே. (உ)

சொரிவிப்பாா மழைசூழ்கதிா த திங்களை
விரிவிபபாாவெயிறபட்டவிளங்கொளி
எரிவிபபாா தணிபபாரெபபொருளையும
பிரிவிபபாரவாபேரெயிலாளரே. (ஙட)

செறுவிபபாாசிலையாலமதிலதீா த தஙகள்
உறுவிபபாாபலபததாகளுளவினை
அறுவிபபாா துவனறியுநலவினை
பெறுவிபபாரவாபேரெயிலாளரே. (ச)

மறறையாாறியாாமழுவாளினாா
பறறியாடடியோாைநதலைபபாமபணை
சுறறியாரவா தூநெறியாலமிகு
பெறறியாரவாபேரெயிலாளரே. (ரு)

திருககுவாாகுழறசெலவனசேவடி
இருககுவாய்மொழியாறறனையேததுவாா
சுருக்குவாா துயாதோறறஙகளாற்றறப
பெருககுவாரவாபேரெயிலாளரே (சா)

முன்னையாாமயிலூா திமுருகவேள
தன்னையாாெனிறறுனோ தலைமகன
என்னையாளுமிறையவனெமபிரான்
பின்னையாரவாபேரெயிலாளரே. (எ)

உழைத்துநதுள்ளியுமுளள த துளேயுரு
இழைததுமெநதைபிரானெனறிராபபகல
அழைக்குமன்பினராயவடியவா
பிழைபபுநீக்குவாபேரெயிலாளரே. (அ)

நீருலாஙிமிாபுன்சடையாவெஞ்
ஏருலாவனங்கன்றிறலவாட்டிய
வாருலாவனமென்முலையாளொடும
பேருளாரவாபேரெயிலாளரே. (கூ)

பாணியாாபடுதமபெயாநதாடுவா
தூணியாாவிசயறகருள்செய்தவா
மாணியாய்மண்ணளநதவனுனமுகன்
பேணியாரவாபேரெயிலாளரே. (கo)

மதத்தவாளரக்கன்மணிப்புட்பகம
சிதைக்கவேதிருமாமலைக்கீழ்பபுக்குப
பதைத்தங்காத்தெடுத்தான்பத்துநீண்முடி
பிதக்கவூன்றியபேரெயிலாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருவெண்ணி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தினைப்பவளத்தைமுளைத்தவெண்
தொத்தினைச்சுடரைச்சுடர்போலொளிப்
பித்தினைக்கொலுநஞ்சினைவானவர்
நித்தனைநெருநற்கண்டவெண்ணியே (க)

வெண்ணித்தொன்னகர்மேயவெண்டிங்களார்
கண்ணித்தொத்தசடையர்கபாலியார்
எண்ணித்தம்மைநினைந்திருந்தேனுக்கு
நண்ணித்திட்டமுதூறுமென்னாவுக்கே (உ)

காற்றினைக்கனலைக்கதிர்மாமணி
நீற்றினைநினைப்பார்வினைநீக்கிடும்
கூற்றினையுதைத்திட்டகுணமுடை
வீற்றினைநெருநற்கண்டவெண்ணியே (௩)

நல்லனைத்திகழ்நான்மறையோதியைச்
சொல்லனைச்சுடரைச்சுடர்போலொளிர்
கல்லனைக்கடிமாமதின்மூன்றெய்த
வில்லனைநெருநற்கண்டவெண்ணியே (௪)

சுடரைப்போலொளிர்சுண்ணவெண்ணீற்றனை
அடருஞ்சென்னியில்வைத்தவமுதினைப்
படருஞ்செஞ்சடைப்பான்மதிசூடியை
இடர்நீக்கியையான்கண்டவெண்ணியே (௫)

பூதநாதனைப்பூம்புகலூரனைத்
தாதெனத்தவழும்மதிசூடியை
நாதனைநல்லநான்மறையோதியை
வேதனைநெருநற்கண்டவெண்ணியே (௬)

ஒருத்தியையொருபாகத்தடக்கியும்
பொருத்தியபுனிதனைப்புரிபுன்சடைக்
கருத்தனைக்கறைக்கண்டனைக்கண்ணுதல்
நிருத்தனைநெருநற்கண்டவெண்ணியே (௭)

சடையனைச்சரிகோவணவாடைகொண்
டுடையனையுணர்வார்வினைதீர்த்திடும்
படையனைமழுவாளொடுபாய்தரும்
விடையனைநெருநற்கண்டவெண்ணியே. (௮)

பொருப்பனைப்புனலாளொடுபுன்சடை
அருப்பனையிளந்திங்களங்கண்ணியான்
பருப்பதம்பரவித்தொழுந்தொண்டர்கள்
விருப்பனைநெருநற்கண்டவெண்ணியே. (௯)

சூலவஞ்சனைவலலவெஞ்சுந்தரன்
கோலமாவருள்செய்ததோகொள்கையான
காலனஞ்சவுதைத்திருள்கண்டமாம
வேலைநஞ்சனைக்கண்டதுவெண்ணியே (௧௦)

இலையினூகொனறைசூடியவீசனூ
மலையினலரக்கன்றிறலவாட்டினூ
சிலையினலமதிலெய்தவன்வெண்ணியைத
தலையினற்றொழுவாாவினைதாறுமே (௧௧)

திருச்சிற்றமபலம

---

திருக்கடம்பந்துறை - திருக்குறுந்தோகை.

திருச்சிற்றம்பலம.

முற்றிலாமுலையாளிவளாகிலும
அற்றநீக்குமறிவிலளாகிலும
கற்றைசசெஞ்சடையானகடமபந்துறைப
பெற்றமூர்தியெனறுளெங்களபேதையே (க)

தனகிருந்ததோதனமையராகிலும
உனகுநீரதொழுதெழுமினகளோ
கனகப்புன்சடையான்கடமபந்துறை
நினையவலலவாநீள்விசுமபாளவரே (உ)

ஆரியந்தமிழோடிசை பாணவன
கூரியகுணத்தாாகுறிநின்றவன
காரிகைபுடையான்கடமபந்துறைச
சீரியலபத்தாசென்றடைமின்களே (ங)

பண்ணினினமொழிகேட்குமபாமனை
வண்ணநனமலரானபலதேவரும
கண்ணனுமமறியான்கடமபந்துறை
நண்ணநமவினையாயினநாசமே (ச)

மறைகொண்டமனததானைமனததுளே
நிறைகொண்டநெஞ்சினுள்ளூறவைமமினோ
கறைகண்டனுறைபுங்கடமபந்துறை
சிறைகொண்டவினைதீரத்தொழுமினே. (ரு)

நங்கைபாகமவைத்தநறுஞ்சோதியைப
பங்கமின்றிபபணிநதெழுமின்களோ
கஙகைச்செஞ்சடையான்கடமபந்துறை
அங்கமோதியரனுறைகின்றதே. (சா)

அரியநான்மறையாறங்கமாயைந்து
புரியன்றேவாகளேத்தநஞ்சுண்டவன்

கரியகண்டத்தினான்கடம்பந்துறை
உரியவாறுநினைமடநெஞ்சமே. (எ)

பூமென்கோதையுமையொருபாகனை
ஓமஞ்செய்துமுணாமின்களுள்ளத்தால
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே (அ)

பாரணங்கிவணங்கிப்பணிசெய்ய
நாரணன்பிரமன்னறியாததோர்
காரணன்கடம்பந்துறைமேவிய
ஆரணங்கொருபாலுடைமைந்தனே (கூ)

நூலாலநன்றுநினைமின்களநோய்கெடப்
பாலனைநதுடும்பரமனார
காலனூன்றுகந்தான்கடம்பந்துறை
மேலலாஞ்செய்தவல்வினைவீடுமே (கO)

திருச்சிற்றம்பலம்

ஆ பதிகம - கஅ

---

## திருக்கடம்பூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தளருங்கோளரவத்தொடுதண்மதி
வளருங்கோலவளர்சடையார்க்கிடம்
கிளரும்பேரிசைக்கின்னரம்பாட்டறாக்
களருங்கார்க்கடம்பூர்க்கரக்கோயிலே. (க)

வெல்வலான்புலனைந்தொடுவேதமும்
சொல்வலான்சுழலுந்தடுமாற்றமும்
அல்வலானமனையார்ந்தமென்றோளியைக்
கல்வலான்கடம்பூர்க்கரக்கோயிலே. (உ)

பொய்தொழாதுபுலியுரியோன்பணி
செய்தெழாவெழுவார்பணிசெய்தெழா
வைதெழாதெழுவாரவரேழ்கதி
கைதொழாவெழுமின்கரக்கோயிலே. (ந)

துண்ணெனுமனத்தாற்றொழுநெஞ்சமே
பண்ணினான்முனம்பாடலதுசெய்தே
எண்ணிலாரெயில்மூன்றுமெரித்தமுக்
கண்ணினான்கடம்பூர்க்கரக்கோயிலே. (ச)

சுனையுணீலமலரனகண்டத்தன்
புனையும்பொன்னிறக்கொன்றைபுரிசடைக்
கனையும்பைங்கழலான்கரக்கோயிலை
நினையுமுள்ளத்தவர்வினைநீங்குமே. (ரு)

குணங்கள்சொலலியுஙகுற்றங்கள்பேசியும
அணங்கிவாழ்த துவான்புடையாரெலாம
வணஙகிவான்மலாகொண்டடிவைகலும
கணங்கள்போறறிசைகருங்கரக்கோயிலே. (௬)

பண்ணினாமறைபலபலபூசனை
மண்ணினாசெய்வதன்றியுமவைகலும
விண்ணினா கள்வியக்கபபடுவன
கண்ணினா கடமபூாக்காககோயிலே (௭)

அஙகையாரழலேநதிநின்றாடலன
மஙகைபாடமகிழநதுடனவாாசடைக
கஙகையாளுறையுங்கரககோயிலேத
தஙகையாறறொழுவாாவினைசாயுமே (௮)

நஙகடமபனைபபெறறவள்பஙகினன
தெனகடமபைத திருககரக்கோயிலான
தனகடனனடியேனையுநதாஙகுதல
என்கடனபணிசெயதுகிடபபதே (௯)

பணஙகொளபாறகட றபாமபணையானொடும
மணஙகமழமலா ததாமரையானவன
பிணஙகுமபேரழலெமபெருமாறகிடம
கணஙகள்போறறிசைக்குஙகாககோயிலே. (௧௦)

வரைக்கணுலேஞசுதோளுடையானறலே
அரைககவூன்றியருளசெயதவீசனா
திரைக்குநதண்புனலசூழ்கரக்கோயிலே
உரைக்குமுள்ளத தவாவினையோயுமே. (௧௧)

திருசசிறறமபலம

## திருக்கடம்பூர்க்கரக்கோயில் - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம

ஒருவராயிருமூவருமாயவன்
குருவதாயகுழகனுறைவிடம
பருவாாலகுதிகொள்ளுமபழனஞ்சூழ
கருவதாங்கடமபூாக்கரககோயிலே. (௧)

வன்னிமத்தமவளரிளநதிங்களோா
கன்னியாளைக்கதிாமுடிவைத்தவன்
பொன்னின்மலகுபுணாமுலையாளொடும
மன்னினன்கடமபூாக்கரக்கோயிலே. (௨)

இல்லக்கோலமுமிந்தவிளைமையு
மலலறகோலமறுத்துயவலலிரே

ஓலலைசசெனறடையுங்கடமபூாககாச
செலவககோயிலதிருக்கரககோயிலே. (௩)

வேறுசிந்தையிலாதவாதீவினை
கூறுசெய்தகுழகனுறைவிடம
எறுசெலவததிமையவாதாஙதொழும
ஆறுசோகடமபூாக்கரககோயிலே. (௪)

திஙகளதஙகியசெஞசடைமேலுமோா
மஙகைதஙகுமணாளனிருபபிடம
பொஙகுசோமணறபுனலையுநாழலும
தெஙகுசோகடமபூாககரக்கோயிலே (௫)

மலலைஞாலததுவாழுமுயிாககெலாம
எலலையானபிராணிருபபிடம
கொலலைமுலலைகொழுநதகைமலலிகை
நலலசோகடமபூாக்கரககோயிலே (௬)

தளருமவாளரவத்தொடுதண்மதி
வளருமபொறசடையாறகிடமாவது
கிளருமபேரொலிகினனரமபாட்டறுக
களரியாாகடமபூாககரக்கோயிலே (௭)

உறறாாவுறவாகியுயிாககெலாம
பெறறாாயபிராணுருறைவிடம
முறறாாமுமமதிலெய்தமுதலவனா
கறறாாசோகடமபூாககரக்கோயிலே (௮)

வெள்ளைநீறணிமேனியவாககெலாம
உள்ளமாயபிராணுருறைவிடம
பிள்ளைவெண்பிறைசூடியோாசெனனியான
கள்வன்சோகடமபூாக்கரக்கோயிலே. (௯)

பரபபுநீரிலஙகைக்கிறைவனனவன
ஊரததிணலடுக்கலலெடுக்கலுற
இரககமின்றியிறைவிரலாறறலை
அரக்கினானகடமபூாககரக்கோயிலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திரு இன்னம்பர் - திருக்குறுந்தொகை.

திருசசிறறம்பலம்.

என்னிலாருமெனக்கினியாரிலை
என்னிலுமினியானொருவன்னுளன்
என்னுளேயுயிாப்பாய்பபுறமபோநதுபுக
கென்னுளேநிறகுமின்னம்பரீசனே. (௧)

பட்டுண்பார்கள் மடந்தையர் வாட்கணால்
கட்டுண்பார்கள் கருதுவ தென்கொலோ
தட்டிமுட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டுமாத் திரியின்னம்பரீசனே. (உ)

கனலுங் கண்ணியுந் தண்மதியோடுடன்
புனலுங் கொன்றையுஞ் சூடும்புரிசடை
அனலுஞ் சூலமு மான்மறி கையினன்
இனலு மென்மனத் தின்னம்பரீசனே (ங)

மழைக்கண் மாமயிலா லுமகிழ்ச்சியான்
அழைக்குந் தன்னடியார்கள் தமன்பினைக்
குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கு மென்மனத் தின்னம்பரீசனே (ச)

தென்னவ னென்னையாளுஞ் சிவனவன்
மன்னவன் மதியம் மறையோதியான்
முன்னம் மன்னவன் சேரலன் பூழியான்
இன்னமின் புறவின்னம்பரீசனே (ரு)

விளக்கும் வேறுபட்டப் பிறருள்ளத்தில்
அளக்குந் தன்னடியார் மனத் தன்பினைக்
குளக்கு மென்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கு மென்மனத் தின்னம்பரீசனே. (சா)

சடைக்கணாள் புனலாள் அனல்கையதோர்
கடைக்கணால் மங்கைநோக்கிம வான்மகள்
படைக்கணாற் பருகப்படுவான் மக்
கிடைக்கணாய் நின்றவின்னம்பரீசனே. (எ)

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றலற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பரீசனே. (அ)

விரியுந் தண்ணிள வேனலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமும்
திரியு மெல்லையில் லமும் மதிலதீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்பரீசனே. (கூ)

சனியும் வெள்ளியுந் திங்களு ஞாயிறு
முனிவனும் முடிபத் துடையான் றனைக்
கனியவூன்றிய காரணமென்கொலோ
இனியனாய் நின்றவின்னம்பரீசனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

## திருக்குடமூக்கு - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம.

பூவணததவன்புண்ணியனண்ணியங
காவணததுடையானடியாாகளைத
தீவணததிருநீறுமெய்பூசியோா
கோவணத்துடையான்குடமூககிலே (க)

பூததாடிககழியாதேநீாபூமியீா
தீத்தாடிததிறஞ்சிநதையுளவைமமினோ
வோததாடுஙகாளிதனவிசைதீாகென்று
கூததாடியுறையுஙகுடமூக்கிலே (உ)

நங்கையாளுமையாளுறைநாதனா
அஙகையாளொடறுபதந்தாழ்சடைக
கங்கையாளவள்கனனியெனபபடும
கொஙகையாளுறையுஙகுடமூககிலே (௩)

ஓதாநாவனதிறததையுளாததிரோல
ஏதானுமினிதாகுமியமுனைச
சேதாவேறுடையானமாநதவிடம
கோதாவிரியுறையுஙகுடமூக்கிலே (௪)

நக்கரையனைநாடொறுநன்னெஞ்சே
வக்கரையுறைவானைவணஙகுநீ
அக்கரையோடரவரையாாததவனா
கொக்கரையுடையானகுடமூக்கிலே (௫)

துறவிநெஞ்சினராகியதொண்டாகாள்
பிறவிநீங்கபபிதறறுமின்பித்தராய்
மறவனாய்ப்பாாத்தன்மேறகணைதொடடவெம
குறவனுருறையுஙகுடமூககிலே. (௬)

தொண்டராகித்தொழுதுபணிமினோ
பண்டைவலவினைபறறறவேண்டுவீா
விண்டவாபுரமூனறொருமாத்திரை
கொண்டவன்னுறையுஙகுடமூக்கிலே (௭)

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தஙகுள்ளததுணாமினோ
சாமியோடுசரசசுவதியவள்
கோமியுமமுறையுங்குடமூக்கிலே. (௮)

சிரமஞ்செய்துசிவனுக்குப்பத்தராய்
பரமனைப்பலநாளுமபயிற்றுமின்
பிரமன்மாலொடுமெற்றொழிந்தாாக்கொலாம
குரவனுருரையுங்குடமூக்கிலே. (௯)

அன்றுதானரக்கன்கயிலாயத்தைச்
சென்றுதானெடுக்கவுமையஞ்சலும்
நன்றுதானக்குநலவிரலூன்றிப்பின்
கொன்றுகீதங்கேட்டான்குடமூக்கிலே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

### திருநின்றியூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடுங்கண்வெண்டலைகொண்டுகுறைவிலைப்
படுங்கணொன்றிலராய்ப் பலிதேர்ந்துண்பர்
நெடுங்கண்மங்கையராட்டயர்நின்றியூர்க்
கடுங்கைக்கூற்றுதைத்திட்டகருத்தரே. (க)

வீதிவேணெடுங்கண்ணியர்வெள்வளை
நீதியேகொளப்பாலதுநின்றியூர்
வேதமோதிவிளங்குவெண்டோட்டராய்க்
காதில்வெண்குழைவைத்தவெங்கள்வரே. (உ)

புற்றினாரவம்புலித்தோலமிசைச்
சுற்றினார்சுண்ணப்போவைகொண்டார்சுடர்
நெற்றிக்கண்ணுடையானமர்நின்றியூர்
பற்றினார்பற்றறுவினைப்பாவமே. (ங)

பறையினோசையும்பாடலினோசையும்
மறையினோசையுமல்கிவயலெல்லாம்
நிறையும்பூம்பொழில்சூழ்திருநின்றியூர்
உறையும்ஈசனையுள்குமென்னுள்ளமே. (ச)

சுனையுள்நீலஞ்சுளியுநெடுங்கணாள்
இனையனென்றென்றுமேசுவதென்கொலோ
நினைபுந்தண்வயல்சூழ்திருநின்றியூர்ப்
பனையினீருரிபோர்த்தபரமரே. (ரு)

உரைப்பக்கேண்மினுமுச்சியுளான்றனை
நிரைப்பொன்மாமதில்சூழ்திருநின்றியூர்
உரைப்பொற்கற்றையரார்வரோவெனின்
திரைத்துப்பாடித்திரிதருசெல்வரே. (சா)

கன்றியூர்முகில்போலுங்கருங்களி
றின்றியேறலின்றிதுவென்கொலோ
நின்றியூர்ப்பதியாகநிலாயவன்
வென்றியேறுடையெங்கள்விகிர்தனே. (எ)

நிலையிலாவெள்ளைமாலயனீண்டதோர்
கொலைவிலாலெயிலெய்தகொடியவன்

நிலையினாவயலசூழ்திருநின்றியூா
உரையினற்றொழுவாாவினையோயுமே (அ)

அஞ்சியாகிலுமன்புபடடாகிலும
நெஞ்சம்வாழிநினைநின்றியூனாநீ
இஞ்சிமாமதிலெய்திமையோாதொழக்
குஞ்சிவான்பிறைசூடியகூததனே (கூ)

எளியெனுமொழியாவிலஙகைக்கிறை
களியினற்கயிலாயமெடுததவன
நெளியவூன்றவலானமாநினறியூா
அளியினற்றொழுவாாவினையலகுமே (க0)

திருசசிறறம்பலம.

---

திருவொற்றியூர் - திருக்குறுந்தோகை

திருசசிறறமபலம

ஒறறியூருமொளிமதிபாமபினை
ஒற்றியூருமபாமபுமதனையே
ஒற்றியூரவொருசடைவைததவன
ஒற்றியூாதொழநமவினையோயுமே (க)

வாடடமெனறுரைக்குமமலைபாணமகள
ாடடவேயிருளாடியிடுபிணக
காடடிலோரிகடிக்கவெடுததேகா
ஒடடைவெண்டலைகைகயொறறியூரே (உ)

கூறறுததண்டததையஞசிக்குறிகொண்மின்
ஆறறுத்தண்டததடககுமரனடி
நீற்றுததண்டத்தாயநினைவாாகெலாம
ஊற்றுத்தண்டொபபாபோலொறறியூரோ (ங)

சுறறுமபேயசுழலசசுடுகாட்டெரி
பற்றியாடுவாபாய்புலிததோலினா
மற்றையூாகளெலலாமபலிதோநதுபோய்
ஒற்றியூாபுக்குறையுமொருவரே. (ச)

புற்றிலாடரவாட்டியுமையொடு
பெற்றமேறுகநதேறுமபெருமையான்
மற்றையாரொடுவானவருநதொழ
ஒற்றியூருறைவானோகபாலியே (ரு)

போதுதாழ்ந்துபுதுமலாகொண்டுநீர்
மாதுதாழ்சடைவைத்தமணாளனா
ஓதுவேதியனார்திருவொற்றியூா
பாதமேத்தபபறையுநமபாவமே. (சா)

பலவுமன்னங்களபன்மலாமேறறுஞசும
கலவமஞ்ஞைகளகாரெனவெள்குறும
உலவுபைமபொழிலசூழதிருவொற்றியூா
நிலவினனடியேயடைநெஞ்சமே. (எ)

ஒன்றுபோலுமுகநதவரேறறிறறு
ஒன்றுபோலுமுனைததுககளொநதது
ஒன்றுபோலொளிமாமதிசூடிறறு
ஒன்றுபோலுகநதாரொறறியூரே (அ)

படைகொள்பூததாவெதநதாகீததா
சடைசொள்வெள்ளததாசாநதவெண்ணீறறினா
உடையுநதோலுகநதானுறைவொறறியூா
அடையுமுள்ளநதவாவினையலகுமே (கூ)

வரையினாருபாதோளுடைமன்னனை
வரையினலவலிசெறறவாவாழ்விடம
திரையினாபுடைசூழதிருவொற்றியூா .
உரையினாலபொலிநதாருயாநதாாகளே (கO)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம உ ர

---

### திருப்பாசூர் - திருககுறுந்தொகை

திருசசிறறமபலம.

முநதிமுவெயிலெயதமுதலவனா
சிநதிபபாாவினைதீாததிடுஞசெலவனா
அநதிககோன்றனககேயருளசெய்தவா
பநதிசசெஞசடைபபாசூரடிகளே. (க)

மடநதைபாகமகிழ்நதமணாளனா
தொடாநதவலவினைபோககிடுஞசோதியா
கடநதகாலனைககாலகொடுபாய்நதவா
படாநதநாகததாபாசூரடிகளே (உ)

நாறுகொனறைபுனாகமுநதிஙகளும
ஆறுசெஞசடைவைததவமுதனா
காறுகண்டததாகையதோாசூலததா
பாறினொடினாபாசூரடிகளே. (ந)

வெறறியூருறைவேதியராவாாநல
லொற்றியேறுகநதேறுமொருவனா
நெறறிக்கண்ணினா நீளரவாநதனைப
பறறியாடுவாாபாசூரடிகளே. (ச)

மட்டவிழ்நதமலாநெடுங்கண்ணிபால
இட்டவேட்கையராகியிருபபவா

துட்டரேலறியேனிவர்சூழ்ச்சிமை
பட்டநெற்றியர்பாசூரடிகளே. (௫)

பலவிலோடுகையேந்திப்பகலெலாம
எலவிசின்றிடுபெய்பலியேற்பவா
சொலவிபபோய்ப்புகுமூரறியேன்சொலீர
பலகுநீற்றினாபாசூரடிகளே. (௬)

கட்டிவிட்டசடையாகபாலியா
எட்டிநோக்கிவந்திலபுகுந்தவ்வவா
இட்டமாவறியேனிவாசெய்வன
பட்டநெற்றியாபாசூரடிகளே (௭)

வேதமோதிவந்திலபுகுந்தாரவா
காதிலவெண்குழைவைததகபாலியா
நீதியொன்றறியாாநிறைகொண்டனா
பாதிவெண்பிறைபபாசூரடிகளே (௮)

சாமபறபூசுவாதாழ்சடை கட்டுவா
ஓமபன்மூநெதருதேறுமொருவனா
தேமபலவெண்மதிசூடுவா தீயதோா
பாமபுமாட்டுவாபாசூரடிகளே (௯)

மாலினேடுமறையவன்றனுமாய
மேலுங்கீழுமளபபரிதாயவா
ஆலினீழலறமபகாநதாமிகப
பாலவெண்ணீறறினாபாசூரடிகளே. (௧௰)

திரியுமூவெயிலசெங்கணையொன்றினல
எரியவெய்தனரேனுமிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டாாவிரலொன்றினல
பரியாநுண்ணியாபாசூரடிகளே (௧௧)

திருசசிறறம்பலம்

தொணடைநாட்டிலுளளது.

சுவாமிபெயா - பாசூாநாதர். தேவியாா - பசுபதிநாயகி.

---

## திருவன்னியூர் - திருக்குறுந்தோகை.

திருச்சிறறம்பலம.

காடுகொண்டரஙகாக்கங்குல்வாய்க்கணம்
பாடமானடமாடுமபரமனா்
வாடமானிறங்கொள்வாமணங்கமழ்
மாடமாமதிலசூழ்வன்னியூரரே. (௧)

செங்கணுகமனையதுதீத்திரள்
அங்கையேந்திநின்றுரெரியாடுவர்

கங்கைவாசடை மேலிடங்கொண்டவா
மங்கைபாகமவைததாவன்னியூரரே (உ)

ஞானஙகாட்டுவா நன்னெறிகாட்டுவா
தானங்காட்டுவா தமமடைநதாக்கெலாம
வானங்காட்டிததன்ருளடைநதாகட்கு
வானங்காட்டுவாபோலவன்னியூரரே. (ந)

இமமையமமைமெயனவிரண்டுமமிவை
மெய்மமைதானறியாதுவிளமடிவா
மெய்மமையானிஇனவாாகள் தமவலவினை
வமமின்றீடடா கண்டீாவன்னியூரரே. (ச)

பிறைகொள்வாணுதறபெய்வளைத்தோளியா
நிறையைக்கொள்ாவா நீறணிமேனியா
கறைகொள்கண்டததா வெண்மழுவாளினா
மறைகொள்வாய்மொழியாாவன்னியூரரே. (ரு)

திளைககுமவண்டொடுதேன்படுகொன்றையா
துளைக்கைவேழத்தாதோலாசூடாமதி
முளைக்குழூறற்கதிா கண்டுநாகமநா
வளைக்குமவாாசடையாாவன்னியூரரே. (சு)

குணஙகள்தோளெட்டுமூாததியிணையடி
இணஙகுவாாகடகினியனுமாய்நினரூா
வணங்கிமாமலாகொண்டவாவைகலுமம
வணஙகுவாாமனததாவன்னியூரரே. (எ)

இயலுமாலொடுநான்முகன்செய்தவம
முயலிற்காண்பரிதாய்நின்றமூாத்திதான்
அயலெலாமன்னமேயுமநதாமறை
வயலெலாங்கயலபாய்வன்னியூரரே. (அ-கூ)

நலங்கொள்பாகனை நன்றுமுனிநதிடா
விலஙகலகோத்தெடுத்தாரதுமிக்கிட
விலங்கைமன்னனிருபதுதோளினை
மலங்கவூன்றிவைத்தாவன்னியூரரே. (கo)

திருச்சிறறம்பலம.

---

## திருவையாறு - திருக்குறுந்தோகை.

திருச்சிறறமபலம்.

சிந்தைவாய் தலுளான்வநதுசீரியன்
பொநதுவாாபுலாலவெண்டலைக்கையினன்
முநதிவாயதோாமூவிலைவேலபிடித்
தநதிவாயதோாபாம்பணையாறரே. (க)

பாகமாலைமகிழ்ந்தனர்பான்மதி
போகவானையினீருரிபோர்த்தவர்
கோகமாலைகுலாயதோர்கொன்றையும்
ஆகவானெயஞ்சாடுமையாறரே. (௨)

நெஞ்சமென்பதோர்நீள்கயந்தனுள்ளே
வஞ்சமென்பதோர்வான்சுழிப்பட்டுநான்
துஞ்சும்போழ்துநின்னாமத்திருவெழுத்
தஞ்சுந்தோன்றவருளுமையாறரே (௩)

நினைக்குநெஞ்சினுள்ளார்நெடுமாமதில்
அனைத்துமொள்ளழல்வாயெரியூட்டினார்
பனைக்கைவேழத்துரியுடல்போர்த்தவர்
அனைத்துவாய்தலுளாருமையாறரே (௪)

பரியர்நுண்ணியர்பார்த்தற்கரியவர்
அரியபாடலராடலராயினும்
கரியகண்டத்தர்காட்சிபிறர்க்கெலாம்
அரியர்தொண்டர்க்கெளியரையாறரே (௫)

புகுரும்போதுமிலைப்பட்டுப்போர்ப்பட்டார்
மலரும்போதுகளாற்பணியச்சிலர்
நிலவும்போதுமிலாததுமன்றியும்
அலரும்போதுமணியுமையாறரே. (௬)

பங்கமாலைக்குழலியோர்பாலராக
கங்கைமாலையாகத்தன்மைசெய்தவர்
பங்கமாலைமதியமுங்கண்ணியும்
அங்கமாலையுஞ்சூடுமையாறரே (௭)

முன்னையாறுமுப்பனிரெழுவீரெலாம்
பின்னையாறுபிரியெனும்பேதைகாள்
மன்னையாறுமருவியமாதவன்
தன்னையாறுதொழுததவமாகுமே (௮)

ஆனையாறெனவாடுகின்றானமுடி
வானையாறுவளாயதுகாண்மினோ
நானையாறுபுக்கேறகவனின்னருள்
தேனையாறுதிறந்தாலேயொக்குமே (௯)

அரக்கின்மேனியனந்தளிர்மேனியன்
அரக்கின்சேவடியாளஞ்சவஞ்சமென்
றரக்கனீரைந்துவாயுமலறவே
அரக்கினானடியாலுமையாறனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்தராய்த்திறம்பாவணம்
முந்திவண்ணத்தராய்முழுநீறணி
சந்திவண்ணத்தராய்த்தழல்போலவே தோர்
அந்திவண்ணமுமாவரையாறரே. (க)

மூலவண்ணத்தராய்முதலாகிய
கோலவண்ணத்தராகிக்கொழுஞ்சுடர்
நீலவண்ணத்தராகிநெடும்பளிங்
காலவண்ணத்தராவரையாறரே. (உ)

சிந்தைவண்ணமுந்தீயதோர்வண்ணமும்
அந்திப்போதழகாகியவண்ணமும்
பந்திக்காலனைப்பாய்ந்ததோர்வண்ணமும்
அந்திவண்ணமுமாவரையாறரே (௩)

இருளின்வண்ணமுமேழிசைவண்ணமும்
சுருளின்வண்ணமுஞ்சோதியின்வண்ணமும்
மருளுநான்முகன்மாலொடுவண்ணமும்
அருளும்வண்ணமுமாவரையாறரே (௪)

இழுக்கின்வண்ணங்களாகியவெவ்வழல்
குழைக்கும்வண்ணங்களாகியுங்கூடியும்
மழைக்கண்மாமுகிலாகியவண்ணமும்
அழைக்கும்வண்ணமுமாவரையாறரே. (௫)

இண்டைவண்ணமுமேழிசைவண்ணமும்
தொண்டர்வண்ணமுஞ்சோதியின்வண்ணமும்
கண்டவண்ணங்களாய்க்கனலமாமணி
அண்டவண்ணமுமாவரையாறரே (௬)

விரும்பும்வண்ணமும்வேதத்தின்வண்ணமும்
கரும்பின்மென்மொழிக்காரிகைவண்ணமும்
விரும்புவார்வினைதீர்த்திடும்வண்ணமும்
அரும்பின்வண்ணமுமாவரையாறரே. (௭)

ஊழிவண்ணமுமொண்சுடர்வண்ணமும்
வேழவீருரிபோர்த்ததோர்வண்ணமும்
வாழித்தீயுருவாகியவண்ணமும்
ஆழிவண்ணமுமாவரையாறரே. (௮)

செய்தவன்றிருநீறணிவண்ணமும்
எய்தநோக்கரிதாகியவண்ணமும்
கைதுகாட்சியரியதோர்வண்ணமும்
ஐதுவண்ணமுமாவரையாறரே. (௯)

எடுத்தவாளரக்கன்றிறலவண்ணமும்
இடாக்கள்போற்பெரிதாகியவண்ணமும்
கடுத்தவுகைநரமபாலிசைவண்ணமும்
அடுத்தவண்ணமுமாவரையாறரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்பொற்சோதீசுவரர். தேவியார் - அறமவளர்த்தநாயகி.

---

திருவாவடுதுறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றமபலம.

நிறைக்கவாலியளலலளிநேரிழை
மறைக்கவாலியளலலளிமயாதரரள்
பிறைக்கவாலிபபெருமபுனலாவடு
துறைக்கவாலியோடாடியசுண்ணமே. (௧)

தவளமாமதிச்சாயலோர்சந்திரன்
பிளவுசூடியபிஞ்ஞகனெமமிறை
அளவுகண்டிலளாவடுதண்டுறை
களவுகண்டனளொத்தனள்கன்னியே. (௨)

பாதிபெண்ணொருபாகத்தன்பனமறை
ஓதியென்னுளங்கொண்டவனொண்பொருள்
ஆதியாவடுதண்டுறைமேவிய
சோதியேசுடரேயென்றுசொலலுமே. (௩)

கார்க்கொணமாமுகிலபோலவதோர்கண்டத்தன
வார்க்கொண்மென்முலைசோர்திறுமாந்திவள்
ஆர்க்கொள்கொன்றையனாவடுதண்டுறைத்
தார்க்குநின்றிவள்தாழுமாகாண்மினே. (௪)

கருகுகண்டத்தன்காய்கதிர்சசோதியன
பருகுபாலமுதேயெனுமபண்பினன்
அருகுசென்றிலளாவடுதண்டுறை
ஒருவனென்னையுடையகோவென்னுமே. (௫)

குழலுங்கொன்றைபுங்கூவிளமத்தமும்
தழலுந்தையலோர்பாகமாத்தாங்கினான்
அழகனாவடுதண்டுறையாவெனக்
கழலுங்கைவளைகாரிகையாளுக்கே. (௬)

பஞ்சின்மெல்லடிப்பாவையோர்பங்கனைத்
தஞ்சமென்றிறுமாந்திவளாரையும்
அஞ்சுவாளல்லளாவடுதண்டுறை
மஞ்சனேடிவளாடியமையலே. (௭)

பிறையுஞ்சூடிநற்பெண்ணோடாணாகிய
நிறையுநெஞ்சமுநீர்மையுங்கொண்டவன்
அறையும்பூமபொழிலாவடுதண்டுறை
இறைவனென்னையுடையவனென்னுமே (அ)

வையநானளந்தானுமயனுமாய்
மெய்யைக்காணலுறலுறாக்கழலாயினான்
ஐயனாவடுதண்டுறையாயெனக்
கையிலவெள்வளையுங்கழலகின்றவே (௯)

பக்கமபூதங்கள்பாடபபலிகொள்வான்
மிக்கவாளரக்கனவலிவீட்டினான்
அக்கணிநதவனாவடுதண்டுறை
நக்கனென்னுமிந்நாணிலிகாண்மினே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

௯௨ பதிகம் ௨௯

## திருப்பராய்த்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றமபலம்.

கரப்பாகாலமடைநதவாதமவினை
சுருக்குமாறுவலலாாகஙகைசெஞ்சடைப
பரபபுநீரவருகாவிரிதென்கரைத்
திருபபாய்த்துறைமேவியசெலவரே. (௧)

மூடினார்களியானையினீருரி
பாடினாாமறைநான்கினோடாறங்கம
சேடனாாதெனபராய்ததுறைசசெலவனாத
தேடிககொண்டடியேன்சென்றுகாண்பனே. (௨)

பட்டநெறறியாபானமதிககீறறினா
நட்டமாடுவாநள்ளிருளேமமும
சிட்டனாாதென்பாரயததுறைசசெலவனாா
இட்டமாயிருபபாாையறிவரே. (௩)

முன்பெலாஞ்சிலமோழமைபேசுவா
என்பெலாமபலபூண்டங்குழிதாவா
தென்பராய்ததுறைமேவியசெலவனாா
அன்பாாயிருப்பாரையறிவரே. (௪)

போதுதாதொடுகொண்டுபுனைநதுடன்
தாதவிழ்சடைசசங்கரன்பாதத்துள்
வாதைதீாக்கவென்றேத்திபபராய்த்துறைச்
சோதியானைததொழுதெழுநதுய்ம்மினே. (௫)

நல்லநான்மறையோதியநமபனைப்
பல்லில்வெண்டலையிற்பலிகொள்வனைத்

தில்லையான்றென்பராய்த்துறைச்செல்வனை
வல்லையாய்வணங்கித்தொழுவாய்மையே. (௬)

நெருப்பினற்குவித்தாலொக்குநீள்சடைப்
பருப்பதமதயானையுரித்தவன்
திருப்பராய்த்துறையார்திருமார்பினால்
பொருப்பராவியிழிபுனல்போன்றதே. (௭)

எட்டவிட்டவிடுமனவேகைகாமேற
பட்டநுண்டுளிபாயும்பராய்த்துறைச்
சிட்டன்சேவடிசென்றடைகிற்றிரேல்
விட்டுநம்வினையுள்ளனவீடுமே (௮)

நெருப்பரானிமிர்ந்தாலொக்குநீள்சடை
மருப்பராவளைத்தாலொக்குமவாண்மதி
திருப்பராய்த்துறைமேவியசெல்வனார்
விருப்பராயிருப்பாரையறிவரே (௯)

தொண்டுபாடியுந்தூமலர்தூவியும்
இண்டைகட்டியிணையடியேத்தியும்
பண்டரங்கர்பராய்த்துறைப்பாங்கரைக்
கண்டுகொண்டடியேனுய்ந்துபோவனே (௰)

அரக்கனாற்றலழித்தவழகனைப்
பரக்குநீர்ப்பொன்னிமன்னுபராய்த்துறை
இருக்கைமேவியவீசனையேத்துமின்
பொருக்கநம்வினைபோயறுங்காண்மினே (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - திருப்பராய்த்துறைநாதர். தேவியார் - பசும்பொன்மயிலம்மை.

---

## திருவானைக்கா - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

கோனைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்
தேனைக்காவியுண்ணார்சிலதெண்ணர்கள்
ஆனைக்காவிலெம்மானையணைகிலார்
ஊனைக்காவியுழிதருமரே. (௧)

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைச்செய்து
பருகியூறலைப்பற்றிப்பதமறிந்
துருகிநைபவர்க்கூனமொன்றின்றியே
அருகுநின்றிடுமானைக்காவண்ணலே. (௨)

துன்பமின்றித்துயரின்றியென்றுநீர்
இன்பமவேண்டிலிராப்பகலேத்துமின்

என்பொனீசனிறைவனென்றுள்குவாக்
கன்பனாயிடுமானைக்காவண்ணலே. (௩)

நாவானன்றுநறுமலர்ச்சேவடி
ஓவாதேத்தியுளந்தடைத்தார்வினை
காவாயென்றுதங்கைதொழுவாக்கெலாம
ஆவாவென்றிடுமானைக்காவண்ணலே. (௪)

வஞ்சமின்றிவணங்குமின்வைகலும்
வெஞ்சொலின்றிவிலகுமின்வீடற
நைஞ்சுநைஞ்சுநின்றுள்குளிர்வார்க்கெலாம
அஞ்சலென்றிடுமானைக்காவண்ணலே. (௫)

நடையைமெய்யென்றுநாத்திகமபேசாதே
படைகள்போலவருமபஞ்சமாபூதங்கள்
தடையொன்றின்றியேதன்னடைந்தார்க்கெலாம
அடையநின்றிடுமானைக்காவண்ணலே. (௬)

ஒழுகுமாடத்துளொன்பதுவாய்தலுங்
கழுகரிபபதன்முன்னங்கழலடி
தொழுதுகைகளாற்றூமலா தூவிநின்
றழுமவாக்கன்பனானைக்காவண்ணலே. (௭)

உருளுமபோதறிவுண்ணாவுலகத்தீர
தெருளுஞ்சிக்கெனத்தீவினைசேராதே
இருளறுத்துநின்றீசனென்பார்க்கெலாம
அருள்கொடுத்திடுமானைக்காவண்ணலே. (௮)

நேசமாகிநினைமடநெஞ்சமே
நாசமாயகுலநலஞ்சுற்றங்கள்
பாசமற்றுபபராபரவானந்த
ஆசையுற்றிடுமானைக்காவண்ணலே. (௯)

ஓதமாகடலசூழிலங்கைக்கிறை
கீதங்கின்னரமபாடக்கெழுவினான்
பாதமவாங்கிப்பரிந்தருள்செய்தங்கோர்
ஆதியாயிடுமானைக்காவண்ணலே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சம்புகேசுவரர், தேவியார் - அகிலாண்டநாயகியம்மை.

---

## திருப்பூந்துருத்தி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடிகொள்செல்வவிழாக்குணலையறாக்
கடிகொள்பூம்பொழிற்கச்சியேகம்பனார்
பொடிகள்பூசியபூந்துருத்திநகர்
அடிகள்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௧)

ஆர்த்ததோலுடைகட்டியோர்வேடனாய்ப்
பார்த்தனோடுபடைதொடுமாகிலும்
பூத்தநீள்பொழிற்பூந்துருத்திநகர்த்
தீர்த்தன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௨)

மாதினைமதித்தானொருபாகமாக்
காதலாற்கரந்தான்சடைக்கங்கையைப்
பூதநாயகன்பூந்துருத்திநகர்க்
காதிசேவடிக்கீழ்நாமிருப்பதே. (௩)

மூவனாய்முதலாயிவ்வுலகெலாம்
காவனாய்க்கடுங்காலனைக்காய்ந்தவன்
பூவினாயகன்பூந்துருத்திநகர்த்
தேவன்சேவடிக்கீழ்நாமிருப்பதே (௪)

செம்பொனேயொக்குமேனியன்றேசத்தில்
உம்பராரவரோடிங்கிருக்கிலும்
பொன்பொனார்செல்வப்பூந்திருத்திநகர்
நம்பன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௫)

வல்லம்பேசிவலிசெய்மூன்றூரினைக்
கொல்லம்பேசிக்கொடுஞ்சரநூறினை
புல்லம்பேசியும்பூந்துருத்திநகர்ச்
செல்வன்சேவடிக்கீழ்நாமிருப்பதே (௬)

ஒருத்தனாயுலகேழுந்தொழுகின்று
பருத்தபாம்பொடுபான்மதிகங்கையும்
பொருத்தனாகிலும்பூந்துருத்திநகர்த்
திருத்தன்சேவடிக்கீழ்நாமிருப்பதே (௭)

அதிரர்தேவரியக்கர்விச்சாதரர்
கருதநின்றவர்காண்பரிதாயினான்
பொருதநீர்வருபூந்துருத்திநகர்ச்
சதிரன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௮)

செதுகருமனத்தார்புறங்கூறினும்
கொதுகருக்கண்ணிலேன்பிகள்கூறினும்
பொதுவினாயகன்பூந்துருத்திநகர்க்
கதிபன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௯)

துடித்ததோள்வலிவாளரக்கன்றனைப்
பிடித்தகைஞெரிந்துற்றனகண்ணெலாம்
பொடிக்கவூன்றியபூந்துருத்திநகர்ப்
படிக்கொள்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - புட்பவனநாதர், தேவியார் - அழகாலமர்ந்தநாயகி.

## திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொலலையேற்றினாகோளரவத்தினா
திலலைச்சிற்றமபலத துறைசெலவனா
தொலலையூழியாசோற்றுத்துறையாக்கே
வலலையாய்பபணிசெய்மடநெஞசமே. (௧)

முத்தியாகவொருதவஞ்செய்திலை
அததியாலடியாாக்கொன்றளிததிலை
தொததுநின்றலாசோற்றுத்துறையாக்கே
பத்தியாற்பணிசெய்மடநெஞ்சமே (௨)

ஒட்டிநின்றவுடலுறுநோய்வினைக்
கட்டிநின்றகழிநதவைபோயறத்
தொடடுநின்றுமசசோறறுததுறையாககே
படடியாய்டபணிசெய்மடநெஞசமே (௩)

ஆதியானண்டவாணாககருணலகு
நீதியானென்றுநின்மலனேயென்றும
சோதியானென்றுஞசோற்றுததுறையாக்கே
வாதியாய்பபணிசெய்மடநெஞ்சமே. (௪)

ஆட்டினுயடியேன்வினையாயின
ஓட்டினுயொருகாதிலிலஙகுவெண்
தோட்டினுயென்றுசோறறுததுறையாக்கே
நீட்டிநீபணிசெய்மடநெஞ்சமே (௫)

பொஙகிநினறெழுநதகடலநஞ்சினைப
பஙகியுண்டதோாதெயவமுண்டோசொலாய
தொங்கிநீயென்றுஞசோற்றுததுறையாக்கு
தங்கிநீபணிசெய்மடநெஞ்சமே. (௬)

ஆணிபோலநீயாற்றவலியைகாண்
ஏணிபோவிழிநதேறியுமேங்கியும
தோணியாகியசோறறுத்துறையர்க்கே
பூணியாய்பபணிசெய்மடநெஞசமே. (௭)

பெறறமேறிலென்பேய்படையாகிலென்
புற்றிலாடரவேயதுபூணிலென்
சுறறிநீயென்றுஞ்சோற்றுத்துறையர்க்கே
பற்றிநீபணிசெய்மடநெஞ்சமே. (௮)

அலலியானரவைநதலைநாகணைப
பள்ளியானறியாதபரிசெலாம்
சொலலிநீயென்றுஞ்சோற்றுத்துறையாக்கே
புலலிநீபணிசெய்மடநெஞ்சமே. (௯)

மிண்டரோடுவிரவியுமவீதிலாக்
குண்டர்தம்மைக்கழிந்துய்யப்போநதுநீ
தொண்டுசெய்தென்றுஞ்சோற்றுத்துறையாக்கே
உண்டுநீபணிசெய்மடநெஞ்சமே. (௧0)

வாழ்நதவன்வலிவாளரக்கன்றனே
ஆழ்ந்துபோயலறவ்விரலூன்றினன்
சூழ்ந்தபாரிடஞ்சோற்றுத்துறையாக்குத
தாழ்நதுநீபணிசெய்மடநெஞ்சமே. (௧௧)

திருசசிறறமபலம.

இது சோழநாட்டிலுளளது

சுவாமிபெயா - தொலையாசசெல்வா, தேவியாா - ஒப்பிலாமபிகையம்மை.

---

### திருநெய்த்தானம் - திருக்குறுந்தொகை.

திருசசிறறம்பலம்.

கொலவியான்குளிாதூஙகுகுறருலத்தான்
புலவியாாபுரமூன்றெரிசெய்தவன்
நிலவியானிலையானநெயததானனேச்
சொலவிமெய்தொழுவாாசுடாவாணரே. (௧)

இரவனையிடுவெண்டலையேநதியைப
பரவனைபபடையாாமதின்மூனறையும
நிரவனைநிலையானநெயததானனைக்
குரவனைததொழுவார்கொடிவாணரே. (௨)

ஆனிடையைநதுமாடுவராரிருள
கானிடைநடமாடுவாகாண்மினோ
தேனிடைமலர்பாயுநெய்த்தானனே
வானிடைத்தொழுவாாவலிவாணரே. (௩)

விண்டவாபுரமூன்றுமவெண்ணீறெழக்
கண்டவன்கடிதாகியநஞ்சினே
உண்டவன்னொளியானநெய்த்தானனே
தொண்டராய்த்தொழுவாாசுடாவாணரே. (௪)

முன்கைநோவக்கடைநதவாநிற்கவே
சங்கியாதுசமுத்திரநஞ்சுண்டான்
நங்கையோடுநவின்றநெய்த்தானனே
தங்கையாற்றொழுவாாதலைவாணரே. (௫)

சுட்டநீறுமெய்பூசிச்சுடலையுள்
நட்டமாடுவாநள்ளிருட்பேயொடே
சிட்டாவானவாதேருநெய்த்தானனே
இட்டமாய்த்தொழுவாரின்பவாணரே. (௬)

கொள்ளித்தீயெரிவீசிக்கொடியதோர
கள்ளிக்காட்டிடையாடுவாகாண்மினோ
தெள்ளித்தேறித்தெளிந்துநெய்த்தானனை
உள்ளத்தாற்றொழுவாருமபாவாணரே. (௭)

உச்சிமேலவிளங்குமமிளவெண்பிறை
பற்றியாடரவோடுஞ்சடைபபெய்தான்
நெற்றியாரழலகண்டநெய்த்தானனை
சுற்றிமெய்தொழுவாரசுடாவாணரே (௮)

மாலொடுமமறையோதியநான்முகன்
காலொடுமெமுடிகாண்டரிதாயினான்
சேலொடுஞ்செருச்செய்யுநெய்த்தானனை
மாலொடுநதொழுவாரவினைவாடுமே. (௯)

வலிநதடேதாள்வலிவாளரக்கன்றனை
நெருங்கநீளவரையூன்றுநெய்த்தானனா
புரிந்துகைநரமபோடிசைபாடலும
பரிநதனைபபணிவாரவினைபாறுமே. (௧௦)

திருசசிறறமபலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - நெய்யாடியப்பா, தேவியாா - பாலாமபிகையமமை.

---

## திருப்பழனம் - திருக்குறுந்தொகை.

திருச்சிறறம்பலம்.

அருவனாயததியீருரிபோாததுமை
உருவனாயொறறியூாபதியாகிலும
பருவராலவயலசூழ்நதபழனத்தான்
திருவினாற்றிருவேண்டுமிததேவாக்கே (௧)

வையமவநதுவணங்கிவலங்கொளும
ஐயனையறியாாசிலராதாகள்
பைகொளாடரவாாததபழனன்பால
பொய்யாகாலங்கள்போக்கிடுவாாகளே. (௨)

வண்ணமாகமுருக்கியவாசிகை
திண்ணமாகத்திருச்சடைச்சோததியே
பண்ணுமாகவேபாடுமபழனத்தான
எண்ணுநீரவனாயிரநாமமே. (௩)

மூக்கப்பாம்புபிடித்ததுமூச்சிட
வாக்கப்பாமபினைக்கண்டதுணிமதி
பாக்கப்பாமபினைப்பற்றுமபழனத்தான்
தார்க்கொண்மாலைசடைக்கரந்திட்டதே. (௪)

நீலமுண்டமிடற்றினனோந்தோ
கோலமுண்டகுணத்தானிறைந்தோ
பாலுமுண்டுபழனன்பாலென்னிடை
மாலுமுண்டிறையென்றன்மனத்துளே. (ரு)

மந்தமாகவளர்பிறைசூடியோ
சந்தமாகத்திருச்சடைசாத்துவான்
பந்தமாயினதீர்க்கும்பழனத்தான்
எந்தைதாய்தந்தையெம்பெருமானுமே (சு)

மாக்கமொன்றறியாமதியிலிகள்
பூக்கரத்திற்புரிகிலாமூடர்கள்
பாக்கணின்றுபரவும்பழனத்தான்
தாட்கணின்றுதலைவணங்காகளே (எ)

ஏரிணரிமையோர்கள்பணிகண்டு
தேறுவாரலாதீவினையாளர்கள்
பாறினார்பணிவேண்டுபழனத்தான
கூறினானுமையாளொடுங்கூடவே. (அ)

சுற்றுவார்தொழுவார்சுடர்வண்ணன்மேல்
தெற்றினார்திரியும்புரமூன்றெய்தான்
பற்றினார்வினைதீர்க்கும்பழனனை
எற்றினன்மறக்கேனெம்பிரானையே (கூ)

பொங்குமாகடல்சூழிலங்கைக்கிறை
அங்கமானவிறுத்தருள்செய்தவன்
பங்கனென்றும்பழனனுமையொடும்
தங்கன்றனடியேனுடையுச்சியே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - ஆபத்சகாயர், தேவியார் - பெரியநாயகியம்மை.
ஆ பதிகம் - ருகு.

---

### திருச்செம்பொன்பள்ளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கானறுத்தகடிபொழில்வண்டினம்
தேனறுத்ததிருச்செம்பொன்பள்ளியான்
ஊனறுத்ததோர்வெண்டலையுட்பலி
தானறுத்ததோர்கொள்கையன்காண்மினே. (க)

என்புமாமையும்பூண்டங்குழிதர்வார்க்
கன்புமாயிடுமாயிழையீரினி
செம்பொன்பள்ளியுளான்சிவலோகனை
நம்பொன்பள்ளியுள்கவினைநாசமே. (உ)

வேறுகோலத்தராணலர்பெண்ணலர்
கீறுகோவணவைத்துகிலாடையர்

தேறலாவதொன்றன்றுசெம்பொன்பள்ளி
ஆறுசூடியவண்ணலவனையே. (௩)

அருவராததோர்வெண்டலையேந்திவந்
திருவராயிடுவார்கடைதேடுவர்
தெருவெலாமுழல்வார்செம்பொன்பள்ளியார்
ஒருவர்தாமபலபேருளார்காண்மினே. (௪)

பூவுலாஞ்சடைமேற்புனல்சூடினன்
ஏவலாலெயின்மூன்றுமெரித்தவன்
தேவர்சென்றிறைஞ்சுஞ்செம்பொன்பள்ளியான்
மூவராய்முதலாய்நின்றமூர்த்தியே. (௫)

சலவராயொருபாம்பொடுதண்மதி
கலவராவதின்காரணமென்கொலோ
திலதநீண்முடியார்செம்பொன்பள்ளியார்
குலவிலாலெயிலம்பொன்றெய்தகூத்தரே. (௬)

கைகொள்சூலத்தர்கட்டுவாங்கத்தினார்
மைகொள்கண்டத்தராகியிருசுடர்
செய்யமேனிவெண்ணீற்றர்செம்பொன்பள்ளி
ஐயர்கையதோரைந்தலைநாகமே. (௭)

வெங்கணாகமவெருவுறவார்த்தவர்
பைங்கணானையினீருரிபோர்த்தவர்
செங்கண்மாலவிடையார்செம்பொன்பள்ளியார்
அங்கணாயடைந்தார்வினைதீர்ப்பரே. (௮)

நன்றிநாரணனான்முகனென்றிவர்
நின்றநீண்முடியோடடிகாண்புற்றுச்
சென்றுகாண்பரியான்செம்பொன்பள்ளியான்
நின்றசூழலினீளெரியாகியே. (௯)

திரியுமும்மதில்செங்கணையொன்றினால்
எரியவெய்தனலோடடியிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டார்செம்பொன்பள்ளியார்
அரியவானமவரருள்செய்வரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சொர்ணபுரீசர், தேவியார் - சுகந்தவனநாயகி.

---

### திருக்கடவூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மலைக்கொளானைமயக்கியவல்வினை
நிலைக்கொளானைநினைப்புறுநெஞ்சமே

கொலைக்கையானையுங்கொன்றிடுமாதலால
கலைக்கையானைகண்டீர்கடவூரரே. (க)

வெள்ளிமால்வரைபோலவதோரானையார
உள்ளவாறெனையுள்புகுமானையார
கொள்ளமாகியகோயிலுளானையார
கள்ளவானைகண்டீர்கடவூரரே. (உ)

ஞானமாகியநன்குணரானையார
ஊனைவேவவுருக்கியவானையார
வேனவானையுரிததுமையஞ்சவே
கானலானைகண்டீர்கடவூரரே. (ங)

ஆலமுண்டழகாயதோரானையார
நீலமேனிநெடும்பளிங்கானையார
கோலமாயகொழுஞ்சுடரானையார
காலவானைகண்டீர்கடவூரரே. (ச)

அளித்தவானஞ்சுமாடியவானையார
வெளுத்தநீள்கொடியேறுடையானையார
எளித்தவேழத்தையேழ்குவிததானையார
களித்தவானைகண்டீர்கடவூரரே. (ரு)

விடுததமாலவரைவிண்ணுறவானையார
தொடுததமாலவரைதூயதோரானையார
கடுத்தகாலனைக்காய்நததோரானையார
கடுத்தவானைகண்டீர்கடவூரரே. (சு)

மண்ணுளாரைமயக்குறுமானையார
எண்ணுளாரபலரேததிடுமானையார
விண்ணுளாரபலருமமறியானையார
கண்ணுளானைகண்டீர்கடவூரரே. (எ)

சினக்குஞ்செமபவளத்திரளானையார
மனக்குமவலவினைதீரததிடுமானையார
அனைக்குமன்புடையாரமனத்தானையார
கனைக்குமானைகண்டீர்கடவூரரே. (அ)

வேசமாகியவெளுசுடரானையார
நீதியானிலனுகியவானையார
ஓதியூழிதெரிநதுணரானையார
காதலானைகண்டீர்கடவூரரே. (கூ)

நீண்டமாலொடுநான்முகன்றானுமாய்க்
காண்டுமென்றுபுக்காரகளிருவருமம
மாண்டவாரழலாகியவானையார
காண்டலானைகண்டீர்கடவூரரே. (க0)

அடுத்துவந்தவிலங்கையர்மன்னனை
யெடுத்ததோள்களிறநெரித்தானையார
கடுத்தகாலனைக்காய்ந்ததோரானையார
கடுக்கையானைகண்டீர்கடவூரரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அமிர்தகடேசுவரர், தேவியார் - அபிராமியம்மை.

## திருக்கடவூர்மயானம் - திருக்குறுந்தொகை.

திருசசிறறம்பலம

குழைகொளகாதினாகோவணவாடையா
உழையா தாஙகடவூரினமயானததாா
பழையதமமடியாாசெயுமபாவமும
பிழையுநீாபபாபெருமானடிகளே (௧)

உனனிவானவரோதியசிநதையிற
கன்னலதேனகடவூரின்மயானததாா
தன்னைநோககிதொழூதெழூவாாக்கெலாம
பினனையென்னுாபெருமானடிகளே. (௨)

சூலமேநதுவாதோலுடையாடையா
ஆலமுண்டமுதேமிகதேக்குவா
காலாகாலாகடவூாமயானததாா
மாலைமாாபாபெருமானடிகளே. (௩)

இறைவனாிமையோாதொழுபைஙகழல
மறவனாகடவூரினமயானத்தாா
அறவனாரடியாரடியாாதஙகள்
பிறவிதீாபபாபெருமானடிகளே (௪)

கத்துகாளிகதநதணிவிததவா
மததாதாஙகடவூரின்மயானததாா
ஓதவொவ்வாதனசெய்துழலவாரொரு
பிததாகாணுமபெருமானடிகளே. (௫)

எரிகொள்மேனியிளமபிறைவைததவா
கரியாதாஙகடவூரின்மயானத்தாா
அரியரண்டத்துளோரயன்மாலுக்கும
பெரியாகாணுமபெருமானடிகளே. (௬)

அணஙகுபாகததாராரணநான்மறை
கணங்கொள்சோகடவூரின்மயானத்தாா
வணங்குவாரிடாதீாப்பாாமயக்குறும
பிணங்கொள்காடாபெருமானடிகளே (௭)

அரவுகையினராதிபுராணனார்
மரவுசோகடவூரின்மயானத்தார
பரவுவாரிடாதீரபபாபணிகொள்வா
பிரமன்மாற்கும்பெருமானடிகளே (அ-கூ-௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - பிரமபுரீசுவரா, தேவியாா - மலாக்குழனமின்னமமை.

---

திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை.

திருசசிறறம்பலம.

கொள்ளுஙகாதன்மைபெய்துறுங்கோலவளை
உள்ளுமுள்கியுமைக்குநதிருபபெயா
வளளன்மாமயிலாடுதுறையுறை
வெள்ளநதாஙகுசடையனைவேண்டியே (௧)

சிததநதேறுஞ்செறிவளைசிக்கெனும
பசசைநீருமெனபைங்கொடிபானமதி
வைத்தமாமயிலாடுதுறையரன்
கொததினிறபொலிகொன்றைகொடுககிலே (௨)

அண்டாவாழவுமமரரிருககையும
கண்டுவீறறிருக்குஙகருதகொன்றிலோம
வண்டுசோமயிலாடுதுறையரன
தொண்டாபாதஙகள்சூடிததுதையிலே. (௩)

வெருசினககடுஙகாலன்விரைகிலான
அஞ்சிறபடுமபிறபடுமறுக்கலாம
மஞசனமாமயிலாடுதுறையுறை
அஞ்சொலாளுமைபஙகனருளிலே (௪)

குறைவிலோஙகொடுமானிடவாழக்கையால
கறைநிலாவியகண்டனெண்டோளினன்
மறைவலானமயிலாடுதுறையுறை
இறைவனீளகழலேததியிருககிலே (௫)

நிலைமைசொலலுநெஞசேதவமென்செய்தாய
கலைகளாயவலலான்கயிலாயநன்
மலையன்மாமயிலாடுதுறையனம
தலையின்மேலுமனததுளுநதங்கவே (௬)

நீற்றினனிமிாபுன்சடையான்விடை
ஏற்றினனமையாளுடையான்புலன்
மாற்றினன்மயிலாடுதுறையென்று
போற்றுவார்க்குமுண்டோபுவிவாழ்க்கையே. (௭)

கோலுமபுலலுமொருகையிற்கூச்சமும
தோலுமபூண்டுதுயரமுற்றென்பயன்
நீலமாமயிலாடுதுறையனே
நூலுமவேண்டுமோ நுண்ணுணார்ந்தோாகட்கே. (அ)

பணங்கொளாடரவலகுற்பகீரதி
மணஙகொளச்சடைவைத்தமறையவன்
வணங்குமாமயிலாடுதுறையரன்
அணஙகோாபாலகொணடகோலமழகிதே. (௯)

நீணிலாவரவசசடைநேசனை
பேணிலாதவாபேதுறவோடடிமை
வாணிலாமயிலாடுதுறைதனை
காணிலாாகருங்கடுந துயரிலலையே. (௧௦)

பருததகோளுமமுடியுமபொடிபட
இருததினனவனின்னிசைகேடடலும
வரததினன் மாமயிலாடுதுறைதொழும
கரததினாவினைக்கடடறுஙகாண்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாடடிலுள்ளது
சுவாமிபெயா - மாயூரநாதா, தேவியாா - அஞ்சனாயகி.

## திருக்கழிப்பாலை - திருக்குறுந்தோகை.

திருசசிற்றம்பலம்.

வண்ணமுமவடிவுஞ்சென்றுகண்டிலள்
எண்ணிநாமஙகளேததநிறைநதிலள்
கண்ணுலாமபொழிலசூழ்கழிப்பாலையெம
அண்ணலேயறிவானிவடன்மையே. (௧)

மருநதுவானவருய்யநஞசுண்டுகந
திருந்தவனகழிபபாலையுளெமபிரான்
திருநதுசேவடிசிநதையுள்வைத்திவள்
பரிநதுாைககிலுமென்சொற்பழிக்குமே. (௨)

மழலைதானவரசசொற்றெரிகின்றிலள்
குழலினோமொழிகூறியகேண்மினோ
அழகனேகழிபபாலையெமமண்ணலே
இகழ்வதோவெனையேன்றுகொளென்னுமே. (௩)

செய்யமேனிவெண்ணீறணிவான்றனை
மையலாகிமதிக்கிலளாாையும்
கைகொள்வெண்மழுவன்கழிப்பாலையெம
ஐயனேயறிவானிவடன்மையே. (௪)

கருத்தனைக்கழிப்பாலையுண்மேவிய
ஒருத்தனையுமையாளொருபங்கனை
அருத்தியாற்சென்றுகண்டிடவேண்டுமென்
றொருத்தியாருளமூசலதாடுமே. (ரு)

கங்கையைச்சடைவைத்துமலைமகள்
நங்கையையுடனேவைத்தநாதனார்
திங்கள்சூடிதிருக்கழிப்பாலையான்
இங்குவாநிடுமென்றிறுமாக்குமே. (சு)

ஐயனையழகேயனலேந்திய
கையனைகறைசேர்தருகண்டனை
மையுலாம்பொழில்சூழ்கழிப்பாலையெம்
ஐயனைவிதியேயருளென்னுமே. (எ)

பத்தாகட்கமுதாயபரத்தினை
முத்தனைமுடிவொன்றிலாமூர்த்தியை
அத்தனையணியார்கழிப்பாலையெம்
சித்தனைச்சென்றுசேருமாசெப்புமே (அ-கூ)

பொன்செய்மாமுடிவாளரக்கன்றலை
யைஞ்சுநான்குமொன்றுமிறுத்தானவன்
என்செயான்கழிப்பாலையுளெம்பிரான்
துஞ்சும்போதுந்துணையெனலாகுமே (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பாலவண்ணநாதர், தேவியார் - வேதநாயகியம்மை.
ஆ. பதிகம் - சo

---

## திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மத்தமாமலர்சூடியமைந்தனார்
சித்தராய்த்திரிவார்வினைதீர்ப்பரால்
பத்தர்தாந்தொழுதேத்துபைஞ்ஞீலியெம்
அத்தனைத்தொழவல்லவர்நல்லரே. (க)

உடையர்கோவணமொன்றுங்குறைவிலர்
படைகொள்பாரிடஞ்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
சடையிற்கங்கைதரித்தசதுரரை
அடையவல்லவர்க்கில்லையவலமே. (உ)

விழுதுசூலத்தன்வெண்மழுவாட்படை
கழுதுதுஞ்சிருள்காட்டகத்தாடலான்
பழுதொன்றின்றிப்பைஞ்ஞீலிப்பரமனை
தொழுதுசெல்பவர்தம்வினைதூளியே (ங)

ஒன்றிமாலுமபிரமனுநதமமிலே
நின்றசூழலறிவரியானிடம
சென்றுபாரிடமேத்துபைஞ்ஞீலியுள்
என்றுமேவியிருநதவடிகளே (௪)

வேழத்தின்னுரிபோாத்தவிகிா தனா
தாழச்செஞ்சடைமேற்பிறைவைத்தவா
தாழைதண்பொழிலசூழ்நதபைஞ்ஞீலியாா
யாழின்பாடடையுகநதவடிகளே (௫)

குண்டபடடுக்குறியறியாச்சமண்
மிண்டரோடபடுத்துய்ய-போநதுநான்
கண்டநகாாவயலசூழ்நதபைஞ்ஞீலியெம
அண்டவாணனடியடைநதுய்நதனே. (௬)

வரிபபையாடரவாடடிமதகரி
உரிபபைமுடியவுததமனுருறை
திருபபைஞ்ஞீலிதிசைதொழுவாாகள்போய்
இருபபாவானவரோடினிதாகவே. (௭)

கோடலகோங்கமபுறவணிமுலலைமேல
பாடலவண்டிசைகேடகுமபைஞ்ஞீலியாா
பேடுமாணுமபிறரறியாததோா
ஆடுநாகமசைததவடிகளே. (௮)

காருலாமலாக்கொன்றையநதாரினன்
வாருலாமுலைமங்கையோாபஙகினன்
தேருலாமபொழிலசூழ்நதபைஞ்ஞீலியெம
ஆாகிலாவமுதையடைநதுய்மினே. (௯)

தருக்கிச்சென்றுதடவரைபற்றலும்
நெருக்கியூன்றினைநதுசிவனையே
யரக்கன்பாடவருளுமெமமானிடம
இருக்கைஞீலியென்பார்க்கிடரிலலையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - நீலகண்டேசுவரர், தேவியார் - விசாலாக்ஷியம்மை.

---

## திருவேட்களம் - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம்.

நன்றுநாடொறுநமவினைபோயறும
என்றுமின்பநதழைக்கருவிக்கலாம்
சென்றுநீர்திருவேட்களத்துள்ளுறை
துன்றுபொற்சடையானைத்தொழுமினே. (௧)

கருப்புவெஞ்சிலைக்காமனைக்காய்நதவன்
பொருப்புவெஞ்சிலையாற்புரஞ்செற்றவன்

விருப்பன்மேவியவேட்களங்கைதொழு
திருப்பனுகிலெனக்கிடரில்லையே. (௨)

வேட்களத்துறைவேதியனெமமிறை
ஆக்களேறுவரானைஞ்சுமாடுவா
பூக்கள்கொண்டவன்பொன்னடிபோற்றிலை
காபபாநம்மைக்கறைமிடற்றண்ணலே. (௩)

அலலலிலலையருவினைதானிலலை
மலகுவெண்பிறைசூடுமணுளனா
செலவனூதிருவேடகளங்கைதொழ
வலலராகிலவழியதுகாண்மினே. (௪)

துன்பமிலலைதுயரிலலையாமினி
நமபனுகியநன்மணிகண்டனூ
என்பொனூருறைவேட்களநன்னகர்
இன்பன்சேவடியேத்தியிருப்பதே. (௫)

கட்டபபட்டுக்கவலையிலவீழாதே
பொட்டவலலுயிாபோவதன்முன்னநீா
சிட்டனூதிருவேட்களங்கைதொழப
பட்டவலவினையாயினபாறுமே. (௬)

வட்டமென்முலையாளுமைபஙகனூ
எட்டுமொன்றுமிரண்டுமூன்றுமினூ
சிட்டன்சோதிருவேட்களங்கைதொழு
திட்டமாகியிருமடநெஞ்சமே (௭)

நட்டமாடியநமபனைநாடொறும
இட்டததாலினிதாகநினைமினோ
வட்டவாாமுலையாளுமைபங்கனூ
சிட்டனூதிருவேட்களநதன்னையே. (௮)

வட்டமாமதின்மூன்றுடன்வலலரண்
சுட்டகொள்கையராகிலுஞ்சூழ்நதவா
குட்டவலவினைதீர்த்துக்குளிாவிக்கும்
சிட்டாபோற்றிருவேட்களச்செலவரே. (௯)

சேடனூருறையுஞ்செழுமாமலை
ஓடியாங்கெடுத்தான்முடிபத்திற
வாடவூன்றிமலரடிவாங்கிய
வேடனூருறைவேட்களஞ்சேர்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பாசுபதேசுவரர், தேவியார் - நல்லநாயகியம்மை.

## திருநல்லம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொலலத்தானமனாதமர்வநதக்கால
இலலத்தாாசெயலாவதெனேழைகாள்
நலலத்தானமையாளுடையான்கழல
சொல்லத்தான்வலலிரோற்றுயாதீருமே. (௧)

பொக்கமபேசிபபொழுதுகழியாதே
துக்கநதீாவகைசொலலுவன்கேண்மினோ
தக்கன்வேள்விதகாத்ததழலவண்ணன்
நக்கன்சோநல்லநண்ணுதலநன்மையே. (௨)

பிணிகொள்வாாகுழற்பேதையாகாதலால
பணிகண்மேவிபபயனிலலைபபாவிகாள்
அணுகவேண்டிலரனெறியாவது
நணுகுநாதனகாதிருநல்லமே. (௩)

தமக்குநலலதுதமமுயிாபோயினால
இமைக்குமபோதுமிராதிக்குரமபைதான்
உமைக்குநலலவன்றானுறையுமபதி
நமக்குநலலதுநலலமடைவதே (௪)

உரைதளாநதுடலாாநடுஙகாமுனம
நரைவிடையுடையானிடநலலமே
பரவுமினபணிமின்பணிவாரொடே
விரவுமின்விரவாரைவிடுமினே. (௫)

அலலலாகவைமபூதஙகளாட்டினும
வலலவாறுசிவாயநமவென்று
நலலமேவியநாதனடிதொழ
வெலலவநதவினைபபகைவீடுமே. (௬)

மாதராரொடுமக்களுஞசுறறமும
பேதமாகிபபிரிவதன்முன்னமே
நாதன்மேவியநலலநகாதொழப
போதுமின்னெழுமின்புகலாகுமே. (௭)

வெமமையானவினைக்கடனீஙகிநீா
செமமையாயசிவகதிசோலாம
சுமமையாாமலர்தூவித்தொழுமினோ
நமமையாளுடையயானிடநலலமே. (௮)

காலமானகழிவதன்முன்னமே
ஏலுமாறுவணங்கிநின்றேத்துமின்
மாலுமாமலராஞெடுமாமறை
நாலுமவலலவாகோனிடநல்லமே. (௯)

மலலைமலகியதோளரக்கன்வலி
ஒல்லையில்லொழித்தானுறையும்பதி
நல்லநல்லமெனும்பெயர்நாவினலை
சொலலவல்லவர்தூநெறிசேர்வரே (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - உமாமகேசுவரா, தேவியாா, மஙகளநாயகியம்மை.

---

## திருஆமாத்தூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாமாத்தாகியமாலயன்மால்கொடு
தாமாத்தேடியுங்காண்கிலர்தாண்முடி
ஆமாத்தூரரனேயருளாயென்று
ஏமாப்பெய்திக்கண்டாரிறையானையே (க)

சந்தியானைச்சமாதிசெய்வாாதங்கள்
பந்தியானைபுத்தேளிரதொழப்படுமெ
அந்தியானையாமாத்தூரழகனைச்
சிந்தியாதவாதீவினையாளரே. (உ)

காமாத்தமமெனுங்காவலைப்பட்டுநான்
போமாத்தையறியாதுபுலமபுவேன்
ஆமாத்தூரரனேயென்றழைத்தலுமெ
தேமாததீங்கனிபோலததிததிக்குமே (௩)

பஞ்சபூதவலையிறபடுவதற்
கஞ்சிநானுமாமாத்தூரழகனை
நெஞ்சினுனினைநதேனினைவெய்தலுமெ
வஞ்சவாறுகள்வற்றினகாண்மினே. (௪)

சூராமனுங்குழலாளொருகூறனா
அராமனுஞ்சடையான்றிருவாமாததூா
இராமனுமவழிபாடுசெயீசனை
நிராமயன்றனைநாளுநினைமினே (௫)

பித்தனைப்பெருநதேவர்தொழபபடுமெ
அததனையணியாமாத்தூரமேவியா
முத்தினையடியேனுண்முயறலுமெ
பத்திவெள்ளமபரநததுகாண்மினே. (௬)

நீற்றினார்திருமேனியனேரிழை
கூற்றினன்குழற்கோலசசடையிலோா
ஆற்றினனணியாமாத்தூர்மேவிய
ஏற்றினனமையாளுடையீசனே (எ)

பண்ணிற்பாடலகள்பத்திசெய்வித்தகாக்
கண்ணித தாகுமமுதினையாமாத்தூா
சண்ணிபபானைத்தமாக்கணித்தாயதோர்
கண்ணிற்பாவையன்னனவன்காண்மினே. (அ)

குண்டாபீலிகள்கொள்ளுங்குணமிலா
மிண்டரோடெனைவேறுபடுத்துயக்
கொண்டநாதன்குளிாபுனலவீரடடத
தண்டனாிடமாமாத்தூாகாண்மினே (௯)

வானஞ்சாடுமதியரவத்தொடு
தானஞ்சாதுடன்வைததசடையிடைத
தேனஞ்சாடியதெங்கிளநீரொடும
ஆனஞ்சாடியவாமாததூரையனே. (௧0)

விடலையாயவிலஙகலலெடுத்தான்முடி
அடரவோாவிரலூன்றியவாமாத்தூா
இடமதாக்கொண்டவீசனுக்கென்னுளம
இடமதாகக்கொண்டின்புற்றிருபபனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - அழகுகாதலீசுரா, தேவியார், அழகியநாயகியம்மை.

---

## திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம்.

மாதியன்றுமனைக்கிருவென்றக்கால
நீதிதான்சொலலநீயெனககாரொனும
சோதியாா தருதோணிபுரவறகுத
தாதியாவனனென்னுமென்றையலே (௧)

நக்கமவநதுபலியிடென்றாக்கிட்ட
மிக்கதையலைவெள்வளைகொள்வது
தொக்குநீாவயற்றோணிபுரவனா
தக்கதன்றுதமதுபெருமைக்கே. (௨)

கெண்டைபோனயனத்திமவான்மகள்
வண்டுவார்குழலாளுடனாகவே
துண்டவான்பிறைத்தோணிபுரவனைக்
கண்டுகாமுறுகின்றனள்கன்னியே. (௩)

பாலையாழ்மொழியாளவள்தாழ்சடை
மேலளாவதுகண்டனள்விண்ணுறச்
சோலையார்தருதோணிபுரவற்குச்
சாலநல்லளாகின்றனள்தையலே. (௪)

பண்ணினேர்மொழியாள்பலியிட்டவிப
பெண்ணைமாலகொடுபெய்வளைகொள்வது
சுண்ணமாடியதோணிபுரத்துறை
அண்ணலாருக்குச்சாலவழகிதே. (௫)

முலலைவெண்ணகைமொய்குழலாயுனக்
கலலனுவதறிநதிலைநீகனித்
தொலலையாாபொழிற்றோணிபுரவற்கே
நலலையாயிடுகின்றனை நங்கையே. (௬)

ஒன்றுதானறியாருலகததவா
நின்றுசொலலிநிகழ்நதினைபபிலா
துன்றுவாாபொழிறறோணிபுரவா தம
கொன்றைசூடுங்குறிபபதுவாகுமே (௭)

உறவுபேய்க்கணமுண்பதுவெண்டலை
உறைவதீமமுடலிலோாபெண்கொடி
துறைகளாாகடறறோணிபுரததுறை
இறைவனாக்கிவளென்கண்டன்பாவதே. (௮)

மாகயானைமருபபோாமுலையினா
போகயானுமவளபுக்கதேபுகத
தோகைசோதருதோணிபுரவறகே
ஆகயானுமவாக்கினியானதே. (௯)

இடடமாயினசெய்வாளென்பெண்கொடி
கடடமபேசியகாராக்கன்றனைத
துட்டடக்கியதோணிபுரத்துறை
அடடமூாத்திக்குஅன்பதுவாகியே (௧௦)

திருச்சிறறம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயா - தோணியப்பா, தேவியாா - திருநிலைநாயகியம்மை.

---

## திருப்புகலூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

துன்னக்கோவணசசுண்ணவெண்ணீறணி
பொன்னக்கன்னசடைபபுகலூரரோ
மின்னக்கன்னவெண்டிங்களைப பாமபுடன்
என்னுக்கோவுடன்வைததிட்டிருபபதே. (௧)

இரைக்குமபாமபுமெறிதருதிங்களும
நுரைக்குங்கஙகையுநுண்ணியசெஞ்சடைப
புரைப்பிலாதபொழிற்புகலூரரை
உரைக்குமாசொல்லியொள்வளைசோருமே. (௨)

ஊசலாமரவலகுலென்சோர்குழல
ஏசலாமபழிதநதெழிலகொண்டனா
ஓசொலாய்மகளேமூறையோவென்று
பூசலநாமிடுதுமபுகலூரர்க்கே. (௩)

மின்னினேரிடையாளுமைபங்கனைத்
தன்னைநேரொபபிலாததலைவனைப்
புன்னைக்கானற்பொழிற்புகலூரனை
எனனுளாகவைததின்புற்றிருபபனே. (௪)

விண்ணினாமதிசூடியவேநதனை
எண்ணிநாமஙகளோதியெழுத்தஞ்சுங்
கண்ணினறகழலகாண்பிடமேதெனிற்
புண்ணியன்புகலூருமெனெஞ்சமே. (௫)

அண்டவாணரமுதுணநஞ்சுண்டு
பண்டுநான்மறையோதியபாடலன்
தொண்டராகிததொழுதுமதிபபவா
புண்டரீகததுளாாபுகலூரரே. (௬)

தததுவநதலைகண்டறிவாரிலை
தத்துவநதலைகண்டவாகண்டிலா
தததுவந்தலைநின்றவாக்கலலது
தத்துவனலன்றண்புகலூரனே. (௭)

பெருங்கையாகிப்பிளிறிவருவதோா
கருஙகையானைக்களிற்றுரிபோாத்தவா
வருங்கையானைமதகளிறஞ்சினைப
பொருங்கையானைகண்டோபுகலூரரே. (௮)

பொன்னொத்தநிறத்தானுமபொருகடல
தன்னொத்தநிறத்தானுமறிகிலாப
புன்னைத்தாதுபொழிறபுகலூரரை
என்னத்தாவெனவென்னிடாதீருமே. (௯)

மத்தனுய்மதியாதுமலைதனை
எததினன்றிரடோண்முடிபத்திற
ஒத்தினன்விரலாலொருங்கேத்தலும்
பொத்தினன்புகலூரைத்தொழுமினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - வாததமானீசுவரர், தேவியார் - கருந்தார்குழலியம்மை.
ஆ பதிகம் - ௪௦.

---

### திருவேகம்பம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்டுசெயதபழவினையின்பயன்
கண்டுங்கண்டுங்களித்திகாநெஞ்சமே

வண்டுலாமலாச்செஞ்சடையேகம்பன்
தொண்டனுய்த்திரியாய்துயர்தீரவே. (௧)

நச்சிநாளுநயந்தடியாரதொழ
விச்சையாலுமைநங்கைவழிபடக்
கொச்சையாகுறுகாசெறிதீம்பொழில
கசசியேகமபமேகைதொழுமினே. (௨)

ஊனிலாவியியங்கியுலகெலாம
தானுலாவியதன்மையராகிலும
வானுலாவியபாணிபிறங்கவெங்
கானிலாடுவாகச்சியேகமபரே. (௩)

இமையாமுக்கண்ணரென்னெஞ்சத்துள்ளவா
தமையாரும்மறிவொண்ணாத்தகைமையா
இமையோரேத்தவிருநதவனேகம்பன்
நமையாளும்மவனைத்தொழுமின்களே. (௪)

மருந்தினோடுநற்சுற்றமுமக்களும்
பொருநதின்றெனக்காயவெமபுண்ணியன்
கருந்தடங்கண்ணினாளுமைகைதொழ
இருநதவன்கச்சியேகமபதெந்தையே. (௫)

பொருளினோடுநற்சுற்றமுமபறறிலாக்
கருளுநன்மைதநதாயவருமபொருள்
சுருள்கொள்செஞ்சடையான்கச்சியேகமபம
இருள்கெடச்சென்றுகைதொழுதேத்துமே. (௬)

மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந்
தாக்குமைவாதமாப்பையவிழ்த்தருள்
நோக்குவானமைநோய்வினைவாராமே
காக்குநாயகன்கச்சியேகமபனே. (௭)

பண்ணிலோசைபழத்தினிலின்சுவை
பெண்ணொடாணென்றுபேசற்கரியவன்
வண்ணமிலலிவடிவுவேறாயவன்
கண்ணிலுண்மணிகச்சியேகம்பனே. (௮)

திருவினாயகன்செம்மலாமேலயன்
வெருவநீண்டவிளங்கொளிச்சோதியான்
ஒருவனாயுணாவாயுணர்வலலதோா
கருவுமாயகன்கச்சியேகமபனே. (௯)

இடுகுநுண்ணிடையேந்திளமென்முலை
வடிவின்மாதர்திறமனம்வையன்மின்
பொடிகொள்மேனியன்பூமபொழிற்கச்சியுள்
அடிகளெம்மையருந்துயாதீர்பபரோ. (௰)

இலங்கைவேந்தனிராவணன்சென்றுதன்
விலங்கலையெடுக்கவிரலூன்றலும்
கலங்கிக்கச்சியேகம்பவோவென்றலும்
நலங்கொள்செல்வமளித்தானெங்கணாதனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது
சுவாமிபெயர் - ஏகாம்பரநாதர், தேவியார் - காமாக்ஷியம்மை.

---

## திருவேகம்பம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூமேலானும்பூமகள்கேள்வனும்
நாமேதேவரொனுமைநடுக்குற
தீமேவும்முருவாதிருவேகம்பா
ஆமோவல்லற்படவடியோங்களே. (௧)

அருந்திறலமரரயன்மாலொடு
திருந்தநின்றுவழிபடத்தேவியோ
டிருந்தவன்னெழிலாகச்சியேகம்பம்
பொருந்தச்சென்றுபுடைபட்டெழுதுமே. (௨)

கறைகொள்கண்டத்தெண்டோளிறைமுக்கணன்
மறைகொணாவினன்வானவர்க்காதியான்
உறையும்பூம்பொழில்சூழ்கச்சியேகம்பம்
முறைமையாற்சென்றுமுந்தித்தொழுதுமே. (௩)

பொறிப்புலன்களைப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்துநினைந்தவர்சிந்தையுள்
அறிப்புறும்முதாயவனேகம்பம்
குறிப்பினாற்சென்றுகூடித்தொழுதுமே (௪)

சிந்தையுட்சிவமாய்நின்றசெம்மையோ
டந்தியாயனலாய்ப்புனல்வானமாய்ப்
புந்தியாய்ப்புகுந்துள்ளநிறைந்தவெம்
எந்தையேகம்பமேத்தித்தொழுமினே. (௫)

சாக்கியத்தொடுமற்றுஞ்சமண்படும்
பாக்கியமிலாப்பாடுசெலாதுறப்
பூக்கொள்சேவடியான்கச்சியேகம்பம்
நாக்கொடேத்தியந்துதொழுதுமே. (௬)

மூப்பினோடுமுனிவுறுத்தெந்தமை
யாப்பதன்முன்னமணியமரர்க்கிறை
காப்பதாயகடிபொழிலேகம்பம்
சேர்ப்பதாகநாஞ்சென்றடைந்துய்துமே. (௭)

ஆலுமாமயிற்சாயனல்லாரொடும
சாலநீயுறுமாலதவிர்நெஞ்சமே
நீலமாமிடற்றண்ணலேகம்பனா
கோலமாமலர்ப்பாதமேகுமபிடே. (அ)

பொய்யனைத்தையும்விட்டவாபுநதியுள்
மெய்யனைச்சுடாவெண்மழுவேநதிய
கையனைக்கச்சியேகமபமேவிய
ஐயனைத்தொழுவாாக்கிலலேயல்லலே. (கூ)

அரக்கன்றனவலியுனனிககயிலேயை
நெருக்கிச்சென்றெடுத்தான்முடிதோள்நெரித
திரக்கவின்னிசைகேட்டவனேகமபம
தருக்கதாகநாஞ்சாரநதுதொழுதுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவெண்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம்.

பண்காட்டிபபட்டியாயதன்பத்தாக்குக்
கண்காட்டிக்கண்ணினின்றமணியொக்கும
பெண்காட்டிபபிறைச்சென்னிவைத்தான்றிரு
வெண்காட்டையடைநதுய்மடநெஞ்சமே. (க)

கொள்ளிவெநதழலவீசிநின்றாடுவா
ஒள்ளியகணஞ்சூழுமைபங்கனா
வெள்ளியன்கரியன்பசுவேறிய
தெள்ளியான்றிருவெண்காடடைநெஞ்சே. (உ)

ஊனெனக்குமின்பமவேண்டியுழலாதே
வானெனக்குமவழியாவதுநின்மினோ
தானெனக்குநதன்னடியவாநாவினில
தேனெனக்குநதிருவெண்காடடைநெஞ்சே. (௩)

பருவெண்கோட்டுபபைங்கண்மதவேழத்தின்
உருவஙகாட்டிநின்றனுமையஞ்சவே
பெருவெண்காட்டிறைவனுறையுமமிடம
திருவெண்காடடைநதுய்மமடநெஞ்சமே. (௪)

பற்றவன்கஙகைபாமபுமதியுடன்
உற்றவன்சடையானுயாஞானங்கள்
கற்றவன்கயவாபுரமோரமபால
செற்றவன்றிருவெண்காடடைநெஞ்சே. (௫)

கூடினனுமையாளொருபாகமாய்
வேடனாய்விசயற்கருள்செய்தவன்

சேடனார்சிவனார்சிந்தைமேயவெண்
காடனாரடியேயடைநெஞ்சமே. (சு)

தரித்தவன்கங்கைபாம்புமதியுடன்
புரித்தபுன்சடையான்கயவாபுரம
எரித்தவன்மறைநான்கினோடாறங்கம
விரித்தவன்னுறைவெண்காடடைநெஞ்சே. (எ)

பட்டமிண்டையவைகொடுபத்தர்கள்
சிட்டனாதியென்றுசிந்தைசெய்யவே
நட்டமூர்த்திஞானச்சுடராய்நின்ற
அட்டமூர்த்திதன்வெண்காடடைநெஞ்சே. (அ)

ஏனவேடத்தினானும்பிரமனும
தானவேடமுனையுழ்ந்தறிகின்றிலா
ஞானவேடன்விசயற்கருள்செயும
கானவேடன்றன்வெண்காடடைநெஞ்சே (கூ)

பாலையாடுவர்பன்மறையோதுவர்
சேலையாடியகண்ணுமைபங்கனார்
வேலையார்விடமுண்டவெண்காடர்க்கு
மாலையாவதுமாண்டவரங்கமே. (க0)

இராவணஞ்செயமாமதிபற்றவை
இராவணமமுடையான்றனையுள்குமின்
இராவணன்றனையூன்றியருள்செய்த
விராவணன்றிருவெண்காடடைமினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுவேதாரணியேசுவரர், தேவியார் - பிரமவித்தியாநாயகியம்மை.

---

### திருவாய்மூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னையிருந்திடந்தேடிக்கொண
டங்கேவந்தடையாளமருளினார
தெங்கேதோன்றுந்திருவாய்மூர்ச்செல்வனார்
அங்கேவாவென்றுபோனாரதென்கொலோ (க)

மனனுமாமறைககாடுமமனளனார
உன்னியுன்னியுறங்குகின்றேனுக்குத்
தன்னைவாய்மூர்த்தலைவனுமாசொலலி
என்னைவாவென்றுபோனாரதென்கொலோ (உ)

தஞ்சேகண்டேன்றரிக்கிலாதாரொன்றேன்.
அஞ்சேனுன்னையழைக்கவந்தேனென்றார்

உஞ்சேனென்றுகந்தேயெழுந்தோட்டந்தேன்
வஞ்சேவல்லரோவாய்மூரடிகளே. (௩)

கழியக்கண்டிலேன் கண்ணெதிரேகண்டேன்
ஒழியப்போந்திலலனொக்கவேயோட்டந்தேன்
வழியிற்கண்டிலேன்வாய்மூரடிகடம
சுழியிற்பட்டுச்சுழலகின்றதென்கொலோ. (௪)

ஒள்ளியாரிவரன்றிமற்றில்லையென்
றுள்கியுள்கியுகந்திருந்தேனுக்குத்
தெள்ளியாரிவர்போலத்திருவாய்மூர்க்
கள்ளியாரவர்போலக்கரந்ததே (௫)

யாதேசெய்துமியாமலோநீயென்னில
ஆதேயேயுமளவிலபெருமையன்
மாதேவாகியவாய்மூர்மருவினார்
போதேயென்றும்புகுந்ததும்பொய்கொலோ (௬)

பாடிப்பெற்றபரிசில்பழங்காசு
வாடவாட்டந்தவிர்ப்பாரவரைப்போல
தேடிக்கொண்டுதிருவாய்மூர்க்கேயெனு
ஓடிப்போந்திங்கொளித்தவாறென்கொலோ. (௭)

திறக்கப்பாடியவென்னினுஞ்செந்தமிழ்
உறைப்புப் பாடியடைப்பித்தாருண்ணின்றார்
மறைக்கவல்லரோதம்மைத்திருவாய்மூர்ப்
பிறைகொள்செஞ்சடையாரிவர்பித்தரே. (௮)

தனக்கேருமைதவிர்கென்றுவேண்டினும்
நினைத்தென்பொய்க்கருள்செய்திடுநின்மலன்
எனக்கேவந்தெதிர்வாய்மூருக்கேயெனப்
புனற்கேபோற்கோயில்புக்கதும்பொய்கொலோ. (௯)

தீண்டற்கரியதிருவடியொன்றினால்
மீண்டற்குமிதித்தாரரக்கன்றன்னை
வேண்டிக்கொண்டேனதிருவாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வனென்றலுந்தோன்றுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர் - வாய்மூரீசுவரர், தேவியார் - பாலினுநன்மொழியம்மை.

---

## திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமணிகண்டத்தர்நீள்சடைக்
கோலமாமதிகங்கையுங்கூட்டினார்
சூலமான்மழுவேந்திச்சுடாமுடிப்
பாலநெய்யாடுவர்பாலைத்துறையரே. (௧)

கவளமாலகளிற்றின்னுரிபோர்த்தவர்
தவளவெண்ணகைமங்கையோர்பங்கினர்
திவளவானவர்போற்றித்திசைதொழும்
பவளமேனியர்பாலைத்துறையரே. (௨)

மின்னினுண்ணிடைக்கண்ணியர்மிக்கெங்கும்
பொன்னிநீர்மூழ்கிப்போற்றியடிதொழ
மன்னிநான்மறையோடுபலகீதமும்
பன்னினாரவர்பாலைத்துறையரே. (௩)

நீடுகொட்டமாய்நின்றபேய்க்கணங்
கூடுபூதங்குழுமிநின்றார்க்கவே
ஆடினாரழகாகியநான்மறை
பாடினாரவர்பாலைத்துறையரே. (௪)

சித்தர்கன்னியர்தேவர்கள்தானவர்
பித்தர்நான்மறைவேதியர்பேணிய
அத்தனேநமையாளுடையாயெனும்
பத்தர்கட்கன்பர்பாலைத்துறையரே. (௫)

விண்ணினார்பணிந்தேத்தவியப்புறு
மண்ணினார்மறவாதுசிவாயவென்
றெண்ணினார்க்கிடமாவெழில்வானகம்
பண்ணினாரவர்பாலைத்துறையரே. (௬)

குரவனார்கொடுகொட்டியுங்கொக்கரை
விரவினார்பண்கெழுமியவீணையும்
மருவுநாண்மலர்மல்லிகைசெண்பகம்
பரவுநீர்ப்பொன்னிப்பாலைத்துறையரே. (௭)

தொடருந்தொண்டரைத்துக்கந்தொடர்ந்துவந்
தடரும்போதரனாயருள்செய்பவர்
கடலினஞ்சணிகண்டர்கடிபுனல்
படருஞ்செஞ்சடைப்பாலைத்துறையரே. (௮)

மேகந்தோய்பிறைசூடுவர்மேகலை
நாகந்தோய்ந்தவரையினர்நல்லியற்
போகந்தோய்ந்தபுணர்முலைமங்கையோர்
பாகந்தோய்ந்தவர்பாலைத்துறையரே. (௯)

வெங்கண்வாளரவாட்டிவெருட்டுவர்
அங்கணாரடியார்க்கருணல்குவர்
செங்கண்மாலயன்றேடற்கரியவர்
பைங்கணேற்றினர்பாலைத்துறையரே. (௧௦)

உரத்தினாலரக்கன்னுயர்மாமலை
நெருக்கினானைநெரித்தவன்பாடலும்

இரக்கமாவருள்செய்தபாலைத்துறை
கரத்தினாற்றொழுவாரவினையோயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-பாலைவனநாதர், தேவியார் - தவளவெண்ணகையம்மை.
ஆ௨ பதிகம் - ருக.

---

## திருநாகேச்சரம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நலலாநலலதோாநாகஙகொண்டாட்டுவா
வலலாவலவினைதீாக்குமருநதுகள்
பலலிலோடுகையேநதிப்பலிதிரி
செலவாபோலதிருநாகேச்சாவரோ (க)

நாவலமபெருநதீவினிலவாழ்பவா
மேவிவநதுவணங்கிவினையொடும
பாவமாயினபறறறுவித்திடும
தேவாபோலதிருநாகேச்சாவரோ (உ)

ஓதமார்கடலினவிடமுண்டவா
ஆதியாரயனோடமராக்கெலாம
மாதொாகூறாமழுவலனேநதிய
நாதாபோலதிருநாகேச்சரவரோ (ங)

சந்திரனொடுசூரியர்தாமுடன்
வந்துசீாவழிபாடுகள்செய்தபின்
ஐந்தலையரவின்பணிகொண்டருள்
மைந்தாபோல்மணிநாகேச்சரவரோ. (ச)

பண்டோாநாளிகழ்வான்பழிதக்கனா
கொண்டவேள்விக்குமண்டையதுகெடத
தண்டமாவிதாதாவின்றலைகொண்ட
செண்டாபோலதிருநாகேசசாவரோ. (ரு)

வமபுபூங்குழன்மாதுமறுகவோா
கமபயானையுரித்தகரததினா
செமபொனாரிதழிமமலாச்செஞ்சடை
நமபர்போலதிருநாகேச்சரவரோ. (சு)

மானையேநதியகையினாமையறு
ஞானச்சோதியராதியாநாமநதான்
ஆனவஞ்செழுத்தோதவநதண்ணிக்கும
தேனாபோலதிருநாகேச்சரவரோ. (எ)

கழலகொள்காலினர்காலனைக்காய்ந்தவர்
தழல்கொள்மேனியாசாநதவெண்ணீறணி
அழகரானிழற்கீழறமோதிய
குழகர்போலகுளிர்நாகேச்சரவரோ. (அ)

வட்டமாமதின்மூன்றுடன்வல்லரண்
சுட்டசெய்கையராகிலுஞ்சூழ்ந்தவா
குட்டவல்வினை தீர்த்துக்குளிர்விக்கும்
சிட்டார்போலதிருநாகேச்சரவரே. (௯)

தூர்த்தன்றோண்முடிதாளுந்தொலையவே
சேர்த்தினார்திருப்பாதத்தொருவிரல
ஆர்த்துவந்துலகத்தவராடிடும
தீர்த்தர்போலதிருநாகேசசரவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - செண்பகாரணியேசுவரர், தேவியார் - குன்றமுலைநாயகியம்மை.

## திருஅதிகைவீரட்டம - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கோணன்மாமதிசூடியோர்கோவணம
நாணிலவாழகக்கைநாகந்துமப்பணிலெ
பாணில்வீணைபயின்றவனவீரட்டம
காணிலல்லலதென்கண்டுயிலகொளளுமே (௧)

பண்ணினைபபவளததிரண்மாமணி
அண்ணலையமராதொழுமாதியைச்
சுண்ணவெண்பொடியான்றிருவீரட்டம
நண்ணிலல்லலதென்கண்டுயிலகொள்ளுமே (௨)

உற்றவாதமமுறுநோய்களைபவா
பெற்றமேறுமபிறஙகுசடையினா
சுற்றுமபாய்புனலசூழ்திருவீரட்டம
கற்கிலல்லலதென்கண்டுயிலகொள்ளுமே. (௩)

முற்றுவெண்மதிசூடுமுதலவனா
செற்றாவாழுநதிரிபுரநதீயெழ
விற்றன்கொண்டெயிலெய்தவாவீரட்டம
கற்றுலல்லலதென்கண்டுயிலகொளளுமே. (௪)

பல்லாருமபலதேவாபணிபவன்
நல்லாருநநயநதேததபபடுபவன்
விலலான்மூவெயிலெய்தவன்வீரட்டம
கலலேனுகிலென்கண்டுயிலகொள்ளுமே. (௫)

வண்டார்கொன்றையுமததமவளாசடை
கொண்டான்கோலமதியோடரவமும
விண்டாாமும்மதிலெய்தவன்வீரட்டம
கண்டாலல்லலதென்கண்டுயிலகொள்ளுமே. (௬)

அரையார்கோவணவாடையனறெலாந
திரையாரொண்புனலபாய்கெடிலக்கரை

விளையார்நீற்றன்விளங்குவீரட்டன்பால்
களையேனுகிலென்கண்டுயில்கொள்ளுமே. (எ)

நீறுடைத்தடநதோளுடைநின்மலன்
ஆறுடைபபுனல்பாய்கெடிலக்கரை
ஏறுடைக்கொடியான்றிருவீரட்டம
கூறிலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (அ)

செங்கண்மாலவிடையேறியசெல்வனா
பைங்கணானையினீருரிபோர்த்தவா
அங்கண்ஞாலமதாகியவீரட்டம
கங்குலாகவென்கண்டுயில்கொள்ளுமே. (கூ)

பூணுணாரமபொருநதவுடையவா
நாணுகவரைவிலவிடையமபினுல
பேணாருமமதிலெய்தவாவீரட்டம
காணேனுகிலென்கண்டுயில்கொள்ளுமே (கo)

வரைசாாநதவயிரததிரண்மாணிககம
திரையாாநதபுனலபாய்கெடிலககரை
விரையாாநீற்றன்விளங்கியவீரட்டம
உரையேனுகிலென்கண்டுயில்கொளளுமே. (கக)

உலநதாாவெண்டலையூண்கலனுகவே
வலநதானமிககவன்வாளரக்கன்றனைச்
சிலமபாாசேவடியூன்றினவீரட்டம
புலமபேனுகிலென்கண்டுயில்கொள்ளுமே. (கஉ)

திருசசிறறமபலம்.

இது நகொட்டிலுளளது
சுவாமிபெயா - வீரட்டானேசுவரா, தேவியாா - திருவதிகைநாயகியமமை.

---

## திருஅதிகைவீரட்டம் - திருக்குறுந்தொகை

திருசசிற்றம்பலம.

* எட்டுநான்மலாகொண்டவனசேவடி
மட்டலரிடுவாாவினைமாயமால
கட்டிததேன்கலநதன்னகெடிலவீ
ரட்டனாரடிசேவடிசேருமவருக்கே (க)

நீளமாநினைநதெண்மலரிட்டவா
கோலவலவினையுங்குறைவிபபரால
வாளமாவிழியுங்கெடிலக்கரை
வேளிசூழ்நதழகாயவீரட்டரே. (உ)

---

* அஷடபுட்பமாவன—புனனை - வெள்ளெருக்கு - சணபகம - நநதியாவாததம்- நீலோற்பலம் - பாதிரி - அலரி - செந்தாமரை - என்னுமிவற்றின்புட்பங்களாம. இவை புலரிமுதலிய காலஙகளிறசாததும் அஷ்டபுட்பம் மற்றுமுள்ளவகைககளைப் புட்பவிதியிற்காணக.

கள்ளினுண்மலரோரிருநான்குகொண்
டுள்குவாரவாவலவினையோட்டுவார்
தெள்ளுநீரவயலபாய்கெடிலக்கரை
வெள்ளைநீறணிமேனிவீரட்டரே. (௩)

பூங்கொததாயினமூன்றுடோரைநதிட
ஓங்கிநின்றவாவலவினையோட்டுவாா
வீங்குதண்புனலபாய்கெடிலக்கரை
வேங்கைத்தோலுடையாடைவீரட்டரே. (௪)

தேனைபபோதுகள்மூன்றுடோரைநதுடன்
தானபபோதிடுவாாவினை தீாப்பவா
மீனததண்புனலபாய்கெடிலக்கரை
வேனலானையுரித்தவீரட்டரே. (௫)

ஏழித்தொன்மலாகொண்டுபணிநதவா
ஊழிதமதொலவினையோடவகற்றுவாா
பாழிததண்புனலபாய்கெடிலக்கரை
வேழத்தின்னுரிபோரததவீரடடரே. (௬)

உரைசெய்நூலவழியொண்மலரிட்டிடத்
திரைகள்போலவருவலவினை தீாபபரால
வரைகள்வநதிழியுஙகெடிலக்கரை
விரைகள்சூழ்நதழகாயவீரடடரே. (௭)

ஒலிவண்டறையொண்மலரொட்டினுல்
காலையேத்தவினையைக்கழிபபரால
ஆலிவநதிழியுஙகெடிலக்கரை
வேலிசூழ்நதழகாயவீரட்டரோ. (௮)

தாரிததுளளிததடமலரொட்டினுல
பாரித்தேத்தவலலாாவினைபாற்றுவாா
மூரிதமதெண்டிரைபாய்கெடிலக்கரை
வேரிசசெஞ்சடைவேய்நதவீரட்டரே. (௯)

அடடபுடபமவைகொளுமாறுகொண்
டட்டமூாத்தியனுதிதன்பாலணைந
தட்டுமாறுசெய்கிற்பவதிகைவீ
ரட்டனாரடிசேருமவாகளே. (௧௦)

திருச்சிற்றமபலம்.

---

## திருநாரையூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம்.

வீறுதானுடைவெற்பன்மடநதையோர்
கூறனுகிலுங்கூன்பிறைசூடிலும்

நாறுபூம்பொழில்நாரையூர்நமபனுக்
காறுசூடிலுமமமவழகிதே. (௧)

புள்ளிகொண்டபுலியுரியாடையும
வெள்ளிகொண்டவெண்பூதிமெய்யாடலும
நள்ளிதண்டிரைநாரையூரானஞ்சை
அள்ளியுண்டலுமமமவழகிதே. (௨)

வேடுதங்கியவேடமுங்வெண்டலை
ஓடுதங்கியவுண்பலிகொள்கையும
நாடுதங்கியநாரையூரானடம
ஆடுபைங்கழலமமவழகிதே. (௩)

கொக்கின்றூவலுங்கூவிளங்கண்ணியும
மிக்கவெண்டலைமாலைவிரிசடை
நக்கனுகிலுநாரையூநமபனுக்
கக்கினாமுமமமவழகிதே. (௪)

வடிகொள்வெண்மழுமானமாகைகளும
பொடிகொள்செமபவளமபுரைமேனியும
நடிகொள்நன்மயிலசோதிருநாரையூா
அடிகடமவடிவமமவழகிதே. (௫)

சூலமலகியகையுஞ்சுடரொடு
பாலுநெய்தயிராடியபான்மையும்
ஞாலமல்கியநாரையூநமபனுக்
காலநீழலுமமமவழகிதே. (௬)

பண்ணினான்மறைபாடலொடாடலும
எண்ணிலாபுரமூன்றெரிசெய்ததும
நண்ணினாதுயாதீர்த்தலுநாரையூா
அண்ணலாசெய்கையமமவழகிதே. (௭)

என்புபூண்டெருதேறியிளம்பிறை
மின்புரிந்தசடைமேலவிளங்கவே
நன்பகற்பலிதேரினுநாரையூா
அன்பனுக்கதுவம்மவழகிதே. (௮)

முரலுங்கின்னரமொநதைமுழங்கவே
இரவினின்றெரியாடலுநீடுவான்
நரலும்வாரிநன்னாரையூர்நம்பனுக்
கரவும்பூணுதலம்மவழகிதே. (௯)

கடுக்கையஞ்சடையன்கயிலைம்மலை
எடுத்தவாளரக்கன்றலையீரைஞ்சும

நடுக்கம்வந்திறநாளையூரான்விரல்
அடுத்ததன்மையுமமமவழகிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - சவுந்தரேசுவரர், தேவியாா, திரிபுரசுந்தரநாயகி.

---

## திருக்கோளிலி - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம்.

மைக்கொள்கண்ணுமைபங்கினன்மான்மழு
தொக்ககையினன்செய்யதோர்சோதியன்
தொக்கமாபொழில்சூழ்தருகோளிலி
நக்கனைத்தொழுகமவினைநாசமே. (௧)

முத்தினைமுதலாகியமூாத்தியை
விததினைவினைவாயவிகிாதனைக்
கொத்தலாபொழிலசூழ்தருகோளிலி
அத்தனைததொழநீங்குநமமலலலே. (௨)

வெண்டிரைபபரவைவிடமுண்டதோா
கண்டனைக்கலநதார்தமக்கன்பனைக்
கொண்டலமபொழிற்கோளிலிமேவிய
அண்டனைத்தொழுவார்க்கலலலிலலையே. (௩)

பலவுமவலவினைபாறுமபரிசினால
உலவுங்கங்கையுநதிங்களுமொண்சடை
குலவினான்குளிருமபொழிற்கோளிலி
நிலவினான்றனைநித்தல்நினைமினே (௪)

அலலலாயினதீருமழகிய
முலலைவெண்முறுவலலுமையஞ்சவே
கொலலையானையுரித்தவன்கோளிலிச்
செலவன்சேவடிசென்றுதொழுமினே. (௫)

ஆவின்பாலகொண்டளவிலருநதவம
பாலன்வேண்டலுஞ்செலலென்றுபாற்கடல
கூவினான்குளிரும்பொழிற்கோளிலி
மேவினானைத்தொழவினைவீடுமே. (௬)

சீாத்தநன்மனையாளுஞ்சிறுவருமம
ஆர்த்தசுற்றமும்பற்றிலையாதலால
கூத்தனாருறையுந்திருக்கோளிலி
ஏத்திநீாதொழுமின்னிடர்தீருமே. (௭)

மாலதாகிமயங்குமனிதர்காள்
காலம்வந்துகடைமுடியாமுனம்
கோலவார்பொழிற்கோளிலிமேவிய
நீலகண்டனைநின்றுநினைமினே. (௮)

கேடுமூடிக்கிடந்துண்ணுநாடது
தேடிநீர்திரியாதேசிவகதி
கூடலாந்திருக்கோளிலியீசனை ப
பாடுமின்னிரவோடுபகலுமே. (௯)

மடுத்துமாமலையேந்தலுற்றான்றனை
அடாத்துப்பின்னுமிரங்கியவற்கருள்
கொடுத்தவன்னுறைகோளிலியேதொழ
விடுத்துநீங்கிடுமேலைவினைகளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கோளிலிநாதர், தேவியார் - வண்டமாபூங்குழலம்மை.

---

## திருக்கோளிலி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முன்னமேநினையாதொழிந்தேனுனை
இன்னநாளுனசேவடியேத்திலேன்
செநநெலாவயலசூழ்திருக்கோளிலி
மன்னனேயடியேனைமறவலே. (௧)

விண்ணுளாரதொழுதேத்துமவிளக்கினை
மண்ணுளாரவினைதீர்க்குமருநதினை ப
பண்ணுளாாபயிலுநதிருக்கோளிலி
அண்ணலாரடியேதொழுதுய்ம்மினே. (௨)

நாளுநமமுடைநாள்களறிகிலோம
ஆளுநோய்களோரைமபதோடாறெட்டும
ஏழமைபபட்டிருநதுநீரைநையாதே
கோளிலியரன்பாதமேகூறுமே. (௩)

விழவினோசையொலியறாத்தண்பொழில
பழகினாவினைதீர்க்கும்பழமபதி
அழலகையானமருநதிருக்கோளிலிக்
குழகனார்திருப்பாதமேகூறுமே. (௪)

மூலமாகியமூவாக்குமூர்த்தியைக்
காலனாகியகாலற்குங்காலனைக்
கோலமாமபொழிலசூழ்திருக்கோளிலிச்
சூலபாணிதன்பாதநதொழுமினே. (௫)

காற்றனைக்கடனஞ்சமுதுண்டவெண்
ணீற்றனைநிமிாபுன்சடையண்ணலை
ஆற்றனையமருந்திருக்கோளிலி
ஏற்றனாரடியேதொழுதேத்துமே. (௬)

வேதமாயவிண்ணோர்கடலைவனை
ஓதமன்னுயிரேத்துமொருவனைக்

கோதிவண்டறையுந்திருக்கோளிலிச்
சூலபாணிதன்பாதந்தொழுமினே. (௭)

நீதியாற்றொழுவார்கடலைவனை
வாதையானவிடுக்குமணியினைக்
கோதிவண்டறையுந்திருக்கோளிலி
வேதநாயகன்பாதம்விரும்புமே. (௮)

மாலுநான்முகனாலுமறிவொணாப்
பாலின்மென்மொழியாளொருபங்கனைக்
கோலமாம்பொழில்சூழ்திருக்கோளிலி
நீலகண்டனைநித்தனினைமினே. (௯)

அரக்கனாயவிலங்கையர்மன்னனை
நெருக்கியம்முடிபத்திறுத்தானவற்
கிரக்கமாகியவன்றிருக்கோளிலி
அருத்தியாயடியேதொழுதுய்ம்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ_ பதிகம் - ௫௭.

## திருவாறைவடதளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையருள்
நிலையினான்மறைத்தான்மறைக்கொண்ணுமே
அலையினார்பொழிலாறைவடதளி
நிலையினானடியேநினைந்துய்ம்மினே. (௧)

மூக்கினான்முரன்றோதியக்குண்டிகை
தூக்கினார்குலந்தூரறுத்தேதனக்
காக்கினானணியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாலருநோய்களே. (௨)

குண்டரைக்குணமில்லரைக்கூறையின்
மிண்டரைத்துரந்தவிமலன்றனை
அண்டரைப்பழையாறைவடதளிக்
கண்டரைத்தொழுதுய்ந்தனகைகளே. (௩)

முடையரைத்தலைமுண்டிக்குமொட்டரைக்
கடையரைக்கடிந்தார்கனல்வெண்மழுப்
படையரைப்பழையாறைவடதளி
உடையரைக்குளிர்ந்துள்குமென்னுள்ளமே. (௪)

ஒள்ளரிக்கணார்முன் *னமணின்றுணும்
கள்ளரைக்கடிந்த †கருப்பூறலை
அள்ளலைப்புனலாறைவடதளி
வள்ளலைப்புகழத்துயர்வாடுமே. (௫)

* அமண்நின்றுஉணும்-என்பது—நிருவாணமாகநின்று உண்ணுதல்.
† கருப்பூறல்-என்பது—கரும்புரசம். கருப்பு-வலித்தல்விகாரம்.

நீதியைக்கெடநின்றமணைபுணும
சாதியைக்கெடுமாசெய்தசங்கரன்
ஆதியைப்பழையாறைவடதளிச்
சோதியைத்தொழுவார்துயர்தீருமே. (௬)

திரட்டிரைக்கவளந்திணிக்குஞ்சமண்
பிரட்டரைப்பிரித்தபெருமான்றனை
அருட்டிறத்தணியாறைவடதளித்
தெருட்டரைத்தொழத்தீவினைதீருமே. (௭)

ஒதினத்தெழுத்தஞ்சுணராச்சமண்
*வேதினைப்படுத்தானைவெங்கூற்றுதை
பாதனைப்பழையாறைவடதளி
நாதனைத்தொழநம்வினைநாசமே. (௮)

வாயிருந்தமிழேபடித்தாளுரு
ஆயிரஞ்சமணுமமழிவாக்கினான்
பாயிருமபுனலாறைவடதளி
மேயவன்னெனவலவினைவீடுமே. (௯)

செருத்தனைச்செயுஞ்சேணரக்கன்னுடல்
எருத்திறவிரலாலிறையூன்றிய
அருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சோமேசுவரர், தேவியார், சோமகலாநாயகியம்மை.
ஆ பதிகம் - ௫௮.

---

## திருமாற்பேறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொருமாற்றின்படைவேண்டிநற்பூமபுனல
வருமாற்றின்மலர்கொண்டுவழிபடும
கருமாற்கின்னருள்செய்தவன்காண்டகு
திருமாற்பேறுதொழவினைதேயுமே. (௧)

ஆலத்தார்நிழலிலறநாலவர்க்குக்
கோலத்தாலுரைசெய்தவன்குற்றமில
மாலுக்காருள்செய்தவன்மாற்பேறு
ஏலத்தான்றொழுவார்க்கிடரில்லையே. (௨)

துணிவண்ணச்சுடராழிகொள்வானெண்ணி
அணிவண்ணத்தலர்கொண்டடியர்ச்சித்த

* வேது - என்பது—வெப்பம்.

மணிவண்ணற்கருள்செய்தவன்மாற்பேறு
பணிவண்ணத்தவாக்கிலலையாமபாவமே. (௩)

நீதலைசெய்துதீவினைவீழாதே
காதலசெய்துகருத்தினினின்றனன்
மாதவாபயிலமாற்பேறுகைதொழப
போதுமின்வினையாயினபோகுமே. (௪)

வாரகொள்மென்முலைமங்கையோாபங்கினன்
வாாகொணன்முரசமமறையவ்வறை
வாாகொள்பைமபொழிலமாறபேறுகைதொழு
வார்கள்மன்னுவாபொன்னுலகத்திலே. (௫)

பண்டைவலவினைபற்றறுக்குமவகை
உண்டுசொலலுவன்கேண்மினெளிகிளா
வண்டுசோபொழிலசூழ்திருமாறபேறு
கண்டுகைதொழததீருங்கவலையே. (௬)

மழுவலான்திருநாமமகிழ்நதுரைத்
தழுவலாகளுக்கன்புசெய்தின்பொடும
வழுவிலாவருள்செய்தவன்மாற்பேறு
தொழுவலாதமக்கிலலைததுயரமே. (௭)

முன்னவனுலகுககுமுழுமணிப
பொன்னவன்திகழ்முத்தொடுபோகமா
மன்னவன்திருமாற்பேறுகைதொழும
அன்னவரொமையாளுடையாாகளே. (௮)

வேடனாய்விசயன்னொடுமெய்துவெங்
காடுநீடுகநாடியகண்ணுதல
மாடநீடுயருநதிருமாற்பேறு
பாடுவாாபெறுவாாபரலோகமே. (௯)

கருத்தனாய்க்கயிலாயமலைதனைத்
தருக்கினாலெடுததானைததகரவே
வருததியாயருள்செய்தவன்மாற்பேறு
அருத்தியாற்றொழுவாாக்கில்லையல்லலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மால்வணங்குமீசர், தேவியார் - கருணைநாயகியம்மை.

---

## திருமாற்பேறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏதுமொன்றுமறிவிலராயினும்
ஓதியஞ்செழுத்தும்முணர்வார்கட்குப்

பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரோ. (க)

அச்சமில்லைநெஞ்சேயரனுமங்கள்
நிச்சலுங்கினையாய்வினைபோயறக்
கச்சமாவிடமுண்டகண்டாவென
வைச்சமாநிதியாவர்மாற்பேறரோ. (௨)

சாத்திரமபலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றுபணிதிரேல்
மாத்திரைக்குளருளுமாற்பேறரோ. (௩)

இருந்துசொல்லுவன்கேண்மின்களேழைகாள்
அருந்தவந்தருமஞ்செழுத்தோதினால
பொருந்துநோய்பிணிபோகத்துரப்பதோா
மருந்துமாகுவாமன்னுமாற்பேறரோ. (௪)

சாற்றிச்சொல்லுவன்கேண்மின்றரணியீர்
ஏற்றின்மேல்வருவான்கழலேத்தினால
கூற்றைநீக்கிக்குறைவறுத்தாள்வதோா
மாற்றிலாச்செம்பொனாவர்மாற்பேறரோ. (௫)

ஈட்டமாநிதிசாலவிழக்கினும
வீட்டுங்காலன்விரையவழைக்கினுங்
காட்டின்மாநடமாடுவாய்காவெனின்
வாட்டந்தீர்க்கவும்வலலர்மாற்பேறரோ. (௬)

ஐயனேயரனேயென்றரற்றினால்
உய்யலாமுலகத்தவர்பேணுவர்
செய்யபாதமிரண்டுநினையவே
வையமாளவும்வைப்பர்மாற்பேறரோ. (எ-அ-௯)

உந்திச்சென்றுமலையையெடுத்தவன்
சந்துதோளொடுதாளிறவூன்றினன்
மந்திபாய்பொழில்சூழுமாற்பேறெனா
அந்தமில்லதோரின்பமணுகுமே. (க0)

திருச்சிற்றம்பலம்

---

## திருவரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தூரும்புனல்மொய்யரிசிற்கரைப்
புத்தூரன்னடிபோற்றியென்பாரெலாம்
பொய்த்தூரும்புலனைந்தொடுபுல்கிய
மைத்தூரும்வினைமாற்றவும்வல்லரோ. (க)

பிறைக்கணிச்சடையெம்பெருமானென்று
கறைக்கணித்தவர்கண்டவணக்கத்தாய்
உறக்கணித்துருகாமனத்தாரகளைப்
புறக்கணித்திடும்புத்தூர்ப்புனிதரே. (௨)

அரிசிலின்கரைமேலணியார்தரு
புரிசைநந்திருப்புத்தூர்ப்புனிதனைப்
பரிசொடும்பரவிப்பணிவார்க்கெலாம்
துரிசில்நன்னெறிதோன்றிடுங்காண்மினே. (௩)

வேதனைமமிகுவீணையில்மேவிய
கீதனைக்கிளருநறுங்கொன்றையம்
போதனைப்புனல்சூழ்ந்தபுத்தூரனை
நாதனைநினைந்தென்மனநையுமே. (௪)

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சோர்விலைவிட்டுநல்லிட்டமாய்த்
திருப்புத்தூரனைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றிலுமண்ணிக்குங்காண்மினே. (௫)

பாம்பொடுமதியும்படர்புன்சடைப்
பூம்புனலும்பொதிந்தபுத்தூருளான்
நாமம்பணிந்தடிபோற்றிடநாடொறும்
சாம்பலென்புதமக்கணியாகுமே. (௬)

கனலங்கைதனிலேந்திவெங்காட்டிடை
அனலங்கெய்திநின்றாடுவர்பாடுவர்
புனலஞ்செஞ்சடைமேன்மிலையந்தரு
புனலுஞ்சூடுவர்போலும்புத்தூரரே (௭)

காற்றினுங்கடிதாகிநடப்பதோர்
ஏற்றினுமிசைந்தேறுவரென்பொடு
நீற்றினையணிவர்நினைவாய்த்தமைப்
போற்றியென்பவர்க்கன்பர்புத்தூரரே (௮)

முன்னுமுப்புரஞ்செற்றனராயினும்
அன்னமொப்பராலவந்தடைந்தார்க்கெலாம்
மின்னுமொப்பர்விரிசடைமேனிசெம்
பொன்னுமொப்பர்புத்தூரெம்புனிதரே. (௯)

செருத்தனுற்றனதேர்செலவுய்த்திடும்
கருத்தனாய்க்கயிலையெடுத்தானுடல்
பருத்ததோள்கெடப்பாதத்தொருவிரல்
பொருத்தினார்பொழிலார்ந்தபுத்தூரரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-படிக்காசுவைத்தநாதர், தேவியார் - அழகம்மை.
௮௨ பதிகம் - ௫௪.

**கடுவாய்க்கரைத்திருப்புத்தூர்-திருக்குறுந்தகைகை.**

திருச்சிற்றம்பலம்.

ஒருத்தனைமூவுலகொடுதேவர்க்கு
மருத்தனையடியேன்மனத்துள்ளமாக்
கருத்தனைக்*கடுவாய்ப்புனலாடிய
திருத்தனைப்புத்தூர்சசென்றுகண்டுய்ந்தெனே. (க)

யாவருமறிதற்கரியான்றனை
மூவரின்முதலாகியமூர்த்தியை
நாவினலலுரையாகியநாதனைத்
தேவனைப்புத்தூர்சசென்றுகண்டுய்ந்தெனே. (உ)

அன்பனையடியாரிடர்நீக்கியைச
செமபொனைததிகழுந்திருக்கச்சியே
கமபனைக்கடுவாய்க்கரைதென்புத்தூர
நன்பொனைக்கண்டுநானுய்யபபெற்றெனே. (ந)

மாதனத்தைமாதேவனைமாறிலாக்
கோதனத்திலைந்தாடியைவெண்குழைக்
காதனைக்கடுவாய்க்கரைதென்புத்தூர
நாதனைக்கண்டுநானுய்யபபெற்றெனே. (ச)

குண்டுபட்டகுற்றநதவிர்த்தென்னையாட
கொண்டுநற்றிறங்காட்டியகூத்தனைக்
கண்டனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர
அண்டனைக்கண்டருவினையற்றெனே. (ரு)

பநதபாசமறுதலெனையாடகொண்ட
மைநதனைமமனவாளனைமாமலாக்
கந்தநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர
எநதையீசனைக்கண்டினிதாயிற்றே. (சு)

உமபரானையுருததிரமூர்த்தியை
†அமபரானையமலனையாதியைக்
கமபுநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர
எமபிரானைக்கண்டின்பமதாயிற்றே. (எ)

மாசாரபாசமயக்கறுவித்தெனுள்
நேசமாகியநித்தன்மணாளனைப்
பூசுநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர
ஈசனேயெனவின்பமதாயிற்றே. (அ)

இடுவாரிட்டகவளங்கவர்ந்திரு
○கடுவாயிட்டவர்கட்டுரைகொள்ளாதே
கடுவாய்த்தென்கரைப்புத்தூரடிகட்காட்
படவேபெற்றுநான்பாக்கியஞ்செய்தெனே. (கூ)

---

* கடுவாயென்பது—ஒருநதியின்பெயர்.
†-அம்பர்-என்பது—ஒருதலம். ○ கடுவாய்-என்பது—கடுவெளவாய்.

அரக்கனாற்றலழித்தவன்பாடலகேட்
டிரக்கமாகியருள்புரியீசனைத்
திரைக்கொணீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்குநாதனைக்காணப்பெற்றுய்ந்தனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சொர்னபுரீசுவரர், தேவியார் - சிங்கேசுவரியம்மை.

---

**திருக்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை.**

திருச்சிற்றம்பலம்.

இரங்காவன்மனத்தார்களியங்குமுப்
புரங்காவல்லழியப்பொடியாக்கினான்
*தரங்காடுந்தடநீர்ப்பொன்னித்தென்கரைக்
குரங்காடுதுறைக்கோலக்கவாலியே. (க)

முத்தினை மணியைப்பவளத்தொளிர்
தொத்தினைச்சுடர்ச்சோதியைச்சோலைசூழ்
கொத்தலர்குரங்காடுதுறையுறை
அத்தனென்னவண்ணித்திட்டிருந்ததே. (உ)

குளிர்புனற்குரங்காடுதுறையனைத்
தளிர்நிறத்தையல்பங்கனைத்தண்மதி
ஒளியனைநினைந்தேனுக்கெனுள்ளமும்
தெளிவினைத்தெளியத்தெளிந்திட்டதே. (ங)

மணவன்காண்மலையாணெடுமங்கலக்
கணவன்காண்கலைஞானிகள்காதலெண்
குணவன்காண்குரங்காடுதுறைதனில
அணவன்காணன்புசெய்யுமடியார்க்கே. (ச)

ஞாலத்தார்தொழுதேத்தியநன்மையன்
காலத்தானுயிர்போக்கியகாலினன்
நீலத்தாமிடற்றான்வெள்ளைநீறணி
கோலத்தான்குரங்காடுதுறையனே. (ரு)

ஆட்டினான்முன்னமமணரோடென்றனைப்
பாட்டினான்றனபொன்னடிக்கின்னிசை
வீட்டினான்வினைமெய்யடியாரொடும்
கூட்டினான்குரங்காடுதுறையனே. (சா)

மாத்தன்றான்மறையார்முறையான்மறை
ஓத்தன்றாருகன்றன்னுயிருண்டபெண்
போத்தன்றானவள்பொங்குசினந்தணி
கூத்தன்றான்குரங்காடுதுறையனே. (எ)

---

* தரங்கம் ஆடும்-என்பது—தரங்காடும்எனநின்றது.

நாடிநநதமராயினதொண்டாகாள்
ஆடுமின்னழுமின்றொழுமின்னடி
பாடுமின்பரமன்பயிலுமமிடம
கூடுமின்குரங்காடுதுறையனே. (௮)

தென்றனன்னெடுநதேருடையானுடல
பொன்றவெங்கனலபொன்றவிழித்தவன்
அன்றவநதகனையயிற்சூலததால
கொன்றவன்குரங்காடுதுறையனே. (௯)

நற்றவஞ்செய்தநாலவாக்குநல்லற
முற்றவண்மொழியாலருள்செய்தநற்
கொற்றவன்குரங்காடுதுறைதொழுப
பற்றுந்தீவினையாயினபாறுமே. (௧௦)

கடுத்ததோளரக்கன்கயிலைமமலை
எடுத்ததோள்தலையிற்றலறவ்விரல
அடுத்தலுமவனின்னிசைகேட்டருள்
கொடுத்தவன்குரங்காடுதுறையனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆபற்சகாயர், தேவியார-பவளக்கொடியம்மை.

---

## திருக்கோழம்பம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வேழம்பற்றைவாவேண்டிற்றுவேண்டிப்போய்
ஆழமபற்றிவீழ்வாரபலவாதாகள்
கோழமபத்துறைகூத்தன்குரைகழல
தாழும்பத்தர்கள்சாலச்சதுரரே. (௧)

கயிலைநன்மலையாளுங்கவாலியை
மயிலியன்மலைமாதின்மணாளனைக்
குயில்பயில்பொழிற்கோழமபமேயவென்
உயிரினைநினைந்துள்ளமுருகுமே. (௨)

வாழும்பான்மையராகியவான்செலவம
தாழும்பான்மையராகித்தமவாயினால
தாழம்பூமணநாறியதாழ்பொழில்
கோழம்பாவெனக்கூடியசெல்வமே. (௩)

பாடலாக்கிடும்பண்ணொடுபெண்ணிவள்
கூடலாக்கிடுங்குன்றின்மணற்கொடு
கோடல்பூத்தலர்கோழம்பத்துண்மகிழ்ந்
தாடுங்கூத்தனுக்கன்புபட்டாளன்றே. (௪)

தளிரகொண்மேனியள்தான்மிகவஞ்சவோர்
பிளிறுவாரணத்தீருரிபோர்த்தவன்
குளிரகொணீரவயாகோழமபமேவினுன்
நளிரகொணீரசடைமேலுநயநததே. (௬)

நாதராவாநமக்குமபிறர்க்குநதாம
வேதநாவாவிடைக்கொடியார்வெற்பில
கோதைமாதொடுங்கோழம்பங்கோயிலகொண்
டாதிபாதமடையவலலார்களே. (௭)

முன்னைநான்செய்தபாவமுதலறப்
பின்னைநான்பெரிதுமமருள்பெற்றதும
அன்னமார்வயற்கோழம்பத்துள்ளமா
பின்னலவார்சடையானைபபிதற்றியே. (எ)

ஏழைமாரிடநின்றிருகைக்கொண்டுண்
கோழைமாரொடுங்கூடியகுற்றமாங்
கூழைபாய்வயற்கோழமபத்தானடி
ஏழையேன்முன்மறநதங்கிருநததே. (அ)

அரவணைபபயின்மாலவன்வநதடி
பரவனைப்பரமாமபரஞ்சோதியைக்
குரவனைக்குரவாரபொழிற்கோழமபத்
துரவனையொருவாக்குணரவொண்ணுமே. (கூ)

சமரசூரவன்மாறைபத்தடிநதவேற்
குமரன்றுதைதநற்கோழமபமேவிய
அமரர்கோவினுக்கன்புடைத்தொண்டாகள்
அமரலோகமதாளுடையாாகளே. (க0)

துட்டனுகிமலையெடுத்தானுங்கீழ்
படடுவீழநதுபடாநதுய்யபபோயினன்
கொடடநாறியகோழமபத்தீசனெனன்
றிட்டகீதமிசைத்தவரக்கனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்,- கோகுலேசுவரர், தேவியார் - சவுந்தரியம்மை.

## திருப்பூவனூர்-திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம.

பூவனூர்ப்புனிதன்றிருநாமந்தான்
நாவினூறுநூறாயிரநண்ணினூர்
பாவமாயினபாறிப்பறையவே
தேவர்கோவினுஞ்செலவர்களாவரே. (க)

என்னனென்மனையெந்தையெனாருயிர்
தன்னன்றன்னடியேன்றனமாகிய
பொன்னன்பூவணனாமேவியபுண்ணியன்
இன்னனென்றறிவொண்ணானியற்கையே. (உ)

குற்றங்கூடிக்குணமபலகூடாதீா
மற்றுந்தீவினைசெய்தனமாய்க்கலாம
புற்றராவினன்பூவணனாரீசன்போ
கற்றுவாழ்த்துங்கழிவதன்முன்னமே. (ங)

ஆவின்மேவியவைநதமாநதாடுவான்
தூவெணீறுதுதைநதசெமமேனியான
மேவனாலவிரிவெண்ணியின்றென்கணா
பூவனாாபுகுவாரவினைபோகுமே. (ச)

புலலமூாத்துயூாபூவனாருமபுனல
நல்லமூாத்திநலலூாநனிபள்ளியூா
தில்லையூாதிருவாரூாசிக்காவிநல
வலலமூரெனவலவினைமாயுமே. (ரு)

அனுசயபபட்டதுவிதுவென்னாதே
கனிமனதமொடுமெண்கனூநீாமலகிட
புனிதனைபபூவனாரனைபபோறறுவாா
மனிதரிற்றலையானமனிதரே (சு)

ஆதிநாதனமரர்களர்சசிதன்
வேதநாவன்வெறபினமடப்பாவைபோா
பாதியானுன்பரநதபெருமபடைட
பூதநாதன்றென்பூவனாாநாதனே. (எ)

பூவனாாதண்புறமபயமபூமபொழில
நாவலூாநள்ளாறுநென்னிலங
கோவலூாகுடவாயில்கொடுமுடி
மூவலூருமுக்கண்ணனாாகாண்மினே (அ)

ஏவமேதுமிலாவமணேதலா
பாவகாரிகள்சொலவலைபபட்டுநான்
தேவதேவனதிறநெறியாகிய
பூவனாாபுகுதபபெற்றநாளின்றே. (கூ)

நாரணன்னெடுநான்முகனிந்திரன்
வாரணன்குமரன்வணங்குங்கழற்
பூரணன்றனைபபூவனார்மேவிய
காரணன்னெனையாளுடைக்காளையே. (கo)

மைக்கடுத்தநிறத்தரக்கன்வரை
புக்கெடுத்தலும்பூவனாரன்னடி

மிக்கடுத்தவிரலசிறி தூன்றலும
பக்கடுத்தபின்பாடியுய்ந்தானன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - புடபவனநாதா, தேவியாா - கற்பகவல்லியம்மை.

---

## திருவலஞ்சுழி - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம.

ஓ,நமாாகடலினவிடமுண்டவன்
பூ,தநாயகனபொறகயிலைக்கிறை
மாதொாபாகன்வலஞ்சுழியீசனைப
பாதமேததபபாறையுநமபாவமே (க)

கபிலைநாதன்கறுத்தவாமுடபுரம
எயிலகடீயெழவெலவலவிததகன்
மயிலகளாலுமவலஞ்சுழியீசனைப
பயில்கிலாசிலாபாவித்தொழுமபரோ. (உ)

இளையகாலமெமமானையடைகிலாத்
துளையிலாசசெவித்தொண்டாகாணுமமுடல
வளையுங்க லமவலஞசுழியீசனைக்
களைகணுகக்கருதிநீருயமினே, (௩)

நறைகொள்பூம்புனலகொண்டெழுமாணிக்காய்
குறைவிலாக்கொடுங்கூற்றுதைத்திடடவன்
மறைகொணுவன்வலஞ்சுழிமேவிய
இறைவனையினியென்றுகொலகாணபதே. (ச)

விண்டவாபுரமூன்றுமெரிகொளத
திண்டிறறசிலையாலெரிசெய்தவன்
வண்டுபண்முரலுநதண்வலஞ்சுழி
அண்டனுக்கடிமைத்திறததாவனே. (ரு)

படஙகொள்பாமபொடுபொன்மதியஞ்சடை
அடங்கவாழவலலானுமபாதமபிரான்
மடநதைபாகன்வலஞ்சுழியானடி
அடைநதவாக்கடிமைத்திறத்தாவனே. (சா)

நாக்கொடுபரவுமடியாாவினை
போக்கவலலபுரிசடைப்புண்ணியன்
மாக்கொள்சோலைவலஞ்சுழியீசன்றன்
ஏக்கொளப்புரமூன்றெரியானவே. (எ)

தேடுவாாபிரமன்றிருமாலவா
ஆடுபாதமவருமறிகிலாா

மாடவீதிவலஞ்சுழியீசனைத்
தேடுவானுறுகின்றதென்சிந்தையே. (௮)

கண்பனிக்குங்கைகூப்புங்கண்மூன்றுடை
நண்பனுக்கெனைநான்கொடுப்பேனென்னும்
வண்பொனித்தென்வலஞ்சுழிமேவிய
பண்பனிப்பொனைச்செய்தபரிசிதே (௯)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
நலங்கொள்பாதத்தொருவிரலூன்றினான்
மலங்குபாய்வயல்சூழ்ந்தவலஞ்சுழி
வலங்கொள்வாரடியென்றலைமேலவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - * கபர்த்தேசுவரர், தேவியார் - பெரியநாயகியம்மை

---

## திருவாஞ்சியம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

படையும்பூதமும்பாம்பும்புல்வாயதள்
உடையுந்தாங்கியவுத்தமனார்க்கிடம்
புடைநிலாவியபூம்பொழில்வாஞ்சியம்
அடையவல்லவர்க்கல்லலொன்றில்லையே (௧)

பறப்பையும்பசுவும்படுத்தும்பல
திறத்தவும்முடையோர்திகழும்பதி
கறைப்பிறைச்சடைக்கண்ணுதல்சேர்தரு
சிறப்புடைத்திருவாஞ்சியஞ்சேர்மினே. (௨)

புற்றிலாடரவோடபுனன்மதி
தெற்றுசெஞ்சடைத்தேவபிரான்பதி
சுற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியம்
பற்றிப்பாடுவார்க்குப்பாவமில்லையே. (௩)

அங்கமாறுமருமறைநான்குடன்
தங்குவேள்வியர்தாம்பயிலுநகர்
செங்கண்மாலிடமார்திருவாஞ்சியம்
தங்குவார்நம்மமரர்க்கமரரே. (௪)

நீறுபூசிநிமிர்சடைமேற்பிறை
ஆறுசூடுமடிகளுறைபதி
மாறுதானெருங்கும்வயல்வாஞ்சியம்
தேறிவாழ்பவர்க்குச்செல்வமாகுமே. (௫)

---

* கபர்த்தம் என்பது—சடைமுடி.

அற்றுபபற்றின்றியாளையுமிலலவாக
குற்றநற்றுணையாவனுறைபதி
தெற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியம
கற்றுச்சோபவாக்குக்கருத்தாவதே. (௬)

அருக்கனங்கிநமனொடுதேவாகள்
திருத்துஞ்சேவடியான்றிகழுநநகா
ஒருந்திபாகமுகந்தவன்வாஞ்சியம
அருத்தியாலடைவாாக்கிலலையலலலே. (எ-அ-கூ கo)

திருசசிற்றம்பலம்.

இது சோழநாடடிலுள்ளது.
சுவாமிபெயா - சுகவாஞசிநாதா, தேவியாா - வாழவநதஅம்மை.

## திருநள்ளாறு - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம

உள்ளாறுதசோாபுண்டரிகததிரள்
தெள்ளாறுச்சிவசோதித்திரளினைக்
கள்ளாறுதபொறகொன்றைகமழ்சடை
நள்ளாறுவெனநமவினைநாசமே. (க)

ஆரணப்பொருளாமருளாளனா
வாரணத்துரிபோாத்தமணாளனா
நாரணனண்ணியேத்துநள்ளாறனா
காரணக்கலைஞானக்கடவுளே. (உ)

மேகமபூண்டசோாமேருவிற்கொண்டயில
சோகமபூண்டழலசோரத்தொட்டானவன
பாகமபூண்டமாலபங்கயத்தானொடு
நாகமபூண்டுகூத்தாடுநள்ளாறனே. (௩)

மலியுஞ்செஞ்சடைவாளரவமமொடு
பொலியுமபூமபுனல்வைததபுனிதனா
நலியுங்கூற்றைநலிநதநள்ளாறா தம
வலியுங்கண்டிறுமாந்துமகிழ்வனே. (௪)

உறவனுய்நிறைநதுள்ளங்குளிர்பபவன்
இறைவனுகிநின்றெண்ணிறைந்தானவன்
நறவநாறுமபொழிற்றிருநள்ளாறன்
மறவனுய்ப்பன்றிப்பின்சென்றமாயமே. (௫)

செக்கரங்கழிசெஞ்சுடர்ச்சோதியார்
நக்கரங்கரவார்த்தநள்ளாறனா
வக்கரன்னுயிர்வவ்வியமாயற்குச்
சக்கரமருள்செய்தசதுரரோ. (௬)

வஞ்சநஞ்சிற்பொலிகின்றகண்டத்தா
விஞ்சையிற்செல்வப்பாவைக்குவேந்தனா
வஞ்சநெஞ்சத்தவாக்குவழிகொடா
நஞ்சநெஞ்சாக்கருளுநள்ளாறரே. (எ)

அலலனென்றுமலாக்கருளாயின
சொலலனென்றுசொலலாமறைசசோதியான
வலலனென்றுமவலலாவளமிக்கவா
நலலனெனறுநலலாக்குநள்ளாறனே. (அ)

பாமபணைபபள்ளிகொண்டபரமனும
பூமபணைபபொலிகின்றபுராணனும
தாமபணிந்தளபபுண்ணுத்தனித்தழல
நாமபணிநதடிபோற்றுநள்ளாறனே. (கூ)

இலங்கைமன்னனிருபதுதோளிற
மலங்கமாலவண்ாமேலவிரலவைத்தவா
நலங்கொணீற்றாநள்ளாறனைநாடொறும
வலங்கொள்வாாவினையாயினமாயுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயா - தெர்ப்பாரணியேசுவரர், தேவியாா - போகமாாத்தபூண்முலேயம்மை.

ஆ பதிகம் - கூஅ.

திருக்கருவிலி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டகுழலாாசுழலிலவலேப
பட்டிடமெமயங்கிபபரியாதுநீா
கடடிட்டவினைபோகக்கருவிலிக்
கொட்டிட்டையுறைவான்கழலகூடுமே. (க)

ஞாலமலகுமனிதாகாள்நாடொறும
ஏலமாமலரோடிலேகொண்டுநீா
காலனாவருதன்முன்கருவிலிக்
கோலவார்பொழிற்கொட்டிட்டைசோமினே. (உ)

பங்கமாயினவேகபபறைநதுநீா
மங்குமாநினையாதேமலாகொடு
கங்கைசேர்சடையான்றன்கருவிலிக்
கொங்குவார்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (ங)

வாடிநீாவருந்தாதேமனிதர்காள்
வேடனாய்விசயற்கருள்செய்தவெண்
காடனாருறைகின்றகருவிலிக்
கோடுநீள்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (ச)

உய்யுமாறிதுகேண்மினுலகத்தீர
பைகொள்பாமபரையான்படையாரமழுக்
கையினானுறைகின்றகருவிலிக்
கொய்கொள்பூமபொழிற்கொட்டிட்டைசேரமினே. (௫)

ஆற்றவுமமவலத்தழுநதாதுநீர
தோற்றுநதீயொடுநீரநிலந்தூவெளி
காற்றுமாகிநின்றான்றன்கருவிலிக்
கூற்றங்காய்நதவன்கொட்டிட்டைசேரமினே. (௬)

நிலலாவாழ்வுநிலைபெறுமென்றெண்ணிப
பொலலாவாறுசெயபபுரியாதுநீர
கலலாருமதிலசூழ்தண்கருவிலிக்
கொலலேறாபவன்கொட்டிடடைசேரமினே. (௭)

பிணித்தநோய்பபிறவிபபிறிவெய்துமா
றுணாதநலாமிதுகேண்மினுருத்திர
கணாததினாதொழுதேததுஙகருவிலிக்
குணத்தினானுறைகொட்டிடடைசேரமினே. (௮)

நமபுவீரிதுகேண்மின்கணுடொறும
எமபிரானென்றிமையவரேத்துமே
கமபனூருறைகின்றகருவிலிக்
கொமபனாடபயிலகொட்டிடடைசேரமினே (௯)

பாருளீரிதுகேண்மின்பருவரை
பேருமாறெடுத்தானையடாத்தவன்
காரகொணீரவயலசூழ்தண்கருவிலிக்
கூரகொள்வேலினன்கொட்டிட்டைசேரமினே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சற்குணநாதா, தேவியாா - சர்வாங்கநாயகியம்மை.

---

## திருக்கொண்டீச்சுவரம் - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம.

கண்டபேச்சினிற்காளையாதங்கள்பால
மண்டியேச்சுனுமாதரைச்சேராதே
சண்டியீச்சுரவாக்கருள்செய்தவக்
கொண்டியீசசுரவன்கழல்கூறுமே. (௧)

சுற்றமுநதுணைநன்மடவாளொடு
பெற்றமக்களும்பேணலொழிநதனா
குற்றமில்புகழ்க்கொண்டீச்சுரவனா
பற்றலாலொருபற்றுமற்றில்லையே. (௨)

மாடுதானதுவில்லெனின்மானிடர்
பாடுதான்செலவாரில்லைபன்மாலையாற்

கூடநீரசென்றுகொண்டீச்சுரவனைப்
பாடுமின்பரலோகத்திருத்துமே. (௩)

தந்தைதாயொடுதாரமெனுந்தளைப்
பந்தமாங்கறுத்துப்பயிலவெய்திய
கொந்தவிழ்பொழிற்கொண்டீச்சுரவனைச்
சிந்தைசெய்மினவனடி சேரவே. (௪)

கேளுமின்னிளமையதுகேடுவந்
தீளையோடிருமலலதுவெய்தன்முன்
கோளராவணிகொண்டீசசுரவனை
நாளுமேத்திதொழுமினன்காகுமே (௫)

வெமபுநோயுமிடருமவெறுமையும
துன்பமுந்துயருமமெனுஞ்சூழ்வினை
கொமபனாபயிலகொண்டீச்சுரவனைப
எமபிரானெனவலலவர்க்கிலலையே. (௬)

அல்லலோடருநோயிலழுந்துநீர
செலலுமாநினையாதேகனைகுரற்
கொலலையேறுடைக்கொண்டீச்சுரவனை
வல்லவாறுதொழவினைமாயுமே (௭)

நாறுசாந்தணிநன்முலைமென்மொழி
மாறிலாமலைமங்கையோரபாகமாக்
கூறனாருறைகொண்டீச்சுரநினைந
தூறுவாரதமக்கூனமொன்றிலலையே (௮)

அயிலாரமபெரிமேருவிலாகவே
எயிலாருமபொடியாய்விழவெய்தவன்
குயிலாருமபொழிற்கொண்டீச்சுரவனைப
பயிலவாரும்பெருமைபெறுமபாலரோ. (௯)

நிலையினாவவரைநின்றெடுததான்றனை
மலையினலடர்த்துவிறலவாட்டினான்
குலையினாபொழிற்கொண்டீசசுரவனைத்
தலையினலவணங்கததவமாகுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பசுபதீச்சுவரர், தேவியார - சாந்தநாயகியமமை.

---

**திருவிசையமங்கை - திருக்குறுந்தொகை.**

திருச்சிற்றம்பலம்.

**குசையுமங்கைபிற்கோசகமுங்கொண்ட**
**வசையின்மங்கலவாசகர்வாழ்த்தவே**
**இசையமங்கையுந்தானுமொன்றாயினான்**
**விசையமங்கையுள்வேதியன்காண்மினே.** (௧)

ஆதிநாதனடல்விடைமேலமா
பூதநாதன்புலியதளாடையான்
வேதநாதன்விசையமங்கையுளான்
பாதமோதவலலாக்கிலலைபாவமே. (உ)

கொள்ளிடக்கரைக்கோவந்தபுத்தூரில
வெள்விடைக்கருள்செய்விசையமங்கை
உள்ளிடத்துறைகின்றவுருத்திரன்
கிள்ளிடத்தலையற்றதயனுக்கே. (ந)

திசையுமெங்குங்குலுங்கத்திரிபுரம்
அசையவங்கெய்திடடாரழலூட்டினன்
விசையமங்கைவிருத்தன்புறத்தடி
விசையின்மங்கிவிழுந்தனன்காலனே. (ச)

பொள்ளலாக்கையகத்திலைமபூதங்கள்
கள்ளமாக்கிக்கலக்கியகாரிருள்
விள்ளலாக்கிவிசையமங்கைபபிரான்
உள்ளநோக்கியென்னுள்ளுளுறையுமே. (ரு)

கொல்லையேற்றுக்கொடியொடுபொன்மலை
விலலையேற்றுடையான்விசையமங்கைச்
செலவபோறறியென்பாருக்குத்தென்றிசை
எலலையேற்றலுமின்சொலுமாகுமே. (சு)

கண்பலுக்கக்கவாலமங்கைக்கொண்டு
உண்பலிக்குழலுத்தமனுளளொளி
வெண்பிறைக்கண்ணியான்விசையமங்கை
நண்பனைத்தொழப்பெறறதுநன்மையே. (எ)

பாண்டுவின்மகன்பாாத்தன்பணிசெய்து
வேண்டுநலவரங்கொளவிசையமங்கை
ஆண்டவன்னடியேநினைநதாசையால
காண்டலேகருததாகியிரு 'பனே. (அ)

வநதுகேண்மின்மயல்தீர்மனிதாகாள்
வெநதநீற்றன்விசையமஙகை பிரான்
சிநதையாணினைவாாகளைச்சிக்கெனப
பநதுவாக்கியுயக்கொளுங்காண்மினே. (கூ)

இலங்கைவேநதனிருபதுதோளிற
விலங்கலசேர்விரலான்விசையமங்கை
வலஞ்செய்வாாகளும்வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்நன்னெறிநாடியே. (க0)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - விசையநாதர், தேவியார் - மங்கைநாயகியம்மை

---

## திருநீலக்குடி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தமாடுமனைவியுமக்கணீா
செத்தபோதுசெறியாாபிறிவதே
நித்தநீலக்குடியரனைநினை
சித்தமாகிற்சிவகதிசோதிரே. (க)

செய்யமேனியன்றேனொடுபாலதயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனததாக்கெலாம
கையிலாமலகக்கனியொக்குமே. (உ)

ஆற்றநீள்சடையாயிழையாளொரு
கூற்றன்மேனியிற்கோலமதாகிய
நீற்றனீலக்குடியுடையானடி
போற்றினாிடாபோக்குமபுனிதனே. (ங)

நாலுவேதியர்க்கின்னருணன்னிழல்
ஆலனாலநஞ்சுண்டுகண்டத்தமா
நீலனீலக்குடியுறைநின்மலன்
காலனாருயிாபோக்கியகாலனே. (ச)

நேசனீலக்குடியரனேயெனா
நீசராய்நெடுமாலசெய்தமாயத்தால
ஈசனோசரமெய்யவெரிநதுபோய்
நாசமானாதிரிபுரநாதரே. (ரு)

கொன்றைசூடியைக்குன்றமகளொடும
நின்றநீலக்குடியரனேயெனீா
என்றுமவாழ்வுகநதேயிறுமாக்குநீா
பொன்றுமபோதுநுமக்கறிவொண்ணுமே. (சு)

கல்லினோடெனைப்பூட்டியமண்கையா
ஒலலைநீாபுகநூக்கவென்வாக்கினால
நெலலுநீள்வயனீலக்குடியரன்
நலலநாமநவிற்றியுய்நதேனன்றே. (எ)

அழகியோமிளையோமெனுமாசையால்
ஒழுகியாவியுடலவிடுமுன்னமே
நிழலதார்பொழினீலக்குடியரன்
கழல்கொள்சேவடிகைதொழுதுய்மினே. (அ)

கற்றைச்செஞ்சடைக்காய்கதிாவெண்டிங்கள்
பற்றிப்பாம்புடன்வைத்தபராபரன்
நெற்றிக்கண்ணுடைநீலக்குடியரன்
சுற்றித்தேவர்தொழுங்கழற்சோதியே. (கூ)

தருக்கிவெற்பதுதாங்கியவீங்குதோள்
அரக்கனுருடலாங்கொர்விரலினுல
நெரித்துநீலக்குடியரன்பின்னையும்
இரக்கமாயருள்செய்தனனென்பரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - நீலகண்டேசுவரர், - நீலநிறவுமையம்மை.

---

## திருமங்கலக்குடி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தங்கலபபிய தக்கன்பெருவேள்வி
அங்கலத்தழித்தாரருள்செய்தவன்
கொங்கலாக்குழற்கொமபனையாளொடு
மங்கலக்குடிமேயமணுளனே. (௧)

காவிரியின்வடகரைக்காண்டகு
மாவிரியுமபொழின்மங்கலக்குடித
தேவரியுமபிரமனுநதேடொணுத்
தூவெரிச்சுடாசசோதியுட்சோதியே. (௨)

மங்கலக்குடியீசனைமாகாளி
வெங்கதிர்ச்செலவன்விண்ணுடுமெண்ணுநோ
சங்குசக்கர தாரிசதுர்முகன்
அங்ககததிபனுமமாசசித்தாரன்றே. (௩)

மஞ்சன்வாாகடலசூழ்மங்கலக்குடி
நஞ்சமாரமுதாகயாநதுகொண்
டஞ்சுமாடலமாந்தடியேனுடை
நெஞ்சமாலயமாக்கொண்டுநின்றதே. (௪)

செலவமலகுதிருமங்கலக்குடிச்
செலவமலகுசிவநியமத்தராய்ச்
செல்வமல்குசெழுமறையோர்தொழச்
செலவன்றேவியொடுந்திகழ்கோயிலே. (௫)

மன்னுசீாமங்கலக்குடிமன்னிய
பின்னுவார்சடைபபிஞ்ஞகன்றன்பெயர்
உன்னுவாருருமுரைக்கவல்லார்களும்
துன்னுவார்நன்னெறிதொடர்வெய்தவே. (௬)

மாதரார்மருவும்மங்கலக்குடி
ஆதிநாயகனண்டர்களுயகன்
வேதநாயகன்வேதியர்நாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (௭)

வண்டுசேர்பொழில்சூழ்மங்கலக்குடி
விண்டதாதைதயைத்தாளறவீசிய
சண்டநாயகனுக்கருள்செய்தவன்
துண்டமாமதிசூடியசோதியே. (அ)

கூசுவாரலர்குண்டர்குணமிலா
நேசமேதுமிலாதவர்நீசர்கள்
மாசர்பாலமங்கலக்குடிமேவிய
ஈசன்வேறுபடுக்கவுய்ந்தேனன்றே. (கூ)

மங்கலக்குடியான்கயிலைமமலை
அங்கலைத்தெடுக்குற்றவரக்கர்கோன்
தன்கரத்தொடுதாள்தலைதோள்தகாந
தங்கலைத்தழுதுய்ந்தனன்றானன்றே. (கய)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பிராணேசவரதர், தேவியார் - மங்களநாயகியம்மை.
ஆ பதிகம் - எகூ.

---

## திருஎறும்பியூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விரும்பியூறுவிடேன்மடநெஞ்சமே
கருமபினூறலகண்டாய்கலந்தாக்கவன்
இரும்பினூறலறாததோரவெண்டலை
எறும்பியூரமலையானெங்களீசனே. (க)

பிறங்குசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுசீரக்
கறங்குபூதகணமுடைக்கண்ணுதல
நறுங்குழன்மடவாளொடுநாடொறும
எறும்பியூர்மலையானெங்களீசனே. (உ)

மருந்துவானவாதானவர்க்கின்சுவை
புரிந்தபுன்சடைப்புண்ணியன்கண்ணுதல
பொருந்துபூண்முலைமங்கைநல்லாளொடும்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (ங)

கிறங்கொள்கண்டத்துகின்மலனெம்மிறை
மறங்கொள்வேற்கண்ணிவாணுதலபாகமாய்
அறம்புரிந்தருள்செய்தவெமங்கணன்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (ச)

நறும்பொனுண்மலாக்கொன்றையுநாகமும
துறும்புசெஞ்சடைத்தூமதிவைத்துவான்
உறும்பொன்மால்வரைப்பேதையோடோர்தொறும்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (ரு)

கறுமபியூரவனவைநதுளகாயத்தில
திறம்பியூர்வனமற்றும்பலவுள
குறும்பியூரவதோர்கூட்டகத்திட்டனை
எறும்பியூரரன்செய்தவியற்கையே. (௬)

மறந்துமற்றிதுபேரிடாநாடொறும
திறம்பிநீநினையேன்மடநெஞ்சமே
புறஞ்செய்கோலக்குரமபையிலிட்டனை
எறுமபியூரரன்செய் தவியற்கையே. (௭)

இன்பமுமபிறபபுமிறபபின்னொடு
துன்பமுமுடனேவைத்தசோதியான்
அன்பனேயரனேயென்றரற்றுவாக்
கின்பனாகுமெறுமபியூரீசனே. (௮)

கண்ணிறைநதகனபவளத்திரள்
விண்ணிறைநதவிரிசுடாச்சோதியான்
உண்ணிறைந்துருவாயுயிராயவன்
எண்ணிறைந்தவெறுமபியூரீசனே. (௯)

நிறங்கொலமாலவனாயூன்றியெடுத்தலும
நறுங்குழன்மடவாணடுக்கெய்திட
மறங்கொள்வாளரக்கன்வலிவாட்டினான்
ஏறுமபியூரமலையெமமிறைகாண்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - எறும்பீசுவரர், தேவியார் - நறுங்குழல்நாயகியம்மை.

---

திருக்குரக்குக்கா - திருக்குறுந்தொகை.

திருச்சிறறமபலம்.

மரக்கொக்காமெனவாய்விட்டலறிநீர்
சரக்குக்காவிததிரிநதயராதுகால
பரக்குங்காவிரிநீரலைக்குங்கரைக்
குரக்குக்காவடையக்கெடுங்குற்றமே. (௧)

கட்டாறேகழிகாவிரிபாய்வயல்
கொட்டாறேபுனலூறுகுரக்குக்கா
முட்டாறுவடியேத்தமுயலபவர்க்
கிட்டாறுவிடரோடவெடுக்குமே. (௨)

கையனைத்துங்கலந்தெழுகாவிரி
செய்யனைத்திலுஞ்சென்றிடுஞ்செம்புனல்
கொய்யனைத்துங்கொணருங்குரக்குக்கா
ஐயனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (௩)

மிக்கனைத்துத்திசையுமருவிகள
புக்குக்காவிரிபோந்தபுனற்கரைக்
கொக்கினம்பயில்சோலைக்குரக்குக்கா
நக்கனைநவில்வார்வினைநாசமே. (௪)

விட்டுவெள்ளமவிரிந்தெழுகாவிரி
இட்டநீடவயலேவிளைவயல
கொட்டமாமுழவோங்குகுரக்குக்கா
இட்டமாயிருப்பாக்கிடரிலலையே. (௫)

மேலைவானவரோடுவிரிகடல
மாலுநான்முகனாலுமளபபொணாக்
கோலமாளிகைக்கோயிலகுரக்குக்காப்
பாலராய்த்திரிவார்க்கிலலைபாவமே. (௬)

ஆலநீழலமாநதவழகனா
காலனையுதைகொண்டகருத்தனா
கோலமஞ்ஞைகளாலுங்குரக்குக்காப
பாலருக்கருள்செய்வாபரிவொடே. (௭)

செக்கரங்கெழுசெஞ்சுடாச்சோதியா
அக்கரையொமமாதிபுராணனா
கொக்கினமவயலசேருங்குரக்குக்கா
நக்கனைத்தொழுநமவினைநாசமே. (௮)

உருகியூன்குழைநதேத்தியெழுமினீர
கரியகண்டன்கழலடிதன்னையே
குரவவன்செழுங்கோயில்குரக்குக்கா
இரவுமெல்லியுமேத்தித்தொழுமினே. (௯)

இரக்கமின்றிமலையெடுத்தான்முடி
உரத்தையொல்கவடர்த்தானுறைவிடம
குரக்கினங்குதிகொள்ளுங்குரக்குக்கா
வரத்தினைப்பெறவானுலகாள்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொந்தளக்கருணைநாதர், தேவியார் - கொந்தளநாயகியம்மை.

---

**திருக்கானூர் - திருக்குறுந்தொகை.**

திருச்சிற்றம்பலம்.

திருவினாதனுஞ்செம்மலர்மேலுறை
உருவனாயுலகத்திலுயிர்க்கெலாம்
கருவனாகிமுளைத்தவன்கானூரில்
பரமனாயபரஞ்சுடர்காண்மினே. (௧)

பெண்டிர்மக்கள்பெருந்துணைநன்னிதி
உண்டிடன்றேயென்றுகவன்மினேழைகாள்
கண்டுகொண்மினீர்காணூர்முளையினைப்
புண்டரீகப்பொதுமபிலொதுங்கியே. (௨)

தாயத்தாதமாநன்னிதியென்னுமிம்
மாயதேகிடந்திடுமயங்கிடேல்
காயத்தேயுளன்காணூர்முளையினை
வாயத்தாலவணங்கீர்வினைமாயவே. (௩)

குறியினின்றுண்டுகூறையிலாச்சமண்
நெறியைவிட்டுநிறைகழலபற்றினேன்
அறியலுறறிரோற்காணூர்முளையவன்
செறிவுசெய்திட்டிருப்பதென்சிந்தையே. (௪)

பொத்தலமண்சுவாப்பொலலாக்குரமபையை
மெய்ததெனென்றுவியந்திடலேழைகாள்
சித்தாபததாகள்சேர்திருக்காணூரில
அததன்பாதமடைதலகருமமே. (௫)

கலவிஞானககலைபபொருளாயவன்
செலவமலகுதிருக்காணூரீசனை
எலலியுமபகலுமிசைவானவா
சொலலிடீரநுநதுயரங்கடீரவே. (௬)

நீருமபாருமநெருப்புமருக்கனும்
காருமாருதஙகாணூர்முளைததவன்
சேவுமொன்றறியாதுதிகைதிகை
ஓாவுமென்றிலரோடித்திரிவரே. (௭)

ஓமததோடயன்மாலறியாவணம
வீமப்பேரொளியாயவிழுபபொருள்
காமற்காய்நதவன்காணூர்முளைத்தவன்
சேமத்தாலிருபபாவதென்சிந்தையே. (அ-௯)

வன்னிகொன்றையெருக்கணிந்தான்மலை
உன்னியேசென்றெடுத்தவனொண்டிறல்
தன்னைவீழத்தனிவிரல்வைத்தவன்
கன்னிமாமதிற்காணூர்க்கருத்தனே. (௧௦)

திருச்சிற்றமபலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - செம்மேனிநாயகர், தேவியார் - சிவயோகநாயகியம்மை

---

## திருச்சேறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூரியாவரும்புண்ணியம்பொய்கெடும்
கூரிதாயவறிவுகைகூடிடும்

சீரியார்பயில்சேறையுட்செந்நெறி
நாரிபாகன்றனாமநவிலவே. (க)

என்னமாதவஞ்செய்தனைநெஞ்சமே
மின்னுவார்சடைவேதவிழுப்பொருள்
செந்நெலார்வயற்சேறையுடசெந்நெறி
மன்னுசோதிநமபாலவந்துவைகவே. (உ)

பிறப்புமூப்புப்பெருமபசிவான்பிணி
இறப்புநீங்கியிங்கின்பம்வநதெய்திடும
சிறபபாசேறையுட்செநநெறியான்கழல
மறபபதின்றிமனத்தினுள்வைக்கவே. (௩)

மாடுதேடிமயக்கினிலவீழ்ந்துநீ
ஓடியெய்த்துமபயனிலையூமாகாள்
சேடாவாழ்சேறைச்செநநெறிமேவிய
ஆடலான்றனடியடைநதுய்மமினே. (௪)

எண்ணிநாளுமெரியயிற்கூறறுவன்
துண்ணென்றோன்றிற்றுரக்குமவழிகண்டேன்
திண்ணன்சேறைத்திருச்செநநெறியுறை
அண்ணலாருளரஞ்சுவதென்னுக்கே. (௫)

தபபிலவானநதரணிகமபிக்கிலென்
ஒப்பிலவேநதரொருங்குடன்சீறிலென்
செப்பமாஞ்சேறைச்செநநெறிமேவிய
அப்பனாருளரஞ்சுவதென்னுக்கே. (௬)

வைத்தமாடுமடநதைநலலாகளும
ஒத்தொவ்வாதவுற்றாகளுமென்செய்வார்
சித்தாசேறைத்திருசசெநநெறியுறை
அத்தாதாமுளரஞ்சுவதென்னுக்கே. (௭)

குலங்களென்செய்வகுற்றநதானென்செய்வ
துலங்கிநீநின்றுசோர்நதிடனெஞ்சமே
இலங்குசேறையுட்செநநெறிமேவிய
அலங்கனாருளரஞ்சுவதென்னுக்கே. (௮)

பழகினாலவருமபண்டுளசுற்றமும
விழவிடாவிடிலவேண்டியதெய்தொணா
திகழ்கொள்சேறையிற்செநநெறிமேவிய
அழகனாருளரஞ்சுவதென்னுக்கே. (௯)

பொருநதுநீண்மலையைபபிடித்தேந்தினான்
வருந்தவூன்றிமலரடிவாங்கினான்
திருந்துசேறையுட்செந்நெறிமேவியங்
கிருந்தசோதியென்பார்க்கிடரில்லையே. (௧௦)

இது சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - செந்நெறியப்பர், தேவியார் - ஞானவல்லியம்மை.

## திருக்கோடிகா - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சங்குலாமுன்கைத்தையலோர்பாகத்தன்
வெங்குலாமதவேழமவெகுண்டவன்
கொங்குலாம்பொழிற்கோடிகாவாவென
எங்கிலாததோரின்பமவநதெய்துமே. (௧)

வாடிவாழ்வதென்னாவதுமாதாபால
ஓடிவாழ்வினையுள்கிநீநாடொறும
கோடிகாவனைக்கூறிரேற்கூறினேன்
பாடிகாவலிற்பட்டுக்கழிதிரே. (௨)

முலலைநன்முறுவலலுமைபங்கனா
திலலையமபலததிலலுறைசெலவனா
கொலலையேற்றினாகோடிகாவாவென்றங்
கொல்லையேத்துவார்க்கூனமொன்றிலலையே. (௩)

நாவளமபெறுமாறுமநன்னுதல
ஆமளஞ்சொலலியன்புசெயின்னலால
கோமளஞ்சடைக்கோடிகாவாவென
மேவநின்றெனையேசுமவ்வேழையே. (௪)

வீறுதான்பெறுவாசிலராகிலும்
நாறுபூங்கொன்றைதான்மிகநல்கானேல
கூறுவென்கோடிகாவுளாயென்றுமால்
ஏறுவேனும்மாலேசபபடுவனே. (௫)

நாடிநாரணனன்முகன்வானவா
தேடியேசறவுநதெரியாததோா
கோடிகாவனைக்கூறுதநாளெலாம
பாடிகாவலிற்பட்டுக்கழியுமே. (௬-௭-௮-௯)

வரங்களாலவரையையெடுத்தான்றனை
அரங்கவூன்றியருள்செய்தவபபனா
குரங்குசேர்பொழிற்கோடிகாவாவென
இரங்குவன்மனத்தேதங்கடீரவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோடீசுவரர், தேவியார் - வடிவாம்பிகையம்மை.

---

## திருப்புள்ளிருக்குவேளூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளெருக்கரவம்விரவுஞ்சடைப்
புள்ளிருக்குவேளூரான்பொற்கழல்

உள்ளிருக்குமுணர்ச்சியிலாதவர்
நள்ளிருப்பர்நரகக்குழியிலே. (௧)

மாற்றமொன்றறியீர்மனைவாழ்க்கைபோய்க்
கூற்றம்வந்துமைக்கொள்வதன்முன்னமே
போற்றவல்லிரேற்புள்ளிருக்குவேளூர
சீற்றமாயினதேய்ந்தறுங்காண்மினே. (௨)

அருமறையனையானொடுபெண்ணனைக்
கருவிடமிகவுண்டவெங்கண்டனைப
புரிவெண்ணூலனைப்புள்ளிருக்குவேளூர
உருகிநைபவருள்ளங்குளிருமே. (௩)

தன்னுருவையொருவர்க்கறிவொணா
மின்னுருவனைமேனிவெண்ணீற்றனைப
பொன்னுருவனைப்புள்ளிருக்குவேளூர
என்னவல்லவர்க்கில்லையிடர்களே. (௪)

செங்கண்மால்பிரமற்குமறிவொணா
அங்கியின்னுருவாகியழல்வதோர்
பொங்கரவனைப்புள்ளிருக்குவேளூர
மங்கைபாகனைவாழ்த்தவருமின்பே. (௫)

குற்றமிலலியைக்கோலச்சிலையினால
செற்றவாபுரஞ்செநதழலாக்கியைப
புற்றரவனைப்புள்ளிருக்குவேளூர்
பற்றவலலவர்பாவமபறையுமே. (௬)

கையினோடுகாலகட்டியுமரெலாம
ஐயன்வீடினனென்பதன்முன்னநீர
பொய்யிலாவரன்புள்ளிருக்குவேளூர்
மையுலாவியகண்டனைவாழ்த்துமே. (௭)

உள்ளமுள்கியுகந்துசிவனென்று
மெள்ளவுள்கவினைகெடுமெய்மையே
புள்ளினாபணிபுள்ளிருக்குவேளூர்
வள்ளலபாதம்வணங்கித்தொழுமினே. (௮-௯)

அரக்கனார்தலைபத்துமழிதர
நெருக்கமாமலர்பபாதநிறுவிய
பொருப்பனாருறைபுள்ளிருக்குவேளூர்
விருப்பினாற்றொழுவார்வினைவீடுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வைத்தியநாதர், தேவியார் - தையனாயகியம்மை.

ஆ_ பதிகம் - எக.

## திருஅன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வானஞ்சேர்மதிசூடியமைந்தனை
நீநெஞ்சேகெடுவாய்நினைகிற்கிலை
ஆனஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனெஞ்செல்வனைக்கூறிடக்கிற்றியே. (௧)

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளனார்
ஆரணப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானொருநம்பியே. (௨)

அன்பினானஞ்சமைந்துடனாடிய
வென்பிலானையுரித்துக்களைந்தவன்
*அன்பிலானையம்மானையள்ளூறிய
அன்பினானினைந்தாரறிந்தார்களே. (௩)

சங்கையுள்ளதுஞ்சாவதுமெய்யுமை
பங்கனாரடிபாவியேனுனுய
அங்கணனெந்தையன்பிலாலந்துறைச்
செங்கணாரடிச்சேரவும்வல்லரோ. (௪)

கொக்கிறகர்குளிர்மதிச்சென்னியர்
மிக்கரக்கர்புரமெரிசெய்தவர்
அக்கரையினரன்பிலாலந்துறை
நக்குருவருநம்மையறிவரோ. (௫)

வெள்ளமுள்ளவிரிசடைநந்தியைக்
கள்ளமுள்ளமனத்தவர்காண்கிலார்
அள்ளலாரவயலன்பிலாலந்துறை
உள்ளவாறறியார்சிலவூமரே. (௬)

பிறவிமாயப்பிணக்கிலழுந்தினும்
உறவெலாஞ்சிந்தித்துன்னியுகவாதே
அறவனெம்பிரானன்பிலாலந்துறை
மறவாதேதொழுதேத்திவணங்குமே. (௭)

நுணங்குநூலயன்மாலுமிருவரும்
பிணங்கியெங்குந்திரிந்தெய்த்துங்காண்கிலார்
அணங்கனெம்பிரானன்பிலாலந்துறை
வணங்குநும்வினைமாய்ந்தறும்வண்ணமே. (௮)

பொய்யெலாமுரைக்குஞ்சமண்சாக்கியக்
கையன்மாருரைகேளாதெழுமினோ
ஐயனெம்பிரானன்பிலாலந்துறை
மெய்யன்சேவடியேத்துவார்மெய்யரே. (௯)

* அன்பிலாலந்துறையானை-என்பது—அன்பிலானையென நின்றது.

இலங்கைவேந்தனிருபதுதோளிற்று
மலங்கமாமலைமேல்விரல்வைத்தவன்
அலங்கலெம்பிரானன்பிலாலந்துறை
வலங்கொள்வாரைவானோர்வலங்கொள்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சத்திவாகீசர், தேவியார் - சவுந்தரநாயகியம்மை

---

## திருப்பாண்டிக்கொடுமுடி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிட்டனைச்சிவனைச்செழுஞ்சோதியை
அட்டமூர்த்தியையாலநிழலமா
பட்டனைத்திருப்பாண்டிக்கொடுமுடி
நட்டனைத்தொழநம்வினைநாசமே. (௧)

பிரமன்மாலறியாதபெருமையன்
தருமமாகியதத்துவனெமபிரான்
பரமனூருறைபாண்டிக்கொடுமுடி
கருமமாகத்தொழுமடநெஞ்சமே. (௨)

ஊசலாளல்லளொண்கழலாளல்லள்
தேசமாந்திருப்பாண்டிக்கொடுமுடி
ஈசனேயெனுமித்தனையலலது
பேசுமாறறியாளொருபேதையே. (௩)

தூண்டியசுடர்போலொக்குஞ்சோதியான்
காண்டலுமெளியன்னடியார்கட்குப்
பாண்டிக்கொடுமுடிமேயபரமனைக்
காண்டுமென்பவர்க்கேதுங்கருத்துணன். (௪)

நெருக்கியம்முடிநின்றிசைவானவா
இருக்கொடும்பணிந்தேத்தவிருந்தவன்
திருக்கொடுமுடியென்றலுந்தீவினைக்
கருக்கெடுமிதுகைகண்டயோகமே. (௫-௬-௭-௮-௯-௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது கொங்குநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கொடுமுடிநாதேசுவரர், தேவியார் - பண்மொழியம்மை.

---

## திருவான்மியூர் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விண்டமாமலர்கொண்டுவிரைந்துநீர்
அண்டர்நாயகன்றன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர்செய்தபாவம்பறைந்திடும்
வண்டுசேர்பொழில்வான்மியூரீசனே. (௧)

பொருளுஞ்சுற்றமும்பொய்மையுமவிடடுநீர்
மருளுமாந்தரைமாற்றிமயக்கறுத்
தருளுமாவலலவாதியாயென்றலும
மருளறுத்திடுமவான்மியூரீசனே. (௨)

மந்தமாகியசிந்தைமயக்கறுத்
தந்தமிலகுணத்தானையடைந்துநின்
றெந்தையீசனென்றேத்திடவலலிரேல்
வந்துநின்றிடுமவான்மியூரீசனே. (௩)

உள்ளமுள்கலந்தேத்தவலலார்க்கலால
கள்ளமுள்ளவசிக்கழிவானலன்
வெள்ளமுமரவுமவிரவுஞ்சடை
வுள்ளலாகியவான்மியூரீசனே. (௪)

படங்கொள்பாமபனைபபான்மதிசூடியை
வடங்கொண்மென்முலைமாதொருகூறனைத்
தொடாந்துநின்றுதொழுதெழுவார்வினை
மடங்கநின்றிடுமவான்மியூரீசனே. (௫)

நெஞ்சிலைவாநினைக்கநினைக்குறா
பஞ்சின்மெலலடியாளுமைபங்கவென்
றஞ்சிநாண்மலாதூவியழுதிரேல
வஞ்சநதீாத்திடுமவான்மியூரீசனே. (௬)

இணங்குநூலயன்மாலுமறிகிலாக்
குணங்கள்தான்பரவிக்குறைநதுக்கவா
சுணங்குபூண்முலைத்தூமொழியாரவா
வணங்கநின்றிடுமவான்மியூரீசனே. (௭)

ஆதியுமமரனுயயன்மாலுமாய்ப்
பாதிபெண்ணுருவாயபரமனென்
றோதியுள்குழைந்தேத்தவல்லாரவா
வாதைதீர்த்திடுமவான்மியூரீசனே. (௮)

ஓட்டைமாடத்திலொன்பதுவாசலும
காட்டிலவேவதன்முன்னங்கழலடி
நாட்டிநாண்மலாதூவிவலஞ்செயின்
வாட்டந்தீாத்திடுமவான்மியூரீசனே. (௯)

பாரமாகமலையெடுத்தான்றனைச்
சீரமாகத்திருவிரலூன்றினன்
ஆர்வமாகவழைத்தவனைத்தலும
வாரமாயினன்வான்மியூரீசனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இது தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருந்தீசுவரர், தேவியார் - சொக்கநாயகியம்மை.

### திருக்காரோணம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாணத்தான்மதின்மூன்றுமெரித்தவன்
பூணத்தானரவாமைபொறுத்தவன்
றேணத்தானினியான்கடனாகைக்கா
ரோணத்தானெனநம்வினையோயுமே. (௧)

வண்டலம்பியவார்சடையீசனை
விண்டலம்பணிந்தேத்தும்விகிர்தனைக்
கண்டகங்கமழ்நாகைக்காரோணனைக்
கண்டலும்வினையானகழலுமே. (௨)

புனையுமாமலர்கொண்டுபுரிசடை
நனையுமாமலர்சூடியநம்பனைக்
கனையுமாகடனாகைக்காரோணனை
நினையவேவினையாயினநீங்குமே. (௩)

கொல்லைமால்விடையேறியகோவினை
எல்லிமாநடமாடுமிறைவனைக்
கல்லினாமதினாகைக்காரோணனைச்
சொல்லவேவினையானவைசோருமே. (௪)

மெய்யனைவிடையூர்தியைவெண்மழுக்
கையனைக்கடனாகைக்காரோணனை
மையணுக்கியகண்டனைவானவா
ஐயனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (௫)

அலங்கல்சேர்சடையாதிபுராணனை
விலங்கல்மெல்லியல்பாகம்விருப்பனைக்
கலங்கள்சேர்கடனாகைக்காரோணனை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (௬)

சினங்கொண்மாலரிசீறியவேறினை
இனங்கொள்வானவரேத்தியவீசனைக்
கனங்கொண்மாமதினாகைக்காரோணனை
மனங்கொள்வார்வினையாயினமாயுமே. (௭)

அந்தமில்புகழாயிழையார்பணிந்
தெந்தையீசனென்றேத்துமிறைவனைக்
கந்தவார்பொழில்நாகைக்காரோணனைச்
சிந்தைசெய்யக்கெடுந்துயர்திண்ணமே. (௮)

கருவனைக்கடனாகைக்காரோணனை
இருவருக்கறிவொண்ணாவிறைவனை
ஒருவனையுணரார்புரமூன்றெய்த
செருவனைத்தொழத்தீவினைதீருமே. (௯)

கடல்கழிதழிநாகைக்காரோணன்றன்
வடவரையெடுத்தார்த்தவரக்கனை
அடரவூன்றியபாதமணைதரத்
தொடரவஞ்சுநதுயக்கறுங்காலனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

வாமிபெயா - காயாரோகணேசுவரர், தேவியார் - நீலாயதாட்சியம்மை.

---

திருக்காட்டுப்பள்ளி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டுபெபள்ளிமகிழ்நதுறைவீர்க்கெலாம்
கேட்டுப்பள்ளிகண்டீர்கெடுவீரிது
ஓட்டுப்பள்ளிவிட்டோடலுறுமுனம்
காட்டுப்பள்ளியுளான்கழலசேர்மினே. (௧)

மாட்டைத்தேடிமகிழ்ந்துநீர்நுமமுளே
நாட்டுப்பொய்யெலாம்பேசிடுநாணிலீர்
கூட்டைவிட்டுயிர்போவதன்முன்னமே
காட்டுப்பள்ளியுளான்கழலசேர்மினே. (௨)

தேனைவென்றசொலலாளொடுசெலவமும
ஊனைவிட்டுயிர்போவதன்முன்னமே
கானவேடர்கருதுங்காட்டுப்பள்ளி
ஞானநாயகனைச்சென்றுநண்ணுமே. (௩)

அருத்தமுமனையாளொடுமக்களும்
பொருத்தமிலலைபொலலாததுபோகட்டும
கருத்தன்கண்ணுதலண்ணலகாட்டுப்பள்ளி
திருத்தன்சேவடியைச்சென்றுசேர்மினே. (௪)

சுற்றமுந்துணையுமமனைவாழ்க்கையும
அற்றபோதணையாரவரொன்றென்றே
கற்றவர்கள்கருதுங்காட்டுப்பள்ளிப்
பெற்றமேறும்பிரானடிசேர்மினே. (௫)

அடும்புங்கொன்றையும்வன்னியுமத்தமும்
துடும்பலசெய்சடைத்தூமணிச்சோதியான்
கடம்பன்றாதைகருதுங்காட்டுப்பள்ளி
உடம்பினார்க்கோருறுதுணையாகுமே. (௬)

மெய்யின்மாசுடையாருடல்மூடுவார்
பொய்யைமெய்யென்றுபுக்குடன்வீடன்மின்
கையின்மானுடையான்காட்டுப்பள்ளியெம்
ஐயன்றன்னடியேயடைந்துய்மினே. (௭)

வேலைவென்றகண்ணாரைவிருமபிநீா
சீலங்கெட்டுத்திகையன்மின்பேதைகாள்
காலையேதொழுங்காட்டுபபள்ளியுறை
நீலகண்டனைநித்தனினைமினே. (அ)

இன்றுளார்நாளையில்லையெனுமபொருள்
ஒன்றுமோராதுழிதருமூமாகாள்
அன்றுவானவாககாகிவிடமுண்ட
கண்டனாகாட்டுபபள்ளிகண்டுய்மினே. (௯)

எண்ணிலாவரக்கன்மலையேந்திட
எண்ணிநீண்முடிபத்துமிறுத்தவன்
கண்ணுளார்கருதுங்காட்டுப்பள்ளியை
நண்ணுவாரவாதமவினைநாசமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயா - ஆரணியசுந்தரர், தேவியார் -அகிலாண்டநாயகியம்மை.

## திருச்சிராப்பள்ளி - திருக்குறுந்தொகை.

திருசசிற்றம்பலம்.

மட்டுவாருகுழலாளொடுமால்விடை
இட்டமாவுகநதேறுமிறைவனா்
கட்டுநீத்தவாக்கினனருளேசெயும
சிட்டாபோலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே. (௧)

அரியயன்றலைவெட்டிவட்டாடினா
அரியயன்றொழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராபபள்ளியைப்பேணுவார்
அரியயன்றொழவாங்கிருப்பார்களே. (௨)

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு
கரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொலலக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே. (௩)

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாெனநம்வினைநாசமே. (ச ரு-௬-௭-அ-௯-௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - தாயுமானேசுவரர், தேவியார் - மட்டுவார்குழலம்மை.

## திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

காலபாசம்பிடித்தெழுதூதுவா
பாலகாவிருந்தாபழையாரொரு
ஆலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவாசெம்மைமறப்பரோ. (க)

விடுத்துத்தூதுவாவந்துவினைக்குழி
படுத்தபோதுபயனில்லைபாவிகாள்
அடுத்தகின்னரங்கேட்குமவாட்போக்கியை
எடுத்துமேத்திபுமின்புறுமின்களே. (உ)

வந்திவ்வாறுவளைத்தெழுதூதுவா
உந்தியோடிநரகத்திடாமுனம்
அந்தியின்னொளிதாங்குமவாட்போக்கியார்
சிந்தியாவெழுவாரவினைதீர்ப்பரோ (ங)

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினால்
தேற்றம்வந்துதெளிவுறலாகுமே
ஆற்றவும்மருள்செய்யுமவாட்போக்கியால்
ஏற்றுமின்விளக்கையிருணீங்கவே (ச)

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவா
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
ஆறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியாக்
கூறிபூறியுருகுமென்னுள்ளமே (ரு)

கானமோடிக்கடிதெழுதூதுவா
தானமோடுதலைபிடியாமுன்னம்
ஆனஞ்சாடியுகந்தவாட்போக்கியார்
ஊனமில்லவாக்குண்மையினிற்பரோ (சா)

பாத்துப்பாசம்பிடித்தெழுதூதுவா
கூத்தவேலாறுகுமைப்பதன்முன்னமே
ஆத்தகங்கையடக்குமவாட்போக்கியார்
கீர்த்திமைகள்கிளாந்துமாமின்களே. (எ)

நாடிவந்துநமன்றமாநலவிருள்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
ஆடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநமவாட்டந்தவிருமே. (அ)

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
பொட்டறாக்கிப்புறப்படாமுன்னமே
அட்டமாமலர்சூடுமவாட்போக்கியார்க்
கிட்டமாகவிணையடியேத்துமே. (கூ)

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
அரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - இரத்தினகிரீசுவரர், தேவியார் - சுரும்பார்குழலம்மை.

## திருமணஞ்சேரி - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

பட்டநெற்றியர்பாய்புலித்தோலினர்
நட்டநின்றுநவில்பவர்நாடொறும்
சிட்டர்வாழ்திருவார்மணஞ்சேரியெம்
வட்டவார்சடையார்வண்ணம்வாழ்த்துமே (க)

துன்னுவார்குழலாளுமையாளொடும்
பின்னுவார்சடைமேற்பிறைவைத்தவர்
மன்னுவார்மணஞ்சேரிமருந்தினை
உன்னுவார்வினையாயினவோயுமே. (உ)

புற்றிலாடரவாடும்புனிதனார்
தெற்றினார்புரந்தீயெழச்செற்றவர்
சுற்றினார்மதில்சூழ்மணஞ்சேரியார்
பற்றினாரவர்பற்றவன்காண்மினே. (ந)

மத்தமும்மதியும்வளர்செஞ்சடை
முத்தர்முக்கண்ணர்மூசரவம்மணி
சித்தர்தீவணர்சீர்மணஞ்சேரியெம்
வித்தர்தாம்விருப்பாரைவிருப்பரே. (ச)

துள்ளுமான்மறிதூமழுவாளினார்
வெள்ளநீர்கரந்தார்சடைமேலவர்
அள்ளலார்வயல்சூழ்மணஞ்சேரியெம்
வள்ளலார்கழல்வாழ்த்தல்வாழ்வாவதே. (ரு)

நீர்பரந்தநிமிர்புன்சடையின்மேல்
ஊர்பரந்தவுரகமணிபவர்
சீர்பரந்ததிருமணஞ்சேரியார்
ஏர்பரந்தங்கிலங்குசூலத்தரே. (சு)

சுண்ணத்தர்சுடுநீறுகந்தாடலார்
விண்ணத்தம்மதிசூடியவேதியர்
மண்ணத்தமுழவார்மணஞ்சேரியார்
வண்ணத்தம்முலையாளுமைவண்ணமே. (எ)

துன்னவாடையா தூமழுவாளினா
பின்னுசெஞ்சடைமேற்பிறைவைத்தவா
மன்னுவாரபொழிலசூழ்மணஞ்சேரியெம
மன்னனூர்கழலேதொழவாய்க்குமே. (அ)

சித்தாதேவாகண்மாலொடுநான்முகன்
புததாசேரமண்கையாபுகழவே
மத்தாதாமறியாரமணஞ்சேரியெம
அததனாக்கடியாாக்கலலலில்லையே. (௯)

கடுத்தமேனியரக்கனகயிலையை
எடுததவனெடுநீண்முடிடபத்திறப
படுததலுமணஞ்சேரியருளெனக்
கொடுததனன்கொறறவாளொடுநாமமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இது சோழநாட்டிலுளளது.

சுவாமிபெயா - அருளவளளலநாயகா, தேவியாா - யாழினமொழியம்மை.

## திருமருகல் - திருக்குறுந்தொகை.

திருசசிறறமபலம.

பெருகலாநதவமபேதைதமைதீரலாம
திருகலாகியசிநதைதிருததலாம
பருகலாமபரமாயதோராநதம
மருகலான டிவாழததிவணங்கவே. (௧)

பாடங்கொள்பனுவற்றிறங்கறறுபபோய்
நாடங்குள்ளனதட டியநாணிலீா
மாடஞ்சூழ்மருகற்பெருமான்றிரு
வேடங்கைதொழவீடெளிதாகுமே. (௨)

சினத்தினுலவருசெயதொழிலாமவை
அனைத்துநீங்கின்றுதரவாய்மிக
மனத்தினன்மருகற்பெருமான்றிறம
நினைப்பினாக்கிலலைநீணிலவாழ்க்கையே. (௩)

ஓதுபைங்கிளிக்கொண்பாலமுதூட்டிப்
பாதுகாத்துபபலபலகற்பித்து
மாதுதான்மருகற்பெருமானுக்குத
தூதுசொல்லவிடத்தான்றொடங்குமே. (௪)

இன்னவாறென்பதுண்டறியேனின்று
துன்னுகைவளைசோரக்கணீர்மல்கும
மன்னுதென்மருகற்பெருமான்றிறம
உன்னியொண்கொடியுள்ளமுருகுமே. (௫)

சங்குஞ்சோரக்கலையுஞ்சரியவே
மங்கைதான்மருகற்பெருமான்வரும்
அங்கவீதியருகணையாநிற்கும்
நங்கைமீரதற்கென்செயகேளுமே. (௬)

காட்சிபெற்றிலளாகிலுங்காதலே
மீட்சியொன்றறியாதுமிகுவதே
மாட்சியாமருகற்பெருமானுக்குத்
தாழ்ச்சிசாலவுண்டாகுமென்னையலே (௭)

நீடுநெஞ்சுணினைந்துகணீர்மலகும்
ஓடுமாலினோடொண்கொடிமாதரா
மாடநீண்மருகற்பெருமான்வரின்
கூடுநீயென்றுகூடவிழைக்குமே. (௮)

கந்தவார்குழலகட்டிலளகாரிகை
பந்திமால்விடையோடுமனபாய்மிக
வந்தியாமருகற்பெருமானென்று
சிந்தைசெய்துதிகைத்திடுங்காண்மினே. (௯)

ஆதிமாமலையன்றெடுத்தானிற்றுச்
சோதியென்றலுந்தொலவருள்செய்திடும்
ஆதியான்மருகற்பெருமான்றிறம்
ஓதிவாழ்பவரும்பாக்குமும்பரோ (௧௰)

திருச்சிற்றம்பலம்.

இதுசோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணேசுவரர், தேவியார் - வண்டுவார்குழலம்மை.

---

## தனித் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

ஒன்றுவெண்பிறைக்கண்ணியோர்கோவணம்
ஒன்றுகீளுமையோடுமுடுத்தது
ஒன்றுவெண்டலையேந்தியெமுள்ளத்தே
ஒன்றிநின்றங்குறையுமொருவனே. (௧)

இரண்டுமாமவர்க்குள்ளனசெய்தொழில்
இரண்டுமாமவர்க்குள்ளனகோலங்கள்
இரண்டுமில்லிளமானெமையாளுகந்
திரண்டுபோதுமென்சிந்தையுள்வைகுமே. (௨)

மூன்றுமூர்த்தியுநின்றியலுந்தொழில்
மூன்றுமாயினமூவிலைச்சூலத்தன்
மூன்றுகண்ணினன்றீத்தொழின்மூன்றினன்
மூன்றுபோதுமென்சிந்தையுண்மூழ்குமே. (௩)

நாலினமேன்முகஞ்செறறதுமன்னிழல
நாலுநன்குணாநதிட்டதுமின்பமாம
நாலுவேதஞ்சரித்ததுநன்னெறி
நாலுபோலெமகத்துறைநாதனே. (௪)

அஞ்சுமஞ்சுமோராடியளைமிசை
அஞ்சுபோலளையாத்ததின்றத்துவம
அஞ்சுமஞ்சுமோரோரைஞ்சுமாயவன்
அஞ்சுமாமெமகத்துறையாதியே. (௫)

ஆறுகாலவண்டுமூசியகொன்றையான்
ஆறுசூடியவண்டமுதலவனார்
ஆறுகூறாமையாக்கச்சமயப்பொருள்
ஆறுபோலெமகத்துறையாதியே. (௬)

எழுமாமலையேழ்பொழிலசூழ்கடல
எழுபோறறுமிராவணன்கைநரம
பேழுகேட்டருள்செய்தவன்பொற்கழல
எழுஞ்சூழடியேன்மனத்துள்ளவே. (௭)

எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழில்
எட்டுவான்குணத்தீசனெமமான்றனை
எட்டுமூர்த்தியுமெமமிறையெமமுளே
எட்டுமூர்த்தியுமெமமுளொடுங்குமே. (௮)

ஒன்பதொன்பதியானையொளிகளி
றொன்பதொன்பதுபல்கணஞ்சூழவே
ஒன்பதாமவைதீத்தொழிலின்னுரை
ஒன்பதொத்துநின்றென்னுளொடுங்குமே. (௯)

பத்துநூறவன்வெங்கண்வெள்ளேற்றண்ணல
பத்துநூறவன்பல்சடைதோண்மிசை
பத்தியாமிலமாதலின்ஞானத்தால்
பத்தியானிடங்கொண்டதுபள்ளியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசிலவீணையுமாலைமதியமும
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே. (௧)

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும
நமச்சிவாயவேநானறிவிச்சையும்

நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. (௨)

ஆளாகாராளானாரையடைந்துய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணிற்கிலா
*தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்துமண்ணாகிக்கழிவரே. (௩)

நடலைவாழ்வுகொண்டென்செய்திநாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. (௪)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலா
நாக்கைக்கொண்டரனாமநவிலகிலா
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. (௫)

குறிகளுமடையாளமுங்கோயிலும
நெறிகளுமவர்நின்றதோர்நேர்மையும
அறியவாயிரமாரணமோதிலும
பொறியிலீர்மனமென்கொலபுகாததே. (௬)

வாழ்த்தவாயும்நினைக்கமடநெஞ்சும
தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (௭)

எழுதுபாவைநல்லார்திறம்விட்டுநான்
தொழுதுபோகின்றேனையுஞ்சூழ்ந்துகொண்
டுழுதகால்வழியேயுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமிதென்படுகின்றதே. (௮)

நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கொண்டு
நக்குநிற்பரவர்தமைநாணியே. (௯)

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* தோளாதசுரையென்பது - துவாரமிடாதசுரைக்காய்.

## தனித் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏயிலானையெனிச்சையகம்படிக்
கோயிலானைக்குணப்பெருங்குன்றினை
வாயிலானைமனோன்மனியைப்பெற்ற
தாயிலானைத்தழுவுமென்னாவியே. (க)

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கள்தொழக்கண்டு
ஞானத்தானுனைநானுந்தொழுவனே (உ)

முன்னைஞானமுதற்றனிவித்தினைப்
பின்னைஞானப்பிறங்குசடையனை
என்னைஞானத்திருளறுத்தாண்டவன்
தன்னைஞானத்தளையிட்டுவைப்பனே (ந)

புழுவுக்குங்குணநானெனக்குமதே
புழுவுக்கிங்கெனக்குள்ளபொல்லாங்கிலை
புழுவிலுங்கடையேன்புனிதன்றமர்
குழுவுக்கெவ்விடத்தேனென்றுகூட்டுவே (ச)

மலையேவந்துவிழினுமனிதர்காள்
நிலையினின்றீகலங்கப்பெறுதிரேல்
தலைவனாகியவீசன்றமர்களைக்
கொலைக்கையானைதான்கொன்றிடுகிற்குமே (ரு)

கற்றுக்கொள்வனவாயுளநாவுள
இட்டுக்கொள்வனபூவுளநீருள
கற்றைச்செஞ்சடையானுளனாமுளோம்
எற்றுக்கோநமனான்முனிவுண்பதே. (சா)

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரோ
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
இனிதுசாலவுமேசற்றவர்கட்கே. (எ)

என்னையேதுமறிந்திலனெம்பிரான்
தன்னைநானுமுன்னேதுமறிந்திலேன்
என்னைத்தன்னடியானென்றறிதலும்
தன்னைநானும்பிரானென்றறிந்தனே. (அ)

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோர்
உள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே. (கூ-க௦)

திருச்சிற்றம்பலம்.

## காலபாராயணம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கண்டுகொள்ளரியானைக்கனிவித்துப்
பண்டுநாஞ்செய்தபாழிமைகேட்டிரேல்
கொண்டபாணிகொடுகொட்டிதாளங்கைக்
கொண்டதொண்டரைத்துன்னிலுஞ்சூழலே (௧)

நடுக்கத்துள்ளுநகையுளுநம்பர்க்குக்
கடுக்கக்கல்லவடமிடுவார்கட்குக்
கொடுக்கக்கொள்கவெனவுரைப்பார்களை
இடுக்கண்செய்யப்பெறீரிங்குநீங்குமே (௨)

கார்கொள்கொன்றைக்கடிமலர்க்கண்ணியான்
சீர்கொணாமஞ்சிவனென்றரற்றுவார்
ஆர்களாகிலுமாகவவர்களை
நீர்கள்சாரப்பெறீரிங்குநீங்குமே (௩)

சாற்றினேன்சடைநீண்முடிச்சங்கரன்
சீற்றங்காமன்கண்வைத்தவன்சேவடி
ஆற்றவுங்களிப்பட்டமனத்தராய்ப்
போற்றியென்றுரைப்பார்புடைபோகலே (௪)

இறையென்சொன்மறவேனமன்றூதுவீர்
பிறையும்பாம்புமுடைப்பெருமான்றமர்
நறவநாறியநன்னறுஞ்சாந்திலும்
நிறையநீறணிவாரெதிர்செல்லலே (௫)

வாமதேவன்வளநகர்வைகலும்
காமமொன்றிலராய்க்கைவிளக்கொடு
தாமந்தூபமுந்தண்ணறுஞ்சாந்தமும்
ஏமமும்புனைவாரெதிர்செல்லலே. (௬)

படையும்பாசமும்பற்றியகையினீர்
அடையன்மின்னமதீசனடியரை
விடைகொளூர்தியினானடியார்குழாம்
புடைபுகாதுநீர்போற்றியேபோமினே. (௭)

விச்சையாவதும்வேட்கைமையாவதும்
நிச்சனீறணிவாரைநினைப்பதே
அச்சமெய்தியருகணையாதுநீர்
பிச்சைபுக்கவனன்பரைப்பேணுமே. (௮)

இன்னங்கேண்மினிளம்பிறைசூடிய
மன்னன்பாதமனத்துடனேத்துவார்
மன்னுமஞ்செழுத்தாகியமந்திரம்
தன்னிலொன்றுவல்லாரையுஞ்சாரலே. (௯)

மற்றுங்கேண்மின்மனப்பரிப்பொன்றின்றிச்
சுற்றும்பூசியநீற்றொடுகோவணம்
ஒற்றையேறுடையானடியேயலால்
பற்றொன்றில்லிகண்மேற்படைபோகவே. (௧௦)

அரக்கனீரைந்தலையுமோர்தாளினால்
நெருக்கியூன்றியிட்டான்றமர்பிறகினுஞ்
சுருக்கெனாதங்குப்போமின்கண்மற்றுநீர்
சுருக்கெனிற்சுடரான்கழல்சூடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

### மறக்கிற்பனேயென்னும் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

காசனைக்கனலைக்கதிர்மாமணித்
தேசனைப்புகழார்சிலர்தெண்ணர்கள்
மாசினைக்கழித்தாட்கொளவல்லவெம்
ஈசனையினிநான்மறக்கிற்பனே (௧)

புந்திக்குவிளக்காயபுராணனைச்
சந்திக்கண்ணடமாடுஞ்சதிரனை
அந்திவண்ணனையாரழன்மூர்த்தியை
வந்தெனுள்ளங்கொண்டானைமறப்பனே. (௨)

ஈசனீசனென்றென்றுமரற்றுவன்
ஈசன்றானென்மனத்திற்பிரிவிலன்
ஈசன்றன்னையுமென்மனத்துக்கொண்டு
ஈசன்றன்னையுமியான்மறக்கிற்பனே. (௩)

ஈசனென்னையறிந்ததறிந்தனன்
ஈசன்சேவடியேத்தப்பெறுதலால்
ஈசன்சேவடியேத்தப்பெற்றேனினி
ஈசன்றன்னையுமியான்மறக்கிற்பனே (௪)

தேனைப்பாலினைத்திங்களைஞாயிற்றை
வானவெண்மதிசூடியமைந்தனை
வேனிலானைமெலிவுசெய்தீயழல்
ஞானமூர்த்தியைநான்மறக்கிற்பனே. (௫)

கன்னலைக்கரும்பூறியதேறலை
மின்னனைமின்னனையவுருவனைப்
பொன்னனைமணிக்குன்றுபிறங்கிய
என்னனையினியான்மறக்கிற்பனே. (௬)

கரும்பனைக்கட்டியைக்கந்தமாமலர்ச்
சுரும்பினைச்சுடர்ச்சோதியுட்சோதியை

அருமையினிற்பெருமைபோதுகொண்டாய்மலா
விருமையுமீசனைநான்மறக்கிற்பனே. (௭)

துஞ்சும்போதுஞ்சுடாவிடுசோதியை
நெஞ்சுணின்றுநினைப்பிக்குநீதியை
நஞ்சுகண்டத்தடக்கியநம்பனை
வஞ்சனேனினிநான்மறக்கிற்பனே. (௮)

புதியபூவினைப்புண்ணியநாதனை
நிதியைநீதியைநித்திலக்குன்றினைக்
கதியைக்கண்டங்கறுத்தகடவுளை
மதியைமைந்தனைநான்மறக்கிற்பனே. (௯)

கருகுகார்முகில்போலவதோர்கண்டனை
உருவநோக்கியையூழிமுதல்வனை
பருகுபாலனைப்பான்மதிசூடியை
மருவுமைந்தனைநான்மறக்கிற்பனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

ஆ-பதிகம் - ௯௫.

தொழற்பாலதேயென்னுந் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

அண்டத்தானையமரர்தொழப்படும்
பண்டத்தானைப்பவித்திரமாந்திரு
முண்டத்தானைமுற்றாதவிளம்பிறைத்
துண்டத்தானைக்கண்டீர்தொழற்பாலதே. (௧)

முத்தொப்பானைமுளைத்தெழுகற்பக
வித்தொப்பானைவிளக்கிடைநேரொளி
ஒத்தொப்பானையொளிபவளத்திரள்
தொத்தொப்பானைக்கண்டீர்தொழற்பாலதே. (௨)

பண்ணொத்தானைப்பவளந்திரண்டதோர்
வண்ணத்தானைவகையுணர்வான்றனை
எண்ணத்தானையிளம்பிறைபோலவெள்ளைச்
சுண்ணத்தானைக்கண்டீர்தொழற்பாலதே (௩)

விடலையானைவிரைகமழ்தேன்கொன்றைப்
படலையானைப்பலிதிரிவான்செலும்
நடலையானைநரிபிரியாததோர்
சுடலையானைக்கண்டீர்தொழற்பாலதே. (௪)

பருதியானைப்பலவேறுசமயங்கள்
கருதியானைக்கண்டார்மனமேவிய
பிருதியானைப்பிறரறியாததோர்
சுருதியானைக்கண்டீர்தொழற்பாலதே. (௫)

ஆதியானை யமரா தொழுபபடும்
நீதியானை நியமநெறி தனை
ஓதியானையுணா த தறகரியதோா
சோதியானைக்கண்டா தொழற்பாலதே. (௬)

ஞாலத தானை நலலானை வலலாா செயும
கோலத்தானைக்குணபபெருங்குன்றினை
மூலத் தானை முதலவனை மூவிலைச்
சூலத் தானைக்கண்டா தொழறபாலதே. (௭)

ஆதிபபாலட்டமூா த தியையானை ஞசும
வேதிபபானை நமமேலவினை வெநதறச
சாதிப்பானை த தவததிடைமாறறங்கள்
சோதிபபானைக்கண்டா தொழறபாலதே (௮)

நீற்றினானை நிகரிலவெண்கோவணக
கீறறினானைக்கிளரொளிசசெஞ்சடை
ஆற்றினானை யமரா தமாருயிா
தோறறினானைக்கண்டா தொழறபாலதே. (௯)

விடடிடடானைமெய்ஞ்ஞான ததுமெய்பபொருள்
கடடிடடானைக்கனங்குழைபாலன்பு
பட்டிட்டானை பபகைததவாமுப்புரல
சுடடிட்டானை ககண்டா தொழற்பாலதே. (௧௦)

முற்றினானை யிராவணனீண்முடி
ஒற்றினானை யொருவிரலா லுறப
பறறினானையோா வெண்டலைபபாமபணைச
சுற்றினானைக்கண்டா தொழறபாலதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

இலிங்கபுராணம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம.

புக்கணைநதுபுரிநதலரிட்டிலர்
நக்கணைநதுநறுமலா கொய்திலா
சொக்கணைநதசுடரொளிவண்ணனை
மிக்ககாண லுற்றாரங்கிருவரே. (௧)

அலருநீருங்கொண்டாட்டித்தெளிந்திலர்
திலதமண்டலநதீட்டித்திரிந்திலர்
உலகமூா த்தியொளிநிறவண்ணனைச்
செலவுகாண லுற்றாரங்கிவரே. (௨)

ஆப்பிநீரோடலகுகைக்கொண்டிலா
பூபபெய்கூடைபுனைந்துசுமந்திலா

காப்புக்கொள்ளிகபாலிதன்வேடத்தை
ஒப்பிக்காணலுற்றாரங்கிருவரே. (ங)

செய்யும்பாலுங்கொண்டாட்டிநினைந்திலா
பொய்யும்பொக்கமும்போக்கிப்புகழ்ந்திலர்
ஐயன்வெய்யவழனிறவண்ணனை
மெய்யைக்காணலுற்றாரங்கிருவரே. (ச)

எருக்கங்கண்ணிகொண்டிண்டைபுனைந்திலா
பெருக்கங்கோவணம்பீறியுடுத்திலா
தருக்கினாற்சென்றுதாழ்சடையண்ணலை
நெருக்கிக்காணலுற்றாரங்கிருவரே. (ரு)

மரங்களேறிமலர்பறித்திட்டிலா
நிரம்பநீர்சுமந்தாட்டிநினைந்திலா
உரம்பொருந்தியொளிநிறவண்ணனை
நிரம்பக்காணலுற்றாரங்கிருவரே. (சா)

கட்டுவாங்கங்கபாலங்கைக்கொண்டிலா
அட்டமாங்கங்கிடந்தடிவீழ்ந்திலா
சிட்டன்சேவடிசென்றெய்திக்காணிலா
பட்டகட்டமுற்றாரங்கிருவரே (எ)

வெந்தநீறுவிளங்கவணிந்திலா
கந்தமாமலரிண்டைபுனைந்திலா
எந்தையேறுகந்தேறியண்ணலை
அந்தங்காணலுற்றாரங்கிருவரே. (அ)

இளவெழுந்தவிருங்குவளைம்மலா
பிளவுசெய்துபிணைந்தடியிட்டிலா
களவுசெய்தொழிற்காமனைக்காய்ந்தவன்
அளவுகாணலுற்றாரங்கிருவரே. (கூ)

கண்டிபூண்டுகபாலங்கைக்கொண்டிலா
விண்டவான்சங்கம்விம்மவாய்வைத்திலா
அண்டமூர்த்தியழனிறவண்ணனைக்
கிண்டிக்காணலுற்றாரங்கிருவரே. (க0)

செங்கண்ணனும்பிரமனுந்தம்முளே
எங்குந்தேடித்திரிந்தவர்காண்கிலா
இங்குற்றேனென்றிலிங்கத்தேதோன்றினன்
பொங்குசெஞ்சடைப்புண்ணியமூர்த்தியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

### மனத்தொகை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுள்ளத்திரள்புன்சடையின்புறம
மின்னுள்ளத்திரள்வெண்பிறையாயிறை
நின்னுள்ளத்தருள்கொண்டிருணீங்குதல்
என்னுள்ளத்துளதெநதைபிரானிரோ. (க)

முக்கணுமமுடையாய்முனிகள்பலா
தொக்கெணுஙகழலாயொருதோலினோ
டக்கணமமரையாயருளெய்தலா
தெக்கணுமமிலதெநதைபிரானிரோ. (உ)

பனியாரவெங்கதிரபாய்படாபுன்சடை
முனியாய்நீயுலகமமுழுதாளினும்
தனியாய்நீசரணீசலமேபெரி
தினியாய்நீயெனக்கெந்தைபிரானிரோ. (௩)

மறையுமபாடுதிர்மாதவாமாலினுக்
குறையுமாயினைகோளரவோடொரு
பிறையுஞ்சூடினையென்பதலாற்பிறி
திறையுஞசொல்லிலலையெந்தைபிரானிரோ. (ச)

பூத்தாரகொன்றையினாய்புலியின்னதள்
ஆத்தாயாடரவோடனலாடிய
கூத்தாநின்குரையாரகழலேயல
தேத்தாநாவெனக்கெநதைபிரானிரோ. (ரு)

பைமமாலுமமரவாபரமாபசு
மைமமாலகண்ணியோடேறுமைநதாவெனும
அமமாலலலதுமற்றடிநாயினேற்
கெம்மாலுமமிலலேனெநதைபிரானிரோ. (சா)

வெப்பததின்மனமாசுவிளக்கிய
செபபத்தாற்சிவனென்பவர்தீவினை
ஒபபத்தீரத்திடுமொண்கழலாற்கல
தெப்பற்றுமமிலலேனெநதைபிரானிரோ. (எ)

திகழுஞ்சூழ்சுடரவானொடுவைகலும
நிகழுமொண்பொருளாயினநீதியென்
புகழுமாறுமலானுனபொன்னடி
இகழுமாறிலலேனெநதைபிரானிரோ. (அ)

கைப்பற்றித்திருமாலபிரமன்னுனை
எய்ப்பற்றியறிதற்கரியாயருள்
அப்பற்றலலதுமற்றடிநாயினேன்
எபபற்றுமமிலலேனெநதைபிரானிரோ. (கூ)

எந்தையெம்பிரானென்றவர்மேன்மனம்
எந்தையெம்பிரானென்றிறைஞ்சித்தொழு
தெந்தையெம்பிரானென்றடியேத்துவார்
எந்தையெம்பிரானென்றடிசேர்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## சித்தத்தொகை - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பார்மனத்தான்சிவன்செஞ்சடை
அந்திவானிறத்தானணியார்மதி
முந்திச்சூடியமுக்கண்ணினுடை
வந்திப்பாரவர்வானுலகாள்வரே. (௧)

அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே. (௨)

ஆதியாயவனாருமிலாதவன்
போதுசேர்புனைநீண்முடிப்புண்ணியன்
பாதிபெண்ணுருவாகிப்பரஞ்சுடர்ச்
சோதியுட்சோதியாய்நின்றசோதியே. (௩)

இட்டதிட்டதோரேறுகந்தேறியூர்
பட்டிதுட்டங்களைப்பலிதேர்வதோர்
கட்டவாழ்க்கையனாகிலுமவ்வானவர்
அட்டமூர்த்தியருளென்றடைவரே. (௪)

ஈறிலகூறையனாகியெரிந்தவெண்
ணீறுபூசிநிலாமதிசூடிலும்
வீறிலாதனசெய்யினுமவ்விண்ணவர்
ஊறலாலருளாயென்றுரைப்பரே. (௫)

உச்சிவெண்மதிசூடிலுமூனறுப
பச்சைவெண்டலையேந்திப்பலவிலம்
பிச்சையேபுகுமாகிலுமவ்வானவர்
அச்சந்தீர்த்தருளாயென்றடைவரே. (௬)

ஊரிலாயென்றொன்றாகவுரைப்பதோர்
பேரிலாய்பிறைசூடியபிஞ்ஞகா
காருலாங்கண்டனேயுன்கழலடி
சேர்விலார்கட்குத்தீயவைதீயவே. (௭)

எந்தையேயெம்பிரானேயெனவுள்கிச்
சிந்திப்பாரவர்தீவினைதீருமால்

வெந்தநீறுமெய்பூசியவேதியன்
அந்தமாவளப்பாரடைந்தார்களே. (அ)

ஏனவெண்மருப்போடென்புபூண்டெழில
ஆனையீருரிபோர்த்தனலாடிலும
தானவண்ணத்தனாகிலுந்தன்னையே
வானநாடரவணங்குவாவைகலே. (கூ)

ஐயனந்தணனாணொடுபெண்ணுமாய்
வெய்யன்மேதகுவெண்பொடிபூசிய
மைகொள்கண்டத்தன்மான்மறிக்கையினான்
பைகொள்பாமபரையார்த்தபரமனே. (க0)

ஒருவனாகிநின்றானிவ்வுலகெலாம
இருவராகிநின்றாகட்கறிகிலான்
அருவராவரையார்த்தவனாரழல
பரவுவாரவர்பாவமபறையுமே. (கக)

ஓதவண்ணனுமொண்மலர்ச்செலவனும
நாதனமமருளாயென்றுநாடொறும
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேதப்பறையுநமபாவமே (க௨)

ஔவதன்மையவரவராகவையான்
வெவ்வதன்மையனென்பதொழிமினோ
பவ்வநீண்மலர்மேலுறைவாரொடு
பவ்வவண்ணனுமாயப்பணிவார்களே. (க௩)

அக்குமாமையும்பூண்டனலேந்தியில
புக்குப்பலபலிதேருமபுராணனை
நக்குநீர்கணரகமபுகேனமினோ
தொக்கவானவராறறொழுவானையே (க௪)

கங்கைதங்கியசெஞ்சடைமேலிளந
திங்கள்சூடியதீநிறவண்ணனார
இங்கணொழிலவானமவணங்கவே
அங்கணாற்கதுவாலவன்றன்மையே. (க௫)

நகரவெலகொடியானொடுநன்னெஞ்சே
நுகரநீயுனைக்கொண்டுய்ப்போக்குறின்
மகரவெலகொடிமைந்தனைக்காய்ந்தவன்
புகரில்சேவடியேபுகலாகுமே. (க௬)

சரணமாமபடியாரபிறரியாவரோ
கரணநீர்த்துயிர்கையிலிகழ்ந்தபின்
மரணமெய்தியபின்னவைநீக்குவான்
அரணமூவெயிலெய்தவனல்லனே. (க௭)

ஞமனென்பானரகாக்குநமக்கெலாம
சிவனென்பான்செழுமான்மறிக்கையினன்
கவனஞ்செய்யுங்கனவிடையூர்தியான்
தமனொன்றுலுங்கெடுநதடுமாற்றமே. (கஅ)

இடபமேறியுமிலபலியேற்பவா
அடவிகாதலித்தாடுவரைநதலைப
படவமபாமபரையார்த்தபரமனைக்
கடவிராய்ச்சென்றுகைதொழுதுய்ம்மினே (ககூ)

இணாநதுகொன்றைபொற்றுதுசொரிநதிடும
புணர்நதவாளரவமமதியோடுடன்
அணைநதவஞ்சடையானவன்பாதமே
உணாநதவுள்ளத்தவருணாவாகளே (உ0)

தருமநதான்றவநதான்றவத்தாலவருும
கருமநதான்கருமான்மறிக்கையினன்
அருமந்தன்னவலர்கழலசேர்மினே
சிரமஞ்சேரழற்றீவினையாளரோ. (உக)

நமச்சிவாயவென்பாருளரேலவா
தமச்சநீங்கத்தவநெறிசாதலால
அமைத்துக்கொண்டதோவாழ்க்கையனுகிலும
இமைத்துநிற்பதுசாலவரியதே. (உஉ)

பற்பல்காலமபயிற்றிபபரமனைச்
சொற்பல்காலநின்றேத்துமின்றொலவினை
வெற்பிற்றோன்றியவெங்கதிாகண்டவப
புற்பனிக்கெடுமாறதுபோலுமே. (உங)

மணிசெய்கண்டத்துமான்மறிக்கையினன்
கணிசெய்வேடத்தராயவாகாபபினால
பணிகடாஞ்செயவலலவாயாவாதம
பிணிசெயாக்கையைநீக்குவர்பேயரோ. (உச)

இயக்காகின்னரரிந்திரன்றனவர்
நயக்கநின்றவனான்முகனாழியான்
மயக்கமெய்தவன்மாலெரியாயினன்
வியக்குநதன்மையினனெமவிகிாதனே. (உரு)

அரவமார்த்தனலாடியவண்ணலைப
பரவுவாரவர்பாவம்பறைதற்குக்
குரவைகோத்தவனுங்குளிர்போதின்மேல்
கரவினன்முகனுங்கரியல்லரே. (உசா)

அழலங்கையினனந்தரத்தோங்கிநின்
றழலுமுவெயிலொள்ளழலூட்டினன்

கழலுந்தாமரையானொடுமாலினன்
கழலுஞ்சென்னியுங்காண்டற்கரியனே (உஎ)

இளமைகைவிட்டகறலுமூப்பினா
வளமைபோய்ப்பிணியோடுவருந்தலால்
உளமெலாமொளியாய்மதியாயினான்
கிளமையேகிளையாகநினைப்பனே. (உஅ)

தன்னிற்றன்னையறியுந்தலைமகன்
தன்னிற்றன்னையறியிற்றலைப்படும்
தன்னிற்றன்னையறிவிலனாயிடின்
தன்னிற்றன்னையுஞ்சார்தற்கரியனே. (உகூ)

இலங்கைமன்னனையீரைந்துபத்துமன்
றலங்கலோடுடனேசெலவூன்றிய
நலங்கொள்சேவடிநாடொறுநாடொறும்
வலங்கொண்டேத்துவாரவானுலகாள்வரே. (௩௰)

திருச்சிற்றம்பலம்.

---

ஊர்த் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நீறலைத்ததோர்மேனிநிமிர்சடை
ஆறலைத்தநின்றாடுமமுதினைத்
தேறலைத்தெளியைத்தெளிவாய்த்ததோர்
ஊறலைக்கண்டுகொண்டதென்னுள்ளமே (க)

பொந்தைப்பைப்புக்குநீக்கப்புகுந்திடும்
தந்தையைத்தழல்போலவதோர்மேனியைச்
சிந்தையைத்தெளிவைத்தெளிவாய்த்ததோர்
எந்தையைக்கண்டுகொண்டதென்னுள்ளமே (உ)

வெள்ளத்தாவிஞ்சையார்களவிரும்பவே
வெள்ளத்தைச்சடைவைத்தவிகிர்தனா
கள்ளத்தைக்கழியம்மனமொன்றினின்
றுள்ளத்திலொளியைக்கண்டதுள்ளமே. (௩)

அம்மானையமுதிலமுதேயென்று
தம்மானைத்தத்துவத்தடியார்தொழும்
செம்மானநிறம்போலவதோர்சிந்தையுள்
அம்மானைக்கண்டுகொண்டதென்னுள்ளமே. (௪)

கூறேறுமுமைபாகமோர்பாலராய்
ஆறேறுஞ்சடைமேற்பிறைசூடுவா
பாறேறுந்தலையேந்திப்பலவிலம்
ஏறேறுமெந்தையைக்கண்டதுள்ளமே. (௫)

முன்னெஞ்சமமின்றிமூாக்கராய்ச்சாகின்றூா
தஙெஞ்சந்தமக்குத்தாமிலாதவர்
வன்னெஞ்சம்மதுநீங்குதல்வல்லீரோ
என்னெஞ்சிலீசனைக்கண்டதுள்ளமே (சு)

வென்றானைட்புலனைநதுமென்றீவினை

நன்றானமமனமவைத்திடுஞானமாம
ஒன்றானைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (எ)

மருவினைமடநெஞ்சமனமபுகும
குருவினைக்குணத்தாலேவணங்கிடும
திருவினைச்சிநதையுடசிவனுய்நின்ற
உருவினைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (அ)

தேசனைததிருமாலபிரமன்செயும
பூசனைபபுணரிற்புணாவாபதோா
நேசனைநெஞ்சினுண்ணிறைவாய்நின்ற
ஈசனைக்கண்டுகொண்டதெனுள்ளமே (கூ)

வெறுத்தானைமபுலனுமபிரமன்றலை
அறுத்தானையரக்கன்கயிலாயத்தைக்
கறுத்தானைக்காலிலவிரலொனறினால
ஒறுத்தானைக்கண்டுகொண்டதெனுள்ளமே (க0)

திருச்சிற்றமபலம்.

பாவநாசம் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றமபலம

பாவமும்பழிபபற்றறவேண்டுவீர்
ஆவிலைஞ்சுகநதாடுமவன்கழல
மேவராய்மிகவுமமகிழ்ந்துள்குமின்
காவலாளன்கலநதருள்செய்யுமே (க)

கங்கையாடிலென்காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஒங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனுதவாக்கிலலையே (உ)

பட்டராகிலென்சாத்திரங்கேட்கிலென்
இட்டமெட்டியுமீதொழில்பூணிலென்
எட்டுமொன்றுமிரண்டுமறியிலென்
இட்டமீசனெனுதவாக்கில்லையே. (ந)

வேதமோதிலென்சாத்திரங்கேட்கிலென்
நீதிநூலபலநித்தல்பயிற்றிலென்

ஓதியங்கமோராறுமுணரிலென்
ஈசனையுள்குவார்க்கன்றியில்லையே. (ச)

காலைசென்றுகலந்துநீர்மூழ்கிலென்
வேலைதோறும்வதிவழிநிற்கிலென்
ஆலைவேள்வியடைந்ததுவேட்கிலென்
ஏலவீசனென்பார்க்கன்றியில்லையே (ரு)

கானநாடுகலந்துதிரியிலென்
ஈனமின்றியிருந்தவஞ்செய்யிலென்
ஊனையுண்டலொழிந்துவானோக்கிலென்
ஞானனென்பவர்க்கன்றிநன்கில்லையே (சு)

கூடவேடத்தராகிக்குழுவிலென்
வாடியூனைவருந்தத்திரியிலென்
ஆடலவேடத்தனம்பலக்கூத்தனைப்
பாடலாளர்க்கல்லாற்பயனில்லையே. (எ)

நன்றுநோக்கிலென்னபட்டினியாகிலென்ன
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்ன
சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்ன
என்றுமீசனென்பார்க்கன்றியில்லையே. (அ)

கோடிதீர்த்தங்கலந்துகுளித்தவை
ஆடினாலுமரனுக்கன்பில்லையேல்
ஓடுநீரினையோட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்டமூர்க்கனொடொக்குமே (௯)

மற்றுநற்றவஞ்செய்துவருந்திலென்
பொற்றையுற்றெடுத்தானுடல்புக்கிறக்
குற்றநற்குறையாகழற்சேவடி
பற்றிலாதவர்க்குப்பயனில்லையே (க0)

திருச்சிற்றம்பலம்.

## ஆதிபுராணம் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வேதநாயகன்வேதியர்நாயகன்
மாதிநாயகன்மாதவர்நாயகன்
ஆதிநாயகனாதிரைநாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (க)

செத்துச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
அத்தனென்றரியோடுபிரமனும்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே. (உ)

நூறுகோடிபிரமர்கணொங்கினா
ஆறுகோடிநாராயணரங்ஙனே
ஏறுகங்கைமணலெண்ணிலிந்திரா
ாறிலாதவலீசனொருவனே (௩)

வாதுசெய்துமயங்குமனத்தராய்
ஏதுசொல்லுவீராகிலுமேழைகாள்
யாதோர்தேவரெனப்படுவார்க்கெலாம்
மாதேவனலாற்றேவர்மற்றில்லையே (௪)

கூவலாமைகுரைகடலாமையைக்
கூவலோடொக்குமோகடலென்றல்போல்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பரால்
தேவதேவன்சிவன்பெருந்தன்மையே (௫)

பேய்வனத்தமர்வானைப்பிரார்த்தித்தாக்
கீவனையிமையோர்முடிதன்னடிச்
சாய்வனைத்தலைவாகடமக்குடல்
ஈவனைச்சிவனைச்சிந்தியார்களே. (௬)

எரிபெருக்குவரவ்வெரியீசன
துருவருக்கமதாவதுணாகிலா
அரியயற்கரியானையயாததுபோய்
நரிவிருத்தமதாகுவார்நாட்டே. (௭)

அருக்கன்பாதமவணங்குவரந்தியில
அருக்கனாவானரனுருவல்லனோ
இருக்குநான்மறையீசனையேதொழு
கருத்தினைநினைப்பார்கன்மனவரோ. (௮)

தாயினுநல்லசங்கரனுக்கன்பா
ஆயவுள்ளத்தமுதருந்தப்பெறா
பேயாபேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயனமாயத்துப்பட்டமனத்தரோ. (௯)

அரக்கன்வலலரட்டாங்கொழித்தாரருள்
பெருக்கச்செய்தபிரான்பெருந்தன்மையை
அருத்திசெய்தறியப்பெறுகின்றிலா
கருத்திலாக்கயவக்கணத்தோர்களே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

ஆ பதிகம் - க௦உ.

---

## திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த

இரண்டாந்திருமுறை - முற்றிற்று.

---

சிவமயம்.

# மூன்றாந்திருமுறையின்

## பதிக அட்டவணை.


| பதிகப்பெயா. | பக்கம |
|---|---|
| **பெரியதிருத்தாண்டகம்.** | |
| கோயில | க |
| **புக்கதிருத்தாண்டகம்.** | |
| கோயில | உ |
| **ஏழைத்திருத்தாண்டகம்.** | |
| திருவீரட்டானம | ௩ |
| **அடையாளத்திருத்தாண்டகம்.** | |
| திருஅதிகைவீரட்டானம | ௫ |
| **போற்றித்திருத்தாண்டகம்.** | |
| திருவீரட்டானம | ௬ |
| **திருவடித்திருத்தாண்டகம்.** | |
| திருஅதிகைவீரட்டானம | ௭ |
| **காப்புத்திருத்தாண்டகம்.** | |
| திருவீரட்டானம | ௮ |
| **திருத்தாண்டகம்.** | |
| திருக்காளத்தி | க0 |
| திருஆமாத்தூா | கக |
| திருபபாநதணாலலூா | கஉ |
| திருபபுன்கூாதிருநீடூா | க௩ |
| திருக்கழிபபாலை | க௫ |
| திருபபுறமபயம | க௬ |
| திருநலலூா | க௭ |
| திருக்கருகாவூா | க௯ |
| திருவிடைமருது | உ0 |
| திருவிடைமருது | உக |
| திருபபூவணம | உஉ |
| திருவாலவாய் | உ௪ |
| திருநள்ளாறு | உ௫ |
| திருஆக்கூா | உ௬ |
| திருநாகைக்காரோணம | உ௭ |
| திருமறைக்காடு | உ௯ |
| திருவாரூா | ௩0 |
| திருவாரூா | ௩க |
| திருவாரூா | ௩௩ |
| திருவாரூர் | ௩௩ |
| திருஆரூா | ௩௫ |
| திருஆரூர் | ௩௬ |

| பதிகப்பெயா. | பக்கம். |
|---|---|
| திருஆரூா | ௩௭ |
| திருஆரூா | ௩௯ |
| **போற்றித்திருத்தாண்டகம்.** | |
| திருஆரூா | ௪0 |
| **அரநெறித்திருத்தாண்டகம்.** | |
| திருஆரூா | ௪க |
| **திருத்தாண்டகம்.** | |
| திருஆரூா | ௪உ |
| திருவெண்காடு | ௪௩ |
| திருபபழனம | ௪௫ |
| திருவையாறு | ௪௬ |
| திருவையாறு | ௪௭ |
| திருமழபாடி | ௪௮ |
| திருமழபாடி | ௪௯ |
| திருநெய்த்தானம | ௫0 |
| திருநெய்த்தானம | ௫உ |
| திருபபூநதுருததி | ௫௩ |
| திருசசோறறுததுறை | ௫௪ |
| திருவொறறியூா | ௫௫ |
| திருஆவடுதுறை | ௫௬ |
| திருஆவடுதுறை | ௫௮ |
| திருவலிவலம | ௫௯ |
| திருக்கோகரணம | ௬0 |
| திருவீழிமிழலை | ௬உ |
| திருவீழிமிழலை | ௬௩ |
| திருவீழிமிழலை | ௬௪ |
| திருவீழிமிழலை | ௬௬ |
| திருபபுள்ளிருக்குவேளூா | ௬௭ |
| **போற்றித்திருத்தாண்டகம்.** | |
| ஸ்ரீகைலாயம | ௬௮ |
| ஸ்ரீகைலாயம | ௭0 |
| ஸ்ரீகைலாயத்திருமலை | ௭க |
| **திருத்தாண்டகம்.** | |
| திருவலமபுரம | ௭உ |
| திருவெணணி | ௭௩ |
| திருக்கற்குடி | ௭௪ |

# பதிக அட்டவணை.


| பதிகப்பெயர். | பக்கம். | பதிகப்பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| திருக்கன்றாப்பூர் | எசு | திருமாற்பேறு | கூகூ |
| திருவானைக்கா | எஎ | திருக்கோடிகா | க0க |
| திருவானைக்கா | எஅ | திருச்சாய்க்காடு | க0உ |
| திருவேகம்பம் | எகூ | திருப்பாசூர் | க0ங |
| திருவேகம்பம் | அக | திருச்செங்காட்டங்குடி | க0ரு |
| திருநாகேச்சரம் | அஉ | திருமுண்டீச்சரம் | க0சு |
| திருக்கீழ்வேளூர் | அங | திருவாலம்பொழில் | க0எ |
| திருமுதுகுன்றம் | அரு | திருச்சிவபுரம் | க0கூ |
| திருப்பள்ளியின்முக்கூடல் | அசு | திருவோமாம்புலியூர் | கக0 |
| க்ஷேத்திரக்கோவை | அஎ | திருவின்னம்பர் | ககக |
| திருஅடைவு | அகூ | திருக்கஞ்சனூர் | ககஉ |
| திருவலஞ்சுழி | கூ0 | திருவெறும்பியூர் | ககங |
| திருவலஞ்சுழியும்-திருக்கொட்டையூர்க்கோடீச்சரமும் | கூ0 | திருக்கழுக்குன்றம் | ககரு |
| | | பலவகை | ககரு |
| திருநாரையூர் | கூஉ | நின்ற | ககசு |
| திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் | கூங | தனி | ககஅ |
| திருப்புத்தூர் | கூச | தனி | கககூ |
| திருவாய்மூர் | கூசு | திருவினை | கஉ0 |
| திருவாலங்காடு | கூஎ | திருமறுமாற்றல் | கஉஉ |
| திருத்தலையாலங்காடு | கூஅ | திருப்புகலூர் | கஉங |

சிவமயம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## மூன்றாந் திருமுறை.

### கோயில் - பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

அரியானை யந்தணர்தஞ்சிந்தையானை யருமறையினகத்தானை யணுவையார்க்குந், தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகழொளியைத்தேவர்கடங்கோனை மற்றைக், கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக் கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (௧)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை அற்றானையலந்தார்க்குமருள்செய்வானையாரூரும்புகுவானையறிந்தோமன்றே மற்றொருந்தன்னொப்பாரில்லாதானை வானவர்களெப்பொழுதுமவணங்கி யேத்தும் பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௨)

கருமானினுரியதளேயுடையாவீக்கிக்கனைகழல்கள்கலந்தொலிப்பவனலகையேந்தி, வருமானத்திரடோள்கண்மட்டித்தாடவளர்மதியுஞ் சடைக்கணிந்துமானோக்கி, அருமானவாண்முகத்தாளமர்ந்துகாணவமரர்கணமுடிவணங்கவாடுகின்ற, பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே (௩)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னையமரர்கடம்பெருமானையரனைமூவா, மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன்றன்னை மறிகடலுங்குலவரையுமமண்ணும விண்ணும், திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந்திரிசுடர்களோரிரண்டும்பிறவுமாய, பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௪)

அருந்துணையையடியார்தமல்லறீர்க்குமருமருந்தைய கன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டுவான்புலன்களகத்தடக்கிமடவாரோடும், பொருந்தணைமேல்வரும்பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித் தனைநினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (௫)

கரும்பமருமொழிமடவாள்பங்கன்றன்னைக் கனவயிரக்குன்றதனைக் காட்சியானை, அரும்பமரும்பூங்கொன்றைத்தாரான்றன்னையருமறையோடாறங்கமாயினானைச், சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ்தென்னாரூர்ச்சுடர்க்கொழுந்தைத்துளக்

கிலாவிளக்கைமிக்க, பெருமபயனைபபெருமபற்றப்புலியூரானைபபேசாதநாளெல லாமபிறவாநாளே. (சு)

வருமபயனையெழுநரமபினோசையானை வரைசிலையாவானவாகள்முயன்றவா ளி, அருமபயஞ்செயவுணாபுரமெரியக்கோதத வம்மானையலைகடனஞ்சயின்றா ன்றன்னைச், சுரும்பவிழுங்குழன்மடவாாகடைக்கணோக்கிற்றுளங்காதசிந்தைய ராய்த்துறநதோருள்ளப, பெருமபயனைபபெருமபற்றப்புலியூரானைப பேசாதநா ளெலலாமபிறவாநாளே (எ)

காரானையீருரிவைபபோாவையானைக்காமருபூஙகசசியேகமபன்றனனை, யா ரேனுமடியவாகட்கணியான்றன்னையமராகளுக்கறிவறியவளவிலானைப, பாரோ ருமவிண்ணோருமபணியநடடமபயிலகின்றபரஞ்சுடாைபபரனையெண்ணில்,பே ரானைபபெருமபத்தபபுலியூரானைபபேசாதநாளெலலாமபிறவாநாளே. (அ)

முறறுதபானமதியஞ்சூடினானை மூவுலகுநதானுயமுதலவன்றன்னைச், செறறு ர்கள்புரமூன்றுஞ்செற்றான்றன்னைத் திகழொளியைமரகதத்தைத்தேனைபபாலை க், குற்றாலத்தமாநதுறையுங்குழகன்றன்னைககூத்தாட வலலானைககோனைஞான ம்,பெற்றார்கள்பெருமபற்றபபுலியூரானைபபேசாதநாளெலலாட பிறவாநாளே. (கூ)

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுஙகடிக்கமலததிருநதயனுங் காணாவ ண்ணம, சீரொளியதழற்பிழமபாய்நின்றதொலலைததிகழொளியைச்சிநதைதனை மயக்கநதீாக்கும், ஏரொளியையிருநிலனுமவிசுமபுமவிண்ணுமேழுலகுங்கடந்த ண்டத்தபபால்நின்ற, பேரொளியைபபெருமபற்றபபுலியூரானைப்பேசாதநாளெல் லாமபிறவாநாளே. (கo)

திருசசிற்றம்பலம்.

## கோயிற்புக்க - திருத்தாண்டகம்.

திருசசிறறம்பலம்.

மங்குன்மதிதவழுமாடவீதிமயிலாபபிலுளளாாமருகலுளளாா
கொங்கிற்கொடுமுடியாாகுற்றாலத்தாாகுடமூக்கிலுள்ளாாபோய்ககொள்ளமபூதூ
தங்குமிடமறியாாசாலநாளாாதருமபுரததுள்ளாாதக்களூராா [ர்
பொங்குவெண்ணீறணிந்துபூதஞ்சூழபபுலியூரசசிற்றமபலமேபுக்கார்தாமே. (க)

நாகமரைக்கசைத்தநமபாிநாள்நனிபள்ளியுள்ளாாபோய்நலலூாதங்கிப்
பாகம்பொழுதெலலாம்பாசூாத்தங்கிட பருதிநியமத்தாாபன்னிருநாள்
வேதமுமவேள்விபபுகையுமோவாவிரிநீாமிழலையெழுநாடடங்கிப
போகமுமபொய்யாப்பொருளுமானாாபுலியூாச்சிற்றமபலமேபுக்கார்தாமே. (உ)

துறங்காட்டியெலலாமவிரிததாாபோலுநதூமதியும்பாமபுமுடையார்போலும
மறங்காட்டிமும்மதிலுமெய்தாாபோலுமந்திரமுநதநதிரமுந்தாமேபோலும
அறங்காட்டியந்தணர்க்கன்றாலநீழலறமருளிச்செய்தவராரிந்நாள்
புறங்காட்டெரியாடிப்பூதஞ்சூழபபுலியூாசசிற்றமபலமேபுக்காாதாமே. (ங)

வாரேறுவனமுலையாள்பாகமாகமழுவாள்கையேநதிமயானத்தாடிச
சீரேறுதண்வயல்சூழோதவேலித்திருவாஞ்சியத்தாாதிருநள்ளாறா
காரேறுகண்டத்தார்காமற்காய்ந்தகண்விளங்குநெற்றியாாகடனஞ்சுண்டாா
போரேறுதாமேறிபபூதஞ்சூழப்புலியூாச்சிற்றமபலமேபுக்காாதாமே. (ச)

காராரகமழ்கொன்றைக்கண்ணிசூடிக்கபாலங்கையேந்திக்கணங்கள்பாட
ஊராரிடுமெபிச்சைகொண்டுழலுமுத்தமராய்நின்றவொருவனாதாம
சீராரகழலவணங்குநதேவதேவாதிருவாரூரத்திருமூலத்தானமேயார
போராரவிடையேறிப்பூதஞ்சூழப்புலியூரச்சிற்றமபலமேபுக்காரதாமே. (௫)

காதாரகுழையினராகட்டங்கத்தாரகயிலாயமாமலையாரகாரோணத்தார
மூதாயரமூதாதைபிலலாரபோலுமுதலுமிறுதியுநதாமேபோலும
மாதாயமாதாமகிழவன்றுமன்மதவேள்தன்னுடலங்காய்நதாரிநநாள்
போதாரசடைதாழப்பூதஞ்சூழப்புலியூரசசிற்றமபலமேபுக்காரதாமே. (௬)

இறநதாரக்குமென்றுமிறவாதார்ககுமிமையவாக்குமேகமாய்நின்றுசென்று
பிறநதாரககுமென்றுமபிறவாதாரககுமபெரியான்றனபெருமையேபேசிநின்று
மறநதாரமனத்தெனறுமருவாரபோலுமறைககாடடுறையுமழுவாடசெலவா
புறநதாழ்சடைதாழப்பூதஞ்சூழப்புலியூரசசிற்றமபலமேபுக்காரதாமே. (எ)

குலாவெண்டெணடுமாலையென்புபூண்டு குளிரகொனறைத்தாரணிநதுகொல்லேறேறிக், கலாவெண்களிற்றுரிவைபபோரவைமூடிக் கையோடனலேநதிக்காடுறைவார, நிலாவெண்மதியுரிஞ்சநீண்டமாடநிறைவயல்சூழ்நெய்த்தானமேயசெலவா, புலாலவெண்டலையேநதிப்பூதஞ்சூழப்புலியூரசசிற்றமபலமேபுக்காரதாமே.()

சநதித்தகோவலனாத்தர்வெண்ணூன்மாரபசங்கரனைக் கண்டீரோகண்டோமிநநாள், பநதித்தவெளவிடையைபபாயவேறிபபடுதலையிலென்கொலோவேநதிக்கொண்டு, வநதிஙகென்வெள்வளையுநதாமுமெலலாமணியாரூர்நின்றநதிகொள்ளக்கொள்ளட, பொன்றிமணிவிளக்குபபூதமபற்றபபுலியூரச்சிற்றமபலமேபுக்காரதாமே. (௯)

பாதங்கணலலாரபரவியேத்திபபத்திமையாறபணிசெய்யுநதொண்டாதஙகள்
ஏதங்கடீரவிருநதாரபோலுமெழுபிறபபுமாளுடையயவீசனாதாம
வேதங்களோதியோரவீணையேநதிவிடையொன்றுதாமேறிவேதகீதா
பூதஙகள்சூழப்புலித்தோலவீககிபபுலியூரசசிற்றமபலமேபுககாரதாமே. (௧௦)

படடுடுத்துததோலபோரத்துப்பாமபொன்றார்த்துப பகவனாரபாரிடங்கள்சூழநடடஞ், சிடடராய்த்தீயேநதிச்செலவாரதமமைத் தில்லைச்சிற்றமபலத்தேகண்டோமிநநாள், விட டிலஙகுசூலமேவெண்ணூலுமண்டேயோதுவதும வேதமேவீணையுண்டே, கடடஙகங்கையதேசெனறுகாணீரகறைசோமிடற்றெங்கபாலியாரக்கே. (௧௧)

திருசசிற்றம்பலம்.

---

## திருவீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம்

திருசசிற்றமபலம்.

வெறிவிரவுகூவிளநற்றொங்கலானைவீரட்டத்தானைவெள்ளேற்றினானைப
பொறியரவினானைப்புள்ளூர்தியானைபபொன்னிறத்தினானைபபுகழ்த்தக்கானை
அறிதற்கரியசீரமமான்றன்னையதியரையமங்கையமாநதான்றன்னை
எறிகெடிலத்தானையிறைவன்றன்னையேழையேனான்பண்டிகழ்நதவாறே. (௧)

வெள்ளிக்குன்றன்னவிடையான்றன்னைவில்வலான்விலவட்டங்காய்ந்தான்றன்னை, புள்ளிவரிநாகமபூண்டான்றன்னைப்பொன்பிதிரந்தன்னசடையான்றன்

னை, வள்ளிவளைத்தோள்முதல்வன்றன்னை வாராவுலகருளவல்லான்றன்னை, எள்க
விடுபிச்சையேற்பான்றன்னையேழையேனன்பண்டிகழ்ந்தவாறே. (௨)

மூநதியுலகம்படைத்தான்றன்னைமூவாமுதலாயமூர்த்திதன்னைச்
சந்தவெண்டிங்களணிந்தான்றன்னைத்தவநெறிகள்சாதிக்கவல்லான்றன்னைச
சிந்தையிற்றீரவினையைத்தேனைப்பாலைச்செழுங்கோயிலவீரட்டமேவினானை
எந்தைபெருமானையீசன்தன்னையேழையேனன்பண்டிகழ்ந்தவாறே. (௩)

மநதிரமுமறைபபொருளுமானான்றன்னை மதியமுஞாயிறுங்காற்றுநீயும
அந்தரமுமலைகடலுமானான்றன்னை யதியரையமங்கையமர்ந்தான்றன்னைக்
கநதருவஞ்செய்திருவாகழல்கைகூப்பிக்கடிமலர்கள்பல தூவிக்காலைமாலை
இநதிரனுமவானவருமதொழச்செலவானையேழையேனன்பண்டிகழ்நதவாறே.()

ஓருபிறப்பிலானடியையுணாநதுங் காணருயாகதிக்குவழிதேடிப்போகமா
ட்டார், வரும்பிறப்பொன்றுணராதுமாசுபூசிவழிகாணதவா போலவாமனத்தனு
கி,அருமபிறப்பையறுப்பிக்குமதிகையூரானமமான்றனிணையடி யையணைநதுவா
ழா, திருபிறப்புமவெறுவியராயிருநதாசொறகெட்டேழையேனன் பண்டிகழ்ந்த
வாறே. (௫)

ஆறேற்கவல்லசடையான்றன்னையஞ்சனமபோலுமிடறுரான்றன்னைக
கூறேறக்கூறமரவல்லான்றன்னைக்கோள்வளைகைமாதராள்பாகன்றன்னை
நீறேற்கப்பூசுமகலத்தானைநின்மலன்றன்னைநிமலன்றன்னை
ஏறேற்கவேறுமாவல்லான்றன்னையேழையேனனபண்டிகழ்ந்தவாறே. (௬)

குண்டரக்கனுயுழன்றுகையிலுண்டுகுவிமுலையார்தமமுனேநாணமின்றி
உண்டியுகநதமணேநின்றுசொற்கேட்டுடனாகியுழிதநதேனுணர்வொன்றின்றி
வண்டுலவுகொன்றையங்கண்ணியானைவானவர்களேத்தப்படுவான்றன்னை
எண்டிசைக்குமூர்த்தியாய்நின்றான்றன்னையேழையேனன்பண்டிகழ்ந்தவாறே.

உறிமுடித்தகுண்டிகைகையிற்றூக்கி யூததைவாய்ச்சமணர்க்கோர்குண்டர
க்கனாய்க், கறிவிரவுநெய்சோறுகையிலுண்டுகண்டார்க்குப்பொல்லாதகாட்சியா
னேன், மறிதிரைநீர்பபவ்வநஞ்சுண்டான்றன்னைமறித்தொருகாலவல்வினையேனி
னைக்கமாட்டேன், எறிகெடிலநாடர்பெருமான்றன்னையேழையேனன்பண்டிகழ்
ந்தவாறே. (௮)

நிறைவார்நதநீர்மையாய்நின்றான்றன்னை நெற்றிமேற்கண்ணொன்றுடையா
ன்றன்னை, மறையானைமாசொன்றிலலாதான்றன்னைவானவர்மேன்மலரடியை
வைத்தான்றன்னைக், கறையானைக்காதார்குழையான்றனனைக் கட்டங்கமேநதிய
கையினானை, இறையானையெநதைபெருமான்றன்னையேழையேனன்பண்டிகழ்ந
தவாறே. (௯)

தொலலைவான்சூழ்வினைகள்சூழப்போநதுதூறறியேனுறறியே சுடராய்நின்
று, வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைகொண்டவானவர்க்குநதானவர்க்குமபெருமா
ன்றன்னைக், கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலூமுதுங்கோவலனுநான்முக
னுங்கூடியெங்கும், எல்லைகாண்பரியானையெமமான்றன்னையேழையேனன்பண்
டிகழ்ந்தவாறே. (௧௦)

மூலைமறைக்கப்பட்டுநீராடப்பெண்கள் முறைமுறையானந்தெய்வமென்றுதீ
ண்டித், தலைபறிக்குந்தன்மையர்களாகிநின்றுதவமென்றவஞ்செய்துதக்கதோரார்,

மலைமறிக்கச்சென்றவிலங்கைக்கோனைமதனழியச்செற்றசேவடியினானை, இலைம
லித்தகொன்றையந்தாரான்றன்னையேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திரு அதிகைவீரட்டானம் - அடையாளத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனைமாகங்கைதிரையான்மோதச்சடாமகுடத்திருத்துமேசாமவேதக்
கந்தருவமவிரும்புமேகபாலமேந்துகையனேமெய்யனேகனகமேனிப்
பந்தணவுமெல்விரலாள்பாகனாமேபசுவேறுமேபரமயோகியாமே
ஐந்தலையமாசுணங்கொண்டாயாகுமேயவனாகிலதிகைவீரட்டனாமே. (க)

ஏறேறியேழுலகுமுழிதாவானேயிமையவர்கடொழுதேத்தவிருக்கின்றானே,
பாறேறுபடுதலையிற்பலிகொள்வானேபடவரவந்தடமார்பிற்பயிலவித்தானே, நீறே
றுசெம்பவளக்குன்றொப்பானேநெற்றிமேலொற்றைக்கண்ணிறைவித்தானே, ஆ
றேறுசடைமுடிமேற்பிறைவைத்தானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (உ)

முண்டத்திற்பொலிந்திலங்குமேனியானேமுதலாகிநடுவாகிமுடிவானானே
கண்டத்திலவெண்மருப்பின்காறையானேகதநாகங்கொண்டாடுங்காட்சியானே
பிண்டத்தினியற்கைக்கோர்பெற்றியானேபெருநிலநீர்தீவளியாகாசமாகி
அண்டத்துக்கப்பாலாயிப்பாலானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (ங)

செய்யனேகரியனேகண்டமபைங்கண்வெள்ளெயிற்றாடர வனேவினைகள்
போக,வெய்யனேதண்கொன்றைமிலைந்தசென்னிச்சடையனேவிளங்குமழுச்சூ
லமேந்துங், கையனேகாலங்கள்மூன்றானானேகருப்புவிற்றனிக்கொடும்பூண்காமற்
காய்ந்த, ஐயனேபருத்துயர்ந்தவானேறானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (ச)

பாடுமேயொழியாமேநால்வேதமும்படர்சடைமேலொளிதிகழப்பனிவெண்
டிங்கள், சூடுமேயரைதிகழத்தோலுமபாம்புஞ்சுற்றுமேதொண்டைவாயுமையோ
ர்பாகங், கூடுமேகுடமுழவம்வீணைதாளங்குறுநடையசிறுபூதமுழக்கமாக்கூத், தா
டுமேயந்தடக்கையனலேந்துமேயவனாகிலதிகைவீரட்டனாமே. (ரு)

ஒழித்திடுமேயுள்குவாருள்ளத்துள்ளவுறுபிணியுஞ்செறுபகையுமொற்றைக்க
ண்ணால், விழித்திடுமேகாமனையும்பொடியாய்வீழ வெள்ளப்புனற்கங்கைசெஞ்ச
டைமேல, இழித்திடுமேயேழுலகுந்தானாகுமமேயியங்குந்திரிபுரங்களோரம்பினா
ல, அழித்திடுமேயாதிமாதவத்துளானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (சு)

குழலோடுகொக்கரைகைத்தாளமொந்தைகுறட்பூதமுன்பாடத்தானாடுமமே
கழலாடுதிருவிரலாற்கானஞ்செய்துகனலின்கட்டிருவுருவந்தான்காட்டுமமே
எழிலாருந்தோள்வீசிநடமாடுமமேயீமப்புறங்காட்டிலேமந்தோறும
அழலாடுமேயட்டமூர்த்தியாமேயவனாகிலதிகைவீரட்டனாமே. (எ)

மாலாகிமதமிக்ககளிறுதன்னைவதைசெய்துமற்றதனினுரிவைகொண்டு [னே
மேலாலுங்கீழாலுந்தோன்றாவண்ணம வெம்புலால்கைகலக்க மெய்போர்த்தா
கோலாலம்படவரைநட்டரவுசுற்றிக்குரைகடலைத்திரையலறக்கடைந்து கொண்
ட, ஆலாலமுண்டிருண்டகண்டத்தானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (அ)

செம்பொனாற் செய்தழகுபெயதாற்போலுஞ் செஞ்சடையெமபெருமானே
தெய்வநாறும்,வமபினார்மலர்க்கூந்தலுமையாள்காதன்மணவாளனேவலங்கைமழு
வாளனே,நம்பனேநான்மறைகடொழநின்றானேநடுங்காதாரபுரமூன்றுநடுங்கச்செ
ற்ற, அம்பனேயண்டகோசரத்துளானேயவனாகிலதிகைவீரட்டனாமே. (௯)

எழுந்தத்திரைநதித்துவலைநனைந்ததிங்களிளங்கலாததிகழ்கின்ற வளர்சடைய
னே, கொழும்பவளச்செங்கனிவாய்க்காமக்கோட்டிகொங்கையிணையமாபொரு
துகோலங்கொண்ட, தழுமபுளவேவவரைமாபிலவெண்ணூலுண்டேசாந்தமொ
டுசந்தனத்தினளறுதங்கி, அழுந்தியசெந்திருவுருவில வெண்ணீற்றானே யவனாகி
லதிகைவீரட்டனாமே. (௧௰)

நெடியானுநான்முகனுநேடிக்காணநீண்டானேநேரொருவரிலலாதானே
கோடியேறுகோலமாமணிகண்டனேகொலவேங்கையதளனேகோவணனே
பொடியேறுமேனியனேயையமவேண்டிபபுவலோகந்திரியுமேபுரிநூலனே
அடியாரையமருலகமாள்விக்குமேயவனாகிலதிகைவீரட்டனாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவீரட்டானம் - போற்றித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

எல்லாருஞ்சிவனென்னநின்றாய்போற்றியெரிசுடராய்நின்றவிறைவாபோற்றி
கொலலாமழுவாட்படையாய்போற்றிகொல்லுங்கூற்றொன்றையுதைத்தாய் போ
கல்லாதார்காட்சிக்கரியாய்போற்றிகற்றாரிடுமபைகளைவாயபோற்றி [ற்றி
வில்லாலவியரணமெய்தாய்போற்றிவீரட்டங்காதலவிமலாபோற்றி (௧)

பாட்டுக்குமாட்டுக்குமபண்பாபோற்றிபல்லூழியாய்பபடைத்தாய்போற்றி
ஓட்டகத்தேயூணுகந்தாய்போற்றியுள்குவாருள்ளத்துறைவாய்போற்றி
காட்டகத்தேயாடலமகிழ்ந்தாய்போற்றிகார்மேகமன்னமிடற்றாய்போற்றி
ஆட்டுவதோர்நாகமசைத்தாய்போற்றியலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி ()

முலலையங்கண்ணிமுடியாய்போற்றிமுழுநீறுபூசியமூர்த்திபோற்றி
எல்லைநிறைந்தகுணத்தாய்போற்றியேழ்நரமபினோசைபடைத்தாய்போற்றி
சிலலைச்சிரைத்தலையிலூணாய்போற்றிசென்றடைந்தார்தீவினைகடீர்ப்பாய்போற்றி
தில்லைசசிற்றம்பலமேயாய்போற்றிதிருவீரட்டானத்தெஞ்செல்வாபோற்றி. (௩)

சாமபலகலத்தணிந்தாய்போற்றிதவநெறிகள்சாதித்துநின்றாய்போற்றி
கூம்பித்தொழுவார்தங்குற்றேவலைக்குறிக்கொண்டிருக்குங்குழகாபோற்றி
பாம்புமதியும்புனலுந்தமமிற்பகைதீர்த்துடன்வைத்தபண்பாபோற்றி
ஆம்பல்மலர்கொண்டணிந்தாய்போற்றியலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி.

நீறேறுநீலமிடற்றாய்போற்றிநிழற்கழுமவெண்மழுவாள்வைத்தாய்போற்றி
கூறேறுமையொருபாற்கொண்டாய்போற்றிகோளரவமாட்டுங்குழகாபோற்றி
ஆறேறுசென்னியுடையாய்போற்றியடியவர்கட்காரமுதமானாய்போற்றி
யேறேறவென்றுமுகப்பாய்போற்றியிருங்கெடிலவீரட்டத்தெந்தாய்போற்றி. (௫)

பாடுவார்பாடலுகப்பாய்போற்றிபழையாற்றுப்பட்டீச்சரத்தாய்போற்றி
வீடுவார்வீடருளவல்லாய்போற்றிவேழத்துரிவெருவப்போர்த்தாய்போற்றி

நாடுவார்நாடற்கரியாய்போற்றிநாகமரைக்கசைத்தநம்பாபோற்றி
ஆடுமானைந்துகப்பாய்போற்றியலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (௬)

மண்டுளங்கவாடல்மகிழ்ந்தாய்போற்றிமால்கடலுமால்விசும்புமானாய்போற்றி
விண்டுளங்கமும்மதிலுமெய்தாய்போற்றிவேழத்துரிமூடுமவிகிர்தாபோற்றி
பண்டுளங்கப்பாடல்பயின்றாய்போற்றிபாரமுழுதுமாயபரமாபோற்றி [ற்றி.
கண்டுளங்கக்காமனைமுன்காய்ந்தாய்போற்றி கார்க்கெடிலங்கொண்டகபாலிபோ

வெஞ்சினவெள்ளேறூர்தியுடையாய்போற்றிவிரிசடைமேல் வெள்ளம்படைத்தாய்போற்றி, துஞ்சாப்பலிதேருந்தோன்றல்போற்றிதொழுதகைதுன்பந்துடைப்பாய்போற்றி, நஞ்சொடுங்குகண்டத்துநாதாபோற்றிநான்மறையோடாறங்கமானாய்போற்றி, அஞ்சொலாள்பாகமமர்ந்தாய்போற்றியலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (௮)

சிந்தையாய்நின்றசிவனேபோற்றிசீபர்ப்பதஞ்சிந்தைசெய்தாய்போற்றி, புந்தியாய்ப்புண்டரிகத்துள்ளாய்போற்றிபுண்ணியனேபோற்றிபுனிதாபோற்றி, சந்தியாய்நின்றசதுராபோற்றிதத்துவனேபோற்றியென்றாதாய்போற்றி, அந்தியாய்நின்றவரனேபோற்றியலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (௯)

முக்கணாபோற்றிமுதல்வாபோற்றிமுருகவேடன்னைப்பயந்தாய்போற்றி, தக்கணாபோற்றிதருமாபோற்றி தத்துவனேபோற்றியென்றாதாய்போற்றி, தொக்கணாவென்றிருவர்தோள்கைகூப்பத்துளங்காதெரிசுடராய்நின்றாய்போற்றி, எக்கண்ணுங்கண்ணிலேனெந்தாய்போற்றியெறிகெடிலவீரட்டத்தீசாபோற்றி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஅதிகைவீரட்டானம் - திருவடித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தரற்றுமடியருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாருமடிசார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி
பரவுவார்பாவம்பறிக்குமடிபதினெண்கணங்களும்பாடுமடி
விரவுநீர்த்தென்கெடிலநாடனடிதிருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௧)

கொடுவினையாரென்றுங்குறுகாவடிகுறைந்தடைந்தாராழாமைக்காக்குமடி
படுமுழவம்பாணிபயிற்றுமடிபதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடிகடல்வையங்காப்பான்கருதுமடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடிநிறைகெடிலவீரட்டநீங்காவடி. (௨)

வைதெழுவார்காமம்பொய்போகாவடிவஞ்சவலைப்பாடொன்றில்லாவடி
கைதொழுதுநாமேத்திக்காணுமடிகணக்குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழுதுநாமேத்தியாட்டுமடிநீள்விசும்பையூடறுத்துநின்றவடி
தெய்வப்புனற்கெடிலநாடனடிதிருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௩)

அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்குமடியழகெழுதலாகாவருட்சேவடி
சுரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடிசோமனையுங்காலனையுங்காய்ந்தவடி
பெரும்பித்தர்கூடிப்பிதற்றுமடிபிழைத்தார்பிழைப்பறியவல்லவடி
திருந்துநீர்த்தென்கெடிலநாடனடிதிருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௪)

ஒருகாலத்தொன்றாகிநின்றவடியூழிதோறூழியுயர்ந்தவடி
பொருகழலும்பல்சிலம்பும்மார்க்குமடிபுகழ்வார்புகழ்தகையவல்லவடி

இருநிலத்தோரின்புற்றங்கேத்துமடியின்புற்றாரிட்டபூவேறுமடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௫)

திருமகட்குச்செந்தாமரையாமடிசிறந்தவர்க்குத்தேனாய்விளைக்குமடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய்நின்றவடிபுகழ்வார்புகழ்தகையவல்லவடி
உருவிரண்டுமொன்றோடொன்றொவ்வாவடியுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௬)

உரைமாலையெல்லாமுடையவடியுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்குமடிவானவர்கடாமவணங்கிவாழ்த்துமடி
அரைமாத்திரையிலடங்குமடியகலமளக்கிற்பாரிலாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி கமழ்வீரட்டானக்கபாலியடி. (௭)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடிநடுவாயுலகநாடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடிதீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவுமடிமந்திரமுந்தந்திரமுமாயவடி
எறிகெடிலநாடாபெருமானடி திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (௮)

அணியனவுஞ்சேயனவுமலலாவடியடியார்கட்காரமுதமானவடி
பணிபவர்க்குப்பாங்காகவல்லவடிபற்றற்றார்பற்றுமபவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடிமருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடுதண்கெடிலநாடன்னடி தகைசார்வீரட்டத்தலைவன்னடி. (௯)

அந்தாமரைப்போதலர்ந்தவடியரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடிமுழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடிபவளத்தடவரையேபோலவானடி
வெந்தார்சுடலைநீறாடுமடிவீரட்டங்காதலவிமலன்னடி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம்நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருவீரட்டேசுவரர்-தேவியார்-திருவதிகைநாயகி.

திருவீரட்டானம் - காப்புத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

செல்வப்புனற்கெடிலவீரட்டமுஞ்சிற்றேமமுமபெருந்தண்குற்றாலமும
தில்லைச்சிற்றம்பலமுந்தென்கூடலுந்தென்னானைக்காவுஞ்சிராப்பள்ளியும
நல்லூருந்தேவன்குடிமருகலுநள்ளவர்கள்தாமேத்துநாரையூரும
கல்லலகுநெடும்புருவக்கபாலமேந்திக்கட்டங்கத்தோடுறைவார்காப்புக்களே. (௧)

தீர்த்தப்புனற்கெடிலவீரட்டமுந்திருக்கோவலவீரட்டமவெண்ணெய்நல்லூர்
ஆர்த்தருவிவீழ்சுனைநீரண்ணாமலையறையணிநல்லூருமரனெறியும்
ஏத்துமின்கணீரேத்தநின்றவீசரிடைமருதின்னம்பரேகம்பமும்
காத்தயங்குசோலைக்கயிலாயமுங்கண்ணுதலான்றன்னுடையகாப்புக்களே. (௨)

சிறையார்புனற்கெடிலவீரட்டமுந்திருப்பாதிரிப்புலியூர்திருவாமாத்தூர்
துறையார்வனமுனிகளேத்தநின்றசோற்றுத்துறைத்துருத்திநெய்த்தானமும

அறையார்புனலொழுகுங்காவிரிசூழையாற்றமுதன்பழனநல்ல
கறையார்பொழில்புடைசூழ்கானப்பேருங்கழுக்குன்றுந்தம்முடையகாப்புக்களே
திரையார்புனற்கெடிலவீரட்டமுந்திருவாரூர்தேவூர்திருநெல்லிக்கா
உரையார்தொழநின்றவொற்றியூருமோத்தூருமாற்பேறுமாந்துறையும்
வரையாரருவிசூழ்மாநதியுமாகாளங்கேதாரமாமேருவும்
கரையார்புனலொழுகுகாவிரிசூழ்கடம்பந்துறையுறைவார்காப்புக்களே. (௪)

செழுநீர்ப்புனற்கெடிலவீரட்டமுந்திரிபுராந்தகந்தென்னார்தேவீச்சரம்
கொழுநீர்புடைசூழிக்குங்கோட்டுக்காவுங்குடமூக்குக்கோகரணங்கோலக்காவும்
பழிநீர்மையில்லாப்பனங்காட்டூரும்பனையூர்பயற்றூர்பராய்த்துறையும்
கழுநீர்மதுவிரியுங்காளிங்கமுங்கணபதீச்சரத்தார்தங்காப்புக்களே. (௫)

தெய்வப்புனற்கெடிலவீரட்டமுஞ்செழுந்தண்பிடவூருஞ்சென்றுநின்று
பவ்வந்திரியும்பருப்பதமும்பறியலூர்வீரட்டம்பாவநாசம்
மவ்வந்திரையுமணிமுத்தமும்மறைக்காடுவாய்மூர்வலஞ்சுழியும்
கவ்வைவரிவண்டுபண்ணேபாடுங்கழிப்பாலைதம்முடையகாப்புக்களே. (௬)

தெண்ணீர்ப்புனற்கெடிலவீரட்டமுஞ்சிக்காலிவல்லந்திருவேட்டியும்
உண்ணீராரோடகமுமூறலம்பருறையூர்நறையூரரணநல்லூர்
விண்ணார்விடையான்விளமர்வெண்ணிமீயச்சூர்வீழிமிழலைமிக்க
கண்ணார்நுதலார்கரபுரமுங்கபாலியாரவர்தங்காப்புக்களே. (௭)

தெள்ளும்புனற்கெடிலவீரட்டமுந்திண்டீச்சரமுந்திருப்புகலூர்
எள்ளும்படையானிடைத்தானமுமேயீச்சுரமுநல்லேமங்கூடல்
கொள்ளுமிலயத்தார்கோடிகாவுங்குரங்கணின்முட்டங்குறும்பலாவும்
கள்ளருந்தத்தெள்ளியாருள்கியேத்துங்காரோணந்தம்முடையகாப்புக்களே. (௮)

சீரார்புனற்கெடிலவீரட்டமுந்திருக்காட்டுப்பள்ளித்திருவெண்காடும்
பாரார்பரவுஞ்சீர்ப்பைஞ்ஞீலியும்பந்தணைநல்லூரும்பாசூர்நல்லம்
நீரார்நிறைவயல்சூழ்நின்றியூருநெடுங்களமுநெல்வெண்ணெய்நெல்வாயிலும்
காரார்கமழ்கொன்றைத்தாரார்க்கென்றுங்கடவூரில்வீரட்டங்காப்புக்களே. (௯)

சிந்தும்புனற்கெடிலவீரட்டமுந்திருவாஞ்சியமுந்திருநள்ளாறும்
அந்தண்பொழில்சூழயோகந்தியுமாக்கூருமாவூருமான்பட்டியும்
எந்தம்பெருமாற்கிடமாவதுவிடைச்சுரமுமெந்தைதலைச்சங்காடும்
கந்தங்கமழுங்கரவீரமுங்கடம்பூர்கரக்கோயில்காப்புக்களே. (௧௦)

தேனார்புனற்கெடிலவீரட்டமுந்திருச்செம்பொன்பள்ளிதிருப்பூவணமும்
வானோர்வணங்குமணஞ்சேரியுமதிலுஞ்சைமாகாளம்வாரணாசி
ஏனோர்களேத்துமேகுளீச்சரமிலங்காபருப்பதத்தோடேனோர்சோலைக்
கானார்மயிலார்கருமாரியுங்கறைமிடற்றார்தம்முடையகாப்புக்களே. (௧௧)

திருநீர்ப்புனற்கெடிலவீரட்டமுந்திருவளப்பூர்தெற்கேறுசித்தவடம்
வருநீர்வளம்பெருகுமானிருப்பமுமயிலாப்பில்மன்னினார்மன்னியேத்தும்
பெருநீர்வளர்சடையான்பேணிநின்றபிரமபுரஞ்சுழியல்பெண்ணாகடம்
கருநீலவண்டரற்றுங்காளத்தியுங்கயிலாயந்தம்முடையகாப்புக்களே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

## திருக்காளத்தி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன்றில்லாதநல்கூர்ந்தான்காண் வியன்கச்சிக்கம்பன் காண்பிச்
சையலலால, மற்றூணொன்றில்லாதமாசதுரன்காண்மயானத்துமைந்தன்காண்
மாசொன்றில்லாப், பொற்றூண்காண்மாமணிநற்குன்றொப்பான்காண்பொய்யா
தபொயிலேழுந்தா நிற்கின்ற, கற்றூண்காணகாளத்திகாணப்பட்ட கணநாதன்கா
ணவனென்கண்ணுளானே. (க)

இடிப்பான்காணென்வினையையேகம்பன்கா ணெலும்பாபரணன்காணெ
ல்லாமுன்னே, முடிப்பான் காண்மூவுலகுமாயினான்காண் முறைமுறையாலெம்
பொறியுமவழுவாவண்ணம, படித்தான்றலையறுத்தபாசுபதன்காண்பராய்த்துறை
யான்பழனம்பைஞ்ஞீலியான்காண், கடித்தாகமழ்கொன்றைக்கண்ணியான்கா
ண்காளத்தியானவனென்கண்ணுளானே. (உ)

நாரணன்காணான்முகன்காணாலவேதன்காண்ஞானப்பெருங்கடற்கோர்நா
வாயன்ன, பூரணன்காண்புண்ணியன்காண்புராணன்தான்காண் புரிசடைமேற்பு
னலேற்றபுனிதன்றான்காண், சாரணன்காண்சந்திரன்காண்கதிரோன்றான்காண்
தன்மைக்கட்டானேகாண்டக்கோர்க்கெலலாம, காரணன்காண்காளததிகாணப
பட்டகணநாதன்காணவனென்கண்ணுளானே. (ங)

செற்றான்காணென்வினையைததீயாடிகாண்டிருவொற்றியூரான்காண்சிந்
தைசெய்வார்க், குற்றான்காணேகம்பமேவினான் காணுமையாணற் கொழுநன்கா
ணிமையோரேத்தும, சொற்றான்காண்சோறறுத்துறையுளான்காண சுறாவேந்த
னேவலத்தைநீறாநோக்கக், கற்றான்காண்காளத்திகாணபபட் டகணநாதன்காண
வனென்கண்ணுளானே. (ச)

மனத்தகத்தான்றலைமேலான் வாக்கினுள்ளான்வாயாரத்தன்னடியேபாடுந
தொண்டர்,இனத்தகத்தானிமையவர்தஞ்சிரததின்மேலானேழண்டத்தப்பாலா
னிப்பாற்செம்பொன், புனத்தகத்தானறுங்கொன்றைப்போதினுள்ளான் பொருப்
பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான், கனத்தகத்தான்கயிலாயத்துச்சி
யுள்ளான்காளத்தியானவனென்கண்ணுளானே. (ரு)

எலலாமுன்றோன்றாமேதோன்றினான்காணேகம்பமேயான் காணிமையோ
ரேத்தப, பொலலாப்புலனைந்தும்போக்கினான்காண்புரிசடைமேற்பாய்கங்கைபூரி
த்தான்காண், நலலவிடைமேற்கொண்டுநாகம்பூண்டு நளிசிரமொன்றேந்தியோர்
நாணுயற்ற,கலலாடைமேற்கொண்டகாபாலிகாண்காளத்தியானவனென்கண்ணு
ளானே. (சு)

கரியுருவுகண்டத்தெங்கண்ணுளான்காண்கண்டன்காண்வண்டுண்டகொ
ன்றையான்காண், எரிபவளவண்ணன்காணேகம்பன்காணெண்டிசையுந்தானாய
குணத்தினான்காண், திரிபுரங்கடீயிட்டதீயாடிகாண்டீவினைகள்தீர்த்திடுமென்சிந்
தையான்காண், கரியுரிவைபோர்த்துகந்தகாபாலிகாண்காளத்தியானவனென்க
ண்ணுளானே. (எ)

இல்லாடிச்சில்பலிச்சென்றேற்கின்றான்காணிமையவர் கடொழுதிறைஞ்ச
விருக்கின்றான்காண், வில்லாடிவேடனாயோடினான்காண்வெண்ணூலுஞ்சேர்ந்
தவகலத்தான்காண், மல்லாடுதிரடோண்மேன்மழுவாளன்காண் மலைமகடன்ம

ஞானன்காண்மகிழ்ந்துமுன்னாள்,கல்லாலின்கீழிருந்தகாபாலிகாண்காளத்தியான வனென்கண்ணுளானே. (அ)

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண் டிருவேகம்பத்தான்காண் டே ஞார்ந்துக்க, ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்காண மபன்காண்ஞானத்தொளி யானன்காண், வானப்பேருருமறியவோ டிமட்டித்துகின்றான்காண் வண்டார சோலைக், கானப்பேருரான்காண்கறைக்கண்டன்காண்காளத்தியானவனென்க ண்ணுளானே. (கூ)

இறையவன்காணேழுலகுமாயினான் காணேழ்கடலுஞ்சூழ்மலையு மாயினான் காண், குறையுடையார்குற்றேவல்கொள்வான்றான் காண்குடமூக்கிற்கீழ்க்கோட் டமேவினான்காண், மறையுடையவானோர்பெருமான்றான்காண்மறைக்காட்டுறை யுமணிகண்டன்காண், கறையுடையகண்டத் தெங்காபாலிகாண் காளத்தியானவ னென்கண்ணுளானே. (கo)

உண்ணவருநஞ்சமுண்டான்றான்கா ணூழித்தீயன்னான்காணுகப்பா கா ணப்,பண்ணாரப்பலவிலயம்பா டினான்காண்பயின்றநால்வேதத்தின்பண்பினான்கா ண், அண்ணாமலையான்காண டி யார்ட்டமடியிணைகடொழுதேத்தவருளுவான் கா ண், கண்ணாரக்காண்பார்க்கோர்காட்சியான்காண்காளத்தியானவனென்கண் ணுளானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - காளத்திநாதர் - தேவியார் - ஞானப்பூங்கோதை.

## திரு ஆமாத்தூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்ணங்கடாம்பாடிவந்துநின்றுவலிசெய்துவளைகவர்ந்தவகையாலம்மை க், கண்ணம்பானின்றெய்துகழலப்பேசிக்கடியதோர்விடையேறிக் காபாலியார், சுண்ணங்கடாங்கொண்டு துவையப்பூசித் தோலுடுத்துநூலபூண்டு தோன்றத் தோன்ற, அண்ணலார்போகின்றாவந்துகாணீரழகியரோயாமாத்தூரையனாரே.

வெந்தார்வெண்பொடிப்பூசிவெள்ளைமாலை விரிசடைமேற்றான்சூடி வீணை யேந்திக்,கந்தாரந்தாமுரலாப்போகாநிற்கக்கறைசேர்மணிமிடற்றீரூரோதென்றேன், நொந்தார்போலவந்தெனதிலலேபுகக்குறுடங்கேரிடை மடவாய்நம்மூர் கேட்கின், அந்தாமரைமலர்மேலளிவண்டியாழ்செய்யாமாத்தூரென்றடிகள்போயினாரே.()

கட்டங்கந்தாமொன்றுகையிலேந்திக்கடியவிடையேறிக்காபாலியார்
இட்டங்கடாமபேசியிலலேபுக்குஇடும்பலியுமிடக்கொள்ளார்போவாரல்லா
பட்டிமையும்படிறுமேபேசுகின்றார்பார்ப்பாரைப்பரிசழிப்பார்போலகின்றார்தாம்
அட்டியசிலபலியுங்கொள்ளாவிள்ளாரழகியரோயாமாத்தூரையனாரே. (ங)

பசைந்தபலபூதத்தார்பாடலாடலபடநாகக்கச்சையார்பிச்சைக்கென்றங்
கிசைந்ததோரியல்பினரொரியின்மேனியிமையாமுக்கண்ணினார்நால்வேடத்தர்
பிசைந்ததிருநீற்றினர்பெண்ணோர்பாகமபிறிவறியார்பிஞ்ஞகனார் தெண்ணீர்க்க ங்கை, அசைந்ததிருமுடியரங்கைத்தீயாரழகியரோயாமாத்தூரையனாரே. (ச)

உருளுடையதேர்புரவியோடும்யானையொன்றாலுங் குறைவில்லையூர்திவெ ள்ளே, றிருளுடையகண்டத்தர்செந்தீவண்ணரிமையவர்கடொழுதேத்துமிறைவ

ணாதாம, பொருளுடையாலலரிலருமலலர்புலித்தோலுடையாகப்பூதஞ்சூழ, அ
ருளுடையவங்கோதைமாலைமார்பரழகியரோயாமாத்தூரையனாரோ. (ரு)

வீறுடையவேறேறிநீறுபூசிவெண்டோடுபெய்திடங்கையில்வீணையேந்திக் [து
கூறுடையமடவாளோர்பாகங்கொண்டுகுழையாடக்கொடுகொட்டிகொட்டாவந்
பாறுடையபடுதலையோர்கையிலேந்திபபலிகொள்வாரல்லர்படிறேபேசி
ஆறுடையசடைமுடியெமமடிகள்போலுமழகியரோயாமாத்தூரையனாரோ (சு)

கையோர்கபாலத்தார்மானின்றோலாகருத்துடையார்நிருத்தராய்க்காண்பார் முன்
னே, செய்யதிருமேனிவெண்ணீறுடித்திகழ்புன்சடைமுடிமேற்றிங்கள்சூடி
மெய்யொருபாகத்துமையைவைத்துமேவாதிரிபுரங்கள்வேவச்செய்து
ஐயனார்போகின்றாவந்துகாணீரழகியரோயாமாததூரையனாரே. (எ)

ஒன்றாலுங்குறைவிலலையூர்திவெள்ளேறொற்றியூருமவூரோயுணரக்கூறீர், நி
ன்றுதானென்செய்வீர்போவீராகில்நெற்றிமேற்கண்காட்டிநிறையுங்கொண்டீர்,எ
ன்றுதானிவ்வகையேயிடர்செய்கின்றீரிருக்குமூரினியறிந்தோமேகம்பமோ, அன்
றித்தான்போகின்றீரடிகளேமமோடழகியரோயாமாத்தூரையனாரோ. (அ)

கலலலகுதாங்கொண்டுகளாத்தியார்கடியவிடையேறிக்காணக்காண [ணேன்
இல்லமேதாம புகுதாவிடுமின் பிசசையென்றாருக்கெதிரோமூநதே னெங்குங்கா
சொலலாதேபோகின்றீரும்மூரோதுதுருத்திபழனமோநெய்த்தானமோ
அல்லலேசெய்தடிகள்போகின்றாதாமழகியரோயாமாத்தூரையனாரோ. (கூ)

மழுங்கலாநீறுடுமார்பாபோலுமணிமிழலைமேயமணாளாபோலும, கொழுங்
குவளைக்கோதைக்கிறைவாபோலுங்கொடு கொட்டிதாளமுடையாா போலும,
செழுங்கயிலாயத்தெழுசெல்வாபோலுநதென்னதிகைவீரடடஞ்சோநதா போ
லும், அழுங்கினாயுறவுதீாபபாாபோலுமழகியரோயாமாத்தூரையனாரோ. (கo)

திருசசிறறம்பலம.

இநததலம நடுநாடடிலுள்ளது.

சுவாமிபெயா - ஆமாததீசுவரா, தேவியாா - அழகியநாயகியம்மை

## திருப்பந்தணநல்லூர் - திருத்தாண்டகம்.

திருச்சிறறம்பலம.

நோதங்கமிலலாதாாநாகமபூண்டாா நூலபூண்டாா நூன்மேலோராமைபூண்
டார், பேய்தங்குநீள்காட்டிநட்டமாடிப்பிறைசூடுஞ்சடைமேலோர் புனலுஞ்சூ
டி, ஏர்தங்குபைநகுழலாள்பாகங்கொண்டாரனலகொண்டாரநதிவாய் வண்ணங்
கொண்டார்,பாதங்கணீாற்றாபைங்கணேற்றாபலியேற்றார்பநதணநல்லூராரே.

காடலாற்கருதாதார்கடனஞ்சுண்டார்களிற்றுரிவைமெய்போர்த்தாா கலன
தாக, ஓடலாற்கருதாதா ரொற்றியூராருறுபிணியுஞ்செறுபகையுமொற்றைக்கண்
ணால், பீடுலாந்தனைசெய்வாாபிடவமொநதைதகுடமுழவங் கொடுகொட்டிகுழலு
மோங்கப், பாடலாராடலார்பைங்கணேற்றார்பலியேற்றாாபந்தணநல்லூராரே. ()

பூதப்படையுடையார்பொங்குநூலார்புலித்தோலுடையினார்போரேற்றினர்
வேதத்தொழிலார்விரும்பநின்றார்விரிசடைமேல்வெண்டிங்கட்கண்ணிசூடி

ஓததொலிகடல்வாய்நஞ்சமுண்டாருமபரோடமபொன்னுலகமாண்டு
பாதத்தொடுகழலாரபைங்கணேறரூாபலியேற்றூாபநதணநலலூராரே. (௩)

நீருலாஞ்சடைமுடிமேற்றிங்களேற்றூர்நெருப்பேற்றூரங்கையினிறையுமேற்றூர்
ஊரொலாமபலியேற்றூரரவமேற்றூரொலிகடலவாய் நஞ்சமிடற்றிலேற்றூா
வாருலாமுலைமடவாள்பாகமேற்றூர்மழுவேற்றூர்மான்மறியோாகையிலேற்றூா
பாருலாமபுகழேறரூாபைங்கணேற்றூாபலியேற்றூாபநதணநலலூராரே. (௪)

தொண்டாதொழுதேத்துஞ்சோதியேற்றூா துளங்காமணிமுடியாா தூயநீற்றூா
இண்டைச்சடைமுடியார்மஞ்சூழ்நதவிடுபிணக்காடடாடலாரோமநதோறும
அண்டததுக்கபபுறததாராதியாரூருககணுயாரழலாயடியாாமேலைப
பண்டைவினையறுபபாா பைஙகணேறரூாபலியேற்றூாபநதணநலலூராரே. (௫)

கடமன்னுகளியானையுரிவைபோாததாாசானபபோகாதலாாகாதலசெய்து [ண
மடமன்னுமடியாா தமமனததினுளளாாமானுரிதோன் மிசைத்தோளாாமஙகைகா
நடமன்னியாடுவாா நாகமபூண்டாாநான் மறையோடாறங்கநவின்றநாவாா
படமன்னுதிருமுடியாாபைஙகணேற்றூாபலியேற்றூாபநதணநலலூராரே. (௬)

முறறுமதிசசடையாாமூவராரூாமூவுலகுமேததுமுதலவராரூா
கறறூாபரவுஙகழலாாதிஙகளகஙகையாள்காதலாாகாமபேய்தோளி
பறறுகுமபாகததாாபாலவெண்ணீறரூாபான்மையாலூழியுலகமாரூா
பறறூாமதிலெய்தாாபைஙகணேறரூாபலியேறரூாபநதணநலலூராரே. (௭)

கண்ணமருநெறறியாா காட்டாாநாடடாாகனமழுவாட கொண்டதோாகையா
ாசென்னிப, பெண்ணமருஞ்சடைமுடியாாபேரொன்றிலலாாபிறபபிலாாிறபபி
லாாபிணியொன்றிலலாா, மண்ணவருமவானவருமறறையோருமறையவருமவந
தெதிரேவணங்கியேததப, பண்ணமருஞ்சடைமுடியாாபைங்கணேறரூாபலியேற
றூாபநதணநலலூராரே. (௮)

ஏறேறியேழுலகுமேததநினறூாிமையவாகளேபபொழுதுமிறைஞசநின்றூா
நீறேறுமேனியாாநீலமுண்டாா நெரு' புண்டாரஙகையனலுமுண்டாா
ஆறேறுசென்னியாரானைஞ்சாடியனலுமிழுமைவாயரவுமாாததாா
பாறேறுவெண்டலையாாபைங்கணேறரூாபலியேற்றூாபநதணநலலூராரே. (௯)

கலலூாகடிமதிலகளமூன்றுமெய்தாாகாரோணஙகாதலாாகாதலசெய்து
நலலூராாஞானததாாஞானமாரூாநான்மறையோடாறஙகநவின்றநாவார்
மலலூாமணிமலையின்மேலிருநதுவாளரக்காகோன்றலையைமாளச்செற்றுப்
பலலூாபலிதிரிவாாபைஙகணேற்றூாபலியேற்றூாபந்தணநலலூராரே. (௧௦)

திருசசிறறம்பலம்.

இந்ததலம சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - பசுபதீசுவரா, தேவியார் - காம்பன்னதோளியம்மை.

---

## திருப்புன்கூர்திருநீடூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதேதோன்றியபெம்மான்றன்னைப்பேணுதாரவா தம்மைப்பேணுதானைத்
துறவாதேகட்டறுத்தசோதியானைத் தூநெறிக்குந்தூநெறியாய்நின்றூன்றன்னைத்

திறமாயவெத்திசைக்குந்தானேயாகித திருபபுன்கூரமேவியசிவலோகனை
நிறமாமொளியானைநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (க)

பின்றானுமுன்றானுமானான்றன்னைப்பித்தாக்குபபிந்தனாய்நின்றான்றன்னை
நன்றாங்கறிந்தவாக்குந்தானேயாகிநலவினையுந்தீவினையுமானான்றன்னைச்
சென்றோங்கிவிண்ணளவுந்தீயானானைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நின்றாயநீடூரிலாவினானைநீதனேனென்னேநானினையாவாறே. (உ)

இலலானையெவ்விடத்துமுளளானறன்னையினியநினையாதார்க்கின்னாதானை
வலலானடைந்தார்க்கருளுமவண்ணமாட்டாதார்க்கெத்திறத்துமாட்டாதானைச்
செலலாதசெந்நெறிக்கேசெலவிப்பானைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நெல்லாலவிளைகழனிநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (ங)

கலைஞானங்கலலாமேகற்பித்தானைக்கடுநரகஞ்சாராமேகாபபான்றன்னைப
பலவாயவேடங்கடானேயாகிபபணிவார்கட்கங்கங்கேபற்றானைச
சிலையாறபுரமெரித்ததீயாடியைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நிலையாரமணிமாடநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே (ச)

நோக்காதேயெவ்வளவுநோக்கினானை நுணுகாதேயாதொன்றுநுணுகினானை
ஆக்காதேயாதொன்றுமாக்கினானை யணுகாதாரவாதமமையணுகாதானைத்
தேக்காதேதெண்கடனஞ்சுண்டான்றனைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நீக்காதபேரொளிசேர்நீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (ரு)

பூணலாபபூணானைப்பூசாச்சாந்தமுடையானைமுடைநாறுபுன்கலத்தில்
ஊணலாவூணானையொருவர்காணாவுத்தமனையொளிதிகழுமேனியானைச
சேணுலாஞ்செழுமபவளக்குன்றொப்பானைத்திருபபுன்கூரமேவிய சிவலோகனை
நீணுலாமலர்க்கழனிநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (சா)

உரையார்பொருளுக்குலபபிலானையொழியாமேயெவ்வுயிருமானான்றன்னைப
புரையாய்க்கனமாயாழ்ந்தாழ்ந்தானைப்புதியனவுமாய்மிகவும்பழையான்றனைத்
திரையார்புனலசோமகுடத்தானைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நிரையாரமணிமாடநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (எ)

கூரரவத்தணையானுங்குளிர்தண்பொய்கைமலரவனுங்கூடிச்சென்றறியமாட்டா
ஆரொருவரவர்தன்மையறிவார்தேவரறிவோமெனபார்க்கெலலாமறியலாகாச்
சீரரவக்கழலானைநிழலார்சோலைத்திருபபுன்கூரமேவியசிவலோகனை
நீரரவத்தண்கழனிநீடூரானைநீதனேனென்னேநானினையாவாறே. (அ)

கையெலாநெய்பாயக்கழுத்தேகிட்டக்கானிமிர்த்து நின்றுணணுங கையர்
சொன்ன, பொய்யெலாமெய்யென்றுகருதிப்புக்குப்புள்ளுவராலகப்படாதுய்யப
போந்தேன், செய்யெலாஞ்செழுங்கமலப்பழனவேலித்திருபபுன்கூரமேவியசிவ
லோகனை, நெய்தலவாழ்புனற்படப்பைநீடூரானைநீதனேனென்னேநானினையா
வாறே. (கூ)

இகழுமாறெங்ஙனேயேழைநெஞ்சேயிகழாதுபரந்தோன்றாய்நின்றான்றன்னை
நகழுமாவணைக்கீழிட்டரக்கர்கோனைநலனழித்துநன்கருளிச்செய்தான்றன்னைத்

திகழுமாமதகரியினுரிபோர்த்தானைத் திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நிகழுமாவல்லானை நீடூரானை நீதனேனென்னேனானினையாவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலங்கள் சோழநாட்டிலுள்ளன.

திருப்புன்கூர்-சுவாமிபெயர்-சிவலோகநாதர், தேவியார்-சொக்கநாயகியம்மை.

திருநீடூர் - சுவாமிபெயர் - சோமநாதேசுவரர், தேவியார் - வேயுறுதோளியம்மை.

## திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுத்தியொன்பதுவாசல்வைத்துவொள்ளெலும்புதூணாவுரோமமேய்ந்து
தானெடுத்தகூரைதவிரப்போவார் தயக்கம்பலபடைத்தார் தாமரையினார்
கானெடுத்துமாமயில்களாடுஞ்சோலைக்கழிப்பாலைமேயகபாலப்பனார் [மே.
வானிடத்தையூடறுத்துவல்லைச்செல்லும்வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநா

முறையார்ந்தமும்மதிலும்பொடியாச்செற்றுமுன்னுமாய்ப் பின்னுமாமுக்கணந்தை, பிறையார்ந்தசடைமுடிமேற்பாம்புகங்கைபிணக்கந்தீர்த்துடன்வைத்தான்பெரியநஞ்சு, கறையார்ந்தமிடற்றடங்கக்கண்டவெந்தைகழிப்பாலைமேயகபாலப்பனார், மறையார்ந்தவாய்மொழியான்மாயயாக்கைவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே (உ)

தெளிவுண்டாக்கருதார்தேசமலனைத்தன்னைநினைமின்கணித்தலுநேரிழையாளாய
ஒளிவண்டார்கருங்குழலியுமையாடனனையொருபாகத்தமர்ந்தடியாருள்கியேத்தக்
களிவண்டார்கரும்பொழில்சூழ்கண்டலவேலிக்கழிப்பாலைமேயகபாலப்பனார்
வளிவுண்டார்மாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (ங)

பொடிநாறுமேனியர்பூதிப்பையர்புலித்தோலர்பொங்கரவர்பூணநூலர்
அடிநாறுகமலத்தராரூராதியானைஞ்சுமாடுமாதிரையினார்தாம்
கடிநாறும்பூஞ்சோலைகமழ்ந்துநாறுங்கழிப்பாலைமேயகபாலப்பனார்
மடிநாறுமேனியிம்மாயநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (ச)

விண்ணானாய்விண்ணவர்களவிரும்பிவந்துவேதத்தாய்கீதத்தாய்விரவியெங்கும்
எண்ணானாயெழுத்தானாய்க்கடலேழானாயிறையானாயெம்மிறையேயென்றுநிற்கும்
கண்ணானாய்க்காரானாய்ப்பாருமானாய்க்கழிப்பாலையுள்ளுறையுங்கபாலப்பனார்
மண்ணானாய்மாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (ரு)

விண்ணப்பவிச்சாதரர்களேத்தவிரிகதிரோனெரிசுடரான்விண்ணுமாகிப்
பண்ணப்பன்பத்தர்மனத்துள்ளேயும்பசுபதிபாசுபதன்தேசமூர்த்தி
கண்ணப்பன்கண்ணப்பக்கண்டுகந்தான்கழிப்பாலைமேயகபாலப்பனார்
வண்ணப்பிணிமாயயாக்கைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (சா)

பிணம்புல்குபீறற்குரம்பைமெய்யாப்பேதப்படுகின்றபேதைமீர்காள்
இணம்புல்குசூலத்தர்நீலகண்டரெண்டோளரெண்ணிறைந்தகுணத்தினாலே
கணம்புல்லன்கருத்துகந்தார்காஞ்சியுள்ளார்கழிப்பாலைமேயகபாலப்பனார்
மணம்புல்குமாயக்குரம்பைநீங்கவழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (எ)

இயல்பாயவீசனையெந்தைதந்தையென்சிந்தைமேவியுறைகின்றானை
முயல்வானைமூர்த்தியைத்தீர்த்தமானதிரியம்பகன்திரிசூலத்தன்னகையன்

கயலபாயுங்கண்டலஞ்சூழ்வுண்டவேலிக்கழிபபாலைமேயகபாலபபனா
மயலாயமாயக்குரம்பைநீங்கவழிவைததாக்கவ்வழியேபோதுநாமே. (அ)

செற்றதோாமனமொழிநதுசிநதைசெய்து சிவமூாத்தியென்றெழுவா சிந
தையுள்ளால், உற்றதோாநோய்களைநதிவ்வுலகமெலலாங் காடடுவானுததமன்று
ஞேதாதெலலாம,கற்றதோர் நூலினன் களிறுசெறருன்கழிபபாலைமேயகபாலபப
ஞர்,மற்றிதோாமாயக்குரமபைநீங்கவழிவைத் தாக்கவ்வழியேபோதுநாமே. (கூ)

பொருதலங்கனீண்முடியான்போராக்காகோன்புடபகநதான்பொருபபின்
மீதோடாதாக, இருநிலஙகணடுக்கெய்தவெடுததிடுதலுமேநிழையாடான்வெருவ
விறைவனேக்கிக், கரதலங்கள்கதிாமுடியாறஞ்சினேடுகாலவிரலாலூன்றுகழிப
பாலையாா,வருதலங்கமாயக்குரமபைநீங்கவழிவைத் தாக்கவ்வழியேபோதுநாமே.

திருசசிறறமபலம்.

இநததலம சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - பால்வண்ணநாதா, தேவியாா - வேதநாயகியமமை

## திருப்புறம்பயம் - திருத்தாண்டகம்.

திருசசிற்றம்பலம்.

கொடிமாடநீடெருவுகூடலகோடடூாகொடுஙகோளூாதண்வளவிகண்டியூரும
நடமாடுநன்மருகலவைகிநாளுநலமாகுமொற்றியூரொற்றியாகப
படுமாலைவண்டறையுமபழனமபாசூாபழையாறுமபாறகுளமுஙகைவிடடிநநாள்
பொடியேறுமேனியராய்பபூதஞ்சூழபபுறமபயநமமூரொன்றுபோயினாோ. (க)

முறறொருவாபோலமுழுநீறுடி முளைததிஙகள்சூடிமுநநூலுமபூண்டு, ஒற
றொருவாபோலவுறங்குவேன்கையொளிவளையையொன்றெனறுவெண்ணுகின்
றாா,மற்றொருவரிலலைத்துணையெனககுமாலகொண்டாற்போலமயஙகுவேறகுப,
புற்றரவக்கசசாாத்துப்பூதஞ்சூழபபுறமபயநமமூரொன்றுபோயினாோ. (உ)

ஆகாதநஞ்சுண்டவநதிவண்ணைாநதலையமாசுணஙகொண்டமபொறறேறுண்மே
ஏகாசமாவிடடோடொன்றேநதிவநதிடுதிருவேபலியென்றாாக்கிலலேபுக்கேன்[ல்
பாகேதுஙகொள்ளாாபலியுங்கொளளாாபாவியேன்கண்ணுள்ளேபறறிநோககிப
போகாதவேடததர்பூதஞ்சூழபபுறமபயநமமூரொன்றுபோயினாோ (ந)

பன்மலிநதவெண்டலைகையிலேநதிபபனிமுகிலபோன்மேனிபபவநதநாதா
நென்மலிநதநெய்ததானஞ்சோறறுத்துறைநியமநதுருத்தியுநீாோபாசசில
கன்மலிந்தோங்குகழுநீாக்குன்றங்கடனைகைக்காரோணஙகைவிடடிநநாள
பொன்மலிநதகோதையருநதாமுமெலலாமபுறமபபநமமூரொன்றுபோயினாோ. ()

செத்தவர்தநதலைமாலைகையிலேநதிசசிரமாலைசூடிசசிவநதமேனி
மத்தகததயானையுரிவைமூடிமடவாளவளோடுமொனேன்றேநதி
அத்தவத்ததேவாறுபதின்மாாறுநூறாயிரவாக்காடலகாடடிப
புத்தகங்கைக்கொண்டுபுலித்தோலவீக்கிபபுறமபயநம்மூரொன்றுபோயினாோ. ()

நஞ்சடைநதகண்டத்தாவெண்ணீறுடிநலலபுலியதண்மேனுகங்கடடிப, ப
ஞ்சடைந்தமெலவிரலாள்பாகமாகப பராய்த்துறையேனென்றோ ரப்பவுளவண்
ணா,துஞ்சிடையேவந்துதுடியுங்கொட்டத்துணணென்றெழுநதிருநதேன்சொல

லமாட்டேன், புன்சடையின்மேலோாபுன லூருசூடிபபுறமபயுநம்மூமொன்றுபோ யினுரோ. (௬)

மறியிலங்குகையாமழுவொன்றேநதிமறைக்காடனென்ருராமழலைபேசிச
செறியிலங்குதிண்டோண்மேனீறுகொண்டுதிரிமுண்டமாவிடடதிலகநெற்றி
நெறியிலங்குகூநதலாாபின்பின்சென்றுநெடுங்கண்பனிசோாநின்றுநோக்கிப
பொறியிலஙகுபாமபாாத்துபபூதஞ்சூழப்புறமபயநமமூமொன்றுபோயினுரோ. (௭)

நிலலாதேபலவூருமபலிகள்வேண்டிநிைாவலைாயார்பலிபெய்யநிறையுங்கொண்டு, கொலலேறுஙகொக்காையுஙகொடுகொட்டியுங்குடமூக்கிலஙகொழியகருளிாதண்பொய்கை, நலலாளைநலலூரேதவிரோனென்றுநறையூரிற்ருமுநதவிாவாாபோலப, பொலலாதவேடததாபூதஞ்சூழபபுறமபயநமமூமொன்றுபோயினுரோ. ()

விாையேறுநீறணிநதோராமைபூண்டுவெண்டோடுபெய்திடங்கைவீணையேநதித்
திாையேறுசென்னிமேறறிஙகடன்னைததிசைவிளங்கவைத்துகநத செநதீவண்ண
அாையேறுமேகலையாளபாகமாகவாரிடததிலாடலமாநதவையன் [ா
புாையேறுதாமேறிபபூதஞ்சூழபபுறமபயநமமூமொன்றுபோயினுரோ. (௯)

கோவாயவிநதிரனுள்ளிடடாரகுமரனுமவிக்கினவிநாயகனும
பூவாயபீடத்துமேலயனுமபூமியளநதானுமபோற்றிசைபபப
பாவாயவின்னிசைகள்பாடியாடிபபாரிடமுநதாமுமபாநதுபற்றிப
பூவாாநதகொன்றைபொறிவண்டாாக்கபபுறமபயநமமூமொன்றுபோயினுரோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இநததலம சோழநாட்டிலுளளது.

சுவாமிபெயா - சாடசிவரதநாதா - தேவியாா - கருமபனனசொல்லம்மை.

---

## திருநல்லூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம.

நினைநதுருகுமடியாரைநையவைததாாநிலலாமேதீவினைகணீங்கவைததாா, சினநதிருகுகளிற்றுரிவைபபோாவைவைத்தாாசெழுமதியின்றளிாவைத்தாாசிறநதுவாஞோா, இனநதுருவிமணிமகுடத்தேறததுற்றவினமலாகள்போதவிழ்ந்துமதுவாய்பபிலகி, நனைநதனையதிருவடியென்றலைமேலவைத்தாாநலலூாெமபெருமாஞாநலலவாறே. (௧)

பொன்னலத்தநறுஙகொன்றைசடைமேலவைததாாபுலியுரியினதள் வைத்தாாபுனலுமவைததாா, மன்னலத்ததிரடோண்மேன்மழுவாள்வைத்தாாவாாகாதிற்குழைவைத்தாாமதியமவைத்தாா, மின்னலத்தநுண்ணிடையாள்பாகமவைத்தாாவேழத்தினுரிவைத்தாாவெண்ணூலவைத்தாா, நன்னலத்ததிருவடியென்றலைமேலவைததாாநலலூாொமபெருமாஞர்நலலவாறே. (௨)

தோடேறுமலாக்கொன்றைசடைமேலவைத்தாா துன்னெருக்கின் வடம்வைத்தாாதுவலைசிநதப, பாடேறுபடுதிாைகளெறியவைத்தாாபணிமததமலாவைத்தாாபாமபுமவைத்தாா, சேடேறுதிருநுதன்மேனுட்டமவைத்தாாசிலைவைத்தார்மலைபெற்றமகளைவைத்தாா,நாடேறுதிருவடியென்றலைமேல்வைத்தார்நலலூரெம்பெருமாஞர்நலலவாறே. (௩)

விலலருளிவருபுருவத்தொருத்திபாகம்பொருத்தாகிவிரிசடைமேலருவிவைத்தார், கல்லருளிவருசிலையாவைத்தாருராக்கயிலாயமலைவைத்தார்கடவூர்வைத்

தாா, சொல்லருளியறநால்வர்க்கறியவைத்தார்சுடுசுடலைபபொடிவைத்தாா துறவி
வைத்தாா, நலலருளாற்றிருவடியென்றலைமேலவைத்தாாநலலூரெமபெருமாளுா
நலலவாறே. (௪)

விண்ணிரியுநதிரிபுரங்களெரியவைத்தார்வினைதொழுவாாக்கறவைத்தாா து
றவிவைத்தாா, கண்ணெரியாற்காமனையுமபொடியாவைத்தாாகடிக்கமலமலாவை
த்தாாகயிலைவைத்தாா, திண்ணெரியுந்தண்புனலுமுடனேவைத்தார்திசைதொ
ழுதுமிசையமரர்திகழ்நதுவாழ்த்தி, நண்ணரியதிருவடியென்றலைமேலவைததாா
நல்லூரெம்பெருமாளுாநலலவாறே. (௫)

உற்றுலவுபிணியுலகத்தெழுமைவைத்தாருயிாவைததாருயிர்செலலுங்கதிக
ள்வைததாா, மற்றமராகணமவைத்தாரமராகாணுமறைவைத்தாாகுறைமதியம
வளரவைத்தாா, செற்றமலியாாவமொடுகாமலோபஞ்சிறவாதநெறிவைத்தாா துற
விவைத்தார், நற்றவாசோதிருவடியென்றலைமேல்வைத்தார்நலலூரொமபெருமாளு
ாநல்லவாறே. (௬)

மாறுமலைந்தாராரணமெரியவைத்தாாமணிமுடிமேலரவைத்தாரணிகொண்மேனி
நீறுமலிந்தெரியாடனிலாவவைத்தாாநெற்றிமேற்கண்வைத்தாாநிலையமவைத்தாா
ஆறுமலிநதறுதொைகளெறியவைத்தாராாவத்தாலடியமராபரவவைத்தார்
நாறுமலாத்திருவடியென்றலைமேல்வைத்தாாநல்லூரொமபெருமாளுா நலலவாறே.

குலங்கண்மிகுமலைகடலகண் ஞாலமவைததாா குருமணிசேரரவைத்தாா
கோலமவைத்தாா, உலங்கிளருமரவத்திணுச்சிவைத்தாருண்டருளின்விடமவை
த்தாரெண்டோள்வைத்தாா, நிலங்கிளருமபுனலகன லுளநிலம்வைத்தாாநிமிாவி
சும்பின்மிசைவைத்தாாநினைநதாரிநாள், நலங்கிளருநதிருவடியென் றலைமேல
வைத்தார்நலலூரொமபெருமாளுாநலலவாறே. (௮)

சென்றுருளுங்கதிரிரண்டுமவிசுமபிலவைததாாதிசைபத்துமிருநிலததிற்றி
ருநதவைத்தாா, நின்றருளியடியமராவணஙகவைத்தாாநிறைதவமுமறைடபொ
ருளுநிலவவைத்தாா, கொன்றருளிக்கொடுங்கூற்றநடுங்கியோடக்குரைகழற்சேவ
டிவைத்தாாவிடையுமவைத்தாா, நன்றருளுநதிருவடியென்றலைமேலவைததாா
நலலூரெமபெருமாளுாநல்லவாறே. (௯)

பாம்புரிஞ்சிமதிகிடநதுதிரைகளேங்கப் பனிக்கொன்றைசடைவைத்தாாப
ணிசெய்வாரோ, ஆமபரிசுதமக்கெலலாமருளுமவைத்தாரடுசுடலைபபொடிவை
த்தாரழகுமவைத்தாா, ஓமபரியவலவினைநோய்தீரவைத்தாருமையையொருபா
லவைத்தாருகநதுவானோர், நாமபரவுமடியிணையென்றலைமேலவைத்தாா நலலூ
ரெமபெருமாளுாநலலவாறே. (௧௦)

குலங்கிளருமவருதிரைகளேழும்வைத்தாா குருமணிசோமலைவைத்தார்ம
லையைக்கையால்,உலங்கிளரவெடுத்தவன்றோண்முடியுநெரிவ வொருவிரலாலுற
வைத்தாரிறைவாவென்று, புலமபுதலுமருளொடுபோர் வாளுமவைத்தாாபுகழ்
வைத்தார்புரிநதாளாக்கொள்ளவைத்தார், நலங்கிளருந்திருவடியென்றலைமேல்
வைத்தார்நல்லூரொம்பெருமானுர்நலலவாறே. (௧௧)

திருச்சிறறம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுளளது.

சுவாமிபெயர் - பெரியாண்டேசுவரர், தேவியார் - திரிபுரசுந்தரியம்மை.

## திருக்கருகாவூர்த் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்கொள்ளுங்கிழமையாங்கோளேதானும்
பருகாவமிர்தமாம்பாலினெய்யாம்பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணாம்
ஒருகாலுமையாளோர்பாகனுமாமுண்ணின்றநாவிற்குரையாடியாம்
கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௧)

வித்தாமுளையாகும்வேரேதானும்வேண்டுமுருவமாம்விரும்பிநின்ற
பத்தாமடியார்க்கோர்பாங்கனுமாம்பானிறமாம்பரஞ்சோதிதானேயாகும்
தொத்தாமமரர்கணஞ்சூழ்ந்துபோற்றத்தோன்றாதென்னுள்ளத்தினுள்ளேநின்ற
கத்தாமடியேற்குக்காணுங்காட்டுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௨)

பூத்தானும்பூவினிறத்தானுமாம்பூக்குளால்வாசமாய்மன்னிநின்ற
கோத்தானுங்கோல்வளையாள்கூறனாகுங்கொண்டசமயத்தார்தேவனாகி
ஏத்தாதார்க்கென்றுமிடரோதுன்பமீவானுமென்னெஞ்சத்துள்ளேநின்று
காத்தானுங்காலனடையாவண்ணங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௩)

இரவனுமெல்லின்னடமாடியாமெண்டிசைக்குந்தேவனுமென்னுளானும்
அரவனுமல்லலறுப்பானுமாமாகாயமூர்த்தியாமானேறும்
குரவனுங்கூற்றையுதைத்தான்றானுங்கூற்றுதவஞ்சக்குயலாக்கென்றும்
கரவனுங்காட்சிக்கெளியானுமாங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௪)

படைத்தானும்பாரையிடந்தானாகும்பரிசொன்றறியாமைநின்றான்றானும்
உடைத்தானுமொன்னார்புரங்கண்மூன்றுமொள்ளழலான்மூட்டியொருக்கிநின்று
வடைத்தானுஞ்சூலமழுவோர்நாகமசைத்தானுமானேறொன்றூர்ந்தானாகும்
கடைத்தானுங்கள்ளமறிவார்நெஞ்சிற்கண்ணாங்கருகாவூரெந்தைதானே (௫)

மூலனுமூர்த்தியாமுன்னேதானுமூவாதமேனிமுக்கண்ணினானும்
சீலனுஞ்சேர்ந்தாரிடர்கடீர்க்குஞ்செல்வனுஞ்செஞ்சுடர்க்கோர்சோதிதானும்
மாலனுமங்கையோர்பங்கனாகுமன்றாடியாம்வானோர்தங்கட்கெல்லாம்
காலனுங்காலனைக்காய்ந்தானாகுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௬)

அரைசேரரவனுமாலத்தானுமாதிரைநாளானுமண்டவானோ
திரைசேர்திருமுடித்திங்களானுந்தீவினைநாசனென்சிந்தையானும்
உரைசேருலகத்தாருள்ளானுமாமுமையாளோர்பாகனுமோதவேலிக்
கரைசேர்கடனஞ்சையுண்டானாகுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௭)

துடியார்துடியின்முழக்கந்தானுஞ்சொல்லுவார்சொல்லெல்லாஞ்சோதிப்பானும்
படிதானும்பாவமறுப்பானாகும்பானீற்றானும்பரஞ்சோதிதானும்
கொடியானுங்கூற்றையுதைத்தானாகுங்கூற்றுதவஞ்சக்குயலாக்கென்றும்
கடியானுங்காட்சிக்கரியானாகுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௮)

விட்டுருவங்கிளர்கின்றசோதியானும்விண்ணவர்க்குமறியாதசூழலானும்
பட்டுருவமால்யானைத்தோல்கீண்டானும்பலபலவும்பாணிபயின்றான்றானும்
எட்டுருவமூர்த்தியாமெண்டோளானுமென்னுச்சிமேலானுமெம்பிரானும்
கட்டுருவங்கடியானைக்காய்ந்தானாகுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௯)

பொறுத்திருந்தபுள்ளூர்வானுள்ளானாகிப்புள்ளிருந்தங்குண்ணோய் களைவான்றானாய்ச், செறுத்திருந்தமும்மதிலகண்மூன்றுமவேவச்சிலைகுனியத்தீமூட்டுந்திண்மைதானாம், மறுத்திருந்தகையானுமந்தாரல்லியிருந்தானையொருதலையைத்தெரியநோக்கிக், கறுத்திருந்தகண்டமுடையான்போலுங்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௰)

ஒறுத்தானுமொன்னார்புரங்கள்மூன்றுமொள்ளழலைமாட்டியுடனேவைத்து
இறுத்தானுமெண்ணான்முடிகள்பத்துமிசைந்தானுமின்னிசைகள் கேட்டானாகு
அறுத்தானுமஞ்சுமடக்கியங்கையாகாயமந்திரமுமானானாகும [ம
கறுத்தானுங்காலனைக்காலாலவீழக்கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - மூலலிங்கேசுவரர் - தேவியார் - கருமபனையாளம்மை.

---

## திருவிடைமருது - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

சூலப்படையுடையார்தாமேபோலுஞ்சுடர்த்திங்கட்கண்ணியுடையார்போலும்
மாலைமகிழ்ந்தொருபாலவைத்தார்போலுமந்திரமுந்தந்திரமுமானார்போலும்
வேலைக்கடனஞ்சமுண்டார்போலுமேலைவினைகடீர்க்குமவிகிர்தர்போலும்
ஏலக்கமழ்குழலாள்பாகர்போலுமிடைமருதுமேவியவீசனாரே. (௧)

காராரகமழ்கொன்றைக்கண்ணிபோலுங்காரானையீருரிவைபோர்த்தார்போலும்
பாரார்பரவப்படுவார்போலும்பத்துப்பலவூழிபரந்தார்போலும்
சீராலவணங்கப்படுவார்போலுந்திசையனைத்துமாயமற்றுமானார்போலும்
ஏராரகமழ்குழலாள்பாகர்போலுமிடைமருதுமேவியவீசனாரே (௨)

வேதங்கள்வேள்வியந்தார்போலும்விண்ணுலகுமண்ணுலகுமானார்போலும்
பூதங்களாயபுராணர்போலும்புகழ்வளரொளியாய்நின்றார்போலும்
பாதம்பரவப்படுவார்போலும்பத்தர்களுக்கின்பம்பயந்தார்போலும்
ஏதங்களானகடிவார்போலுமிடைமருதுமேவியவீசனாரே (௩)

திண்குணத்தார்தேவர்கணங்களேத்தித்திசைவணங்கச்சேவடியை வைத்தார்போலும், விண்குணத்தார்வேள்விசிதையநூறிவியன்கொண்டன்மேற்செலவிகிர்தர்போலும், பண்குணத்தார்பாடலோடாடலோவாப்பரங்குன்றமேவியபரமர்போலும், எண்குலாத்தா*ரெண்ணாயிரவர்போலுமிடைமருதுமேவியவீசனாரே.

ஊகமுகிலுரிஞ்சுஞ்சோலைசூழ்ந்தவுயர்பொழிலண்ணாவிலுறைகின்றாரும்
பாகம்பணிமொழியாள்பங்கராகிப்படுவெண்டலையிற்பலிகொள்வாரும்
மாகமுடைமும்மதிலுமெய்தார்தாமும்மணிபொழில்சூழாரூருறைகின்றாரும்
ஏகம்பமேயாருமெல்லாமாவாரிடைமருதுமேவியவீசனாரே. (௫)

ஐயிரண்டுமாறொன்றுமானார்போலுமறுமூன்றுநான்மூன்றுமானார்போலும் [லும்
செய்வினைகள்வல்வினைகளானார்போலுந்திசையனைத்துமாய்நிறைந்தசெல்வர்போ
கொய்மலராங்கொன்றைச்சடையார்போலுங்கூத்தாடவல்லகுழகர்போலும்
எய்யவந்தகாமனையுங்காய்ந்தார்போலுமிடைமருதுமேவியவீசனாரே. (௬)

---

* எண்ணிருந்தாரொன்றும்பாடம்.

பிரியாதகுணமுயிர்கட்கருசோடஞ்சாய்ப்பிரிவுடையகுணம்பேசிற்பத்தோ
டொன்றாய், விரியாதகுணமொருகாலுன்கேயெனபாவிரிவிலாக்குணநாட்டத்
தாறேயென்பா, தெரிவாயகுணமஞ்சுஞ்சமிதையஞ்சுமபதமஞ்சுங்கதியஞ்சுஞ்
செபபிஞுரும, எரியாயதாமரைமேலியங்கினருமிடைமருதுமேவியவீசனுரோ.

தோலிறபொலிநதவுடையாரபோலுஞ்சுடாவாயரவசைத்தசோதிபோலும
ஆலமமிர்தாகவுண்டாரபோலுமடியார்கட்காரமிர்தமானுரபோலும்
காலனையுங்காய்நதகழலாரபோலுங்கயிலாயநதமமிடமாக்கொண்டாரபோலும
ஏலங்கமழ்குழலாளபாகாபோலுமிடைமருதுமேவியவீசனுரோ. (அ)

மைபநதளிர்க்கொன்றையநதாராரபோலுமபடைககளுள்பாகமுடையார போ
அநதிவாய்வண்ணத்தழகாபோலுமணிநீலகண்டமுடையாரபோலும [லும்
வநதவாவுஞ்செலவுமாகிமாறுதென்னுள்ளத்திருநதாரபோலும
எநதமிடாதீர்க்கவல்லாரபோலுமிடைமருதுமேவியவீசனுரோ. (கூ)

கொனறையஙகூவிளமாலைதனனைக்குளிர்சடைமேல்வைத்துகநத கொள்கை
யினறவனஙகனைநீறுநோகிநெருபபுருவாய்நின்றிமலனுரும [யாரும
அனறவரக்கனலறிவீழவருவரையைககாலாலழுததினுரும
எனறுமிடுபிச்சைசையேறறுண்பாருமிடைமருதுமேவியவீசனுரோ. (க0)

திருசசிறறமபலம.

இநததலம சோழநாட்டிலுளளது.

சுவாமிபெயா - மருதீசா - தேவியார - நலமுலைநாயகியம்மை.

அகபதிகம - கசு

## திருவிடைமருது - திருத்தாண்டகம்.

திருசசிறறம்பலம்.

ஆறுசடைககணிவாஙகைநதியாழகாபடையுடையரமபொற்றூணமேல
நீறுதடவநதிடபமேறிநிதநமபலிகொளவாமொய்தநபூதம
கூறுங்குணமுடையாகோவணததாரகோடாலவேடததாகொள்கை சொல்லில்
ஈறுநடுவுமுதலுமாவாரிடைமருதுமேவியிடங்கொண்டாரோ. (க)

மஙகுன்மதிவைபபாவானநாடாமடமானிடமுடையாமாதராளைப
பஙகினமிகவைபபாபால்போனீறறாபளிக்குவடமபுனைவாபாவநாசா
சங்குதிரையுகளுஞ்சாய்ககாடாளவாசரிதைபலவுடையாதன்மைசொல்லில்
எஙகுமபலிதிரிவரென்னுணீஙகாரிடைமருதுமேவியிடங்கொண்டாரோ. (உ)

ஆலநிழலிருபபாாகாயததாருவரையினுசசியாராரணோபெண்ணா
காலமபலகழித்தாககறைசோகண்டாகருத்துக்குச்சேயாாதாங காணுதாககு [க்
கோலமபலவுடையாகொல்லையேறறாகொலைமழுவாகோழமபமேயவீசா
ஏலமணநாறுமீங்கோய்நீஙகாரிடைமருதுமேவியிடங்கொண்டாரோ. (ங)

தேசாதிறநினைவார்சிநதைசேருஞ்செல்வாதிருவாரூரொன்றுமுள்ளார
வாசமலரின்கண்மான்றேல்போர்பபாமருவுங்கரியுரியாவஞ்சக்கள்வா
நேசரடைநதார்க்கடையாதார்க்குகிட்டுருவர்கட்டங்காநினைவார்க்கென்றும
ஈசர்புனற்பொன்னித்தீரத்தாவாய்த்தவிடைமருதுமேவியிடங்கொண்டாரோ.

கரபபாக்கரியமனக்கள்வாக்குள்ளங்கரவாதேதன்னினையகிறபாரபாவம
துரபபாதொடுகடலினஞ்சமுண்பாதூயமறைமொழியாதீயாலொட்டி
நிரபபாபுரமூன்றுநீறுசெய்வாநீள்சடையாபாய்விடைகொண்டெங்குமையம
இரபபரெமையாள்வரென்னுணீங்காரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. ()

கொடியாரிடபததாகூத்துமாடிககுளிரகொன்றைமேல்வைபபாரகோலமாநத
பொடியாருமேனியாபூதிபபையாபுலிததோலாபொஙகரவாபூணனூலா
அடியாருகுடியாவரநதணளராகுதியினமநதிரததாலமராபோற்ற
இடியாகளிறறுரியரெவருமபோறறவிடைமருதுமேவியிடஙகொண்டாரே. ()

பசசைநிறமுடையர்பாலாசாலபபழையாபிழையெலாநீககியாள்வா
கசசைக்கநாகமபூண்டதோளாகலஞெனறுகையேநதியில்லநதோறும
பிசசைகொள்ளநுகாவாபெரியாசாலபபிறஙகுசடைமுடியாபேணுநதொண்டா
இசசைமிகவறிவரென்றுமுள்ளாரிடைமருதுமேவியிடஙகொணடாரே. (எ)

காவாரசடைமுடியாகாரோணததாகயிலாயமனனிஞாபன்னுமின்சொல
பாவாரபொருளாளாவாளாாகண்ணிபயிலுநதிருவுருவமபாகமேயாா
பூவாரபுனலணவுபுன்கூாவாழ்வாபுரமூன்றுமொளளழலாககாயநதொடட
ஏவாரசிலைமலையரெங்குநதாமேயிடைமருதுமேவியிடஙகொண்டாரே. (அ)

புரிநதாாநடத்தின்கட்பூதநாதாபொழிலாரூாபுககுறைவாபோநதுதமமில்
பிரிநதாரகல்வாயபேயுநதாமுமபிரியாரொருநாளுமபேணுகாடடில்
எரிநதாரனலுகபபரேழிலோசையெவ்விடததுநதாமேயென்றேததுவாராபால்
இருநதாரிமையவர்கள்போறறவென்றுமிடைமருதுமேவியிடஙகெண்டாரே.

விடடிலங்குமாமழுவாவேலைநஞ்சாவிடஙகாவிரிபுனல்சூழவெண்காடடுளளாா
மடடிலஙகுதாாமாலைமாாபினீறறாமழபாடியுள்ளுறைவார்மாகாளததாா
சிடடிலஙகுவல்லரக்காகோனையனறுசெழுமுடியுநதோளைநநான்கடரககாலால
இடடிரங்கிமறறவனுககீநதாாவென்றியிடைமருதுமேவியிடஙகொண்டாரோ.

திருசசிறறமபலம்

## திருப்பூவணம் - திருத்தாண்டகம்

திருசசிறறமபலம

வடிவேறுதிரிசூலநதோன்றுநதோன்றுமவளாசடைமேவிளமதியந தோன்றுநதோன்றும, கடியேறுகமழகொன்றைக்கண்ணிதோனறுங காதில்வெண்குழைதோடுகலநதுதோன்றும, இடியேறுகளிற்றுரிவைபபோாவைதோன்றுமெழிறிகழுநதிருமுடியுமிலஙகித்தோன்றும, பொடியேறுதிருமேனிபொலிநதுதோன்றுமபொழிறிகழுமபூவணததெமபுனிதனாககே (க)

ஆணுகிபபெண்ணயவடிவுதோன்றுமடியவாகடகாரமுதமாகிததோன்றும, ஊணுகவூாதிரிவானுகித்தோன்றுமொற்றைவெண்பிறைதோன்றுமபறஞாதமமேல், சேணுகவளைவிலலாலெரிததரூன்றுஞ்செற்றவாதமமெலுமபினற்செறியசசெய்த, பூணுணுமனாநாணுமபொலிநதுதோன்றுமபொழிறிகழுமபூவணத்தெம்புனிதனாக்கே. (உ)

கலலாலினீழலிற்கலநதுதோன்றுங்கவின்மறையோாநாலவர்க்குநெறிகளன்று, சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்சூழரவுமான்மறியுங்தோன்று

நதோனறும, அலலாதகாலனை முன்னடாத்தரேன்றுமைவகையானினைவாாபா லமாநதுதோன்றும்,பொலலாதபுலாலெலுமபபூணுய்த்தோன்றுமபொழிறிகழுமபூவணத்தெமபுனிதனாக்கே. (௩)

படைமலிநதமழுவாளுமானுநதோன்றுமபன்னிரண்டுகெண்ணுடையபிள்ளை தோன்றும, நடைமலிநதவிடையோடுகொடியுநதோன்றும நான்மறையினொலி தோன்றுமநயனநதோன்றும, உடைமலிநதகோவணமுங்கீளுநதோன்று மூரல வெணசிரமாலையுலாவித்தோன்றும, புடைமலிநதபூதத்தின்பொலிவுதோன்றும பொழிறிகழுமபூவணதனெமபுனிதனாககே. (௪)

மயலாருநதன்னடியாாக்கருளுநதோன்று மாசிலாபபுன்சடைமேன்மதியந தோன்றும, இயலபாகவிடுபிசசையேற்றரேன்றுமிருநகடனஞ்சுண்டிருண்டக ண்டநதோன்றும, கயலபாயக்கடுநகலுழிக்கஙகைநங்கையாயிரமாமுகததினொடு வானிற்றேன்றும, புயலபாயச்சடைவிரிததபொறபுதோன்றுமபொழிறிகழும பூவணதனெமபுனிதனாககே (௫)

பாராழிவட்டததாாபரவியிட்டபன்மலருநறுமபுகையுமபரநதுதோன்றும சீராழித்தாமரையின்மலாகளனனதிருநதியமாநிறததசேவடிகடோனறும, ஓரா ழிததேருடையவிலஙகைவேநத னுடலதுணித்தவிடாபாவங கெடுபபித்தன்று, போராழிமுன்னீநதபொறபுதோன்றும பொழிறிகழுமபூவணதனெமபுனிதனா ககே. (௬)

தனனடியாாக்கருளபுரிநததகவுதோன்றுஞசதுமுகனைத்தலையரிநததன்மை தோன்றும, மினனனையநுண்ணிடையாளபாகநதோன்றுமவேழததினுரிவிரும் பிபபோாததரேன்றும, துன்னியசெஞசடைமேலோாபுனலுமபாமபுந தூயமா மதியுடனேவைததரேன்றும, பொன்னனையதிருமேனிபொலிநதுதோன்றும பொழிறிகழுமபூவணதனெமபுனிதனாககே. (௭)

செறிகழலுநதிருவடியுநதோன்றுநதோன்றுநதிரிபுரத்தையெரிசெய்தசிலை யுநதோனறும, நெறியதனைவிரிததுனாததநீாமைதோன்றும நெறறிமேறகண் டோன்றுமபெற்றநதோனறும, மறுபிறவியறுத்தருளுமவகையுநதோன்றுமலைம களுஞ்சலமகளுமலிநதுதோனறும, பொறியரவுமிளமதியுமபொலிநதுதோன்றும பொழிறிகழுமபூவணதனெமபுனிதனாககே. (௮)

அருடபொடடுமுலைமடவாளபாகநதோன்றுமணிகிளருமுருமென்னவடாக் குநகேழல, மருபபொட்டுமணிவயிரக்கோவைதோன்றுமணமலிநதநடநதோன் றுமணியாாவையைத, திருக்கொட்டிகின்றதோாதிறமுநதோன்றுஞ்செக்காவா னொளிமிக்குத்திகழநதசோதிப, பொருபபொட்டிநின்றதிண்புயமுநதோன்றும பொழிறிகழுமபூவணதனெமபுனிதனாககே. (௯)

ஆங்கணைநததண்டிக்குமருளியன்று தன்முடிமேலலாமாலையளித்தரேன் றும், பாங்கணைநதுபணிசெய்வாாக்கருளியன்றுபல்பிறவியறுத் தருளுமபரிசுதோ ன்றும, கோங்கணைநதகூவிளமுமதமத்தமுங்குழற்கணிநதகொள்கையொடுகோ லநதோன்றும, பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றுமபொழிறிகழும்பூவ ணத்தெமபுனிதனாக்கே. (௧௦)

ஆரொருவருள்குவாருள்ளததுள்ளேயவ்வுருவாய்நிற்கின்ற வருளுநதோன் றும,வாருருவபூண்முலைநனமஙகைதனனைமகிழ்நதொருபாலவைத்துகநதவடி

வுதோன்றும, நீருருவக்கடலிலங்கையரக்காகோனைநெறுநெறெனவடாத்திடட நிலையுநதோனறும, போருருவக்கூறறுதைத்தபொறபுநதோன்றுமபொழிறகழு ம பூவணதடுதமபுனிதனாக்கே. (கக)

திருசசிறறம்பலம்.

இந்ததலம பாணடிநாட்டிலுள்ளது
சுவாமிபெயா - பூவணநாதா, தேவியாா - மினனுமபிகையமமை.

---

**திருவாலவாய் - திருத்தாண்டகம்.**

திருசசிறறமபலம.

முளைததானையெலலாாககுமுன்னேதோன்றி முதிருஞ்சடைமுடிமேன்மு கிழ்வெண்டிஙகள், வளைத்தானைவலலசுராடபுரஙகண்மூனறுமவரைசிலையாவாசுகி மாநாணுக்கோத்துத், துளைததானைசசுடுசரததாற்றுவளநீறுத்தூமுததவெண் முறுவலுமையோடாடித, திளைததானைத்தென்கூடறறிருவாலவாய்ச்சிவனடி யேசிந்திககப்பெற்றேனுனே. (க)

விண்ணுலகின்மேலாாகண்மேலான்றனனைமேலாடுபுரமூன்றுமபொடிசெ ய்தானைப்,பண்ணிலவுபைமபொழிலசூழ்பழனததானைபபசுமபொன்னினிறததா னைபபானீறறனை,உண்ணிலவுசடைக்கறறைக்கஙகையாளைக்கரநதுமையோடுட னாகியிருநதான்றன்னைத், தெண்ணிலவுதென்கூடறறிருவாலவாய்ச்சிவனடியே சிநதிக்கபபெற்றேனுனே. (உ)

நீாததிரளைநீள்சடைமேனிறைவிததானைநிலமருவிநீரோடக்கண்டான்றன் னைப், பாற்றிரளைப்பயின்றாடவலலான்றன்னைபபதைததெழுநதவெங்கூறறைப பாய்நதான்றனனைக்,காற்றிரளாய்மேகநதினுளளேநின்றுகடுங்குரலாயிடிபபானை க்கண்ணோநெற்றித், தீத்திரளைததெனகூடறறிருவாலவாய்சசிவனடியேசிநதி க்கபபெறறேனுனே. (ங)

வானமிதுவெலலாமுடையான்றன்னைவரியரவக்கச்சானைவனபேய்சூழக் [மேலை கானமதினடமாட வலலான்றன்னைக் கடைக்கணுன்மங்கையுமைநோக்காவென் னுனமதுவெலலாமொழிததான்றன்னையுணாவாகியடியேனதுளளேநின்ற தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிநதிக்கபபெறறேனுனே.

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னையொற்றைவெண்பிறையானையுமையோ டென்றும, பேரானைபபிறாக்கென்றுமரியான்றன்னைபபிணக்காடடினடமாடல பேயோடென்றும, ஆரானையமராகளுக்கமுதீநதானையருமறையானுன்முகனு மாலுமபோற்றும,சீரானைததென்கூடறறிருவாலவாய்ச்சிவனடியேசிநதிக்கபபெ ற்றேனுனே. (ரு)

மூவனைமூாத்தியைமூவாமேனியுடையானைமூவுலகுநதானேயெஙகும
பாவனைப்பாவமறுப்பான்றன்னைபபடியெழுதலாகாதமங்கையோடும
மேவனைவிண்ணோநடுங்கக்கண்டுவிரிகடலினஞ்சுண்டமுதமீநத
தேவனைததென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிநதிக்கபபெற்றேனுனே. (சு)

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைத் துன்பநதுடைத்தாளவல் லான்றன்னை,இறநதார்களென்பேயணிநதான்றன்னையெல்லிநடமாடவல்லான்ற ன்னை, மறநதார்மதின்மூன்றுமாய்த்தான்றன்னைமற்றொருபற்றில்லாவடியார்க் கென்றும, சிறநதானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிநதிக்கபபெற் றேனுனே. (எ)

வாயானை மனத்தானை மனத்துணின்றகருத்தானைக் கருத்தறிந்துமுடிப்பா
ன்றன்னைத், தூயானைத் தூவெள்ளையேற்றான்றன்னைச் சுடர்த்திங்கட்சடையானை
த்தொடர்ந்துநின்றென், தாயானைத் தவமாய தன்மையானைத் தலையாயதேவாதி
தேவர்க்கென்றும், சேயானைத் தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்க
ப்பெற்றேனே. (அ)

பகைச்சுடராயபாவமறுப்பான்றன்னைப் பழியிலியாயானஞ்சமுண்டமுதீந்
தானை, வகைச்சுடராயவல்லசுரர்புரமட்டானை வனையிலியாயெல்லார்க்குமருள
செய்வானை, மிகைச்சுடராயவிண்ணவர்கண்மேலப்பாலைமேலாயதேவாதிதேவா
க்கென்றும், திகைச்சுடரைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப
பெற்றேனே. (கூ)

மலையானை மாமேருமன்னினானை வளர்புன்சடையானை வானோர்தங்கள்
தலையானையென்றலையினுச்சியென்றுந்தாபித்திருந்தானைத் தானேயெங்கும்
துலையாகவொருவரையுமில்லாதானைத் தோன்றுதாமதில்மூன்றுந்தூளாவெய்த
சிலையானைத் தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்கப்பெற்றேனே.

தூர்த்தனைத் தோண்முடிப்பத்திறுத்தான்றன்னைத் தொன்னரம்பினின்னி
சைகேட்டருள்செய்தானைப், பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப் பரிந்த
வற்குப்பாசுபதமீந்தான்றன்னை, ஆத்தனையடியேனுக்கன்பன்றன்னை யளவிலாப
பலவூழிகண்டுநின்ற, தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்சிவனடியேசிந்திக்
கப்பெற்றேனே (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருநள்ளாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்கணான்முகத்திலொன்று சென்று அல்லாதசொல்லுரைக்கத் தன்கை
வாளால், சேதித்ததிருவடியைச்செல்லநல்லசிவலோகநெறிவகுத்துக் காட்டுவா
னை, மாதிமையமாதோர்கூறுயினானை மாமலர்மேலயனோடுமாலுங்காணா,நாதியை
நம்பியைநள்ளாற்றானை நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (க)

படையானைப்பாசுபதவேடத்தானைப் பண்டநங்கற்பாத்தானைப் பாவமெல
லாம், அடையாமைக்காப்பானையடியார்தங்களருமருந்தையாவாவென்றருள்செ
ய்வானைச், சடையானைச்சந்திரனைத்தரித்தான்றன்னைச் சங்கொத்தமுத்தனையவெ
ள்ளையேற்றின், நடையானைநம்பியைநள்ளாற்றானை நானடியேனினைக்கப்பெற்றுய்
ந்தவாறே. (உ)

படவரவமொன்றுகொண்டரையிலார்த்தபரபரனைப்பைஞ்ஞீலிமேவினானை,
அடலரவமபற்றிக்கடந்தநஞ்சையமுதாகவுண்டானையாதியானை,மடலரவமன்னு
பூங்கொன்றையானை மாமணியைமாணிக்காய்க்காலன்றன்னை, நடலரவஞ்செய்
தானைநள்ளாற்றானை நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (ங)

கட்டங்கமொன்றுதங்கையிலேந்திக்கங்கணமுங்காதில்விடுதோடுமிட்டுச்
சுட்டங்கங்கொண்டுதுதையப்பூசிச்சுந்தரனாய்ச்சூலங்கையேந்தினானைப
பட்டங்கமாலைநிறையச்சூடிப்பல்கணமுந்தாமும்புறங்காட்டில
நட்டங்கமாடியைநள்ளாற்றானை நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (ச)

உலந்தார்தம்மங்கங்கொண்டுலகமெல்லாமொருநொடியிலுழல்வானைப்புலப்
பிலசெல்வம, இலந்திதனக்கருள்செய்ததேவதேவைத் திருச்சிராப்பள்ளியென்றுஞ்சி

வலோகனைக், கலநதாா தமமனத்தெதன் றுங்காதலானைக்கச்சியேகமபனைக்கமழ் பூங்கொன்றை, நலநதாங்குநமபியையைநள்ளாற்றானை நானடியேனினைக்கபபெற்று ய்நதவாறே. (ரு)

குலஙகெடுத்துக்கோணீக்கவலலான்றன்னைக்குலவரையன் மடபபாவையி டப்பாலானை, மலங்கெடுததுமாதீாத்தமாட்டிக்கொண்டமறையவனைபபிறைதவ ழ்செஞ்சடையினானைச், சலங்கெடுத்துததயாமூலதன்மமென்னுநததுவத்தின் வழிநின்றுதாழ்நதாாக்கெலலாம, நலங்கொடுககு நமபியையைநள்ளாற்றானைநானடி யேனினைக்கபபெற்றுய்நதவாறே. (சா)

பூவிரியுமலாக்கொன்றைச்சடையினானைப்புறமபயத்தெமபெருமானைபபுக லூரானை, மாவிரியக்களிறுரிததமைநதன்றன்னைமறைக்காடுமேவவிவலமுமன்னி னானைத்,தேவிரியத்திகழ்தக்கன்வேள்வியெலலாஞ் சிதைத்தானையுதைத்தவன் றன்சிரங்கொண்டானை, நாவிரியமறைநவின்றநள்ளாற்றானை நானடியேனினைக்க ப்பெற்றுய்நதவாறே. (எ)

சொலலானைச்சுடாபபவளசசோதியானை தொலலவுலாபுரமூன்றுமெரிய ச்செற்ற, வில்லானையெலலாாக்குமேலானானைமெலலியலாள்பாகனைவேதநான்கு ம, கலலாலினீழற்கீழறங்கண்டானைக் காளத்தியானைக்கயிலைமேய,நலலானைநமபி யைநள்ளாற்றானை நானடியேனினைக்கபபெறறுய்நதவாறே. (அ)

குன்றாதமாமுனிவன்சாபநீங்கக்குறைகழலாற்கூற்றுவனைக்குமைத்தகோனை, அன்றாகவவுணாபுரமூன்றுமவேவவாரழல்வாயோட டியடாவிததானைச், சென் றாதுவேண்டிற்றொன்றீவான்றன்னைச் சிவனேயெமபெருமானென் றிருபபாாக் கென்றுமம, நன்றாகுநமபியையைநள்ளாற்றானைநானடியேனினைக்கபபெற்றுய்நதவா றே. (கூ)

இறவாமேவரமபெறறேனென்றுமிக்கவிராவணனை யிருபதுதோணெரியவூ ன்றி, உறவாகியின்னிசைகேட்டிரங்கிமீண்டேயுற்ற பிணிதவிாததருளவலலான் றன்னை, மறவாதாாமனத்தெதன்றுமன்னினானைமாமதியமலாக்கொன்றை வன்னி மத்தம, நறவார்செஞ்சடையானைநள்ளாற்றானைநானடியேனினைக்கபபெறறுய்நத றே. (கo)

திருசசிறறம்பலம.

---

### திருஆக்கூர் - திருத்தாண்டகம்.

திருசசிறறமபலம்.

முடிததாமரையணிநதமூாத்திபோலுமூவுலகுநதாமாகிநின்றாாபோலுமம
கடித்தாமரையேய்நதகண்ணாாபோலுங்கலலலகுப்பாணிபயின்றாாபோலுமம
கொடித்தாமரைக்காடேநாடுநமெதாணடாகுறறேவுறுமகிழ்நதகுழகாபோலுமம
அடித்தாமரைமலர்மேலவைத்தாாபோலுமாக்கூரிற்றான்றோன்றியபபனாே. (க)

ஓதித்தொருநூலுமிலலைபோலுமுணரப்படாததொன்றிலலைபோலுமம
காதிற்குழையிலங்கப்பெய்தார்போலுங்கவலைபபிறப்பிடுமைபைகாபபாாபோலும்
வேதத்தோடாறங்கஞ்சொன்னார்போலுமவிடஞ்சூழ்நதிருக்தமிடற்றார்போலுமம
ஆதிக்களவாகிநின்றார்போலுமாக்கூரிற்றான்றோன்றியபபனாே. (உ)

மையார்மலாக்கண்ணாள்பாகர்போலுமணிநீலகண்டமுடையார்போலும்
நெய்யார்திரிசூலங்கையார்போலுநீறேறுதோளெட்டுமுடையார்போலுமம

வையாரமழுவாட்படையாரபோலுமவளானுயிறன்னவொளியாரபோலும
ஐவாயரவமொன்றூாததாரபோலுமாக்கூரிறருன்றேன்றியபபனோ. (௩)

வடிவிளஙகுவெண்மழுவாளவலலாரபோலுமவஞசக்கருங்கடனஞ்சுண்டாா போலும, பொடிவிளஙகுமூநூலசோமாபாபோலுமபூஙகஙகைதோய்நதசடையாரபோலும், கடிவிளங்குகொன்றையநதாராரபோலுஙகடடங்கமேநதிய கையா போலும, அடிவிளஙகுசெமபொறகழலாரபோலுமாக்கூரிறருன்றேன்றியபபனோ. (௪)

ஏகாசமாமபுலித்தோல்பாமபுதாழவிடுவெண்டலைகலனுவேநதிநாளும
மேகாசஙகட்டழிததவெள்ளிமாலைபுனலாசடைமுடிமேற்புனைநதாரபோலும
மாகாசமாயவெண்ணீருநதீயுமதியுமதிபிறநதவிண்ணுமண்ணும
ஆகாசமென்றிவையுமானாரபோலுமாக்கூரிறருன்றேன்றியபபனோ. (௫)

மாதூருமவாணெடுஙகண்செவ்வாய்மென்றேன் மலைமகளைமாாபததணை நதாரபோலும, மூதூராமுதிரைகளானாரபோலுமுதலுமிறுதியுமிலலாரபோலும, தீதூரநலவினையாயினின்றூரபோலுந திசையெட்டுநதாமேயாஞ்செலவாரபோலும, ஆதிரைநாளாயமாநதாரபோலுமாக்கூரிற்றுன்றேன்றியபபனோ. (௬)

மாலயானைமததகததைக் கீண்டாாரபோலு மான்றோலுடையாமகிழ்நதாா போலும, கோலானைக்கோளமுலாறகாய்நதாரபோலுங் குழவிபபிறைசடைமேல வைததாரபோலும,காலனைக்காலாற்கடநதாரபோலுங்கயிலாயநதமமிடமாக்கொண்டாாரபோலும, ஆலானைநதாடலுகபபாரபோலு மாக்கூரிறருன்றேன்றியபபனோ. (௭)

கண்ணாநதநெறறியுடையாரபோலுஙகாமனையுங்கண்ணழலாற்காய்நதாரபோலும, உண்ணாவருநஞ்சமுண்டாாரபோலுமூழித்தீயன்னவொளியாரபோலும, எண்ணாயிரங்கோடிபபேராரபோலுமேறேறிசசெலலுமிறைவாபோலும, அண்ணாவுமாரூருமேயாரபோலுமாக்கூரிறருன்றேன்றியபபனோ. (அ)

கடியாாதளிரகலநதகொன்றைமாலைகதிாபோதுதாதணிநதகண்ணிபோலும
நெடியானுஞ்சதுமுகனுநதேடநின்றநீலநற்கண்டததிறைவாபோலும [லும
படியேலமலவண்ணனுசெமபொன்மேனிமணிவண்ணநதமவண்ணமாவாரபோ
அடியாாபுகலிடமநானாரபோலுமாக்கூரிறருன்றேன்றியபபனோ. (௯)

திரையானுஞசெநதாமரைமேலானுந்தோநதவாகடாநதேடிககாணா நாணும, புரையாரெனபபடுவாாதாமேபோலுமபோரேறுதாமேறிசசெலவாரபோலும, கரையாவரைவிலலேநாகநாணுக்காலததீயன்னகனலாரபோலும, வரையார்மதிலெய்தவண்ணாபோலுமாககூரிற்றுன்றேன்றியபபனோ. (௧௦)

திருசசிறறம்பலம.

இந்தத்தலம சோழநாட்டிலுளளது.
சுவாமிபெயா - சுயம்புநதேசுவரா - தேவியாா - கட்கநேததிராம்பிகை.
ஆ_ பதிகம். உக.

---

## திருநாகைக்காரோணம்-திருத்தாண்டகம்.

திருச்சிறறம்பலம்.

பாராாபரவும்பழனத்தானைபபருப்பதத்தானைப்பைஞ்ஞீலியானைச்
சீராாசெழுமபவளக்குன்றெப்பானைததிகழுந்திருமுடிமேற்றிங்கள்சூடிப்

பேராயிரமுடையபெம்மான்றன்னைப்பிறர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக்
காரார்கடல்புடைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (க)

விண்ணோர்பெருமானைவீரட்டானைவெண்ணீறுமெய்க்கணிந்தமேனியா
னைப், பெண்ணானையாணானைப் பேடியானைப்பெரும்பற்றத்தண்புலியூர்பேணினா
னை, அண்ணாமலையானையானைந்தாடுமணியாரூர்வீற்றிருந்தவம்மான்றன்னைக், க
ண்ணார்கடல்புடைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (உ)

சிறையாரவரிவண்டுதேனேபாடுந்திருமறைக்காட்டெந்தைசிவலோகனை
மறையான்றன்வாய்மூருங்கீழ்வேளூருமவலிவலமுந்தேவூருமன்னியங்கே
உறைவானையுத்தமனையொற்றியூரிற்பற்றியாளுகின்றபரமன்றன்னைக்
கறையார்கடல்புடைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. ( )

அன்னமாம்பொய்கைசூழம்பரானையாச்சிராமன்னகருமானைக்காவும
முன்னமேகோயிலாக்கொண்டான்றன்னைமூவுலகுந்தானாயமூர்த்திதன்னைச்
சின்னமாம்பன்மலர்களன்றேசூடிச்செஞ்சடைமேல்வெண்மதியஞ் சேர்த்தினா
னைக்,கன்னியம்புன்னைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே.

நடையுடையநல்லெருதொன்றூர்வான்றன்னைஞானப்பெருங்கடலைநல்லூ
ரமேய, படையுடையமழுவாளொன்றேந்தினானைப்பன்மையேபேசும்படிறன்றன்
னை, மடையிடையேவாளையுகளும்பொய்கைமருகல்வாய்ச்சோதி மணிகண்ட
னைக்,கடையுடையநெடுமாடமோங்குநாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங் காண
லாமே (ரு)

புலங்கொளபூந்தேறல்வாய்ப்புகலிக்கோனைப் பூம்புகார்க்கற்பகத்தைப்புன்
கூர்மேய, அலங்கலங்கழனிசூழணிநீர்க்கங்கையவிர்சடைமேலாதரித்தவம்மா
ன்றன்னை, இலங்குதலைமாலைபாம்புகொண்டேகாசமிட்டியங்குமீசன்றனனைக்,
கலங்கற்கடல்புடைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. ( )

பொன்மணியைப்பூங்கொன்றைமாலையானைப்புண்ணியனை வெண்ணீறுபூ
சினானைச், சின்மணியமூவிலையஞ்சூலத்தானைத் தென்சிராப்பள்ளிச்சிவலோக
னை, மன்மணியைவான்சுடலையூராப்பேணி வல்லெருதொன்றேறுமறைவல்லா
னைக,கன்மணிகள்வெண்டிரைசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காண
லாமே. (எ)

வெண்டலையும்வெண்மழுவுமேந்தினானைவிரிகோவணமசைத்த வெண்ணீ
ற்றானைப்,புண்டலையமாலயானையுரிபோர்த்தானைப்புண்ணியனைவெண்ணீறணி
ந்தான்றன்னை, எண்டிசையுமெரியாடவல்லான்றன்னையேகம்பமேயானையெம
மான்றன்னைக், கண்டலங்கழனிசூழந்தண்ணாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்கா
ணலாமே. (அ)

சொல்லார்ந்தசோற்றுத்துறையான்றன்னைத்தொன்னரகன்னெறியாற்று
ாப்பான்றன்னை, வில்லானைமீயச்சூர்மேவினானைவேதியாகனல்வாக்கும் வேதஞ்
சொல்லிப், பொல்லாதார்தம்மரணமூன்றும்பொன்றப்பொறியரவமார்பாரப் பூ
ண்டான்றன்னைக், கல்லாலின்கீழானைக்கழிசூழ்நாகைக்காரோணத்தெஞ்ஞான்று
ங்காணலாமே. (கூ)

மனைதுறந்தவல்லமணர்தங்கள்பொய்யுமாண்புரைக்குமனக்குண்டாதங்கள்
பொய்யும், சினைபொதிந்தசீவரத்தர்தங்கள்பொய்யுமெய்யென்றுகருதாதேபோது

நெஞ்சே, பனையுரியைத் தன்னுடலிற்போர்த்தவெந்தையவன் பற்றே பற்றாகக் காணின்அல்லால், கனைகடலின் றென்கழிசூழ் நாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங் காணலாமே (கo)

நெடியானுமலரவனுநேடியாங்கேநேருருவங்காணாமே சென்றுநின்ற,படியானைப்பாம்புரமேகாதலானைப்பாம்பரையோடார்த்தபடிறன்றன்னை, செடிநாறுமவெண்டலையிற்பிச்சைக்கென்றுசென்றானைநின்றியூர்மேயான்றன்னை, கடிநாறும்பூஞ்சோலையார்நாகைக்காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (கக)

திருப்பதிகம் - உஉ.

திருமறைக்காடு - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தூண்டுசுடரனைய சோதிகண்டாய் தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய், காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்காற்ற வெளியான் கண்டாய், வேண்டுவார் வேண்டுவதேயீவான் கண்டாய் மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம், மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. (க)

கைகிளரும் வீணை வல்லவன் கண்டாய் காபாலி கண்டாய் திகழுஞ்சோதி, மெய்கிளரு ஞானவிளக்குக் கண்டாய் மெய்யடியாருள்ளத் துவித்துக் கண்டாய், பைகிளரு நாகமசைத்தான் கண்டாய் பராபரன் கண்டாய் பாசூரான் கண்டாய், வைகிளருங் கூர்வாட்படையான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. (உ)

சிலந்திக்கருண்முன்னஞ் செய்தான் கண்டாய் திரிபுரங்கள் வாய்ப்படுத்தான் கண்டாய், நிலந்துக்க நீர்வளி தீயானான் கண்டாய் நிரூபியரூபியுமாய் நின்றான் கண்டாய், சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய் தாமரையான் செங்கண்மாறானே கண்டாய், மலந்துக்க மால்விடையொன்றூர்ந்தான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே . (ஈ)

கள்ளிமுதுகாட்டிலாடி கண்டாய் காலனையுங்காலாற் கடந்தான் கண்டாய், புள்ளியுழைமானின் றோலான் கண்டாய் புலியுரிசேராடைப் புனிதன் கண்டாய், வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய் வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தின் மேய,வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. (ச)

மூரிமுழங் கொலிநீரானான் கண்டாய் முழுத்தழல் போன்மேனி முதல்வன் கண்டாய், ஏரிநிறைந்தனைய செல்வன் கண்டாய் இன்னடியார்க்கின்பம் விளைப்பான் கண்டாய், ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலையுறையு மண்ணல் கண்டாய், வாரிமதகளிறே போல்வான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. ()

ஆடன்மால்யானையுரித்தான் கண்டாய் அகத்தியான் பள்ளியமர்ந்தான் கண்டாய், கோடியான் கண்டாய் குழகன் கண்டாய் குளிராரூர்க்கோயிலாக் கொண்டான் கண்டாய், நாடியநன்பொருள்களானான் கண்டாய் நன்மையோடிம்மை மறுமை யெல்லாம், வாடியவாட்டந் தவிர்ப்பான் கண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்றானே. (சு)

வேலைசேர் நஞ்சமிடற்றான் கண்டாய் விண்டவர்பூங் கயிலைவெற்பன் கண்டாய், ஆலைசேர் வேள்வியழித்தான் கண்டாய் அமராகடாமேத்து மண்ணல் கண்டாய்,

பானெய்சேரானைஞ்சுமாடிகண்டாய்பருப்பதத்தான்கண்டாய்பரவைமேனி, மா லையோர்கூறுடையமைந்தன்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. ( )

அம்மைபயக்குமமிர்துகண்டாய்நந்தேனறெளிகண்டாய்யாக்கைசெய்திட்டம்மைபயக்குமிறைவன்கண்டாயென்னெஞ்சேயுன்னிலினியான்கண்டாய், மெய்ம்மையேஞானவிளக்குக்கண்டாய்வெண்காடன்கண்டாய்வினைகள்போக, மம்மரறுக்குமருந்துகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (அ)

மூலநோய்தீர்க்குமுதல்வன்கண்டாய் முத்தமிழுநான்மறையுமானான்கண்டாய், ஆலின்கீழ்நால்வர்க்கறத்தான்கண்டாயாதியுமந்தமுமானான்கண்டாய், பாலவிருத்தனுமானான்கண்டாய்பவளத்தடவரையேபோல்வான்கண்டாய், மாலைசேர்கொன்றைமலிந்தான்கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௯)

அயனவனுமாலுமறியாவண்ணமாரழலாய்நீண்டுகந்தவண்ணல் கண்டாய், துயரிலங்கைவேந்தன்றுலங்கவன்றுசோதிவிரலாலுறவைத்தான்கண்டாய், பெயரவர்க்குப்பேரருள்கள்செய்தான்கண்டாய் பேரும்பெரும்படையேயீந்தான் கண்டாய், மயருறுவல்வினைநோய்தீர்ப்பான்கண்டாய்மறைக்காட்டுறையு மணாளன்றானே. (௧0)

திருச்சிற்றம்பலம்

ஆ பதிகம் [illegible]

**திருவாரூர் - திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்

கைம்மான்மதக்களிற்றினுரிவைபோர்த்தான்காண்கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றியான்காண், அம்மான்காணாடரவொன்றாட்டினான்காணனலாடிகாண்அயில் வாய்ச்சூலத்தான்காண், எம்மான்காணேழுலகுமாயினான்காணெரிசுடரோன்காணிலங்குமழுவாளன்காண், செம்மானத்தொளியன்னமேனியான்காண்டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௧)

ஊனேறுபடுதலையிலுண்டியான்காணோங்காரன் காணூழிமுதலானான்காண், ஆனேறொன்றூர்ந்துழலுமையாளன்காணண்டன்காணண்டத்துக்கப்பாலான்காண், மானேறுகரதலத்தெம்மணிகண்டன்காண்மாதவன்காண் மாதவத்தின்விளைவானான்காண், தேனேறுமலர்க்கொன்றைக்கண்ணியான்காண் டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௨)

ஏவணத்தசிலையான்முப்புரமெய்தான்காணிறையவன்காண்மறையவன்காணீசன்றான்காண், தூவணத்தசுடர்ச்சூலப்படையினான்காண் சுடர்மூன்றுங்கண்மூன்றாக்கொண்டான்றான்காண், ஆவணத்தாலென்றன்னையாட்கொண்டான்காணனலாடிகாணடியார்க்கமிர்தானான்காண், தீவணத்ததிருவுருவிற் கரியுருவன்காண் டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௩)

கொங்குவார்மலர்க்கண்ணிக்குற்றாலன்காண்கொடுமழுவன்காண்கொல்லைவெள்ளேற்றான்காண், எங்கள்பாற்றுயர்கெடுக்குமெம்பிரான்காணேழ்கடலுமேழ்மலையுமாயினான்காண், பொங்குமாகருங்கடனஞ்சுண்டான்றான்காண்பொற்றூண்காண்செம்பவளத்திரள்போல்வான்காண், செங்கண்வாளரவமதியுடன் வைத்தான்காண் டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௪)

காரேறுநெடுங்குடுமிக்கயிலாயன்காண் கறைக்கண்டன்காண் கண்ணார்நெற்றியான்காண், போரேறுநெடுங்கொடிமேலுயர்த்தினான்காண் புண்ணியன்காணெண்ணருமபலகுணத்தினான்காண், நீரேறுசுடர்சசூலப்படையினான்காணின்மலன்காணிகரேதுமிலலாதான்காண், சீரேறுதிருமாலோர்பாகத்தான்காண் டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௫)

பிறையரவக்குறுங்கண்ணிச்சடையினான்காண்பிறப்பிலிகாண் பெண்ணோடாணுமானான்காண், கறையுருவமணிமிடற்றுவெண்ணீற்றான்காண்கழலுருழுவாரபிறப்பறுக்குங்காபாலிகாண், இறையுருவக்கனைவளையாளிடப்பாகன்காணிருநிலன்காணிருநிலத்துக்கியல்பானான்காண், சிறையுருவக்களிவண்டார்செம்மையான்காண்டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௬)

தலையுருவசசிரமாலைசூடினான்காண் டமருலகந்தலைகலனாப்பலிகொள்வான்காண், அலையுருவசசுடராழியாக்கினான்காணவ்வாழிநெடுமாலுக்கருளினான்காண், கொலையுருவக்கூற்றுதைத்தகொள்கையானகாண் கூரெரிநீர்மண்ணொடுகாற்றாயினானகாண், சிலையுருவசசரந்துரந்ததிறத்தினான்காண் டிருவாரூரானகாணென்சிந்தையானே. (௭)

ஐயன்காண்குமரனகாணாதியானகா ணடன்மழுவாடானொன்றுபியன்மேலேந்து,கையானகாண்கடறபூதப்படையினனகாண்கண்ணொரியாலங்கனையோனுடலகாய்ந்தானகாண், வெய்யனகாண்டணபுனலசூழ் செஞ்சடையான்காண் வெண்ணீற்றனகாண்விசயறகருளசெய்தான்காண், செய்யன்காண்கரியன்காண்வெளியோனான்காண டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௮)

மலைவளர்த்தமடமங்கைபாகத்தான்காண் மயானத்தான்காண்மதியஞ்சூடினான்காண், இலைவளர்த்தமலர்க்கொன்றைமாலையான்காணிறையவன்காணெறிதிரைநீர்நஞ்சுண்டான்காண்,கொலைவளர்த்தமூவிலையசூலத்தான்காண் கொடுங்குன்றன்காண்கொலலையேற்றினான்காண், சிலைவளர்த்தசரந்துரந்ததிறத்தினான்காண் டிருவாரூரான்காணனசிந்தையானே. (௯)

பொறறாதுமலர்க்கொன்றைசூடினான்காண் புரிநூலன்காண் பொடியார்மேனியானகாண், மறறாருந்தனனொப்பாரிலலாதான்காண்மறையோதிகாணெறிநீர்நஞ்சுண்டான்காண், எறறாலுங்குறைவொன்றுமிலலாதான்காணிறையவன்காண் மறையவன்காணீசன்றான்காண், செறறார்கள்புரமூன்றுஞ்செற்றான்றான்காண்டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௧௦)

திருச்சிற்றமபலம்.

ஆ பதிகம் உ௪.

## திருவாரூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றமபலம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கியுள்ளக்கிழியினுருவெழுதி
உயிராவணஞ்செய்திட்டுன்கைதந்தாலுணரப்படுவாரோடொட்டிவாழ்தி
அயிராவணமேறாதானேறேறியமரர்நாடாளாதேயாரூராண்ட
அயிராவணமேயென்னம்மானேநின்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. ()

எழுதுகொடியிடையாரேழைமென்றோளிளையவர்கண்மம்மையிசூழாமுன்னம
பழுதுபடநினையேற்பாவிநெஞ்சேபண்டுதானென்னோடுபகைதானுண்டோ

முழுதுலகில்வானவர்கண்முற்றுங்கூடிமுடியாலுறவணங்கிமுற்றமபற்றி
அழுதுதிருவடிக்கேபூசைசெய்யவிருக்கின்றாராபோலுமாரூரா தானே. (௨)

தேரூரார்மாவூரார்திங்களூரார்திகழ்புன்சடைமுடிமேற்றிங்கள்சூடிக்
காரூரார்நின்றகழனிச்சாயற்கண்ணார்ந்தமாடங்கலந்துதோன்றும
ஓரூராவுலகெலாமொப்பக்கூடியுமைபாண்மணவாளாவென்றுவாழ்த்தி
ஆரூராவாரூராவென்கின்றாரகளமராகடமபெருமானேயெங்குற்றாயே. (௩)

கோவணமோதோலோவுடையாவதுகொலலேற்றேவேழமோவூர்வதுதான், பூவணமோபுறமபயமோவன்றாயிற்றான பொருந்தாதாவாழ்க்கை திருந்தாமையோ, தீவணத்தசெஞ்சடைமேற்றிங்கள்சூடித்திசைநான்குமவைத்துகந்தசெந்தீவண்ணா, ஆவணமோவொற்றியோவடிமானார்தாமறியேனமற்றாராமாற்றாரா தானே. (௪)

ஏந்துமழுவாளரின்னமபராரெரிபவளவண்ணாகுடமூக்கிலார
வாய்ந்தவளைக்கையாளபாகமாகவார்சடையாரவந்துவலஞ்சுழியார
போந்தாரடிகள்புறமபயத்தேபுகலூர்க்கேபோயினார்போரேறேறி
ஆய்ந்தேயிருப்பார்போயாரூர்புககாரண்ணலார்செய்கின்றகண்மாயமே. (௫)

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளை கருநரமபுமவெள்ளெலுமபுஞ்சேர்ந்தொன்றாகி, உருவாகிப்புறப்பட்டிங்கொருத்திதன்னாலவளர்க்கப்பட்டுயிராருங்கடைபோகாரால, மருவாகிநின்னடியேமறவேனமமானமறிதொருகையறபிறப்புண்டேன்மறவாவண்ணம, திருவாரூர்மணவாளாதிருத்தெங்கூர்ச்செமபொனேகமபனேதிகைத்திட்டேனே (௬)

முன்னமவனுடையநாமங்கேட்டாள் மூர்த்தியவனிருக்குமவண்ணங்கேட்டா
பின்னையவனுடையவாரூர்கேட்டாளபெயர்த்துமவனுக்கேபிச்சியானாள் [ள
அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாடலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (௭)

ஆடுவாய்நீநட்டமளவிறகுன்றாவலியடுவாரருமறையோரறிந்தேனுன்னைப
பாடுவார்துமபுருநாரதாதிபரவுவாரமரர்களுமமரர்கோனும
தேடுவார்திருமாலுநான்முகனுந்தீண்டுவாள்மலைமகளுங்கங்கையாளும
கூடுமோநாயடியேன்செய்குற்றேவலகுறையுண்டேதிருவாரூர்குடிகொண்டீர்க்கே

நீரூருஞ்செஞ்சடையாய்நெற்றிக்கண்ணாய் நிலாத்திங்கட்டுண்டத்தாய்நின்னைத்தேடி, ஓரூருமொழியாமேயொற்றி நெங்குமுலகமெலாந்திரிதந்துநின்னைக்காண்பான, தேரூருநெடுவீதிபற்றிநின்றுதிருமாலுநான்முகனுந்தோந்துங்காணா, தாரூராவாரூராவென்கின்றாரகளமராகடமபெருமானேயாரூராயே. (௯)

நலலூரேநன்றாகநட்டமிட்டுநரையேற்றைப்பழையாறேபாயவேறிப், பல்லூரும்பலிதிரிந்துசேற்றூர்மீதேபலாகாணத்தலையாலங்காட்டினூடே, இல்லாந்தபெருவேளூர்த்தளியேபேணியிராப்பட்டீச்சரங்கடந்துமணற்கால்புக்கு, எல்லாருந்தனிச்சாத்தங்குடியிற்காணவிறைப்பொழுதிற்றிருவாரூர்புக்கார்தாமே .

கருத்துத்திக்கதநாகங்கையிலேந்திக்கருவரைபோற்களியானைகதறக்கையால, உரித்தெடுத்துச்சிவந்ததன்றோலபொருந்தமூடி யுமையவளையச்சுறுத்துமொளிகொண்மேனித், திருத்துருத்திதிருப்பழனந்திருநெய்த்தானந்திருவையாறி

டங்கொண்டசெலவரிநாள், அரிபெருத்தவெள்ளேற்றையடரவேறி யபபனரிப பருவமாரூராரோ. (கக)

ஆ_ பதிகம். உரு.　　　　　திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாதித்தன் றிருவுருவிற்பெண்கொண்டானைப பண்டொருகாற்றசமுகனைய ழுவித்தானை, வாதித்துத்தடமலரான்சிரங்கொண்டானைவணகருப்புச்சிலைக்கா மனுடல்கொண்டானைச், சோதிச்சந்திரன்மேனிமறுச்செய்தானைச்சுடரங்கிதே வனையோரகைக்கொண்டானை, ஆதித்தன்பற்கொண்டவம்மான்றன்னையாரூரி றகண்டடியேனயாத்தவாறே (க)

வெற்புறுத்ததிருவடியாற்கூற்றட்டானைவிளக்கினொளிமின்னினொளிமுத்தி ன்சோதி, ஒப்புறுத்ததிருவுருவத்தொருவன்றன்னை யோதாதேவேதமுணர்ந்தா ன்றன்னை, அப்புறுத்தகடனஞ்சமுண்டான்றன்னையமுதுண்டாருலந்தாலுமுல வாதானை, அப்புறுத்தநீரகத்தேயழலானானையாரூரிற்கண்டடியேனயாத்தவா றே. (உ)

ஒருகாலத்தொருதேவர்கண்கொண்டானை யூழிதோறூழியுயர்ந்தான்றன் னை, வருகாலஞ்செல்காலமாயினானை வன்கருப்புச்சிலைக்காமனுடலட்டானைப், பொருவேழக்களிற்றுரிவைப்போர்வையானைப் புள்ளரையனுடறன்னைப்பொடி செய்தானை, அருவேள்விதகர்த்தெச்சனற்றலைகொண்டானை யாரூரிற்கண்டடியே னயாத்தவாறே. (ந)

மெய்ப்பால்வெண்ணீறணிந்தமேனியானை வெண்பளிங்கினுட்பதித்தசோ தியானை, ஒப்பானையொப்பிலாவொருவன்றன்னை யுத்தமனைநித்திலத்தையுல கமெல்லாம், வைப்பானைக்களைவானைவருவிப்பானை வல்வினையேன்மனத்தகத் தேமன்னினானை, அப்பாலைக்கப்பாலைக்கப்பாலானையாரூரிற்கண்டடியேனயாத்த வாறே. (ச)

பிண்டத்திற்பிறந்ததொருபொருளைமற்றைப பிண்டத்தைப்படைத்ததனை ப்பெரியவேதத், துண்டத்திற்பணிபொருளைச்சுடுதீயாகிச் சுழல்காலாய்நீராகிப பாராயிற்றைக், கண்டத்திற்றீநஞ்சமுதுசெய்துகண்மூன்றுடைத்ததொருக ருமலைப்பாலை, அண்டத்துக்கப்புறத்தார்தமக்குவித்தையாரூரிற்கண்டடியேன யாத்தவாறே. (ரு)

நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய்நிறைகாலாயிவையிற்றினியமமாகிப
பாதியாயொன்றாகியிரண்டாய்மூன்றாய்ப்பரமாணுவாய்ப்பழுத்தபண்களாகிச்
சோதியாயிருளாகிச்சுவைகளாகிச்சுவைகலந்தவப்பாலாய்வீடாயவீட்டின்
ஆதியாயந்தமாய்நின்றான்றன்னையாரூரிற்கண்டடியேனயாத்தவாறே.

(சா-எ-அ-கூ-கO.)

அலலலடியாாக்கறுபபாாபோலுமமருலகநதமமடைநதாாக்காட்சிபோலு ம, நலலமுநலலூருமேபபாாபோலு நள்ளாறுநாளுமபிரியாாபோலும, முலலை முகைநகையாளபாகாபோலு முனனமேதோனறிமூளைததாாபோலுந, தில் லைநடமாடுநதேவாபோலுநதிருசசாய்க்காட்டினிதுறையுஞ்செலவாதாமே(கூ)

உறைபபுடையவிராவணனபொனமலையைக்கையா லூககஞ்செய்தெடு த்தலுமேயுமையாளஞ்ச, நிறைபெருநதோளிருபதுமபொனமுடிகள்பத்து நிலஞசேரவிரலவைததநிமலாபோலும, பிறைபபிளவுசடைக்கணிநதபெமமா னபோலுமபெணணாணுருவாகிநினறாாபோலுஞ, சிறபபுடையவடியாாகட்கி னியாாபோலுநதிருசசாய்ககாட்டினிதுறையுஞ்செலவாதாமே. (கO)

**திருச்சிற்றம்பலம்.**

இந்தததலம சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - சாயாவனேசுவரா, தேவியாா - குயிலினுநனமொழியம்மை.

---

**திருப்பாசூர் - திருந்தாண்டகம்.**

திருசசிற்றமபலம.

விணணாகிநிலனாகிவிசுமபுமாகிவேலைசூழ்ஞாலததாாவிருமபுகினற
எணணாகியெழுததாகியியலபுமாகியேழுலகுநதொழுதேததிக்காணநினற
கணணாகிமணிபாகிககாடசியாகிக்காதலிததஙகடியாாகள்பரவநினற
பணணாகியினனமுதாமபாசூாமேயபரஞசுடரைக்கணடடியேனுய்நதவாறே.

வேதமோராானகாயாறங்கமாகிவிரிகினறபொருட்கெலலாமவித்துமாகிக கூதலாய்பபொழிகினறமாரியாகிகுவலையஙகணமுழுதுமாய்க்கொணடலாகி க், காதலாலவானவாகளபோறறியெனறுங்கடிமலாகளவைதூவியேத்தநின்ற பாதியோாமாதினனைபபாசூாமேயபரஞ்சுடரைககணடடியேனுய்நதவாறே.()

தடவரைகளேழுமாய்க்காறறுய்த்தீயாய்த் தணவிசும்பாய்த்தண்விசுமபி னுச்சியாகிக், கடலவலையஞ்சூழ்நததொருஞாலமாகிக்காண்கினறகதிரவனும

தீயாகிக், குடமுழவச்சரிவழியே யனலகையேந்திக்கூத்தாடவல்லகுழக னாகிப், படவரவொன்றதுவாட்டிப்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்த வாறே. (௩)

நீராருஞ்செஞ்சடைமேலரவங்கொன்றை நிறைமதியமுடன்சூடி நீதியாலே, சீராருமறையோதியுலகமுய்யச் செழுங்கடலைக்கடைந்தகடனஞ்சமுண்ட, காராருங்கண்டனைக்கச்சிமேயகண்ணுதலைக்கடலொற்றிகருதினானைப், பாரோருமவிண்ணோருமபரசும்பாசூர்ப்பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே.

வேடனாய்விசயன்றன்வியப்பைக்காண்பான்விறலிடைந்துகொம்புடைய வேனத்தின்பின், கூடினாருமையவளுங்கோலங்கொள்ளக்கொலைப்பகழியுடன்கோத்துக்கோரப்பூசல், ஆடினார்பெருங்கூத்துக்காளிகாணவருமறையோடாறங்கமாய்ந்துகொண்டு, பாடினார்நால்வேதம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண் டடியேனுய்ந்தவாறே. (௫)

புத்தியினாற்சிலந்தியுந்தன்வாயினூலாற் பொதுப்பந்தலதுவிழைத்துச்சருகான்மேய்ந்த, சித்தியினாலரசாண்டுசிறப்புச்செய்யச்சிவகணத்துப்புகப்பெய்தார் திறலான்மிக்க, வித்தகத்தால்வெள்ளானைவிள்ளாவண்புவிரிவாகக்கண்டதற்குவீடுகொட்டிப்,பத்தர்களுக்கின்னமுதாம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண் டடியேனுய்ந்தவாறே. (௬)

இணையொருவர்தாமல்லால்யாருமில்லா ரிடைமருதோடேகம்பத்தென் றுநீங்கா, ரணைவரியர்யாவர்க்குமாதிதேவரருமந்தநன்மையெலாமடியார்க்கீவார், துன்னமுழுகுபொடியாடுஞ்செக்கர்மேனித்தூநீற்றவனைச்சார்ந்தகிளைவி றுதோய்ந்த, பணைமுலையாள்பாகனையெம்பாசூர்மேயபரஞ்சுடரைக்கண்டடி யேனுய்ந்தவாறே. (௭)

அண்டவர்கள்கடல்கடையப்பயந்தனுட்டோன்றியதிரந்தெழுந்தவாலால மேலைஞாலம், எண்டிசையுஞ்சுடுகின்றவாற்றைக்கண்டிமைப்பளவிலுண்டிருண்டகண்டர்தொண்டர், வண்டுபடுமதுமலர்கடூவினின்றுவானவர்கடானவர்கள்வணங்கியேத்தும், பண்டரங்கவேடனையெம்பாசூர்மேயபரஞ்சுடரைக்க ண்டடியேனுய்ந்தவாறே (௮)

ஞாலத்தையுண்டதிருமாலுமற்றைநான்முகனுமறியாதநெறியானைக்கையிற், சூலத்தாலந்தகனைச்சுருளக்கோத்துத்தோலலுலகிற்பலவுயிரைக்கொல்லுங்கூற்றைக், காலத்தாலுதைசெய்துகாதல்செய்தவந்தணனைக்கைக்கொண்டசெவ்வானவண்ணர், பாலொத்தவெண்ணீற்றாபாசூர்மேயபரஞ்சுடரைக் கண்டடியேனுய்ந்தவாறே. (௯)

வேந்தனெடுமுடியுடையவரக்கர்கோமான மெல்லியாளுமைவெருவவி ரைந்திட்டோடிச், சாந்தமெனநீறணிந்தான்கயிலைவெற்பைத்தடக்கைகளா லெடுத்திடலுந்தாளாலூன்றி, யேந்துதிரடிண்டோளுந்தலைகள்பத்துமிறுத்த வன்றனிசைகேட்டிரக்கங்கொண்ட, பாந்தளணிசடைமுடியெம்பாசூர்மே யபரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம்.

பெருந்தகையைப் பெறற்கரியமாணிக்கத்தைப் பேணிநினைந்தெழுவார்தம்மனத்தேமன்னி, இருந்தமணிவிளக்கதனைநின்றபூமேலெழுந்தருளியிருந்தானைப்பெண்டோள்வீசி, யருந்திறன்மாநடமாடுமம்மான்றன்னையங்கனகச்சுடராங்குன்றையன்றாலின்கீழ்த், திருந்துமறைப்பொருளுலவாக்கருள்செய்தானைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே. (க)

துங்கநகத்தாலன்றித்தொலையாவென்றித்தொகுதிறலவ்விரணியனையாகங்கீண்ட, வங்கனகத்திருமாலுமயனுந்தேடு மாரழலைப்பனங்களுடல்பொடியாய்வீழ்ந்து, மங்கநத்தானவல்லமருந்துதன்னை வண்கயிலைமாமலைமேன்மன்னிநின்ற, செங்கனகத்திரடோளெஞ்செல்வன்றன்னைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே. (உ)

உருகுமனத்தடியவர்கட்கூறுந்தேனையுமையாமணிமுடிக்கணியையுண்மைநின்ற, பெருகுநிலைக்குறியாளரறிவுதன்னைப்பேணியவந்தணர்க்குமறைப்பொருளைப்பின்னும், முருகவிரிநறுமலர்மேலயற்குமாற்கு முழுமுதலைமெய்த்தவத்தோர்துணையைவாய்த்த, திருக்குழலுமைநங்கைபங்கன்றன்னைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே (ங)

கந்தமலர்க்கொன்றையணிசடையான்றன்னைக்கதிர்விடுமாமணிபிறங்குகனகச்சோதிச், சந்தமலர்த்தெரிவையொருபாகத்தானைச்சராசரநற்றாயானைநாயேன்முன்னைப், பந்தமறுத்தாளாக்கிப்பணிகொண்டாங்கேபன்னியநூற்றமிழ்மாலைபாடுவித்தென், சிந்தைமயக்கறுத்ததிருவருளினானைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே. (ச)

நஞ்சடைந்தகண்டத்துநாதன்றன்னைநளிர்மலர்ப்பூங்கணைவேளைநாசமாக, வெஞ்சினத்தீவிழித்தொருநயனத்தானை வியன்கெடிலவீரட்டமேவினானை, மஞ்சடுத்தநீள்சோலைமாடவீதி மதிலாரூரிடங்கொண்டமைந்தன்றன்னைச், செஞ்சினத்ததிரிசூலப்படையான்றன்னைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே (ரு)

கன்னியையங்கொருசடையிற்கரந்தான்றன்னைக்கடவூரில்வீரட்டங்கருதினானைப், பொன்னிசூழ்பாற்றுறைப்புனிதன்றன்னைப்பூந்துருத்திநெய்த்தானம்பொருந்தினானைப், பன்னியநான்மறைவிரிக்கும்பண்பன்றன்னைப்பரிந்திமையோர்தொழுதேத்திப்பரனேயென்று, சென்னிமிசைக்கொண்டணிசேவடியினானைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே. (சா)

எத்திக்குமாய்நின்றவிறைவன்றன்னையேகம்பமேயானையில்லாத்தெய்வம், பொத்தித்தம்மயிர்பறிக்குஞ்சமணர்பொய்யிற்புக்கழுந்திவீழாமேபோதவாங்கிப், பத்திக்கேவழிகாட்டிப்பாவந்தீர்த்துப்பண்டைவினைப்பயமானவெல்லாம்போக்கித், தித்தித்தென்மனத்துள்ளேயூறுந்தேனைச்செங்காட்டங்குடியதனிற்கண்டேனே. (எ)

கல்லாதார்மனத்தணுகாக்கடவுடன்னைக்கற்றார்களுற்றோருங்காதலானைப், பொல்லாதநெறியுகந்தார்புரங்கண்மூன்றும்பொன்றிவிழவன்றுபொருசர

கதொட்டானை, நில்லாதநிணக்குரம்பைப்பிணக்கநீங்கநிறைதவத்தையடியே ற்குநிறைவித்தென்றுஞ், செல்லாதசெந்நெறிக்கேசெலுவிப்பானைச்செங்காட் டங்குடியதனிற்கண்டேனே. (௮)

அரியபெரும்பொருளாகிநின்றான்றன்னையலைகடலிலாலாலமமுதுசெய் த, கரியதொருகண்டத்துச்செங்கணேறுகந்திரவிடுமாமணிபிறங்குகாட்டியா னை, புரிபலதொழில்செய்யுமடியார்தங்கட்குலகமெலாமுழுதளிக்குமுலப்பி லானைத், தெரிவையொருபாகத்துச்சேர்த்தினானைச்செங்காட்டங்குடியதனி ற்கண்டேனானே. (௯)

போரரவமால்விடையொன்றூர்தியானைப் புறம்பயமும்புகலூருமன்னி னானை, நீரரவச்செஞ்சடைமேனிலாவெண்டிங்கணீங்காமைவைத்தானைநிம லன்றன்னைப், பேரரவப்பட்டகத்தேதருட்டையவெள்ளறிப்பிறங்கொளிவாளரக்க ன்முடியிடியச்செற்ற, சீரரவக்கழலானைச்செல்வன்றன்னைச்செங்காட் டங்குடி யதனிற்கண்டேனே (௰)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கணபதீச்சுவரர், தேவியார் - திருக்குழல்மாதம்மை.

## திருமுண்டீச்சரம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

ஆர்த்தான்காணழுங்காமைகருநாணு வடியவர்கட்கன்பன்காணானைத் தோலைப், போர்த்தான்காண்புரிசடைமேற்புனலேற்றான்காண்புறங்காட்டிலா டல்புரிந்தான்றான்காண், கார்த்தான்காணுலகேழுங்கலங்காவண்ணங்கனைகட லவாய்நஞ்சதனைக்கண்டத்துள்ளே,சேர்த்தான்காண்டிருமுண்டீச்சரத்துமே யசிவலோகன்காணவனென்சிந்தையானே. (௧)

கருத்தன்காண்கமலத்தோன்றலையிலொன்றைக்காய்ந்தான்காண்பாய்ந் தநீர்பரந்தசென்னி, ஒருத்தன்காணுமையவளோர்பாகத்தான்காண் ஓருரு வின்மூவுருவாயொன்றாய்நின்ற, விருத்தன்காண்விண்ணவர்க்குமேலானான் காண்மெய்யடியாருள்ளத்தேவிரும்பிநின்ற, திருத்தன்காண்டிருமுண்டீச்சர த்துமேயசிவலோகன்காணவனென்சிந்தையானே. (௨)

நம்பன்காணரைவிடையொன்றேறினான்காண்கீதத்தைநவிற் றினான்காண், இன்பன்காணிமையார்முக்கண்ணினான்காண்சேற்றுமனமுருகு மடியார்தங்கள், அன்பன்காணாழல்நாட்டினான்காணவனிவனென்றறியாவாக் குமறிப்பொண்ணாச், செம்பொன்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோக ன்காணவனென்சிந்தையானே (௩)

மூவன்காண்மூவர்க்குமுதலானான்காண்முன்னுமாய்ப்பின்னுமாயமுடி வானான்காண், காவன்காணுலகுக்கோர்கண்ணானான்காண்கங்காளன்காண்க யிலைமலையினான்காண், ஆவன்காணவகதத்தஞ்சாடினான்காணாழலாயபகரிக் குமறியவொண்ணாத், தேவன்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோகன்கா ணவனென்சிந்தையானே. (௪)

கானவன்காண் கானவனுக்கருள்செய்தான்காண் கனலாடவல்லான்காண் கையிலேந்தும், மானவன்காண் மறைநான்குமாயினான்காண் வல்லேறொன்றூரவல்லான்றான்காண், ஊனவன்காணுலகத்துக்குயிரானான்காணுள்ளவன்காணில்லவன்காணுணர்வார்க்கென்றுந், தேனவன்காண் திருமுண்டீச்சரத்துமேயசிவலோகன் காணவனென்சிந்தையானே. (௫)

உற்றவன்காணுறவெல்லாமானான்றான்காணொழிவற்நின்றெங்குமுலப்பிலான்காண், புற்றரவேயாடையுமாய்ப்பூணுமாகிப் புறங்காட்டிலெரியாடல்புரிந்தான்றான்காண், நற்றவன்காணடியடைந்தமாணிக்காகநணுகியதோர்பெருங்கூற்றைச்சேவடியினாற், செற்றவன்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோகன்காணவனென்சிந்தையானே. (௬)

உதைத்தவன்காணுணராத்தக்கன்வேள்வியுருண்டோடத்தொடர்ந்தருக்கன்பல்லெல்லாந், தகர்த்தவன்காண்டக்கன்றன்றலையைச்செற்றதலையவன்காணமலைமகளாளுமையைச்சால, மதித்தவன்காண் மதிப்பொழிந்தவல்லமரர்மாட்டாரவேள்விவந்தவிழுண்டவரோடுமதனையெல்லாஞ், சிதைத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேயசிவலோகன்காணவனென்சிந்தையானே. (௭)

உரிந்தவுடையார்துவராடையாளுமறியாதவழிந்தருமவழியாவருணராவண்ணம், பரிந்தவன்காண்பனிவரைமீப்பண்டெல்லாம்பறித்துடனேநிரந்தவருபயங்கரப்பெண்ணை, நிரந்துவரும்இருகரையுநடவாவோடிநின்மலனைவலங்கொண்டுநீளநோக்கித், திரிந்துலவுதிருமுண்டீச்சரத்துமேய சிவலோகன்காணவனென்சிந்தையானே. (அ-௯)

அறுத்தவன்காணடியவர்கள்ளல்லலெல்லாமருமபொருளாய்நின்றவன்காணனங்கனாக, மறுத்தவன்காணமலைதன்னைமதியாதோடிமலைமகடன்மனநடுங்கவானோரஞ்சக், கறுத்தவனைக்கயிலாயமெடுக்கதானகையுங்கதிர்முடியுங்கண்ணும் பிதுங்கியோடச், செறுத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - முண்டீசுவரர், தேவியார் - கானார்குழலியம்மை.

ஆக பதிகம் - அ௫.

## திருவாலம்பொழில்-திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருவாகிக்கண்ணுதலாய்நின்றான்றனைக்கமலத்தோன்றலையரிந்தகாபாலியை, யுருவார்ந்தமலைமகளோர்பாகத்தானையுணர்வெலாமானானையோசையாகி, வருவானைவலஞ்சுழியெம்பெருமான்றன்னை மறைக்காட்டுமாவடுதண்டுறையுமேய, திருவானைத்தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௧)

உரித்தானைக்களிறதன்றோலைபோர்வையாகவுடையானையுடைபுலியினதளேயாகத், தரித்தானைச்சடையதன்மேற்கங்கையங்கைத்தழலுருவைவிடமுதாவுண்டிதெல்லாம், பரித்தானைப்பவளமால்வரையானைப்பாம்பணையா

னறனைக்கன்றங்காழ்நலகிச், சிரித்தானைத்தென்பரம்பைக்குடியின்மேயதிரு
வாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (உ)

உருமூன்றாயுணர்வின்கணொன்றானானை யோங்காரமெய்ப்பொருளையுட
ம்பினுள்ளாற், கருவீன்றவெங்களைவையறிவானானைக் காலனைத்தன்கழலடி
யாற்காய்ந்துமாணிக், கருளினனையாரமுதையமரர்கோனை யளவறுதியெம்பெ
ருமானென்பார்க்கென்றுந், திருவினைத்தென்பரம்பைக்குடியின்மேயதிருவா
லம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (ங)

பாரமுழுதாய்விசும்பாகிப்பாதாளமாம்பரம்பரனைச்சுரும்பமருங்குழலா
ள்பாகத், தாரமுதாமணிதில்லைக்கூத்தனானை வாட்போக்கியம்மானைப்பெம்
மானென்று, வாரமதாமடியார்க்குவாரமாகிவஞ்சனைசெய்வார்க்கென்றும்வஞ்
சனாகுஞ், சீரரசைத்தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழிலானைச்
சிந்திநெஞ்சே. (ச)

வரையார்ந்தமடமங்கைபங்கன்றன்னை வானவர்க்குமானவனைமணியை
முத்தை, யரையார்ந்தபுலித்தோன்மேலரவமார்த்தவம்மானைத்தம்மானையடி
யார்க்கென்றும், புரையார்ந்தகோவணத்தெம்புனிதன்றன்னைப் பூந்துருத்தி
மேயானைப்புகலூரானைத், திரையார்ந்ததென்பரம்பைக்குடியின்மேயதிருவா
லம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (ரு)

விரித்தானைக்குவித்தானைவேதவித்தைவியன்பிறப்போடிறப்பாகிநின்று
னறனை, அரித்தானைச்சலந்தரனறனுடலம்வேறாப்பாழ்கடனஞ்சுண்டிமையோ
ரெல்லாமுய்யப், பரித்தானைப்பல்லசுரர்புரங்கண்மூன்றும்பாழ்படப்பொன்சிலை
மலைநாகநாணறப்பா, தெரித்தானைத்தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்
பொழிலானைச்சிந்திநெஞ்சே. (சு)

பொல்லாதவென்னழுக்கிற்புகுவானென்னைப்புடம்புகமேசோதித்தபுனி
தன்றன்னை, எல்லாருந்தன்னையேயிகழவந்நாளிடுபலியென்றகந்திரியுமெம்பி
ரானைச், சொல்லாதாரவர்தம்மைச்சொல்லாதானைத்தொடர்ந்துதன்பொன்
னடியேபேணுவார்கட், செல்லாதநெறிசெலுத்தவல்லான்றன்னைத்திருவால
ம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (எ)

ஐந்தலைநாகவணைக்கிடந்தமாலோடயன்றேடிநாடரியவம்மான்றன்னை
ப், பந்தணவுமெல்விரலாள்பாகத்தானைப்பராய்த்துறையும்வெண்காடும்பயின்
ருன்றன்னைப், பொந்துடையவெண்டலையிற்பலிகொள்வானைப்பூவணமும்பு
றம்பயமும்பொருந்தினானைச், சிந்தியவெந்தீவினைகடீர்ப்பான்றன்னைத்திருவா
லம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (அ)

கையிலுண்டுழல்வாருஞ்சாக்கியருங்கல்லாதவன்மூடர்க்கல்லாதானைப்,
பொய்யிலாதவர்க்கென்றும்பொய்யிலானைப் பூணாகநாணாகப்பொருப்புவில்
லாக், கையினாரம்பெரிகாலீர்க்குக்கோலாக்கடுந்தவத்தோர்நெடும்புரங்கள்க
னலவாய்வீழ்க்கச், செய்யினார்தென்பரம்பைக்குடியின்மேயதிருவாலம்பொழி
லானைச்சிந்திநெஞ்சே. (கூ-க0)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - ஆத்மநாதசுவரர், தேவியார் - ஞானாம்பிகையம்மை.

## திருச்சிவபுரம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானவன்காண்வானவர்க்குமேலானான்காண் வடமொழியுந்தென்றமிழும் மறைகணான்கும், ஆனவன்காணானைந்துமாடினான்காணையன்காண்கையிலனலேந் தியாடும், கானவன்காண்கானவனுக்கருள்செய்தான்காண்கருதுவார்இதயத்துக்க மலத்தூறுந், தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண்சிவனவன்கா ண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (க)

நக்கன்காணக்கரவமரையிலார்த்தநாதன்காண்பூதகணமாடவாடும், சொக் கன்காண்கொக்கிறகுசூடினான்காண்டுடியிடையாடுணைமுலைக்குச் சேர்வதாகும், பொக்கன்காண்பொக்கணத்தவெண்ணீற்றான்காண் புவனங்கண்மூன்றினுக்கு மொருவாய்நின்ற, திக்கன்காண்செக்கர்த்திகழுமேனிச்சிவனவன்காண்சிவபு ரத்தெஞ்செல்வன்றானே (௨)

வம்பின்மலர்க்குழலுமைபாண்மணவாளன்காண்மலரவன்மால்காண்பரிய மைந்தன்றான்காண், கம்பமதக்கரியுரிவுரிசெய்தோன்காண்கடனஞ்சமுண் டிருண்டகண்டத்தான்காண், அம்பானக்காப்பெருங்கோயிலமர்கின்றான்காணையவ நதியுள்ளான்காணையாறன்காண், செம்பொனெனத்திகழ்கின்றவுருவத்தான்கா ண்சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௩)

பித்தன்காண்டக்கன்றன்வேள்வியெல்லாம் பீடழியச்சாடியருள்கள்செய் த, முத்தன்காண்முத்தீயுமாயினான்காண்முனிவர்க்கும்வானவர்க்குமுதலாயமி க்க, அத்தன்காணத்தூரிலமர்ந்தான்றான்கா ணரிசிறப்பெருந்துறையேயாட்சி கொண்ட, சித்தன்காண்சித்தீச்சரத்தான்றான்காண்சிவனவன்காண்சிவபுரத் தெஞ்செல்வன்றானே (௪)

தூயவன்காணீறுதுதைந்தமேனிதுளங்குபளிங்கனையசோதியான்காண், தீயவன்காண்டீயவுணர்புரஞ்செற்றான்காண் சிறுமானைக்கொள்செங்கையெம்பெ ருமானன்றான்காண், ஆயவன்காணாரூரிலம்மான்றான்காணடியார்கட்காரமுதமா யினான்காண், சேயவன்காண்சேமநெறியாயினான்காண்சிவனவன்காண்சிவபுர த்தெஞ்செல்வன்றானே (௫)

பாரவன்காண்பாரதனிற்பயிரானான்காண் பயிர்வளர்க்குந்துளியவன்காண் டுளியினின்ற, நீரவன்காணீர்சடைமேனிகழ்வித்தான்காணிலவேந்தாபரிசாகநி னைவுற்றோர்க்கும், பேரவன்காண்பிறையெயிற்றுவெள்ளைப்பன்றிப்பிரியாதுபலநா ளும்வழிபட்டேத்தும், சீரவன்காண்சீருடையதேவர்க்கெல்லாஞ்சிவனவன்கா ண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௬)

வெய்யவன்காண்வெய்யகனலேந்தினான்காண் வியன்கெடிலவீரட்டமேவி னான்காண், மெய்யவன்காண்பொய்யாமனமவிரவாதான்காண்வீணையோடிசை ந்துமிகுபாடன்மிக்க, கையவன்காண்கையின்மழுவேந்தினான்காண்காமரங்கம பொடிவீழ்த்தகண்ணினான்காண், செய்யவன்காண்செய்யவளைமாலுக்கீந்தசிவ னவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (எ-அ-கூ.)

கலையாருநூலங்கமாயினான்காண் கலைபயிலுங்கருத்தன்காண் மலையாகிமறிகடலேழ்சூழ்ந்துநின்றமண்ணாகிவிண்ணாகிநின்றான்றான்காண், த

லையாயமலையெடுத்ததகவிலோனைத் தகர்ந்துவிழவொருவிரலாற்சாதித்தாண்ட, சிலையாருமலைமகளோர்கூறன்றான்காண் சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரிநாயகர்,தேவியார்-பெரியநாயகியம்மை.

---

## திருவோமாம்புலியூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆராரும்மூவிலைவேலங்கையானை யலைகடனஞ்சயின்றானை யமரரேத்து, மேராருமதிபொதியுஞ்சடையினானை யெழுபிறப்புமெனையாளாவுடையான்றன்னை, யூராரும்படநாகமாட்டுவானையுயர்புகழ்சேர்தருமோமாம்புலியூர்மன்னுஞ்-சீராரும்வடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே.

ஆதியானரியயனென்றறியவொண்ணா வமரர்தொழுங்கழலானை யமலன்றன்னைச், சோதிமதிகலைதொலையத்தக்கனெச்சன் சுடரிரவியயிலெயிறுதொலைவித்தானை, ஓதிமிகவந்தணர்களிருமூன்றோம்புமுயர்புகழார்தருமோமாம் புலியூர்மன்னுந், தீதிறிருவடதளியெஞ் செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௨)

வருமிக்கமதயானையுரித்தான்றன்னைவானவர்கோன்றோளனைத்துமடிவித்தானைத், தருமிக்ககுழலுமையாள்பாகன்றன்னைச்சங்கரனெம்பெருமானைத்தரணிதன்மே, லுருமிக்கமணிமாடநிலாவுவீதியுத்தமர்வாழ்தருமோமாம்புலியூர்மன்னுந், திருமிக்கவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே (௩)

அன்றினவர்புரமூன்றும்பொடியாய்வேவ வழல்விழித்தகண்ணானை யமரர்கோனை,வென்றிமிகுகாலனுயிர்போனறவீழவிளங்குதிருவடியெடுத்தவித்தகன்றன்னை, யொன்றியசீரிருபிறப்பாளர்தீயோம்புமுயர்புகழ்நான்மறையோமாம்புலியூர்நாளுந், தென்றன்மலிவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௪)

பாங்குடையவெழிலங்கியருச்சனைமுன்விரும்பப்பரிந்தவனுக்கருள்செய்தபரமன்றன்னைப், பாங்கிலாநரகதனிற்றொண்டராரும்பாராதவகைபண்ணவல்லான்றன்னை, ஓங்குமதில்புடைதழுவுமெழிலோமாம் புலியூருயர்புகழந்தணரேத்த வுலகாக்கென்றுந், தீங்கிறிருவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௫)

அருந்தவத்தோர்தொழுதேத்துமம்மான்றன்னையாராதவின்னமுதை யடியார்தம்மேல், வருந்துயரந்தவிர்ப்பானையுமையாணங்கைமணவாளனம்பியையென்மருந்துதன்னைப், பொருந்துபுனறழுவுவயனிலவுதுங்கப்பொழில்கெழுவுதருமோமாம்புலியூர்நாளுந், திருந்துதிருவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௬)

மலையானைவருமலையன்றுரிசெய்தானைமறையானைமறையாலுமறியவொண்ணாக்,கலையானைக்கலையாருங்கையினானைக்கடிவானையடியார்கடுயரமெல்லாம், உ-

லையாதவாதணர்கள்வாழுமோமாம்புலியூரெம்முத்தமனைப்புரமூன்றெய்த, சிலை யானைவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே.

சேர்ந்தோடுமணிக்கங்கைசூடினானைச் செழுமதியும்படவரவுமுடன்வைத் தானைச், சார்ந்தோர்கட்கினியானைத்தன்னொப்பில்லாத்தழலுருவைத்தலைமகனை த்தகைநால்வேதம, ஓர்ந்தோதிபயிலவார்வாழ்தருமோமாம்புலியூருள்ளானைக் கள்ளாதவடியாரநெஞ்சிற, சேர்ந்தானைவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேரா தேதிகைத்துநாள்செலுத்தினேனே. (அ)

வார்கெழுவுமுலையுமையாள்வெருவவன்றுமலையெடுத்தவாளரக்கன்றோளு ந்தாளும, ஏர்கெழுவுசிரமபத்துமிறுத்துமீண்டேயின்னிசைகேட்டிருந்தானையி மையோர்கோனைப,பார்கெழுவுபுகழ்மறையோர்பயிலுமாடப்பைமபொழிலசேர் தருமோமாமபுலியூர்மன்னுஞ், சீர்கெழுவுவடதளியெஞ்செல்வன்றன்னைச்சேரா தேதிகைத்துநாள்செலுததினேனே. (கூ-கO.)

திருச்சிற்றம்பலம்.

இநதததலம் சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயா - துயாதீாததசெலவா, தேவியார் - பூங்கொடியம்மை.

## திருவின்னம்பர் - திருத்தாண்டகம்.

திருசசிற்றமபலம்.

அலலிமலாநாற்றதுள்ளாாபோலுமன்புடையாாசிநதையகலாாபோலுஞ்
சொலலிலருமறைகடாமேபோலுந தூநெறிக்குவழிகாட்டுந்தொழிலாாபோலும்
விலலிற்புரமூன்றெரித்தாாபோலுமவீங்கிருளுநல்வெளியுமானாபோலும
எலலிநடமாடவலலாாபோலுமின்னமபாாத்தான்றோன்றியீசனாே. (க)

கோழிக்கொடியோன்றன்றாதைபோலுங்கொமபனாள்பாகங்குளிாந்தாாபோலும
ஊழிமுதலவருந்தாமேபோலுமுள்குவாருள்ளத்தினுள்ளாாபோலும
ஆழித்தோவிததகருந்தாமேபோலுமடைநதவாகட்கன்பாாய்நின்றாாபோலும
ஏழுபிறவிக்குநதாமேபோலுமின்னம்பாாத்தான்றோன்றியீசனாே. (உ)

தொண்டாகடநதகவினுள்ளாாபோலுநதூநெறிக்குநதூநெறியாய்நின்றார் போலும,பண்டிருவாகாணபபடியாாபோலுமபததாகடஞ்சித்தத்திருந்தார்போ லுங், கண்டமிறையேகறுத்தாாபோலுஙகாமனையுங்காலனையுங்காய்ந்தாாபோ லும,இண்டைச்சடைசோமுடியாாபோலுமின்னமபாாத்தான்றோன்றியீசனாே.

வானத்திளநதிங்கட்கண்ணிதன்னைவளர்சடைமேலவைத்துகநதமைந்தாாபோலு
ஊனொத்தவேலொன்றுடையார்போலுமொளிநீறுபூசுமொருவர்போலுந [ம
தானத்தின்முபபொழுதுநதாமேபோலுநதமமிற்பிறர்பெரியாரில்லைபோலும
ஏனத்தெயிறிலங்கபபூண்டாாபோலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாே. (ச)

சூழுநதுயரமறுபபாாபோலுநதோற்றமிறுதியாய்நின்றார்போலும்
ஆழுங்கடனஞ்சையுண்டாாபோலுமாடலுகநதவழகாபோலுந்
தாழ்வின்மனத்தேனையாளாக்கொண்டுதன்மையளித்ததலைவர்போலும
ஏழுபிறப்புமறுப்பார்போலுமின்னமபர்த்தான்றோன்றியீசனாே. (ரு)

பாதத்தணையுஞ்சிலம்பர்போலும்பாரூர்விடையொன்றுடையாாபோலும
பூதப்படையாள்புனிதர்போலுமபூம்புகலூர்மேயபுராணர்போலும

வேதப்பொருளாய்விளைவார்போலும்வேடம்பரவித்திரியுந்தொண்டர்
ஏதப்படாவண்ணநின்றார்போலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௬)

பல்லார்தலையோட்டிலூணார்போலும்பத்தர்கடஞ்சித்தத்திருந்தார்போலுங்
கல்லாதார்காட்சிக்கரியார்போலுங்கற்றவர்களேதங்களைவார்போலும்
பொல்லாதபூதப்படையார்போலும்பொருகடலுமேழ்மலையுந்தாமேபோலும்
எல்லாருமேத்தத்தகுவார்போலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௭)

மட்டுமலியுஞ்சடையார்போலுமாதையோர்பாகமுடையார்போலுங்
கட்டம்பிணிகடவிர்ப்பார்போலுங்காலன்றன்வாணாள்கழிப்பார்போலும்
நட்டம்பயின்றாடுமப்பர்போலுஞாலமெரிநீர்வெளிகாலானார்போலும்
எட்டுத்திசைகளுந்தாமேபோலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௮)

கருவுற்றகாலத்தேயென்னையாண்டுகழற்போதுதந்தளித்தகள்வர்போலுஞ்
செருவிற்புரமூன்றுமட்டார்போலுந்தேவர்க்குந்தேவராஞ்செல்வர்போலும்
மருவிப்பிரியாதமைந்தர்போலுமலரடிகணாடிவணங்கலுற்ற
இருவர்க்கொருவராய்நின்றார்போலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே (௯)

அலங்கற்சடைதாழவையமேற்றுவரவமரையார்க்கவல்லார்போலும [ம
வலங்கைமழுவொன்றுடையார்போலும்வான்றக்கன்வேள்விசிதைத்தார்போலு
விலங்கலெடுத்துகந்தவெற்றியானைவிறலழித்துமென்ஞரம்பார்கீதங்கேட்டன்
றிலங்குசுடர்வாள்கொடுத்தார்போலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-எழுத்தறிநாதவீசுவரர்-தேவியார்-கொந்தார்பூங்குழலம்மை

---

## திருக்கஞ்சனூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

மூவிலைவேற்சூலம்வலனேந்தினானைமூன்றுசுடர்க்கண்ணானைமூர்த்திதன்னை
நாவலனைநரைவிடையொன்றேறுவானைநால்வேதமாறங்கமாயினானை [ங்
ஆவினிலைந்துகந்தானையமரர்கோவையயன்றிருமாலானானையனலோன் போற்று
காவலனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே

தலையேந்துகையானையென்பார்த்தானைச்சவந்தாங்குதோளானைச் சாம்ப லானைக், குலையேறுநறுங்கொன்றைமுடிமேல்வைத்துக்கோணாகமசைத்தானைக் குலமாங்கைலை, மலையானைமற்றொப்பாரில்லாதானைமதிகதிருமவானவருமாலும் போற்றுங், கலையானைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண் டுய்ந்தேனே. (௨)

தொண்டர்கழல்தொழுதேத்தவருள்செய்வானைச் சுடர்மழுவாட்படையா னைச்சுழிவான்கங்கைத், தெண்டிரைகள்பொருதிழிசெஞ்சடையினானைச்செக்கர் வானொளியானைச்சேராதெண்ணிப், பண்டமரர்கொண்டுகந்தவேள்வியெல்லாம் பாழ்படுத்துத் தலையறுத்துப்பற்கண்கொண்ட, கண்டனைக்கஞ்சனூராண்ட கோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௩)

விண்ணவனைமேருவில்லாவுடையான்றன்னைமெய்யாகிப்பொய்யாகிவிதியா னானைப், பெண்ணவனையாணவனைப்பித்தன்றன்னைப்பிணமிடுகாடுடையானைப

பெருந்தக்கோனை, எண்ணவனையெண்டிசையுங்கீழுமேலுமிருவிசும்புமிருநில
முமாகித்தோன்றுங், கண்ணவனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்
ணாரக்கண்டுய்ந்தேனே. (ச)

உருத்திரனையுமாபதியையுலகானானையுத்தமனைநித்திலத்தையொருவன்ற
ன்னைப், பருப்பதத்தைப * பஞ்சவடிமார்பினானைப்பகலிரவாய்நீர்வெளியாய்ப்ப
ரந்துநின்ற, நெருப்பதனைநித்திலத்தின்றொத்தொப்பானைநீறணிந்தமேனியராய்
நினைவார்சிந்தைக், கருத்தவனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்
ணாரக்கண்டுய்ந்தேனே. (ரு)

ஏடேறுமலர்க்கொன்றையரவுதும்பை யிளமதியமெருக்குவா னிழிந்தகங்
கை, சேடேறிந்தசடையானைத்தேவர்கோவைச்செம்பொன்மாலவரையானைச்
சேர்ந்தார்சிந்தைக்,கேடிலியைக்கீழ்வேளூராளுங்கோவைக்கிறிபேசிமடவார்பெ
ய்வளைகள்கொள்ளுங், காடவனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்
ணாரக்கணடுய்ந்தேனே (சா)

நாரணனுநான்முகனுமறியாதானைநால்வேதத்துருவானைநம்பிதன்னைப், பா
ரிடங்கள்பணிசெய்யப்பலிகொண்டுண்ணும் பாலவணனைத்தீவணனைப்பகலானா
னை, வார்பொதியுமுலையாளோர்கூறன்றன்னைமானிடங்கையுடையானைமலிவார்
கண்டங், கார்பொதியுங்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்
டுய்ந்தேனே. (எ)

வானவனைவலிவலமுமறைக்காட்டானைமதிசூடும்பெருமானைமறையோன்ற
ன்னை, ஏனவனையிமவான்றன்பேதையோடுமினிதிருந்தபெருமானையேத்துவா
ர்க்குத், தேனவனைத்தித்திக்கும்பெருமான்றன்னைத்தீதிலாமறையோனைத்தே
வர்போற்றுங், கானவனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணாரக்க
ண்டுய்ந்தேனே (அ)

நெருப்புருவுதிருமேனிவெண்ணீற்றானைநினைப்பார்தநெஞ்சானை நிறைவா
னானைத், தருக்கழியமுயலகன்மேற்றாள்வைத்தானைச்சலந்தரனைத்தடிந்தோனைத்
தக்கோர்சிந்தை,விருப்பவனைவிதியானைவெண்ணீற்றானை விளங்கொளியாய்மெ
ய்யாகிமிக்கோர்போற்றுங், கருத்தவனைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்
தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (கூ)

மடலாழித்தாமரையாயிரத்திலொன்று மலர்க்கணிடந்திடுதலுமேமலிவான்
கோலச், சுடராழிநெடுமாலுக்கருள்செய்தானைத்துமபியுரிபோர்த்தான்றன்றோ
ழன்விட்ட, அடலாழித்தேருடையவிலங்கைக்கோனையருவரைக்கீழடர்த்தானை
யருளாகருணைக், கடலானைக்கஞ்சனூராண்டகோவைக்கற்பகத்தைக்கண்ணா
ரக்கண்டுய்ந்தேனே (கம)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-அக்கினீசுவரர்-தேவியார்-கற்பகநாயகியம்மை.

---

## திருவேறும்பியூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னியசெந்தமிழறியேன்கவியேலமாட்டேனெண்ணோடுபண்ணிறைந்த
கலைகளாய, தன்னையுந்தன்றிறத்தறியாப்பொறியிலேனைத்தன்றிறமுமறிவித்து

* பஞ்சவடியெனபது-மாவிரதசமயத்துக்குவிதித்திருக்கிறமயிர்ப்பூணூல்.

நெறியுங்காட்டி, யன்னையையுமத்தனையும்போலவன்பாயடைந்தேனைத்தொடர்ந்தென்னையாளாக்கொண்ட, தென்னெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (க)

பளிங்கினிழலுட்பதித்தசோதியானைப்பசுபதியைப்பாசுபதவேடத்தானை, விளிந்தெழுந்தசலந்தரனைவீட்டினானைவேதியனைவிண்ணவனைமேவிவையம், அளந்தவனைநான்முகனையல்லறீர்க்குமருமருந்தையாமாறறிந்தெனுள்ளந், தெளிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. (உ)

கருவையென்றன்மனத்திருந்தகருத்தைஞானக்கடுஞ் சுடரைப் படிந்துகிடந்தமரரேத்து, முருவையண்டத்தொருமுதலையோதவேலியுலகினிறைந்தொழிவின்றிநின்ற,மருவைவென்றகுழன்மடவாள்பாகம்வைத்தமயானத்துமாசிலாமணியைவாசத், திருவெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௩)

பகழிபொழிந்தடலரக்கர்புரங்கண்மூன்றும் பாழ்படுத்தபரஞ்சுடரைப் பரிந்துதன்னைப், புகழுமன்பர்க்கின்பமருமமுதைத்தேனை புண்ணியனைப்புவனியதுமுழுதும்போக, உமிழுமம்பொற்குன்றத்தை முத்தின்றானையுமையவடம்பெருமானையிமையோரேத்துந், திகழெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையபபெறறேனானே. (௪)

பாரிடங்களுடன்பாடப்பயின்றுநட்டம்பயில்வானைப்பயில்வாயசூலமேந்தி, நேரிடுமேபோர்மிகவல்லநிமலன்றன்னைநின்மலனையமமலர்கொண்டயனுமாலும, பாரிடந்துமேலுயர்ந்துங்காணாவண்ணம் பரந்தானைநிமிர்ந்துமுனிக்கணங்களேத்துஞ், சீரெறும்பியூர் மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௫)

கார்முகிலாய்ப்பொழிவானைப்பொழிந்த முந்நீர்கரப்பானைக் கடியநடைவிடையொன்றேறி, ஊர்பலவுந்திரிவானையூரதாகவொற்றியூருடையனாய்முற்றுமாண்டு, பேரெழுத்தொன்றுடையானைப்பிரமனோடுமாலவனுமிந்திரனுமந்திரத்தாலேத்துஞ், சீரெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனானே. (௬)

நீணிலவுமந்தீயுநீருமற்றைநெறியிலங்குமிருகாலுமாகாசமும, வாணிலவுதாரகையுமண்ணும்விண்ணுமன்னுயிருமென்னுயிருந்தானாஞ்செம்பொன், ஆணியென்றுமஞ்சன மாமலையேயென்று மம்பவளத்திரளென்றுமறிந்தோரேத்துஞ், சேணெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௭)

அறநெறியாவூத்தைவாயறிவில்சிந்தையாரமபக்குண்டரோடயர்த்ததுநாளும், மறந்துமரன்றிருவடிகணினையமாட்டாமதியிலியேன்வாழ்வெலாம்வாளாமண்மேற்,பிறந்தநாணாளல்லவாளாவீசன் பேர்பிதற்றிச்சீரடிமைத்திறத்துளன்பு,செறிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௮)

அறிவிலங்குமனத்தானை யறிவாக்கன்றி யறியாதார்தந்திறத்தொன்றறியாதானைப, பொறியிலங்குவாளரவம்புனைந்துபூண்டபுண்ணியனைப்பொருந்திரைவாய்நஞ்சமுண்ட, குறியிலங்குமிடற்றானைமடற்றேன்கொன்றைச்சடையானைமடைதோறுங்கமலமென்பூச்,செறியெறுமபியூர்மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (க)

அருந்தவத்தின்பெருவலியாலறிவதன்றியடலரக்கன்றடவரையை யெடுத்தான்றிண்டோள், முரிந்துநெரிந்தழிந்துபாதாளமுற்றுமுன்கைநரம்பினையெடுத்துகீதம்பாட, இருந்தவனையேழலகுமாக்கினானையெமமானைக்கைமமாவினுரிவைபோர்த்த,திருந்தெறுமபியூரமலைமேன்மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைசசென்றடையபபெறறேனானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுக்குன்றம் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானைமூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை, ஆவினிலைந்துகந்தானையமரர்கோனையாலால முண்டுகந்தவையன்றன்னைப, பூவினின்மேனான் முகனுமாலும போற்றபபுணர்வரியபெருமானைபபுனிதன்றன்னைக்,காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (க)

பலலோடுதலைசசடைமேலுடையான்றன்னைபபாய்புலித்தோலுடையானைப்பகவன்றன்னைச், சொலலோடுபொருளனைத்துமானான்றன்னைச்சுடருருவிலென்பறாக்கோலத்தானை, அல்லாதகாலனைமுன்னடர்த்தான்றன்னையாலின்கீழிருந்தானையமுதானானைக, கலலாடைபுனைந்தருளுங்காபாலியைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (உ-ந-ச-ரு-சு-எ-அ-கூ-கo)

திருச்சிற்றம்பலம்.

இந்தத்தலம தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வேதகிரீசுவரர், தேவியார்-பெண்ணினலலாளம்மை.

ஆ பதிகம-கூஉ.

## பலவகைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நோந்தொருத்தியொருபாகத் தடங்கக்கண்டு நிலைதளரவாயிரமாமுகத்தினோடு,பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு படவரவும்பனிமதியும்வைத்தசெலவர்,தாந்திருத்தித்தம்மனத்தை யொருக்கார்த்தொண்டர்தனித்தொருதண்டூன்றிமெய்தளராமுன்னம,பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற்பொலலாபபுலாற்றுருத்திபோக்கலாமே. (க)

ஐத்தானத்தகமிடறுசுற்றியாங்கேயகத்தடைந்தாலியாதொன்றுமிடுவாரில்லை, மைத்தானக்கண்மடவார்தங்களோடுமாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்,பைத்தானத்தொண்மதியும்பாம்புநீருமபடர்சடைமேல்வைத்துகந்தபண்பன்மேய,நெய்த்தானநெய்த்தானமென்பீராகினிலாவாப்புலாற்றானீக்கலாமே. (உ)

பொய்யாறுவாரேபுனைந்துபேசிப்புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக் கையாறாக்கரணமுடையோமென்றுகளித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்

நெய்யாறுவாடியநீலகண்டாநிமிர்புன்சடைநெற்றிக்கண்ணாமேய
ஐயாறேயையாறேயென்பீராகிலல்லறீர்ந்தமருலகமாளலாமே. (௩)

இழவொன்றுதாமொருவர்க்கிடடொன்றீயாரீன்றெடுத்ததாய்தந்தைபெண்டீர்மக்கள், கழனங்கோவையாதல்கண்டுநேதெருர்களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர், அழனமமைநீக்குவிக்குமையனுக்குமமருலகமாள்விக்குமமமான்மேய, பழனமபழனமேயென்பீராகிற்பயின்றெழுந்தபழவினைநோய்பாறறலாமே. (௪)

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றூறீரொக்கவடைக்கும்போதுணரமாட்டீர், மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்னமாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர், வேற்றுத்தொழில்பூண்டாரபுரங்கண்மூன்றுமவெவ்வழல்வாய்வீழ்விக்கும வேந்தன்மேய, சோற்றுத்துறைசோற்றுத்துறையென்பீராகிற்றுயாநீங்கித்தூநெறிக்கட்சேரலாமே. (௫)

கலஞ்சுழிக்குங்கருங்கடலசூழ் வையந்தன்னிற்களளக்கடலிலழுந்திவாளா, நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பமவேண்டினமபன்றன்னடியிணைக்கேநவிலவாயாகில், அலஞ்சுழிக்குமன்னுகந்தன்னுன்மேயவருமறையோடறங்கமானாகோயில், வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில்வல்வினைகடீர்ந்துவானுளலாமே ()

தண்டிகுண்டோதரன்பிங்கிருடிசார்ந்தபுகழ்நந்திசங்குகனனன்
பண்டையுலகமபடைத்தான்றானுமபாரையளந்தான்பலலாண்டிசைபபத
திண்டிவயிறறுசசிறுகட்பூதஞ்சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூரகண்டியூரென்பீராகிற்கடுகநுமவல்வினையைககழற்றலாமே. (௭)

விடமூக்கபபாமபேபோற்சிந்திநெஞ்சே வெளளேறறூனறுமறமனைக்கண்டபோது, வடமூக்கமாமுனிவர்போலச்சென்றுமாதவததாமனததுளாமழுவாடசெல்வா, படமூக்கபபாமபணையிறபள்ளியானுமபங்கயததுமேலயனுமபாவிககாணுக், குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற்கொடுவினைகடீர்ந்தரனைக்குறுகலாமே. (௮)

தண்காட்டாச்சந்தனமுந்தவளநீறுந்தழையணுகுங்குறுங்கொன்றைமாலைசூடிக், கண்காட்டாக்கருவரைபோலனையகாஞ்சிக்காமயிலஞ்சாயலாகலந்துகாண, எண்காட்டாக்காடங்கிடமாகின்றுஎரிவீசியிரவாடுமிறைவர்மேய, வெண்காடேவெண்காடேயென்பீராகில்வீடாதவலவினையைவீடடலாமே. (௯)

தந்தையார்தாயாருடன்பிறந்தார்தாரமாரபுத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனேபோமாறேதோமாயமாமிதற்கேதுமகிழவேண்டா [சென்னி
சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்றிகழ்மதியுமவாளரவுந் திளைக்குஞ்
செந்தையார்திருநாமநமச்சிவாயவென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. ()

திருச்சிற்றம்பலம்.

---

## நின்ற திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிறாகியாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகிநிமிர்புன்சடையடிகணின்றவாறே. (௧)

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகிவயிரமுமாமாணிக்கந்தானேயாகிக், கண
ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலையாகிக்கலைஞானந்தானேயாகிப்,பெண
ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி, எண
ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

கல்லாகிக்களறாகிக்கானுமாகிக்காவிரியாய்க்காலாறாய்க்கழியுமாகிப்
புல்லாகிப்புதலாகிப்பூடுமாகிப்புரமாகிப்புரமூன்றுங்கெடுத்தானாகிச் [லாகி
சொல்லாகிச்சொல்லுக்கோர்பொருளுமாகிச் சுலாவாகிச்சுலாவுக்கோர் சூழ
நெல்லாகிநிலனாகிநீருமாகிநெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௪)

காற்றாகிக்கார்முகிலாய்க்காலமூன்றாய்க்கனவாகிநனவாகிக்கங்குலாகிக்,
கூற்றாகிக்கூற்றுதைத்தகொல்களிறுமாகிக் குரைகடலாய்க்குரைகடற்கோர்
கோமானுமாய், நீற்றானாய்நீறேற்றமேனியாகிநீள்விசும்பாய்நீள்விசும்பினுச்சி
யாகி, ஏற்றானாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே.

தீயாகிநீராகித்திண்மையாகித்திசையாகியத்திசைக்கோர்தெய்வமாகித்
தாயாகித்தந்தையாய்ச்சார்வுமாகித்தாரகையுஞாயிறுந்தண்மதியுமாகிக்
காயாகிப்பழமாகிப்பழத்தினின்றவிரதங்கணுகர்வானுந்தானேயாகி
நீயாகிநானாகிநேர்மையாகிநெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௫)

அங்கமாயாதியாய்வேதமாகியருமறையோடைம்பூதந்தானேயாகிப்
பங்கமாய்ப்பலசொல்லுந்தானேயாகிப்பான்மதியோடாதியாய்ப்பான்மையா
கங்கையாய்க்காவிரியாய்க்கன்னியாகிக்கடலாகிமலையாகிக்கழியுமாகி [கி
எங்குமாயேறூர்ந்தசெல்வனாகியெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௬)

மாதாபிதாவாகிமக்களாகிமறிகடலுமால்விசும்புந்தானேயாகிக்
கோதாவிரியாய்க்குமரியாகிக்கொல்புலித்தோலாடைக்குழகனாகிப்
போதாயமலர்கொண்டுபோற்றிநின்றுபுனைவார்பிறப்பறுக்கும்புனிதனாகி
யாதானுமெனநினைந்தார்க்கெளிதேயாகியழல்வண்ணவண்ணர்தாநின்றவாறே.

ஆவாகியாவினிலைந்துமாகியறிவாகியழலாகியவியுமாகி
நாவாகிநாவுக்கோருரையுமாகிநாதனாயவேதத்தினுள்ளானாகிப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்புக்குளால்வாசமாய்நின்றானாகித்
தேவாகித்தேவர்முதலுமாகிச்செழுஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே. ( )

நீராகிநீளகலந்தானேயாகிநிழலாகிநீள்விசும்பினுச்சியாகிப்,பேராகிப்பே
ருக்கோர்பெருமையாகிப்பெருமதில்கண்மூன்றினையுமெய்தானாகி, ஆரேனுந்
தன்னடைந்தார்தம்மையெல்லாமாட்கொள்ளவல்லவெம்மீசனார்தாம்,பாரா
கிப்பண்ணாகிப்பாடலாகிப்பரஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே. (௯)

மாலாகிநான்முகனாய்மாபூதமாய்மருக்கமாயருக்கமாய்மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
ஏலாதனவெல்லாமேலவிப்பானாயெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## தனித் - திருத்தாண்டகம்.

### திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீயையனுநீயன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமா தருமொண்பொருளுநீயொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ [ய்நீ
துயப்பனவுமுய்ப்பனவுநதோற்றுவாய்நீ துணையாயெனனெஞ்சநதுறப்பிப்பா
இப்பொன்னீயிம்மணிநீயிமமுத்துநீயிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (க)

வெம்பவருகிற்பதன்றுகூற்றம்நமமேல்வெய்யவினைப்பகையும்பையனையும
எம்பரிவு தீரநதோமிடுக்கணில்லோமெங்கெழிலென்ஞாயிறெளியோமல்லோ
அமபவளச்செஞசடைமேலாறுசூடியனலாடியானஞ்சுமாட்டுகந்த [ம்
செயபவளவணணா செங்குனறவணணர்செவவானவணணொனசிநதையாரே.

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே யடக்குவித்தாலாரொருவரடங்கா
தாரே, ஓட்டுவிததாலாரொருவரோடாதாரேயுருகுவித்தாலாரொருவருருகா
தாரே,பாட்டுவிததா லாரொருவாபாடாதாரேபணிவித்தாலாரொருவாபணியா
தாரே,காட்டுவிததாலாரொருவாகாணுதாரேகாணபாராாகணணுதலாய்க்கா
டடாக்காலே. (ங)

நற்பதத்தாநற்பதமேஞானமூாத்திநலஞ்சுடரோநால்வேதத்தப்பானின்ற,
சொற்பதத்தாசொற்பதமுங்கடந்துநின்ற சொலற்கரியசூழலாயிதுவுன்றன்
மை, நிற்பதொத்துநிலையிலாநெஞசநதன்னு ணிலாவாதபுலாலுடமபேபுகுந்
துநின்ற, கறபகமேயானுனனை விடுவேனல்லேன்கனகமாமணிநிறத்தெங்கடவு
ளானே. (ச)

திருக்கோயிலில்லாததிருவிலூருந திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும் பாஙகிஞெடுபலதளிகளிலலாவூரும்,
விருப்போடுவெணசங்கமூதாவூருமவிதானமுமவெணகொடியுமிலலாவூரும,
அருப்போடுமலாபறித்திட்டுணணாவூருமவையெலலாமூரலலவடவிகாடே.

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்றீவணணா திறமொருகாற்பேசாரா
கில், ஒருகாலுநதிருக்கோயிலசூழாராகி லுண்பதனமுன்மலாபறிததிட்டுண
ணாராகில, அருநோய்கள்கெடவெணணீறணியாராகிலளியற்றாபிறநதவாறே
தோவென்னிற், பெருநோய்கணமிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்பிறபபதற்
கேதொழிலாகியிறக்கின்றாரோ. (சா)

நின்னுவாபிறரன்றிநீயேயானாய் நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்து
மானாய், மனனானாய்மன்னவர்க்கோரமுதமானாய்மறைநான்குமானாயாறங்கமா
னாய், பொனனானாய்மணியானாய்போகமானாய்பூமிமேற்புகழ்தக்கபொருளேயு
ன்னை, என்னானாயென்னானாயென்னினலலாலேழையேனெனசொலலியேத்
துகேனே. (எ)

அந்தாவுன்னடியேனையன்பாலார்த்தாயருளாக்கிற்றீர்த்தநீராட்டிக்கொ
ண்டாய், எத்தனையுமரியநீயெளியையானா யெனையாண்டுகொண்டிரங்கியே
ன்றுகொண்டாய், பித்தனேன்பேதையேன்பேயனாயேன்பிழைத்தனகளெ
த்தனையும்பொறுத்தாயன்றே, இத்தனையுமெமபரமோவையவையோவெம்
பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. (அ)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன் குற்றமேபெரிதுடையேன்கோலமாய, நலமபொலலேனுன்பொல்லேன் ஞானியல்லேனல்லாரோடிசைநதிலேனடுவேநினற, விலங்கலேன் விலஙகலாதொழிநதேனலலேன்வெறுபபனவுமிகபபெரிதுமபேசவல்லேன், இலமபொலலேனிரபபதேயீயமாடடேனெனசெய்வானறுன்றினேனேழையேனே. (கூ)

சங்கநிதிபதுமநிதியிரண்டுநதநதுதரணியொடுவானுளத்தருவரேனும், மங்குவாரவர்செலவமதிபபோமலலோமாதேவாக்கேகாநதரலலாராகில, அங்கமெலலாங்குறைநதழுகுதொழுநோயராயாவுரித்துத்தின்றுழலுமபுலையரேனுங், கங்கைவாா சடைககரநதாாக்கன்பராகி லவாகணடீாநாமவணங்குங்கடவுளாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

## தனித் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம.

ஆமயநதீா்த்தடியேனையாளாக்கொணடாரதிகைவீரட்டானமாட்சிகொண்டாா, தாமரையோனசிரமரிநதுகையிறகொணடாாதலைபதனிற்பலிகொணடாாநிறைவாநதனமை, வாமனனாமாகாயத்துதிரஙகொணடாாமானிடஙகொணடாாவலங்கைமழுவாடகொணடாா, காமனையுமுடலகொணடாாகணனுேக்கிககணணபபாபணியுஙகொளகபாலியாரே. (க)

முப்புரிநூலவரைமாாபினமுயங்ககொண்டார் முதுகேழன்முளைமருப்புங்கொணடாாபூணுச், செபபுருவமுலைமலையாள்பாகஙகொணடாாசெமமேனிவெணணீறுதிகழககொணடாா, துபபுரவார்சுரிசஙகின்றேடுகொணடார் சடாமுடிசூழ்நதடியமராதொழவுங்கொணடாா, அபபலிகொணடாாபிழையாரணபுங்கொணடாரடியேனையாளுடையவடிகளாரே. (உ)

முடிகொண்டாாமுளையிளவெண்டிங்களோடு மூசுமிளநாகமுடனுக்கொண்டாா, அடிகொணடாாசிலமபலமபுகழலுமாாபபவடஙகாதமுயலகனையடிக்கீழ்க்கொணடாா, வடிகொணடாாநதிலஙகுமழுவலஙகைக்கொணடாாமாலையிடபபாகத்தே மருவககொணடாா, துடிகொணடாா கஙகாளநதோணமேற்கொணடாாசூலைதீா்த்தடியேனையாடகொணடாரே. (ங)

பொக்கணமுமபுலித்தோலுமபுயத்திறகொண்டாா பூதப்படைகள்புடைசூழக்கொண்டாா, அககினொடுபடவரவமரைமேற்கொண்டாரனைத்துலகுமபடைத்தவையுமடங்கக்கொணடாா, கொககிறகுஙகூவிளமுங கொனறைகொண்டாாகொடியானையடலாழிக்கிரையாக்கொணடாா, செக்காநிறததிருமேனிதிகழக்கொணடாாசெடியேனையாட்கொணடசிவனாதாமே. (ச)

அந்தகனையயிற்சூலத்தழுத்திக்கொண்டா ரருமறையைத்தேர்க்குதிரையாக்கிக்கொண்டாா, சுநதரனைதுணைக்கவரிவீசக்கொணடாாசுடுகாடுநடமாடுமிடமாக்கொணடாா, மநதரநற்பொருசிலையாவளைத்துககொண்டாாமாகாளன்வாசலகாப்பாகக்கொண்டாா, தநதிரமநதிரத்தராயருளிககொணடாாசமணடீர்த்தெனறன்னையாட்கொணடார்தாமே. (ரு)

பாரிடங்கள்பலகருவிபயிலக்கொண்டார் பவளநிறஙகொண்டார்பளிங்குங்கொணடாா, நீரடஙகுசடைமுடிமேனிலாவுங்கொண்டார்நீலநிறங்கோலநி

றைமிடற்றிற்கொண்டார், வாரடங்குவனமுலையார்மையலாகி வந்திட்டபலி கொண்டாரவளையுங்கொண்டார, ஊரடங்கவொறறிகாபறறிக்கொணடாரு டலுறுநோய்தீரதென்னையாட்கொணடாரே. (௬)

அணிதிலலையம்பலமாடரங்காக்கொணடாராலாலவருநஞ்சமமுதாக்கொ ண்டார, கணிவளாதாரபபொன்னிதழிக்கமழ்தாரகொண்டாராகாதலாரகோடி கலாதிருக்கைகொணடார,மணிபுணததவரவாதோள்வளையக்கொணடாரமா லவிடைமேனெடுவீதிபோதக்கொண்டார்,துணிபுலிதமேதாலினையாடையுடை யாக்கொண்டாரசூலங்கைககொணடாரதொணடெனைககொணடாரே. (௭)

படமூக்கபபாம்பணையாரேனுடுவாரேன்பங்கபனென்றங்கவரைப்படை த்துக்கொணடார், குடமூக்கிற்கீழ்க்கோடடஙகோயிலகொணடாரகூற்றுதை ததோரவேதியனைப்பயகொணடார, நெடுமூக்கிற்கரியினுரிமூடிக்கொடை ரினையாதபாவிகளைநீஙகக்கொணடார,இடமாக்கியிடைமருதுங்கொணடார பண்டேயென்னையிநாளாட்கொணடவிறைவா தாமே. (௮)

எச்சனிணைத்தலைகொண்டாரபகன்கண்கொணடாரிரவிகளிலொருவனை பலலிறுத்துக்கொணடார, மெச்சனவியாத்திரன்றலையுமவேறுகொணடார விறலங்கிகாங்கொணடாரவேளவிகாத்து, உசசாமனருளறுத்தாாசநதிரனையு தைத்தாருணாவிலாத்தக்கன்றன வேள்வியெலலாம, அசசமெழவழித்துக் கொணடருளுஞ்செய்தாரடியேனையாட்கொணடவமலாதாமே. (௯)

சடையொன்றிற்கங்கையையுந்தரிததுக்கொணடாராசாமத்தினிசைவீணை தடவிக்கொணடார, உடையொனறிறபுளளியுழைததோலுங்கொணடாருள் குவாருள்ளத்தையொருக்கிக்கொண்டார, கடைமுனறிபலிகொணடாரகன லுங்கொணடாரகாபாலவேடஙகருதிக்கொணடார, விடைவென்றிக்கொடியத னின்மேவக்கொணடாரவெந்துயரந்தீாத்தெனனையாட்கொணடாரே. (௧0)

குராமலரோடராமதியஞ்சடைமேற்கொண்டாரகுடமுழநந்தீசனைவாச னுக்கொணடார,சிராமலைதஞ்சோவிடமாத்திருந்தக்கொணடாரதென்றனெ டுந்தேரோனைப்பொனறக்கொணடார், பராபரனெனபதுதமதுபோராககொ ணடாரபருப்பதங்கைக்கொணடாரபயங்கள்பண்ணி, இராவணனெனறவனை பபேரியமபக்கொணடாரிடருறுநோய்தீரதென்னையாடகொணடாரே (௧௧)

திருச்சிற்றமபலம்.

---

## திருவினாத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அணடங்கடநதசுவடுமுணடோவனலங்கையேநதியவாடலுணடோ,பண் டையெழுவர்படியுமுணடோபாரிடங்கள்பலசூழபபோந்ததுணடோ, கணட மிறையே கறுத்ததுணடோ கணணின்மேற்கணணொன்று கணடதுண்டோ, தொணடாகள்சூழத தொடாச்சியுணடோ சொலலீரெமபிரானுரைக்கணட வாறே. (௧)

எரிகின்றவிளநாயிறன்னமேனியிலங்கிழையோர்பாலுண்டோவெள்ளே றுண்டோ, விரிகின்றபொறியரவத்தழலுமுணடோ வேழத்தினுரியுண்டோ வெணணூலுணடோ, அரிகினறபொறியரவச்சடையுமுணடோவச்சடைமே

விளமதியமவைத்ததுண்டோ, சொரிகின்றபுனலுண்டோசூலமுண்டோசொல்லீரெம்பிரானைக்கண்டவாறே. (உ)

நிலாமாலைசெஞ்சடைமேல்வைத்ததுண்டோநெற்றிமேற்கண்ணுண்டோநீறுசாந்தோ, புலாலாறுவெள்ளெலும்புபூண்டதுண்டோ பூதந்தாஞ்சூழ்ந்தனவோபோரேறுண்டோ, கலாமாலைவேற்கண்ணாள்பாகந்தானோகாய்க்கொன்றைமாலைகலந்ததுண்டோ, சுலாமாலையாடரவந்தோண்மேலுண்டோசொல்லீரெம்பிரானைக்கண்டவாறே. (ங)

பண்ணார்ந்தவீணைபயின்றதுண்டோ பாரிடங்கள்பலசூழப்போந்ததுண்டோ, உண்ணாவருநஞ்சமுண்டதுண்டோ வூழித்தீயன்னவொளிதானுண்டோ, கண்ணார்கழல்காலசெற்றதுண்டோகாமனையுங்கண்ணழலாற்காய்ந்ததுண்டோ, எண்ணார்திரிபுரங்களெய்ததுண்டோ வெவ்வகையெம்பிரானைக்கண்டவாறே. (ச)

நீறுடையதிருமேனிபாகமுண்டோநெற்றிமேலொற்றைக்கண்முற்றுமுண்டோ, கூறுடையகொடுமழுவாள்கையிலுண்டோகொலப்புலித்தோலுடையுண்டோகொண்டவேடம், ஆறுடையசடையுண்டோவரவமுண்டோவதனருகேபிறையுண்டோவளவிலாத, ஏறுடையகொடியுண்டோவிலயமுண்டோவெவ்வகையெம்பிரானைக்கண்டவாறே. (ரு)

பட்டமுந்தோடுமோர்பாகங்கண்டேன் பார்திகழப்பலிதிரிந்துபோதக்கண்டேன், கொட்டிநின்றிலயங்களாடக்கண்டேன்குழைகாதிற்பிறைசென்னியிலங்கக்கண்டேன், கட்டங்கக்கொடிதிண்டோளாடக்கண்டேன்கனமழுவாள்வலங்கையிலிலங்கக்கண்டேன், சிட்டனைத்திருவாலவாயிற்கண்டேன்றேவனைக்கனவிற்கண்டவாறே. (சா)

அலந்தோடுபுனற்கங்கைசடையிற்கண்டேனலர்கொன்றைத்தாரணிந்தவாறுகண்டேன்,பலிக்கோடித்திரிவார்கைப்பாம்புகண்டேன்பழனப்புதுவாரைப்பாகமேலகண்டேன், கலிக்கச்சிமேற்றளியேயிருக்கக்கண்டேன்கறைமிடறுங்கண்டேன்கனலுங்கண்டேன், வலிந்ததுடித்தமானோடுமலனையிற்கண்டேன்மறைவல்லமாதவனைக்கண்டவாறே. (எ)

நீறேறுதிருமேனிதிகழக்கண்டேனீள்சடைமேனிறைகங்கையேறக்கண்டேன், கூறேறுகொடுமழுவாள்கொள்ளக்கண்டேன்கொடுகொட்டிகையலருகையிற்கண்டேன், ஆறேறுசென்னியணிமதியுங்கண்டேனடியார்கட்காரமுதமாகக்கண்டேன், ஏறேறியிந்நெறியேபோதக்கண்டேனிவ்வகையெம்பெருமானைக்கண்டவாறே. (அ)

விரையுண்டவெண்ணீறுதானுமுண்டுவெண்டலைகையுண்டொருகைவீணையுண்டு, சுரையுண்டுசூடும்பிறையொன்றுண்டு சூலமுந்தண்டுஞ்சுமந்ததுண்டு, அரையுண்டகோவணவாடையுண்டுவலிற்கோலுந்தோலுமழகாவுண்டு, இரைகொண்டறியாதபாம்புமுண்டுவிமையோர்பெருமானிலாததென்னே ()

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சிமயானத்தானவார்சடையானென்னினல்லான்,ஒப்புடையனல்லனொருவனல்லனோரூரனல்லனோருவமனில்லி, அப்படியுமந்நிறமுமவ்வண்ணமுமவனருளேகண்ணாகக்காணினல்லால், இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே()

பொன்னொத்தமேனிமேற்பொடியுங்கண்டேன்புலித்தோலுடைகண்டேன்புணரத்தன்மேன், மின்னொத்தநுணணிடையாள்பாகங்கண்டேன மிளிர்வதொருபாமபுமரைமேற்கணடேன், அனனத்தேரூாநதவரக்கன்றனனையலறவடர்த்திட்டவடியுங்கணடேன், சின்னமலாக்கொன்றைகணணிகண்டேன்சிவனைநான்சிநதையுட்கணடவாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - கஎ.

---

## திருமறுமாற்றத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடாபபடோநடலையில்லோம், ஏமாப்போமபிணியறியோமபணிவோமல்லோமின்பமேயெநநாளுநதுன்பமில்லை,தாமாாக்குங்குடியலலாத்தனமையானசங்கரனற்சங்கவெண்குழையோாகாதிற்,கோமாற்கோமெனறுமீளாவாளாய்க்கொய்ம்மலாசசேவடியிணையேகுறுகினோமே. (க)

அகலிடமேலிடவிதாலூர்கடோறுமட்டுண்பாரிட்டுணபர்விலக்காரையம், புகலிடமாமம்பலங்கள்பூமதேவி யுடனகிடநதாறபுரடடாளபொய்யனறுமெய்யே, இகலுடையவிடையுடையானனறுகொணடானினியேதுங்குறைவிலோமிடாகடீாநதோந,துகிலுடுதுப்பொனபூண்டுதிரிவாாசொலலுஞ்சொற்கேட்கக்கடவோமோதுரிசற்றோமே. (உ)

வாராண்டகொங்கைய।சோமனையிற்சேரோ மாதேவாமாதேவாவெனறுவாழ்த்தி,நீராண்டபுரோதாயமாடபபெறறோநீறணியுநகோலமேநிகழபபெற்றோங்,காராண்டமழைபோலக்கணணீாசோரக்கனமனமேநன்மனமாக்கனையபபெற்றோம, பாராணடுபகடேறிவருவாாசொலலுமபணிகேடகக்கடவோமோபற்றற்றோமே. (ங)

உறவாவாருருத்திரபல்கணத்தினோர்களுடுபபனகோவணத்தொடுகீளுளவாமன்றே, செறுவாருஞ்செறமாட்டாாதீமைதானுநன்மையாச்சிறபபதேபிறபபிற்செலலோ, நறவாாபொன்னிதழிநறுநதாரோனசீராாநமச்சிவாயஞ்சொல்லவல்லோநாவாற், சுறவாருங்கொடியானைப்பொடியாக்கண்டசுடாநயனச்சோதியையேதொடர்வுற்றோமே. (ச)

எனறுநாமியாவாக்குமிடைவோமல்லோமிருநிலத்திலெமக்கெதிராவாருமிலலை, சென்றுநாஞ்சிறுதெய்வஞ்சோவோமலலோஞ்சிவபெருமான்றிருவடியேசேரபபெற்றோம, ஒனறினாறகுறையுடையோமலலோமனறேயுறுபிணியார் செறலொழிநதிட்டோடிபபோனா, பொனறினாதலையாலையணிநதசென்னிபபுண்ணியனைநண்ணியபுணணியத்துளோமே. (ரு)

மூவுருவின்முதலுருவாயிருநான்கானமூர்த்தியேயென்றுமுப்பத்துமூவா, தேவர்களுமிக்கோருஞ்சிறநதுவாழ்த்துஞ் செமபவளத்திருமேனிச்சிவனேயென்னும், நாவுடையாாநமையாளாவுடையாரனறேநாவலநதீவகத்தினுக்குநாதரான, காவலரோயேவிவிடுதாரோனுங்கடவமலோங்கடுமையொடுகளவற்றோமே. (சு)

நிற்பனவுநடப்பனவுநிலனுநீருநெருப்பினொடுகாற்றாகிநெடுவானாகி, யற்பமொடுபெருமையுமாயருமையாகியன்புடையார்க்கெளிமையதாயளக்கலாகாத், தற்பரமாய்ச்சதாசிவமாய்த்தானுமியானு மாகின்றதன்மையனைநன்மையோடும், பொற்புடையபேசக்கடவோம்பேயாபேசுவனபேசுதுமோபிழையற்றோமே. (எ)

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னையிமையவர்தம்பெருமானையெரியாய்மிக்க, தேசனைச்செம்மேனிவெண்ணீற்றானைச்சிலம்பரையன்பொற்பாவைநலஞ்செய்கின்ற, நேசனைநித்தலுநினையப்பெற்றோநின்றுணர்பாரொம்மைநினையச்சொன்ன,வாசகமெல்லாமறந்தோமன்றேவந்தீராரன்னவனுவானருணோ. (அ)

சடையுடையான்சங்கக்குழையோர்காதன்சாம்பலும்பாம்புமணிந்தமேனி, விடையுடையான்வேங்கையதண்மேலாடை வெள்ளிபோற்புள்ளியுழைமான்றோலசாந்த, உடையுடையானம்மையுடையான்கண்டீரம்மோடுமற்றுமுளராய்நின்ற, படையுடையான்பணிகேட்கும்பணியோமல்லோம்பாசமறவீசும்படியோநாமே. (௯)

நாவாரம்பனையேபாடப்பெற்றோநாணற்றார்நள்ளாமேவிள்ளப்பெற்றோ, மாவாவென்றெமையாள்வானமராநாதனயனொடுமாறகறிவரியவனலாய்நீண்ட, தேவாதிதேவனசிவனெனசிந்தைசேர்ந்திருந்தானறெனறிசைக்கோன்றானேவந்து, கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங்குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

### திருப்புகலூர் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ வெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேனமற்றோர்களைகணில்லேன கழலடியே கைதொழுதுகாணினல்லால, ஒண்ணுளேயொன்பதுவாசல்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன, புண்ணியனேயுன்னடிக்கேபோதுகின்றேனபூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧)

அங்கமேபூண்டாயனலாடினு யாதிரையாயானிழலாயானேறூர்ந்தாய், பங்கமொன்றில்லாதபடர்சடையினாய்பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய், சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச்சமுத்திரத்தினஞ்சுண்டுசாவாமூவாச், சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்றிருப்புகலூர்மேவியதேவதேவே.

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றாய்பளிக்குக்குழையினாய்பண்ணாரின்சொல்,மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய்மான்மறிக்கையேந்தினாய்வஞ்சக்கள்வ, ரைவரையுமென்மேற்றரவறுத்தாயவர்வேண்டுங்காரியமிங்காவதில்லைப, பொய்யுரையாதுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௩)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச்சிலைவளைத்துச்செங்கணையாற்செற்றதேவே, மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய்மருந்தாய்ப்பிணிதீர்ப்பா

ய்வானோர்க்கென்றும், அருளாகியாதியாய்வேதமாகிபலாமேலானீர்மேலாஞ
ய்நதுங்காணுப, பொருளாவாயுனனடிக்கேபோதுகின்றேன்பூமபுகலூாமே
வியபுண்ணியனே. (௪)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்கணீங்காமைவைத்துகந்தநீதியானே
பாரேறுபடுதலையிற்பலிகொள்வானேபண்டனங்கைப்பார்த்தானே பாவநாசா
காரேறுமுகிலனையகண்டத்தானேகருங்கைக்களிற்றுரிவைகதறப்போர்த்த
போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ()

விரிசடையாய்வேதியனேவேதகீதாவிரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீ
யச்சூராய்,திரிபுரங்களெரிசெய்ததேவதேவேதிருவாரூர்த்திருமூலத்தானமே
யாய், மருவினியாமனத்துளாய்மாகாளத்தாய்வலஞ்சுழியாய்மாமறைக்காட
டெந்தாயென்றும, புரிசடையாயுனனடிக்கேபோதுகின்றேனபூமபுகலூாமே
வியபுண்ணியனே. (௬)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்போற்றக [நின்
காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேராய்கழுக்குன்றத்துச்சியாய் கடவுளே
பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேனபூம்புகலூர்மேவியபுண்ணியனே.

நெய்யாடிநின்மலனேநீலகண்டாநிறைவுடையாய்மறைவல்லாயநீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானேமானேறேழுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலைகொண்டடியேனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ()

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய்துதைந்திலங்குவெண்மழுவாள்
கையிலேந்தித், தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ்சடைமுடிமேலவைத்து
கந்ததன்மையானே, அன்னநடைமடவாள்பாகத்தானேயக்காரம்பூண்டானே
யாதியானே, பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்
ணியனே. (௯)

ஒருவனையுமல்லாதுணராதுள்ளமுணர்ச்சித்தடுமாற்றத்துள்ளேநின்ற
விருவரையுமூவரையுமென்மேலேவியில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக்
கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்கடுந்தோண்மீதோடாமைக்காலாற்செற்ற
பொருவரையாயுனனடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

ஆக பதிகம் - கக.

---

திருநாவுக்கரசுசுவாமிகளருளிச்செய்த

# மூன்றாந்திருமுறை

முற்றுப்பெற்றது.

---